| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்** – தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை<br>(இ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை– தமிழ் வளர்ச்சி பண்பாடு<br>(ஈ) கோரிக்கை எண் 18 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை –கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 297-426 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 298,305, 309, 336-337, 340, 341,345, 346, 347,348, 393-409, 410 |
| மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன் | 323,337,387-393 |
| *திரு. கே.எஸ். விஜயகுமார் | 337-340,341, 342-345,346, 347,349,350 |
| *திரு. சபா. இராஜேந்திரன் | 350-357 |
| திரு. ப. போளூர் வரதன் | 357-369 |
| *திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் | 325,369-375,422 |
| திரு. என். நன்மாறன் | 307,314,327, 375-380,415,418, 423 |
| *திரு. வீர. இளவரசன் | 317,381-387,419 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 426-427 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 9, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து"*

இந்தச சொல்லை இன்னொரு சொல் வெல்லாது என்று உணர்ந்த பிறகே அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (•) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. வாழ்த்துரை.

### மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சருக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

• **திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு இன்று பிறந்தநாள் நல்வாழ்த்துகளை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய தலைமையிலே, அவர்கள் இந்த அமைச்சரவையிலே நல்ல பல சீரிய பணிகளை ஆற்றி,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 ஆகஸ்ட் 25

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்த மாநிலத்திற்கும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்த எங்களுக்கும், இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லோருடைய கோரிக்கைகளையும் ஏற்று, நல்ல பல செயல்களைச் செய்து தந்திடவேண்டும் என்று, இறைவன் அருளால் நீண்ட, நெடிய ஆயுளைப் பெற வேண்டும் என்று மனமார இந்த அவையின் சார்பாக வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையிலே என்னுடைய வாழ்த்தையும், பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேருடைய வாழ்த்துகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ... 227432

## 2. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**91—**

### நியாய விலைக் கடை

***440—திரு. கோ. அரி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், வயலூர் ஊராட்சி, சூரகாபுரம் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள வயலூர் நியாய விலைக் கடையில், 491 குடும்ப அட்டைகள் உள்ளன. சூரகாபுரம் பகுதியில் 142 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தாய்க்கடைக்கும் மற்றும் உத்தேச பகுதி நேரக் கடைக்கும் இடையே 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. மேற்படி பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்டால், பகுதி நேரக்



2006 ஆகஸ்ட் 25]

கடையில் 200 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாகவும், தாய்க்கடையில் 349 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, சூரகாபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை ஆரம்பிக்க சிறப்புக் காரணங்கள் ஏதாவது இருந்தாலொழிய, அதுகுறித்து நடவடிக்கை எடுக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்திலே, சூரகாபுரம் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் ஏழை, எளியவர்கள் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று அந்த ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய ஓர் இக்கட்டான சூழ்நிலை நிலவுகிறது. அவர்களுக்குப் போக்குவரத்து வசதியும் சரியாக இல்லை என்பதால், உடனடியாக சிறப்புக் கவனம் இதிலே செலுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய குறையைத் தீர்க்கின்ற வகையிலே, அந்த சூரகாபுரம் பகுதியிலே உடனடியாக பகுதி நேர நியாய விலைக் கடையைத் தொடங்க, இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவது ரேஷன் கார்டுகளுக்கு அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்குவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் கடைகளின் தூரம் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் வரை இருப்பதை அறிந்து, அதற்குரிய வகையில் இந்தக் கடைகளை அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, அதை 1½ கிலோ மீட்டராக மாற்றலாமா என்று மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே அனுமதி பெற்று வைத்திருக்கிறோம். அதற்கான உத்தரவுகள் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த உத்தரவுகள் இன்னும் வழங்கப்படாததற்கான காரணம், அதுபற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அந்த உத்தரவு வழங்கியதற்குப் பிறகு வேண்டுமானால், அதற்கான தளவாடங்கள், இருக்க இடம், கடை நடத்துவதற்கான இடம் இவற்றைத் தந்து உதவினால் அந்தப் பகுதி நேரக் கடை திறக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்களுடைய முயற்சியால் அங்கே தளவாடங்கள், மற்ற பொருட்கள் எல்லாம் வழங்கப்பட்டு, ஓரிரு நாட்கள் திறந்து மூடப்பட்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, அதை உடனடியாக திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு கூறியதைப்போல அதற்கான சிறப்புக் காரணங்கள் ஏதாவது இருக்குமானால், உறுப்பினர் அதற்கான இடவசதிகளோடு செய்து கொடுப்பாரேயானால் அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் 500 கார்டுகள் அவசியம் இருக்கவேண்டும் என்ற உத்தரவு இருக்கின்ற காரணத்தால், நீண்டதூரம் உள்ள கிராமங்களுக்குக்கூட பகுதி நேரக் கடைகள் பிரித்துக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிபந்தனையைத் தளர்த்தி, பகுதி நேரக் கடைகள் திறக்க ஆவன செய்தால்தான் பல கிராமங்களிலே நீண்டதூரம் சென்று உணவுப் பொருள் வாங்கக்கூடிய நிலை மாறும். அதற்கு இந்த அரசு உத்தரவு வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதி பெற்றிருக்கிறோம். அதற்கான விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் நிச்சயமாக அவற்றைப் பிரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையொட்டிய ஒரு கேள்வி. சில பேர் ஆய்வு முடிந்து, குடும்ப அட்டைகள் கிடைக்கும் என்று அவர்கள் கருதிக்கொண்டு இருக்கிறபோது, வட்டாட்சியர் அவர்களிடத்திலே கேட்கிற நேரத்தில், 'குடும்ப அட்டைகளை சென்னையிலே அச்சடித்துத்தான் இங்கே வர வேண்டியிருக்கிறது. அது கிடைத்தவுடன் அனைவருக்கும் வழங்கப்படும்' என்று வட்டாட்சியர்கள் கூறுகிறார்கள். அது எப்போது வழங்கப்படும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இது நியாய விலைக் கடை சம்பந்தப்பட்ட கேள்வி.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியிலே, இப்படி அதிகமான கார்டுகளுக்கான மனுக்கள் எல்லாம் பெற்று, கிட்டத்தட்ட 35 இலட்சம் மனுக்கள் இங்கே எழிலகத்திற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில், ஆணையரிடத்திலே வந்தன. தேர்தல் வந்த காரணத்தினால் அவை எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டன. இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அது சம்பந்தப்பட்ட மனுக்களைத் திரும்ப அனுப்பி, மாவட்ட நிர்வாகம் இன்றைக்கு சோதித்து, original card, அதாவது உண்மையானவர்களைக் கண்டறிந்து, கார்டு வழங்குகின்ற அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் அவர்களுக்குக் கட்டாயம் கார்டு வந்து சேரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**92—**

## புதிய கட்டடம்

***1597—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கேதுநாயக்கன்பட்டிபுதூர் பகுதியிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியிலுள்ள கேதுநாயக்கன்பட்டிபுதூர் நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான நிலத்தை தானமாக வழங்க களவாய்ப்புதூர் பஞ்சாயத்துத் தலைவர் முன்வந்துள்ளதால், அந்நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி அந்தக் கிராமத்திலே இருக்கின்ற நியாய விலைக் கடை ஓட்டுக் கட்டடத்திலே 20 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. அந்தப் பகுதியிலே எஸ். பாளையம், காந்திநகர், இருமக்கவுண்டர் தோட்டம், சேவிக்கவுண்டர் காட்டு வளவு, கே.என். புதூர் ஆகிய பல்வேறு கிராமங்களிலேயிருந்து அங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் 600–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அங்கேயிருந்து வாங்கி வருகிறார்கள். எனவே, அவர்களது நலன்கருதி புதிதாக கட்டடம் உடனடியாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேதுநாயக்கன்பட்டிபுதூர் பகுதியில், கேதுநாயக்கன்பட்டிபுதூர் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 6 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 3 நியாய விலைக் கடைகள் அரசுக் கட்டடத்திலும், 2 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும், கேதுநாயக்கன்பட்டிபுதூர் நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. இதில் 2 நியாய விலைக் கடைகளுக்கு, கேதுநாயக்கன்பட்டிபுதூர் மற்றும் களவாய்ப்புதூர் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலத்தை தானமாக வழங்க களவாய்ப்புதூர் பஞ்சாயத்துத் தலைவர் முன் வந்துள்ளதால் அந்நிலம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில், திருமருகல் ஒன்றியத்திற்குட்பட்ட நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான பொருட்களை சன்னாநல்லூர்



2006 ஆகஸ்ட் 25]

குடோனில் இருந்து கடந்த காலத்தில் கொண்டு சென்றார்கள். அது, கடந்த 2 ஆண்டுகாலமாக நாகப்பட்டினம் என்று மாற்றப்பட்டு, இப்போது அங்கிருந்து பொருட்கள் கொண்டு வருவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பழையபடியே சன்னாநல்லூர் குடோனில் இருந்து எடுத்துச் செல்வதற்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியைப் பொறுத்தது கேள்வி. இதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் அறிவிக்கப்படும்.

(முற்பகல் 9–40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மட்டுமல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள், மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு, 100 ரேஷன் கார்டுகள் இருக்கின்ற, இதைப்போன்ற இடங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் மிகவும் குறைவாக இருக்கின்ற இந்தப் பகுதிகளில் கடைகளைப் போட வேண்டுமென்று சொன்னால், அதற்குப் பகுதி நேரம் — ஆட்கள் போடுவதற்கு, தளவாடச் சாமான்கள், இதற்கெல்லாம் அதிகமாகச் செலவாகுமென்ற காரணத்தால் சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலே அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நான் எழுதிக்கொடுத்தது நிலுவையிலே இருக்கிறது. ஆகவே, நியாய விலைக்

கடைக் கட்டடங்கள் கட்டுவதற்கு தற்போது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே நான்கு பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதி வேண்டி நான் கோரிக்கை வைத்தது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே நிலுவையிலே இருக்கிறது. அதற்கும் உரிய ஆணைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக்கூடியதுதான். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**93—**

### உழவர் சந்தை

***772—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்)**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்)** கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் நிறைவேற்ற முன்வந்திருப்பதனால் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. செ. தாமோதரன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**94—**

### குளிர்பதனக் கிடங்கு

***1958—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கிணத்துக்கடவு விவசாயிகள் சந்தைக்குக் கொண்டு வருகின்ற காய்கனிகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் தனியார் நிறுவனங்கள் முன்வந்தால் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு அனுமதி வழங்கும்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவுப் பகுதியிலே குறைவாகத் தண்ணீர் இருப்பதனால், அதை வைத்து விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலையில், இன்றைக்கு அங்கே தக்காளி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அந்தத் தக்காளியை கிணத்துக்கடவு சந்தையிலே கொண்டுவந்து விற்கும்போது, சில நேரங்களில், விலை அதிகமாக இருக்கிறது; சில நேரங்களில் விலை குறைவு ஏற்படுகிறது. அதனால், விவசாயிகளுக்கு தக்காளியினால் நட்டம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு மேல் அந்தத் தக்காளியை வைத்திருக்க முடியாது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தத் தக்காளியைப் பாதுகாக்கின்ற வகையிலே, விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கின்ற வகையிலே, அங்கே ஒரு குளிர்சாதனக் கிட்டங்கி அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை, விருதுநகர், தலைவாசல், வேலூர், சின்னமனூர், விளாத்திகுளம், திருச்சி, வத்தலக்குண்டு மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய 9 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, தனியார்மூலம் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் முன்வருவார்களேயானால், அரசின் சார்பில், மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி, 25 சதவீதம் மானியத்தில் தனியார் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அந்தப் பகுதியிலே தனியார் யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு

கோரிக்கை. கிணத்துக்கடவிலே மார்க்கெட்டிங் கமிட்டியினுடைய கிட்டங்கி பெரியதாக உள்ளது. அது தற்போது எந்தவகையிலுமே விவசாயிகளுக்குப் பயன்படுவதாகத் தெரியவில்லை. எந்தப் பொருளையும் அங்கே கொண்டு வந்து வைப்பதில்லை. அதனால், அந்த இடத்திலே அரசு குளிர்சாதன வசதி செய்துகொடுத்தால், விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதையாவது அமைச்சர் அவர்கள் வருகின்ற காலக்கட்டங்களிலே பரிசீலனை செய்து, அங்கே அமைத்துக்கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு கட்டட அமைப்பு, பிறகு அதற்கு குளிர் சாதனங்கள் இவையெல்லாம் வாங்கி வைப்பதற்கு, கட்டட வடிவமைப்பே தனி. அதை வேறு விதத்திலே அமைக்க வேண்டும். இப்போது இருக்கிற godown, அதைப் பயன்படுத்தி, குளிர்பதனக் கிடங்கு அமைக்க இயலாது. இருந்தாலும், உறுப்பினர் சொல்வதை துறையின்மூலம் கேட்டறிந்து, முடியுமானால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு border—ஆக, எல்லையாக காவல்கிணறுவிளக்கு என்ற பகுதியில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் ஒரு காய்கனிகள் market இயங்கி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டம், திருவனந்தபுரம் வரை மிக அதிகமான காய்கனிகள் இந்தப் பகுதியிலிருந்துதான்—கத்தரிக்காய், மிளகாய், தக்காளி போன்ற பொருள்களெல்லாம் இங்கிருந்துதான் செல்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளிர்சாதனக் கிடங்கு அமைப்பதற்கு மத்திய அரசு 25 சதவீதம் மானியம் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதேபோன்று மாநில அரசும் ஒரு 25 சதவீதம் மானியம் வழங்கினால்—பெருந்தலைவர் காமராஜர் காய்கனிகள் market–ஐ நடத்தி வருகின்றவர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து நடத்தி வருகிறார்கள்—அவர்கள் 50 சதவீதம் போட்டு ஒரு குளிர்சாதனக் கிடங்கு அமைக்க விருப்பம் தெரிவித்தால், இந்த அரசு கட்டிக் கொடுக்க முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவில் விவசாயிகளுக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமென்பது இந்தக் கேள்வி. அவர் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்றுவிட்டார். ஆனால், ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டுமானால், இப்போது தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக் குழுவின்மூலம்தான் பெரும்பாலும் நிதியினை நாம் ஒதுக்கி, மத்திய சர்க்காரினுடைய அந்த 25 சதவீத மானியத்தையும் பெற்று அமைக்கின்றோம். நடப்பாண்டில் நிறைய இடங்களுக்கு குளிர் பதனக் கிடங்கு அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கோரிக்கையை வேண்டுமானால் அடுத்த நிதி ஆண்டில் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவும் பொள்ளாச்சியும் ஒரே வட்டத்திலே உள்ளன. பொள்ளாச்சியிலேதான் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய சந்தை உள்ளது. குறிப்பாக காய்கனிகள் உற்பத்தியிலே தமிழகத்திலேயே முன்னிலை வகிக்கின்ற பகுதி பொள்ளாச்சி பகுதியாகும். தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் கொத்தமல்லி போன்ற பச்சைக் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிற அந்த பொள்ளாச்சி பகுதியில் கிணத்துக்கடவுக்குமாகச் சேர்த்து, மிகப் பெரிய அளவில், அரசின் சார்பில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தற்போது உத்தேசம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**95—**

### புதிய பேருந்துகள்

**•50— திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்க ஏதுவாக மேலூர் பணிமனைக்கு பத்து புதிய பேருந்துகள் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்ட பின், ஒவ்வொரு பணிமனையிலும் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை மற்றும் அதன் வயதுக்குத் தக்கவாறு, அந்தந்த கிளைகளுக்குப் புதிய பேருந்துகள் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும், மேலூர் தொகுதியிலுள்ள ஊரகத் தடங்களில் தற்போது 29 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் 27 பேருந்துகள் பயணிகளின் முழுப் பயன்பாடு இல்லாமல், சராசரியாக 44 சதவீதம் என்ற அளவிலேயே பயணிகள் அடர்வுடன் இயக்கப்பட்டு வருகின்றன. தற்சமயம் புதிய பேருந்துகள் கூண்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்பணி முடிந்தவுடன் மேலூர் பகுதிக்கு கூடுதல் பேருந்துகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியைப் பொறுத்த அளவில், மேலூர் நகர் ஒன்றுதான் நகரமாக இருக்கிறது. மீதிப் பகுதிகள் பூராவும், ஐநூறுக்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகள்தான் இருக்கின்றன. அந்த மேலூர் depot–வில் இருக்கின்ற bus–களின் எண்ணிக்கை மொத்தம் 53. அதிலே 4 வண்டிகள் spare bus–ஆக நிறுத்திவிடுகிறார்கள். ஒரு வண்டி ஏதாவது special trip–ஆக ஓடுகிறது. மீதி 48 வண்டிகள்தான் மேலூர் தொகுதி முழுவதும், மதுரை, சிவகங்கை, கொட்டாம்பட்டி, நத்தம் போன்ற பல்வேறு இடங்களுக்கும் அந்த 48 bus–கள்தான் போய் வருகின்றன. மொத்தம் 48 வண்டிகள் போகின்ற நேரத்திலே, அவை 845 இடங்களிலே stage–ஆக நின்று வருகின்றன. அப்படி வருகின்ற காரணத்தினால், கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு அல்லது மேலூர் நகருக்கு பல்வேறு பொருள்கள் வாங்க வருகின்ற ஏழை எளிய மக்களுக்கு, கூலி வேலை செய்துவிட்டு வருகின்ற மக்களுக்கு bus வசதி பற்றாக்குறையாக இருக்கின்றது. அதேவேளையிலே, புது bus–கள் கொடுக்கின்ற நேரத்திலே, நம்முடைய நிர்வாகம் என்ன செய்கிறது என்றால், 2, 3 புது வண்டிகள் கொடுத்துவிட்டு, உடனே அதற்குப் பதிலாக அங்கே இருக்கின்ற பழைய வண்டிகளை வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று விடுகிறார்கள். ஆகையால், மேலூர் depot–வுக்கு 48 bus–கள் இருப்பது போதவில்லை. இப்போது இரண்டாயிரம்





bus–கள் வாங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலேயிருந்து கூடுதலாக,—ஏற்கெனவே 53 பேருந்துகள் அங்கே இருக்கின்றன— இன்னும் கூடுதலாக 10 பேருந்துகளைக் கொடுத்து, 63 வண்டிகளாக இயக்கினால்தான் வசதியாக இருக்கும். மேலூர் தொகுதியிலே 500–க்கும் மேற்பட்ட கிராமங்களிலே, நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களிலே இன்னும் போக்குவரத்து வசதியில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள், ஏழையெளிய மக்கள், மாணவர்கள் பயனடையக்கூடிய வகையில்—ஏற்கெனவே கடந்த சில மாதங்களுக்கு முன்பு..

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஆர். சாமி:** பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் ஏறமுடியாமல், கொட்டாம்பட்டி பகுதியிலேயுள்ள பள்ளபட்டி கிராமத்திலே பஸ் மறியல் செய்து, ஒரு மாத காலம் பள்ளி செல்லவேண்டிய அந்த மாணவர்கள் எல்லாம், பஸ்சிலே ஏறமுடியாமல் நடந்து செல்லக்கூடிய அவல நிலை இருக்கின்றது. அதைப் போக்கக்கூடியவகையிலே, அமைச்சர் அவர்கள் வாங்குகின்ற 2,000 பஸ்களிலே, மேலூர் டெப்போவுக்கு ஏற்கெனவே உள்ள 53 பஸ்களுடன் கூடுதலாக இன்னும் 10 பஸ்களை கொடுத்து, அதற்குப் பதில், அங்கேயிருக்கின்ற பழைய பேருந்துகளை எடுக்காமல், 63 பஸ்களை ஓட்டுவதற்கு, மேலூர் தொகுதிக்கும், மற்ற அனைத்து தொகுதிகளுக்கும் வாங்குகிற, அனைத்து பஸ்களையும் சமமாகப் பிரித்து, 234 தொகுதிகளுக்கும் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதிகளிலே பயணிகளின் தேவைக்கேற்ப பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டு இருக்கிறது. பள்ளிக்கூடம் திறக்கின்ற நேரத்தில் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும்கூட, அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கென்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது 300 புதிய பேருந்துகள் வழங்கியிருக்கிறார்கள். அதிலே, உரிய பங்கு மேலூருக்கும் வரும்.

ஏற்கெனவே, மானியத்திலே தெரிவித்திருக்கிறேன். 15,500 route-கள் இப்போது இயங்கிக்கொண்டு வருகின்றன. மேலும், 1,000 route-கள் புதிதாக சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் கேட்டதற்கிணங்க இயக்கப்படும். அப்படி இயக்கப்படும்போது, உங்கள் பகுதிக்கு முன்னுரிமை தந்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்று போக்குவரத்து நெரிசல் அதிகப்படியாக இருப்பதன் காரணத்தினால், முன்பு இருந்ததுபோல மீண்டும் மாணவர்களுக்கும், மகளிருக்கும் என்று சிறப்புப் பேருந்து இந்த அரசாங்கம் விடுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே மகளிருக்கு என்று தனி பேருந்துகள் அந்தந்தப் பகுதிகளிலே புதிதாக இயக்க ஆரம்பித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டால், அங்கு தேவையிருக்குமானால், அதைப்பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஊட்டி, மலைகளின் இளவரசி என்று சொல்லக்கூடிய ஏலகிரி மலையிலிருந்து, தலைநகருக்கு 102 B என்ற பேருந்து வந்துகொண்டிருந்தது. அதை கடந்தகால ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள். எனவே, சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே, மீண்டும் ஏலகிரி மலையிலிருந்து சென்னைக்கு பேருந்துவிட அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையிலே பேருந்துகள் அதிகமாக இயக்கப்பட வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் வந்த காரணத்தால்தான், மினிப் பேருந்துகளே Service Area-வில் 8 கிலோ மீட்டர் வரையிலும், Un-served Area-விலே 20 கிலோ மீட்டர் வரையிலும், ஒரு தனி நிகழ்வாக





அதற்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. ஏலகிரி மலையிலிருந்து பேருந்துகள் தேவையென்று சொன்னால், தனியார்கள், மினி பேருந்து உரிமையாளர்கள் விருப்பப்படுவார்களேயானால், அவர்களுக்கு அனுமதிக்கப்படும். அதுமட்டுமல்ல, இங்கே—State Express—விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் ஏலகிரி மலையிலிருந்து சென்னைக்குப் பேருந்து கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, நான் சொல்லியிருக்கிறேன். பல இடங்களிலிருந்து பயணிகள் அடர்வு அதிகமாக இருக்குமானால், அதைப் பரிசீலித்து பேருந்து விடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கொடுமுடியிலே ஒரு பணிமனைக்கு இடம் ஆர்ஜிதம் செய்து, அங்கே சுற்றுச் சுவர் இல்லாமல், Shed இல்லாமல், கிட்டத்தட்ட 10 பேருந்துகள் நிறுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு Diesel Tank—கும் புதைக்கப்பட்டு இருக்கிறது. உடனடியாக அந்தப் பகுதிக்கு Shed போட்டு அந்த வண்டிகளை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து, அதற்கான அடிப்படை கட்டமைப்பு வேலைகள் துவங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் செய்தியைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் புதிய பேருந்துகள் வாங்காத காரணத்தால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்ற பேருந்துகள் எல்லாம் மிகப் பழமையான பேருந்துகளாக இருக்கின்றன. மேலும், இந்தப் பழைய பேருந்துகள் வெளியேற்றும் புகையாலும், ஒலியாலும், சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன், அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்கின்ற பயணிகளும் அச்சத்தோடு பயணிக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, சுற்றுச்சூழலையும், பயணிகளினுடைய அச்சத்தையும் போக்குகின்ற வகையிலேயும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே

[2006 ஆகஸ்ட் 25

இருக்கின்ற பேருந்துகள் அனைத்தையும், புதிய பேருந்துகளாக இயக்குவதற்கு, இந்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மொத்த அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கை 17,200. அதிலே 9,000 பேருந்துகள் மாற்றத்தக்க அளவிலே இருக்கின்றன. கடந்த காலத்திலே, போதுமான அளவிற்குப் பேருந்துகள் புதிதாக வாங்கப்படாத காரணத்தால், இப்போது அதிகமாகப் பழமையாக இருக்கின்றன. அதனால்தான், இந்த ஆண்டே, 2,230 பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். மாற்றப்பட வேண்டிய பேருந்துகள், படிப்படியாகப் புதிதாக மாற்றப்பட்டு இயக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வேறு தொகுதியில் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன்; ஏனென்றால், திருவெறும்பூர் பகுதியிலே அனைத்துமே நல்ல பேருந்துகளாக விடப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட, அவர் கேட்டு, மூன்று புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**96—**

### சார்-பதிவாளர் அலுவலகம்

***622—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, சாலவாக்கம் கிராமத்திற்குச் சார்-பதிவாளர் அலுவலகம் மீண்டும் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம் கிராமத்தில் மீண்டும் சார்-பதிவகம் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.



2006 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், இருக்கையில் இல்லை.

வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**97—**

### நீதிமன்றம்

***1993—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு, 2006-2007, பகுதி–2 திட்டத்தின்கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட செயற்குறிப்பு, பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில், முதன்மை அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரியை இருப்பிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. அப்போது தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பல அமைப்புகள் போராடி, எங்களுக்கு இந்த நீதிமன்றம் கிடைக்காத நிலைமையிலே, இப்போது அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் திட்ட மதிப்பீடு ரூ.88.93 இலட்சத்திலே தயார் செய்யப்பட்டு, அரசுக்கு வந்திருக்கின்றது. பகுதி 2 திட்டத்திலே, 2006–2007 ஆம் ஆண்டிலே, முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்திலே சேர்க்கமுடியவில்லை. வருகின்ற ஆண்டிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

[2006 ஆகஸ்ட் 25

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நான்காவது முறை முதல்வராக இருந்தபோது, 2000 ஆம் ஆண்டு இறுதியில், இதே அவையில், தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் அமைப்பதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். கடந்த 5 ஆண்டுக் காலமாக நாங்கள் போராடியும், நீதியும் கிடைக்கவில்லை, நீதிமன்ற அமைப்பும் எங்களுக்கு உருவாக்கப்படவில்லை. 'கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற நிலையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அரசு, இந்த ஆண்டு நிதிநிலைப் பற்றாக்குறையைக் காரணம் காட்டாமல், கோடிக்கணக்கான ரூபாயில் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கியிருக்கிற கலைஞருடைய அரசு, தருமபுரி மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில், இந்த ஆண்டே நீதிமன்றம் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற நிதியாண்டிலே நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் Consumer Courts–நுகர்வோர் நீதிமன்றங்களில் பல இடங்களில், நீதிபதிகள் இல்லாத குறைகள் இருக்கின்றன. அவர்களை நியமிப்பதற்கு, இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில், 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பலமுறை மனுக்கள் கொடுக்கப்பட்ட பிறகும், இன்றுவரையில் அதற்கான ஒரு தீர்வு இல்லாமல் இருக்கிறது. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 25]

முற்பகல் 10–00

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாலே ஒரு பொதுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய நிதி வந்தவுடனே நிச்சயமாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுகின்ற பணி தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் துவங்குவது குறித்து அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டில் ஆலோசிக்கப்படும் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். தருமபுரி என்பது மாவட்டத்தினுடைய தலைநகரம். மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் கடந்த காலங்களில் மாவட்டம் பிரிக்கப்படாத சூழ்நிலையிலும்கூட கிருஷ்ணகிரியிலே இயங்கி வந்தது. அன்றைய காலக்கட்டத்திலிருந்து தொடர்ந்து போராடி வருகிற வழக்கறிஞர்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் இருந்தாலும், அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் இல்லாதது, பெரும் குறையாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில், அந்த மாவட்டத்திற்கும் நீதி கிடைக்கிற வகையில், நீதிமன்றம் நடப்பாண்டிலே தொடங்குவதற்கு, அரசு முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகிற ஆண்டிலே நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**98—**

## மாவட்ட விளையாட்டு அலுவலகம்

***490—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மாவட்ட விளையாட்டு அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலகம் அமைத்துத் தர ஆவன செய்யப்பட்டுள்ளது. *(ஆ)* கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூபாய் 56 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள், வெளி விளையாட்டு அரங்கில், 400 மீட்டர் தடகள ஓடு பாதை, கால்பந்து மைதானம், கூடைப் பந்து மைதானம் மற்றும் கையுந்துப் பந்து மைதானம் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கூட்ட அறை, உடற்பயிற்சிக் கூடம், ஆண்கள், பெண்களுக்கான கழிவறைகள் மற்றும் ஓர் அலுவலக அறையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளமும் மற்றும் குத்துச் சண்டை மேடையும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட விளையாட்டு அலுவலகம் 10–2–2006 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு, 9–2–2004–லே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, தனியாகப் பிரிக்கப்பட்டது. பிரிக்கப்பட்டபின், இன்றுவரையிலே இன்னும் பல்வேறு மாவட்ட அலுவலகங்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வர வேண்டிய மாவட்ட அலுவலகங்கள் இன்னும் தருமபுரியிலேயே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கர்நாடக மாநில எல்லையை ஒட்டியுள்ள பொதுமக்களும், ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள பொதுமக்களும் நான்கு மணி நேரம், ஐந்து மணி நேரம் பயணம் செய்துதான் அந்த மாவட்ட அலுவலகங்களிலே உள்ள பணிகளைக் கவனிக்க முடிகிறது. அதிலே ஒன்று, நம்முடைய விளையாட்டு—Sports அலுவலகம். ஆகவே, இந்த அலுவலகத்தை தருமபுரி மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரித்து,



கிருஷ்ணகிரி மாவட்டத்திலே அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரிலே அமைந்துள்ள விளையாட்டு மைதானம் ஆறு சுற்றுகளைக் கொண்ட மைதானமாக இருப்பதால் மாநில அளவிலான, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை அங்கே நடத்த முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, மாநில அளவிலான, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்த எட்டு சுற்றுகள் கொண்ட மைதானமாக அமைக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த யோசனையை ஏற்கெனவே தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் மூலமாக, எல்லா மாவட்டங்களிலும் உள் விளையாட்டு அரங்கம், வெளி விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைப்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. இதுபோக, மற்றுமுள்ள பிரச்சினைகளும், உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கையும் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற

வகையில், பஞ்சாயத்துக்கள் அளவிலே விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலேயுள்ள இளைஞர்களும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், உள்ள ஆரோக்கியத்தோடும் வாழ்வதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்கள் அளவில் போட்டிகளை நடத்தி, அதற்கான பரிசுகளை வழங்குவதற்கு, பெரிய அளவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்காக இந்த அரசு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கும்போது, அவர் மல்யுத்த வீரராக இருந்திருப்பார் என்று நினைக்கின்றேன். வேறு ஏதாவது அவருடைய இள வயதில்—அவர் திருநெல்வேலி மாவட்டத்துக்காரராக இருப்பதனால், உறுதியாக மல்யுத்த வீரராக இருப்பார்—வேறு ஏதாவது விளையாட்டில் சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்கிறாரா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர் ரொம்ப நல்லவர். வேறு விளையாட்டுக்களில் ஈடுபடமாட்டார். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**99—**

## புலிகள் இனம்

***86—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

**மாண்புமிகு வனத் துறை அமைச்சர்** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழிந்து வருவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புலிகள் இனத்தைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழியவில்லை. (ஆ) எழாது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முதுமலைக்காடு, முண்டந்துறை, கொல்லிமலை, டாப்சிலிப், வால்பாறை போன்ற பகுதிகளில் புலிகள் வாழ்கின்றன. புலிகள் இனம் வெகுவாகக் குறைந்திருக்கின்றது. அதாவது, சிறுத்தைப் புலிகள், வரிப் புலிகள் வெகுவாகக் குறைந்திருப்பதாக அறியப்படுகின்றது. புலிகளின் தோலுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அதிகமாகக் கிராக்கி உள்ளது. புலிகளின் தோலுக்கு ஆசைப்பட்டு, வேட்டைக்காரர்கள் புலிகள் இனத்தைக் கொன்று அழிக்கிறார்கள். எனவே, அந்தப் புலிகள் இனத்தைப் பாதுகாக்கின்ற வகையிலேயும், அவற்றின் இனத்தைப் பெருக்குகின்ற வகையிலேயும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழிவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. மேலும், புலிகள் இனத்தைப் பாதுகாக்கவும், அவற்றை வேட்டையாடுவதிலிருந்து தடுப்பதற்குமான நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போலவே, அவற்றின் இனப்பெருக்கத்தை மேலும் பெருக்கவும், பாதுகாத்திடவும், வனங்களிலேயே தேவையான வசதிகளை உருவாக்கியும், அவற்றிற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் திட்டங்கள் தீட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தபபட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முதுமலையிலும், அதைப்போலவே, ஆனைமலைப் பகுதியிலும், களக்காடு, முண்டந்துறை பகுதிகளிலும் புலிகள் காப்பகத்தை விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். புலிகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ், மைய அரசுக்கு ஒரு திட்டம் தீட்டி, 115 கோடியே, 78 இலட்சத்து, 69 ஆயிரம் ரூபாய்க்கு, இந்த ஆண்டிலேயே அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். அவர்கள், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக,

[2006 ஆகஸ்ட் 25

1 கோடியே, 19 இலட்சத்து, 31 ஆயிரம் ரூபாயை இந்த ஆண்டிலே ஒதுக்கித் தந்து, 60 ஆயிரம் ரூபாயை முதல் தவணையாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முழுப் பணத்தையும் கொடுத்திருப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிகளிலெல்லாம், நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கும். எனவே, வருங்காலத்திலே கையகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–10)

இங்கே புலியின் தோல்கள் எல்லாம் விற்கப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்போல இந்தத் துறைக்கு 11–7–2006–லே ஒரு தகவல், நீலகிரி மாவட்டத்தினுடைய வடக்குக் கோட்டத்திற்குக் கிடைக்கப்பெற்று, அது இரகசியத் தகவல் என்ற காரணத்தாலே, 12 ஆம் தேதி, இரகசியமாகவே அதிகாரிகள் ஒரு படையை அமைத்து, அதன் பின்னால் 14 ஆம் தேதி அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, ஒரு சிறுத்தைத் தோலும், இரண்டு புலிக் குட்டிகளினுடைய தோல்களும் 14 ஆம் தேதி பறிமுதல் செய்யப்பட்டு, அதன் காரணமாக 17 பேர் கைது செய்யப்பட்டு, காவலிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். 14 பேர் இதையே தொழிலாகக் கொண்டு செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து, அவர்களைக் குண்டர் சட்டத்திலே சிறையில் அடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சிலர் கேரளப் பகுதியிலிருந்து வந்து, அங்கு முகாமிட்டு, இந்தத் தோல்களையெல்லாம் வாங்கிச் சென்று விற்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலிகள் இனம் அழியக்கூடாது. அதன் இனத்தைப் பெருக்கவேண்டும். காட்டில் சுதந்திரமாக இருக்கவேண்டும். புலிகள், காட்டில் இருக்கும்பொழுது, அதன் தேவைகள், தண்ணீர் தாராளமாகக் கிடைக்கவேண்டும். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், தண்ணீர் கிடைக்காமல் சில நேரங்களில் புலிகள், ஊருக்குள், கிராமத்திற்குள் நுழைந்து கால்நடைகளையும், மனிதர்களையும் வேட்டையாடி இருக்கின்றன. அந்த வகையிலே, மனிதர்களைப் பாதுகாக்கின்ற



2006 ஆகஸ்ட் 25]

வகையிலே, புலிகள் ஊருக்குள்ளும், நாட்டுக்குள்ளும் நுழையாதவகையில், என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதோடு, கோம்பையிலிருந்து கோம்பைமெட்டு வரைக்கும் யானைகள் விவசாயிகளின் நிலங்களில் புகுந்து நாசம் செய்கின்ற இந்தவேளையில், பாதுகாப்புக்காக மின் வேலி அமைக்கின்ற திட்டம் இந்த ஆண்டு உண்டா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலிகளைப் பாதுகாப்பது பற்றியும், புலிகளால் மனிதர்களுக்கு ஆபத்து வராமல் தடுப்பது பற்றியும், நீண்ட அனுபவம் பெற்றவர் தம்பி திரு. நா. இராமகிருஷ்ணன். எனவே, அவரிடமிருந்து அந்த அனுபவங்களை எல்லாம் இந்த அரசு பெற்று, புலிகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**100—**

### கால்நடை மருந்தகம்

**•426—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி தொகுதி, குச்சனூர் துணைக் கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள வினாவில் ஒரு திருத்தம், குச்சனூரில் செயல்பட்டு வருவது, துணைக் கால்நடை மருந்தகம் அல்ல, அது கிளை நிலையம் ஆகும். அதாவது Sub-Centre ஆகும்.

இந்த வினாவிற்கான விடை. (அ) தேனி மாவட்டம், குச்சனூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2006 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சனீஸ்வர பகவான் திருக்கோவிலை வழிபடுகின்ற பக்தர்கள், திருநள்ளாறுக்கு இணையாக வழிபடுகின்ற இடம் குச்சனூர் ஆகும். இந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள், மேல்சிகிச்சைக்காகச் செல்லவேண்டுமானால், அருகேயுள்ள சின்னமனூர் நகராட்சிக்கு 8 கிலோ மீட்டர் தூரத்திலும், உத்தமபாளையம் பேரூராட்சிப் பகுதிக்கு 16 கிலோ மீட்டர் தூரத்திலும் செல்ல வேண்டியிருக்கிறது. குச்சனூர் கால்நடைக் கிளை நிலையத்தைச் சுற்றிலும் மார்க்கியங்கோட்டை, சங்கராபுரம், புலிக்குத்தி, உப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் துணைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. குச்சனூர் பேரூராட்சியை மையமாகக் கொண்டு இந்த ஐந்து துணைக் கிளை நிலையங்களை ஒன்றாக இணைத்து, சுமார் 50,000 கால்நடைகள் பயன்பெறுகின்றவகையில் ஒரு கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சனூர் அமைந்துள்ள சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே மூன்று மருந்தகங்கள் மற்றும் எட்டு கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதலால், இங்குள்ள கால்நடைகளுக்கு இந்த நிலையங்களே போதுமானது என்பதாலும், இந்தக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்துவது தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பயனற்ற கால்நடைகள், கேரளாவிற்கு, தேனி மாவட்டத்தின் வழியாக பெரும்பாலான கால்நடைகள் கொண்டுசெல்லப்படுகின்றன. கொண்டுசெல்லபடுகின்ற கால்நடைகள், கால்நடையாகவோ அல்லது வாகனத்தின்மூலமோ கொண்டு செல்வதற்கு இடையில் தேனி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு நாளோ, இரண்டு நாட்களோ தங்க வைத்துவிடுகிறார்கள். வெளியிலிருந்து வருகின்ற



2006 ஆகஸ்ட் 25]

மாடுகளுக்கு பல்வேறுபட்ட நோய்கள் இருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள் பாதிக்காதவண்ணம் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது தனிக் கேள்விக்குரியது. இருந்தாலும், அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

(முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே, கீச்சளம் கிராமம் என்பது விவசாயிகள் நிறைந்த பகுதி. கடந்த ஆட்சியிலே எங்கள் பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைக்கின்றபோதுகூட, நேரடியாக அவரிடம் அந்த ஊர் மக்கள் கோரிக்கை வைத்தார்கள். நீண்டகாலமாக அந்தக் கால்நடை மருந்தகம் திறக்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு புதிய கால்நடை மருந்தகத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேற்றையதினத்திலே என்னைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அரசு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள

கிள்ளை பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை இல்லாத காரணத்தால், கால்நடை மருத்துவமனை அமைக்க இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல் 3)*

1—

### மின்மாற்றி

**வினா எண் 1182—திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட சபேட் நகர் பத்தரை மற்றும் இதர கிராமங்களிலுள்ள மின்னழுத்த குறைவை தீர்ப்பதற்கு புதிய மின்மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட சபேட் நகருக்கு கண்டர் விளாகம் மின்மாற்றி மூலமாகவும், பத்தரை கிராமத்திற்கு ரீத்தாபுரம்-III மின்மாற்றி மூலமாகவும் மின் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கொல்லன்விளை, நெல்லிவிளை, சலேட் நகர், பத்தரை ஆகிய இடங்களில் ஒரு முனை மின் பாதையை மும்முனை மின்பாதைகளாக்கிட அபிவிருத்தி மதிப்பீடுகள் (Improvement Estimates) அனுமதிக்கப்பட்டு பணிகள் 22-7-2006 அன்று முடித்து மின்னழுத்த

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தன...





குறை நிவர்த்தி செய்யப்பட்டது. அதன் பின்னர் இது தொடர்பாக புகார் மனு ஏதும் வரப்பெறவில்லை.

2—

### மின் விநியோக இழப்பு

**வினா எண் 2232—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் துறையில் கடந்த ஆண்டு லைன் லாஸ் எத்தனை சதவிகிதம் என அரசு அறிவிக்குமா?

(ஆ) இதனை குறைக்க ஏதேனும் புதிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நிகர மின்சக்தி விற்பனையில் இருந்தும், மொத்த மின்சக்தி விற்பனையில் இருந்தும், மின் செலுத்துகை மற்றும் மின் விநியோக இழப்பு, தமிழகத்தில் 18 சதவீதமாக 2005-2006 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழகத்தில் மின்கம்பித் தொடரில் ஏற்படும் மின் இழப்பை (line loss) குறைக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1. உயர்மின் அழுத்த விநியோகப் பாதைகளுக்கும், தாழ்வு மின் அழுத்த விநியோகப் பாதைகளுக்கும் உள்ள விகிதத்தைக் குறைக்க புதிய உயர்மின் அழுத்த விநியோகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் விநியோக மின் மாற்றிகளைப் புதிதாக நிறுவுதல்.

2. புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல்.

3. கூடுதல் விநியோக மின்மாற்றிகள் நிறுவுதல்.

4. அதிக திறனுள்ள மின் கம்பிகளைப் பயன்படுத்துதல்.

5. உயர்மின் அழுத்த மின் தேக்கிகளை துணை மின் நிலையங்களில் நிறுவுதல்.

[2006 ஆகஸ்ட் 2

6. தாழ் மின் அழுத்த மின் தேக்கிகளை விநியோ மின்மாற்றிகளின் குறைந்த அழுத்த பக்கத்தில் நிறுவுதல்.

7. இணைப்பு மின்னூட்டிகள் நிறுவுதல்.

8. மின்னூட்டிகளின் பாதையை மாற்றியமைத்தல்.

மேற்கண்ட மேம்பாட்டுத் திட்டங்கள், விரைவுபடுத்தப்பட்ட மின மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம் (APDRP) மூலமாகவும் ஊர வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கி மற்றும் ஊரக மின்மயமாக்க கழகம் ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**3—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 2103 —திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம் சிறப்பு ஊராட்சியில் அண்ணா நகர் மற்று வெண்புருஷம் பகுதியிலும் நியாய விலைக் கடை கட்டும் திட்ட அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சரகத்திற்குட்பட்ட மாமல்லபுரம் சிறப்பு ஊராட்சியில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் நடத்தப்படும் "காஞ்சி மக்கள் அங்காடி" முறையே "அண்ணாநகர்" மற்றும் "வெண்புருஷம் நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. மாமல்லபுரம் சிறப்பு ஊராட்சியின் திட்டப்பணி நிதி ஒதுக்கீட்டில் நியாய விலைக் கடைக்கு கட்டடங்கள் கட்டிட நிதி ஒதுக்கீடு இருப்பின் அதிலிருந்தோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் நிதியுதவி பெறப்படின் அதிலிருந்தோ, மாமல்லபுரம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட "அண்ணாநகர்" மற்றும் "வெண்புருஷம்" காஞ்சி மக்கள் அங்காடி நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



2006 ஆகஸ்ட் 25]

**4—**

## கூட்டுறவு வங்கி

**வினா எண் 2142—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவுற்ற விவசாயக் கூட்டுறவு வங்கிகளை மீண்டும் இயக்க புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நலிவுற்ற விவசாயக் கூட்டுறவு வங்கிகளை மீண்டும் இயக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**5—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 2449—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்திற்கு நியாய விலைக் கடை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் மொத்தம் 233 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்கள் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் கோடங்கிப்பட்டி நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். கோடங்கிப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து

பாரமடையூர் கிராமம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எனவே தற்போதுள்ள விதிமுறைகளின்படி புதியதாக ஒரு பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**6—**

**கட்டட வசதி**

**வினா எண் 3233—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, சுந்தரக்கோட்டை கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் கிராம அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியை சார்ந்த சுந்தரக்கோட்டை கிராமத்தில் இயங்கும் அங்காடிக்கு, கீழநத்தம் கிராம கமிட்டிமூலம் தனியே கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டு, 2001–2002 ஆம் ஆண்டு முதல் வாடகையின்றி இக்கட்டடத்தில் அங்காடி இயங்கி வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

**7—**

**கூட்டுறவு வங்கிகள்**

**வினா எண் 3515—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நலிவடைந்த கூட்டுறவு வங்கிகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நலிவடைந்த கூட்டுறவு வங்கிகளை வலிவானதாக்கவும், புத்துயிரூட்டவும் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**8—**

**கூட்டுறவு வங்கி**

**வினா எண் 3520—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் கூட்டுறவு வங்கி இலாபத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் கூட்டுறவு வங்கி இலாபத்தில் இயங்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**9—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 3537—திரு. ந. கணபதி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், மொன்னையம்பேட்டை கிராமத்தில் நியாய விலைக் கடை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வானூர் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் ஒன்றியம், அனுமந்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் கீழ்பத்துப்பட்டு நியாய விலைக் கடை எண் 1, சேவை பகுதியிலுள்ள மொன்னையம்பேட்டை கிராமத்தில் 181 குடும்ப அட்டைகள் உள்ளன. கீழ்பத்துப்பட்டு கடை எண் 1-க்கும், மொன்னையம்பேட்டை

[2006 ஆகஸ்ட் 25

கிராமத்திற்கும் இடையே 3 கி.மீ தூரம் உள்ளது. மொன்னையம்பேட்டை பகுதிக்கு ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது தொடர்பாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10—**

## நீதிமன்றம்

**வினா எண் 2034—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வால்பாறையில் மகளிருக்கு என்று தனியாக நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்று வால்பாறையில் இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றம் பொள்ளாச்சி சார்நிலை நீதிமன்றம் மற்றும் மகளிர் நீதிமன்ற அதிகார எல்லையின்கீழ் மாவட்ட மற்றும் குற்றவியல் அமர்வு நீதிபதியின் தலைமையில் இயங்கி வருகிறது.

பொள்ளாச்சி சார்நிலை நீதிமன்றத்தின் அதிகார எல்லையில் கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றம் ஏற்கனவே இயங்கி வருகிறது. எனவே, வால்பாறையில் மகளிர் நீதிமன்றம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் தற்பொழுது இல்லை.

(ஆ) இல்லை. எழவில்லை.

**11—**

## ஓய்வூதியம்

**வினா எண் 2167—திரு. பெ.சு. விஜயகுமார் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா



2006 ஆகஸ்ட் 25]

(அ) போளூர் தொகுதியில கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உதவியாக உள்ள கிராமப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராம உதவியாளர்கள் பகுதி நேர பணியிலிருந்து முழு நேர அரசுப் பணிக்கு 1-6-95 முதல் கொண்டு வரப்பட்டுள்ளனர். கிராம உதவியாளர்களுக்கு 1-6-95-க்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு நடைமுறையில் உள்ள ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதியம் வழங்க அரசு ஆணை (3டி) எண் 9, வருவாய் (பணி 7-1) துறை, நாள் 28-2-2006 ல் ஏற்கனவே அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் அடிப்படையில், கிராம உதவியாளர்களில் 01-06-1995-க்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் பணிபுரிந்த கால அளவினை அடிப்படையாகக் கொண்டு, தகுதியின் அடிப்படையில், தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் ஓய்வூதிய விதிகள் 1995-ன் விதிகளுக்குட்பட்டு ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**12—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 36—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னார், கோடந்தூர், தளிஞ்சி போன்ற பகுதிகளை டாப்சிலிப் போன்று சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித்

தலைவரின் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலை வசதி, கழிப்பிடம், தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. சின்னார், கோடந்தூர், தளிஞ்சி போன்ற பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பரிசீலிக்கப்படும்.

**13—**

## நிதியுதவி

**வினா எண் 47—திரு. துரை சந்திரசேகரன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தஞ்சாவூர் மாவட்டம், சோழநாட்டு திருப்பதிகள் எனும் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தில் கண்டியூர் கிராமத்திற்கு இந்திய சுற்றுலாத் துறையிடம் நிதி பெற அரசு பரிந்துரை செய்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆம். சோழநாட்டுத் திருப்பதிகள் ஒருங்கிணைந்த சுற்றுலா சுற்றுச் சாலை திட்டத்தின்கீழ தஞ்சாவூர் மாவட்டம், திருகண்டியூர் கிராமத்தில் ரூ.112.00 இலட்சங்களுக்கு வளர்ச்சிப் பணிகள் (இந்திய சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.79.72 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.32.28 இலட்சம்) மேற்கொள்ளப்படவுள்ளது.

**14—**

## தொங்கும் பாலம்

**வினா எண் 99—திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை—திருவள்ளுவர் சிலை இடையே தொங்கும் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை—திருவள்ளுவர் சிலை இடையே தொங்கும் பாலம் அமைப்பது குறித்து தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஆனால், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தற்பொழுது படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது.

**15—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 115—திரு. குத்தாலம் க. அன்பழகன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்திலுள்ள திருமணஞ்சேரி கோயிலை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவிப்பதில்லை. ஆனால் சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் குடிநீர் வசதி, உணவகம், சாலைவசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்த சுற்றுலாத் துறையின மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் அருள்மிகு உத்வாகநாதர் கோயில் திருமணஞ்சேரியில் ரூ.20.00 இலட்சம் (சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.10.00 இலட்சம் + மாவட்ட நிர்வாகம் ரூ.10.00 இலட்சம்) தங்கும் வசதியுடன் கூடிய ஓய்வறை கட்ட ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணி மாவட்ட ஆட்சித்தலைவர்மூலம் மேற்கொள்ளப்படும்.

**16—**

## சுற்றுலா மையம்

**வினா எண் 391—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை, சுமனலிங்கேஸ்வரர் ஆலயம் பஞ்சலிங்கம் ஆகிய பகுதிகளில் ஏராளமான பக்தர்கள் வருவதால் இதனை முக்கிய சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை, சுமனலிங்கேஸ்வரர் ஆலயம் பஞ்சலிங்கம் ஆகிய இடங்களை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் திருமூர்த்திமலையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.8.45 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு (சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.4.225 இலட்சம் + மாவட்ட நிர்வாகத்தின் பங்கு ரூ.4.225 இலட்சம்) மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருமூர்த்திமலையிலிருந்து பஞ்சலிங்கம் வரை நடைபாதை சீரமைத்தல், படிக்கட்டு ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**17—**

## வசூல் தொகை

**வினா எண் 940—திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி முனையில் உள்ள திருவள்ளுவர் சிலையை 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை பார்க்க வந்த பார்வையாளர்களிடமிருந்து வசூலான மொத்தத் தொகை எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 8-7-2002-லிருந்து திருவள்ளுவர் சிலை பராமரிப்புப் பணியை ஏற்றுக் கொண்டது. அது முதற்கொண்டு கிடைத்த வருவாய் பின்வருமாறு:

| | |
|---|---|
| 8–7–2002 முதல் 31–3–2003 வரை | ரூ.47,39,692.50 |
| 1–4–2003 முதல் 31–3–2004 வரை | ரூ.72,34,945.50 |
| 1–4–2004 முதல் 31–3–2005 வரை | ரூ.54,95,295.00 |
| 1–4–2005 முதல் 31–3–2006 வரை | ரூ.49,58,407.00 |
| 1–4–2006 முதல் 31–5–2006 வரை | ரூ.14,99,156.00 |

**18—**

## அருவியை அழகுபடுத்துதல்

**வினா எண் 1797—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள குரங்கு அருவியை அழகுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில். எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள குரங்கு அருவியை அழகுபடுத்துதல் தொடர்பாக எவ்வித செயற்குறிப்பும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**19—**

## படகுப் போக்குவரத்து

**வினா எண் 2113—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

**16—**

### சுற்றுலா மையம்

**வினா எண் 391—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை, சுமனலிங்கேஸ்வரர் ஆலயம் பஞ்சலிங்கம் ஆகிய பகுதிகளில் ஏராளமான பக்தர்கள் வருவதால் இதனை முக்கிய சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்திமலை, சுமனலிங்கேஸ்வரர் ஆலயம் பஞ்சலிங்கம் ஆகிய இடங்களை சுற்றுலா மையமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. ஆனால், சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழ் திருமூர்த்திமலையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.8.45 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு (சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.4.225 இலட்சம் + மாவட்ட நிர்வாகத்தின் பங்கு ரூ.4.225 இலட்சம்) மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருமூர்த்திமலையிலிருந்து பஞ்சலிங்கம் வரை நடைபாதை சீரமைத்தல், படிக்கட்டு ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

**17—**

### வசூல் தொகை

**வினா எண் 940—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி முனையில் உள்ள திருவள்ளுவர் சிலையை 2001 ஜூன் முதல் 2006 ஏப்ரல் வரை பார்க்க வந்த பார்வையாளர்களிடமிருந்து வசூலான மொத்தத் தொகை எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 8-7-2002-லிருந்து திருவள்ளுவர் சிலை பராமரிப்புப் பணியை ஏற்றுக் கொண்டது. அது முதற்கொண்டு கிடைத்த வருவாய் பின்வருமாறு:

| | |
|---|---|
| 8-7-2002 முதல் 31-3-2003 வரை | ரூ.47,39,692.50 |
| 1-4-2003 முதல் 31-3-2004 வரை | ரூ.72,34,945.50 |
| 1-4-2004 முதல் 31-3-2005 வரை | ரூ.54,95,295.00 |
| 1-4-2005 முதல் 31-3-2006 வரை | ரூ.49,58,407.00 |
| 1-4-2006 முதல் 31-5-2006 வரை | ரூ.11,99,156.00 |

**18—**

### அருவியை அழகுபடுத்துதல்

**வினா எண் 1797—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள குரங்கு அருவியை அழகுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள குரங்கு அருவியை அழகுபடுத்துதல் தொடர்பாக எவ்வித செயற்குறிப்பும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**19—**

### படகுப் போக்குவரத்து

**வினா எண் 2113—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பக்கிங்காம் கால்வாயில் சென்னையிலிருந்து சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் மாமல்லபுரம் மற்றும் புதுவைக்கும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

பக்கிங்காம் கால்வாயில் சென்னையிலிருந்து சுற்றுலா பயணிகளை கவரும் விதத்தில் மாமல்லபுரம் மற்றும் புதுவைக்கும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**20—**

## அகழியை ஆழப்படுத்துதல்

**வினா எண் 2114—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கோட்டையை புதுப்பித்து சுற்றுலாப் பயணிகள் பார்வைக்கு ஏற்றாற் போன்று அகழியை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு கோட்டையை புதுப்பித்து, கோட்டை அகழியை ஆழப்படுத்துவது குறித்து எவ்வித செயற்குறிப்பும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**21—**

## சிலை அமைத்தல்

**வினா எண் 2450—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூரில் நெடுஞ்சாலைத் துறை இடத்தில் தந்தை பெரியார் சிலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர் :**

(அ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**22—**

## குடமுழுக்கு

**வினா எண் 1173—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அருள்மிகு நாறும்பூநாதர் சுவாமி திருக்கோயில் திருப்பணிகள் முடித்து குடமுழுக்கு நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

அருள்மிகு நாறும்பூநாதர் சுவாமி திருக்கோயில் திருப்பணிகளை பொது நல நிதிமூலம் ரூ.4.00 இலட்சம் மற்றும் பொதுமக்கள் நன்கொடைமூலம் ரூ.6.72 இலட்சம்; ஆகமொத்தம் ரூ.10.72 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள் துவங்கப்பட்டு 80 விழுக்காட்டிற்கும்மேல் பணி முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகளை செய்திட போதிய நிதி ஆதாரம் இல்லையென்பதால் ரூ.3.00 இலட்சம் அரசு மானியம் அனுமதித்து 19-7-2006 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசு மானியத் தொகையைப் பெற்று பணிகளை விரைந்து முடித்து குடமுழுக்கு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**23—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 1175—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி அருள்மிகு இராமலிங்கசுவாமி திருக்கோயில் திருப்பணிகள் செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி, அருள்மிகு இராமலிங்கசுவாமி திருக்கோயில் திருப்பணிகள் துவங்கப்பட்டு, உபயதாரர்களைக் கொண்டு, கீழ்க்காணும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

1. சுவாமி விமானம் புதுப்பித்தல்
2. அம்பாள் விமானம் புதுப்பித்தல்
3. மடப்பள்ளி பழுது பார்த்தல்
4. நரசிங்கப் பெருமாள் சன்னதியில் தரைத்தளம் பழுது பார்த்தல்
5. நரசிங்கப் பெருமாள் சன்னதி சிறப்பு மாராமத்து
6. இராமலிங்கசுவாமி சன்னதி மேல் தளம் தட்டோடு பதித்தல்
7. பெருமாள் விமானம் பழுது பார்த்தல்
8. இரசாயன கலவைமூலம் சுத்தம் செய்தல் மற்றும் மெழுகேற்றல்

**24—**

## தரை தளம்

**வினா எண் 1424—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தரை தளத்தை பழுதுபார்த்து புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?







**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பழுதடைந்த தரைகள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சரிசெய்யப்பட்டு, புதிதாக கான்கிரீட் தரை உபயதாரர்மூலம் போடப்பட்டுள்ளது. எனவே, தற்போது தரைத்தளம் பழுது பார்க்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**25—**

## திருமண மண்டபத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 1425—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலிலுள்ள திருமண மண்டபத்தை பழுதுபார்த்து புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், வால்பாறை நகர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அமைந்துள்ள திருமண மண்டபம் வால்பாறை "ஜெயஸ்ரீ டீ எஸ்டேட்" நிறுவனத்தினால் உபயமாக கட்டி கொடுக்கப்பட்டதாகும். இத்திருமண மண்டபத்தை உபயமாக கட்டித்தந்த நிறுவனத்தினரே பழுது பார்த்து சீரமைக்க முன்வந்துள்ளனர். மேற்படி பணிகளை விரைவில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26—**

## குளத்தை தூர்வாருதல்

**வினா எண் 2265—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 25

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் முருகன் கோயில் குளத்தினை தூர்வாரி சுத்தம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் 250 அடி அகலம் மற்றும் நீளம் கொண்டதாகும். மிகுந்த ஆழம் உள்ள இத்திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது. இத்திருக்குளத்தில் 50 அடி ஆழத்திற்கு நீர் நிரம்பி உள்ளது. எனவே, குளத்தை தற்போதைக்கு தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை.

**27—**

## குறிப்பேடு வெளியிடுதல்

**வினா எண் 2629—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் பற்றிய குறிபபேடு வெளியிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள முக்கிய திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள் குறித்து "பயணியர் கையேடு" என்ற வழிகாட்டி புத்தகம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சார்பாக வல்லக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இம்மாவட்ட முக்கியத் திருக்கோயில்களில் பிரதி ஒன்று ரூ.30/- வீதம் பக்தர்கள் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்பட்டது. பிரதிகள் அனைத்தும் விற்பனையாகி விட்டபடியால் தற்போது தேவையான பிரதிகள் மறு பதிப்பு செய்து வெளியிடவும், அவற்றை அச்சிட்டு முக்கிய திருக்கோயில்கள்மூலம் பக்தர்கள்



2006 ஆகஸ்ட் 25]

பயன்பாட்டிற்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**28—**

## தமிழில் அர்ச்சனை

**வினா எண் 2630—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்ய எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

1996 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் அனைத்துத் திருக்கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என அறிவிப்பு பலகையினை பக்தர்கள் எளிதில் காணும் வண்ணம் அமைத்திட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது சில திருக்கோயில்களில், "தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்" என்று தவறாக எழுதப்பட்டுள்ளது என அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட எழுத்துக்கள் இனி எந்த ஆலயங்களிலும் எழுதப்படமாட்டாது என்றும், ஏற்கெனவே அப்படி எழுதப்பட்டிருந்தால் அவை அழிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பினை தொடர்ந்து திருக்கோயில்களில் "தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்" என்று எழுதப்பட்டிருந்தால் அவை அழிக்கப்படவேண்டும் என்றும், "தமிழில் அர்ச்சனை செய்யப்படும்" என்று அறிவிப்பு பலகை எழுதி வைக்கப்பட வேண்டும் என்றும் அனைத்து திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மூலமாக 26-7-2006 அன்று அரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**29—**

## புதிய ரக சேலைகள்

**வினா எண் 1295—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறியின்மூலம் புதிய ரக சேலைகள் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மாறிவரும் சந்தை நிலவரம் மற்றும் நுகர்வோரின் ரசனைக்கேற்ப புதிய வடிவமைப்புகளுடன்கூடிய பட்டு மற்றும் பருத்தி ரக சேலைகள் அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு மையத்தில் வடிவமைக்கப்பட்டு, காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோவை, பரமக்குடி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் செலவில் ஒரு புதிய வடிவமைப்பு மையம் உருவாக்கும் திட்டம் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறிஞ்சிப்பாடி, குடியாத்தம், உறையூர், விளந்தை, மஞ்சமேடு, திருபுவனம் ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

(ஆ) தேசிய வடிவமைப்பு மையத்தில் பூர்வாங்க ஆய்வு முடிக்கப்பட்டு, வடிவமைப்புகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணி முடிக்கப்பட்டதும் உற்பத்தி துவக்கப்பட்டு, சந்தையில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படும். முதல் தொகுதி சேலைகள் உறையூர், திருபுவனம் ஆகிய பகுதிகளில் பொங்கல் 2007-க்கென டிசம்பர் 2006-லும், மஞ்சமேடு, விளந்தை ஆகிய பகுதிகளில் மார்ச் 2007-லும் அறிமுகப்படுத்தப்படும்.

**30—**

## கூட்டுறவுக் கடன்

**வினா எண் 1433—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் பகுதியில் நெசவாளர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் பகுதியில் நெசவாளர்கள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**31—**

## பட்டுச் சேலை ஏற்றுமதி

**வினா எண் 1434—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களில் தேங்கியுள்ள பட்டுச் சேலைகளை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள பட்டு சேலைகளை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**32—**

## பட்டுப் புடவை உற்பத்தி

**வினா எண் 2851—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுப் புடவை உற்பத்தியைப் பெருக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

பட்டுப் புடவை உற்பத்தியைப் பெருக்க சிறப்புத் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**33—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 545—திரு. எஸ்.ஆர். ராஜா:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன?

(ஆ) 2006-2007 ஆம் கல்வியாண்டில் எத்தனை நடுநிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில் கடந்த ஐந்தாண்டுகளில் 4 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) 2006-2007 ஆம் கல்வியாண்டில் ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**34—**

## கட்டட வசதி

**வினா எண் 1162—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடியில் இயங்கிவரும் நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடியில் இயங்கிவரும் கிளை நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட காலிமனை ஏதும் இல்லை. எனவே, தற்போது அந்நூலகத்திற்குப் புதிதாக சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை.

**35—**

## பள்ளிகளுக்கு வசதி

**வினா எண் 1304—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி மற்றும் அங்கலக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளிலுள்ள இடைநிலைப் பள்ளிகளுக்கு கழிப்பிட வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஒரு சிறுநீர் கழிப்பிடமும், ஒரு கழிப்பிடமும் உபயோகத்தில் உள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கழிப்பிடம் கட்டித்தரப்பட்டு இக்கழிப்பிடத்திற்கான தண்ணீர் வசதி செய்துதர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிறுநீர் கழிப்பிடம் இரண்டும், கழிப்பிடம் ஒன்றும் உள்ளன. அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின்மூலம் 2004-2005 ஆம் ஆண்டில் ஒரு கழிப்பிடமும், 2005-2006 ஆம் ஆண்டில் ஒரு கழிப்பிடமும் கட்டித்தரப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிட வசதிகள் இப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு போதுமானதாக உள்ளன.

**36—**

## பாடநூல் வழங்குதல்

**வினா எண் 1415—திரு. வீ.ஏ.டி. கலியவரதன் :** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்களை அந்தந்த பள்ளிகளே எடுத்துச்சென்று வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் :**

மாவட்ட கல்வி அலுவலர்களிடம் அந்தந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கான இலவசப் பாட நூல்களின் தேவைப்பட்டியலை பெற்று தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு அனுப்பி, அதனடிப்படையில் மாவட்ட வட்டார பாடநூல் கழகத்திலிருந்து மாவட்டக் கல்வி அலுவலர்களால் பாடப் புத்தகங்கள் பெறப்பட்டு, மாவட்ட மையங்களிலிருந்து அனைத்து தலைமையாசிரியர்கள் மூலமாக பள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**37—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 1417—திரு. வீ.ஏ.டி. கலியவரதன் :** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் வரலாறு, ஆங்கிலம் பாடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் :**

தமிழ்நாட்டில் உள்ள அரசு, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 01-06-2006-ல் காலியாக உள்ள 4,449 பள்ளி உதவி ஆசிரியர்



பணியிடங்கள் கணக்கிடப்பட்டு அவற்றை 2006–2007 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நிரப்ப அரசு அனுமதி அளித்துள்ளது.

**38—**

## தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

**வினா எண் 2243—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் துவக்கப்படும் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாக அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 2006–2007 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் இயங்கும் 126 கல்வி காப்புறுதி மையங்களை 1–5 வகுப்புகள் கொண்ட முறையான தொடக்கப் பள்ளிகளாக நிலை உயர்த்த விழையும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**39—**

## நூலகம் அமைக்க தேவையான தகுதி

**வினா எண் 2623—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிளை நூலகம் அமைக்க தேவையான தகுதிகள் என்ன என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் :**

(1) 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலக விதிகளில் 5000 முதல் 50,000 வரை மக்கள்தொகை உள்ள ஊர்களில் கிளை நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 25

(2) கிளை நூலகம் திறக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:–

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.
2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலிமனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாக பத்திரப்பதிவு செய்து தர வேண்டும்.
3. தலா ரூ.1,000/– வீதம் நன்கொடையாக செலுத்தி 2 பேர் புரவலர்களாக சேர வேண்டும்.
4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/–ம், ஆண்டு சந்தா ரூ.5/– ஆக மொத்தம் ரூ.20/– செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாக சேர வேண்டும்.
5. ரூ.2,000/– மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

(3) மேற்கண்ட நிபந்தனைகளுடன் கிளை நூலகம் திறக்க அரசு அனுமதியுடன் மூன்றாம் நிலை நூலகர் பணியிடமும் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

(4) இதனை தவிர்த்து கிளை நூலகத்திற்குத் தேவையான தளவாடங்கள்/ நூல்கள்/பருவ இதழ் வாங்குதல், மின் கட்டணம், கட்டட வாடகை ஆகிய தொடரும் செலவினங்களை மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

**40—**

## புகை போக்கி

**வினா எண் 2244—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையங்களில் சமையற் கூடங்களில் புகை போக்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் துவக்க காலத்தில் கட்டப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் சில சமையற் கூடங்களில் புகை போக்கிகள் இல்லாமல் இருப்பது அறியப்பட்டு அவற்றிற்கு புகை போக்கிகள் அமைக்கும் பணி சத்துணவு சமையற் கூடங்களை பழுது நீக்கம் செய்யும்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு திட்டம் (SGRY) போன்ற திட்டங்களில் புதிதாக கட்டப்படும் சத்துணவு சமையற் கூடங்களில் புகை போக்கிகள் அமைத்தே கட்டப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டங்களில் உள்ள சத்துணவு மைய சமையற் கூடங்களில் எத்தனை சமையற் கூடங்களுக்கு புகை போக்கி வசதிகள் இல்லை என்ற விவரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து இது குறித்து முழுமையாக அறிக்கை கிடைக்கப் பெற்றதும் புகை போக்கி இல்லாத சத்துணவு சமையற் கூடங்களுக்கு புகை போக்கிகள் அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



**41—**

## பால்வாடி மையம்

**வினா எண் 2245—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பட்டிக்காடு ஊராட்சியிலுள்ள பட்டிக்காடு காலனியில் புதிய பால்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பட்டிக்காடு ஊராட்சியிலுள்ள பட்டிக்காடு காலனியில் புதிய பால்வாடி மையம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் முன்மொழிவுகள் ஏதும் இல்லை. மேலும் பட்டிக்காடு காலனியின் மக்கள் தொகை 192. (ஆண்கள்–95 பேர், பெண்கள்–97 பேர்) மத்திய அரசின் நெறிமுறைப்படி அங்கன்வாடி மையம் அமைக்க அப்பகுதியின் மக்கள் தொகை குறைந்தபட்சம் 500 பேர் இருக்க வேண்டும். எனவே, இங்கு அங்கன்வாடி மையம் அமைக்க இயலாது.

42—

### அங்கன்வாடி

**வினா எண் 2608—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், வல்லம் கொல்லமேடு பகுதியில் புதியதாக அங்கன்வாடி அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், வல்லம் கொல்லமேடு பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் முன்மொழிவுகள் ஏதும் இல்லை. மேலும், கொல்லமேடு பகுதியில் உள்ள 15 குழந்தைகள் அருகில் உள்ள தேனூர் அங்கன்வாடியில் பயன்பெறுகிறார்கள். எனவே, கொல்லமேடு பகுதியில் புதிய அங்கன்வாடி அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை.

43—

### மூன்று சக்கர சைக்கிள்

**வினா எண் 2615—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியிலுள்ள நடக்க முடியாத ஊனமுற்றோர் அனைவருக்கும் மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

ஊனமுற்றோர் மறு வாழ்வுத் துறை மூலமாக 12 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட இரு கால்களும் ஊனமுற்ற ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குள் உள்ளவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒரு கால் ஊனமுற்ற நபர்களுக்கு கால்தாங்கிகள் மற்றும் அக்குள் கட்டைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



செங்கற்பட்டு தொகுதியிலுள்ள நடக்க முடியாத ஊனமுற்றோருக்கு மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கீழ்க்கண்டவாறு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன:—

| வருடம் | பதிவு செய்தவர்கள் | வழங்கப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் |
|---|---|---|
| 2003–2004 | 60 | 60 |
| 2004–2005 | 12 | 12 |
| 2005–2006 | 27 | 27 |
| 2006–2007 (31-7-2006 வரை) | 18 | 18 |
| **மொத்தம்** | **117** | **117** |

44—

### குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 2663—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்றை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 250 குழந்தைகள் கொண்ட ஒரு அரசு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருகின்றது. இம்மாவட்டத்தில் மேலும் ஒரு அரசு குழந்தைகள் காப்பகம் நிறுவ வேண்டிய அளவிற்கு கோரிக்கைகள் இல்லை. இந்நிலையில் வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் நடத்த தற்போது வாய்ப்புகள் ஏதும் இல்லை.

45—

## இல்லத்தை நவீனப்படுத்துதல்

**வினா எண் 2855—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசினர் பிற்காப்பு இல்லத்தை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு அரசினர் பிற்காப்பு இல்லத்தை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. செங்கற்பட்டு, ஆத்தூர் அரசினர் பிற்காப்பு நிறுவனத்தில் தற்போதுள்ள மாணவர்களுக்கு கட்டட வசதி போதுமானதாக உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் புதிய கட்டட கட்டுமானப் பணி ஏதும் சேர்க்கப்படவில்லை. 2006-2007 ஆம் ஆண்டு முன்னுரிமை பட்டியல்படி ஆத்தூர் அரசினர் பிற்காப்பு நிறுவன இல்லவாசிகளின் துயிற்கூடத்தைப் பழுதுபார்க்கவும் மற்றும் மின்பிரிவுப் பழுதுபார்ப்பு பணிகளுக்கான ரூ.5,20,000/-க்கு பொதுப் பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

## ஆசிரியர்களுக்கு வேறு பணி

**வினா எண் 2856—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசினர் பிற்காப்பு இல்லத்தில் பணிபுரிந்து இடை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வேறு பணி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர் :**

ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்துடன் இணைந்த தொழிற்பயிற்சி மறுவாழ்வு மையத்தில் முற்றிலும் தற்காலிக



அடிப்படையில் தொகுப்பூதியத்தில் 5 தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டனர். மேற்படி தொழிற் பயிற்றாசிரியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டபோதே, அவர்களது பணி நியமனம் தற்காலிகமானது எனவும், தொகுப்பூதிய அடிப்படையிலானது எனவும், இதரப்படிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பயனாளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததனாலும் இத்திட்டத்திற்கான பணி நீட்டிப்பு வழங்கப்படாததோடு மட்டுமின்றி, இம்மையத்தில் பணிபுரியும் தற்காலிக தொகுப்பூதிய தொழிற் பயிற்றாசிரியர்களை உடனடியாக பணிநீக்கம் செய்ய ஆணையிடப்பட்டது. எனவே, இவர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் துறையில் வேறுபணி வழங்க விதிகளில் இடமில்லை.

47—

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 2636—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவர்களை கூடுதலாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவர்களை கூடுதலாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

48—

## மாட்டுப் பண்ணை

**வினா எண் 3128—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மற்றும் ஆழியாறு நகரில் மாட்டுப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மற்றும் ஆழியாறு நகரில் மாட்டுப் பண்ணை அமைப்பது தொடர்பான பிரேரணை ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**49—**

### மீன்பிடி வலை

**வினா எண் 2226—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலை மற்றும் உபகரணப் பொருட்கள் ஏதேனும் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலை மற்றும் உபகரணப் பொருட்கள் கடந்த 5 ஆண்டுகளில் ஏதும் வழங்கப்படவில்லை.

**50—**

### மீன் வளர்ப்பு

**வினா எண் 2848—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மீன் வகைகள் வளர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (எம்.எஸ்.) எண் 332, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 17-11-93-ன்படி அரசுடைமையாக்கப்பட்ட பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை நீர்நிலைகள் மாவட்ட ஆட்சியரால் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு உள்நாட்டு மீன்வகைகள் இருப்பு செய்யப்பட்டு மீன்வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மீன் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகளில் 2274.13 ஹெக்டேர் பரப்பில் உள்நாட்டு மீன் வகைகளான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதா கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மீன்வளர்ப்பு செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

## 3. தகவல் கோரல்

### (அ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு நிலம் வழங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அரி, உட்காருங்கள். வேல்முருகனைக் கூப்பிட்டிருக்கிறேன். உங்கள் பெயர் வேல்முருகன் இல்லையே? உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி நிலக்கரி நிறுவனம், அதனுடைய பங்குகளை மத்திய அரசு விற்பதற்கு முற்பட்டபோது, நாங்களும், இங்கேயிருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போராடியபோது, ஒரேயொரு அறிக்கையின்மூலமாக அந்தப் பங்குகளை மத்திய அரசு N.L.C. நிர்வாகத்திடம் திரும்ப

[திரு. தி. வேல்முருகன்] [2006 ஆகஸ்ட் 25

ஒப்படைப்பதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த N.L.C. நிர்வாகத்திற்கு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கான இடங்களை அந்தப் பகுதி கிராம மக்கள் வழங்குகின்றபோது, அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அடிப்படையிலே N.L.C. நிர்வாகம் பணிக்கு ஆட்களை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் அந்த 20,000-க்கும் மேற்பட்ட அந்த மண்ணின் மைந்தர்களுக்கு, அந்த நிலத்தைத் தந்தவர்களுக்கு, அப்பகுதியில் N.L.C. நிர்வாகம் வேலைவாய்ப்பே இதுவரையிலும் தரவில்லை. ஆதலால், அப்பகுதி மக்களிடையே மிகப் பெரிய பதற்றமான ஒரு சூழ்நிலை நிலவிக்கொண்டு வருகிறது.

அதையொட்டி, சமீபத்தில் N.L.C. நிர்வாகத்தில், 10 ஜவஹர் பள்ளிகளும், ஒரு ஜவஹர் அறிவியல் கல்லூரியும் இயங்கி வந்தன. அவை கடந்த 14-8-2006-லிருந்து சிறு, சிறு பிரச்சினைகளுக்காக ஆசிரியர்களுக்கான ஊதிய உயர்வு, D.A. பிரச்சினைகளையெல்லாம் முன்னிறுத்தி, நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல், எங்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, அந்தக் கோரிக்கை மனுக்களைக்கூட அந்த நிர்வாகம் பெற்றுகொண்டு, அவர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடாமல், அவர்களைப் புறந்தள்ளியதனுடைய விளைவாக, இன்றைக்கு 1,000 ஆசிரியப் பெருமக்களும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்த அவையில் இருக்கின்ற அனைத்துக் கட்சிப் பெருமக்களும் ஒன்றுசேர்ந்து, நேற்று கோரிக்கை மனுவை வழங்கச் சென்றபோதுகூட, வாங்க மறுத்திருக்கிறது, நிர்வாகம்.

அதோடு இல்லாமல், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட apprentice தொழிலாளர்கள், நிலம் கொடுத்ததன் அடிப்படையில் apprentice பயிற்சி முடித்தவர்கள், தங்களுக்கு வேலை வேண்டும் எனறு உண்ணாவிரதம் இருந்தபோது, 3 நாட்களாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த நிலையில்கூட, அந்த நிர்வாகம் அவர்களிடத்திலே சென்று மனுக்களை வாங்குவதற்குத் தயாராக இல்லை. ஆதலால், மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, மத்திய அரசாங்கம். அங்கே ஏற்படுகின்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதைத் தீர்ப்பதற்கு நம்முடைய காவல் துறையையும்



2006 ஆகஸ்ட் 25] [திரு. தி வேல்முருகன்]

நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு நம்முடைய D.R.O. அவர்களையும், R.D.O. அவர்களையும், வட்டாட்சியர் அவர்களையும், கிராம நிர்வாக அலுவலர்களையும் ஆய்வாளர்களையும், பயன்படுத்துகிறது. அங்கே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டால், முழுக்க முழுக்க அதற்கான தலைவலியையும், அதற்கான துயரங்களையும் தமிழக அரசின்மீது சுமத்துகிறது. ஆண்டுக்கு 1,200 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற அந்த நிறுவனம், அங்கேயிருக்கின்ற அப்பகுதி மக்களுடைய வாழ்க்கைக்கும் அல்லது N.L.C.-யிலிருந்து உறிஞ்சி வெளியேற்றப்படுகின்ற நீரை, அப்பகுதியினுடைய விவசாயத்திற்குத் தருவதற்கும், குடிநீர் ஆதாரங்களைத் தேடித் தருவதற்குமான எந்த நடவடிக்கையையும் N.L.C. நிர்வாகம் எடுத்தபாடில்லை. அங்கு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு பிரச்சினையை கையில் எடுத்து நாங்கள் போராடுகின்றபோது, எங்களுடைய கோரிக்கைகளுக்காக, நானேகூட சில தினங்களுக்கு முன்பாக, ஒரு நாள் இரவு முழுவதும அங்கே உண்ணா நோன்பிலே ஈடுபட்டிருந்தேன். ஒரு அதிகாரிகூட எங்களோடு பேச்சுவார்த்தை நடத்த வரவில்லை. முதலமைச்சர் அலுவலகத்திற்கு தகவல் சொன்னவுடனேயே, மாவட்டத்தின் நிர்வாகம் எங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியது. ஆட்சித் தலைவர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். ஆனால், N.L.C. நிர்வாகம், அப்படியொரு, மிகப்பெரிய இறுமாப்போடு அந்தப் பகுதியிலே இருந்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆசிரியர்களுடைய சிறு, சிறு பிரச்சினைகளையும், அந்த மண்ணின் மைந்தர்கள், நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு பாதுகாப்பு, அந்த உரிமையையும், அங்கே இருக்கின்ற Apprentice முடித்தவர்களுக்கான வேலைவாய்ப்பினையும் பெற்றுத் தருவதற்கு தாங்கள் தலையிட்டால்தான் நடைமுறைப்படுத்த முடியும் என்ற ஆவலோடு இந்த வினாவை நான் இங்கே எழுப்ப விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

அதோடு மட்டுமல்ல, அந்த வேலையை அங்கு தருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. கடந்த 20 ஆண்டு காலமாக N.L.C.-யில் new recruitment என்பதே கிடையாது. 18 க்கு மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர் சங்கங்களை வைத்து 1,200 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற அந்த நிறுவனம், அந்த மண்ணை, தங்கள் வீடுகளை, மனைகளை, தோட்டங்களை, துறவுகளை, அனைத்தையும் N.L.C. நிர்வாகத்திற்கு தந்துவிட்டு, தொலைவில் இருந்து பல்வேறு பகுதிகளில்

வாழ்கின்ற அந்த மக்களுக்கான ஒரு வாழ்வியல் ஆதாரத்தை, ஒரு பாதுகாப்பை, N.L.C.-யில் நிரந்தர வேலை என்கிற உரிமையை, முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தர வேண்டுமென்று, பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக உங்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வேல்முருகன் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை, நெய்வேலி வட்டாரத்திலே வாழ்கின்ற பொதுமக்களையும், மாணவர்களையும், இளஞ்சிறார்களையும் பொறுத்த முக்கியமான பிரச்சினையாகும். அதோடு அங்கே நிலம் ஈந்தவர்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை பற்றியும் அவர் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார். இவற்றைப் பற்றியெல்லாம் உடனடியாக நான் எதுவும் சொல்லிவிட முடியாது என்றாலும்கூட, உடனடியாக சொல்லக்கூடியது, நன்மையைச் செய்வோம்; கவலைப்படாதீர்கள், என்ற உறுதிமொழி ஒன்று தான். அந்த உறுதிமொழியைக் காப்பதற்கு எப்படி நடவடிக்கை எடுப்பது அல்லது மேற்கொள்வது என்பதுபற்றி விவாதிக்க உடனடியாக நான் நெய்வேலி நிர்வாகத்தை அழைத்து இதுபற்றி பேசுவேன் என்ற உறுதியை மாத்திரம் தற்காலிகமாக தந்து, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி )

## (ஆ) இரயில்வே துறை நாளேடுகளில் இந்தி மொழியில் விளம்பரம் செய்திருப்பது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக தமிழகத்தின் இளைஞர்கள் மத்தியிலே ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கின்றது. தமிழ் நாளேடுகளிலே வருகின்ற விளம்பரங்கள் எல்லாம் இந்தி மொழியிலே வருகின்றன. அந்த விளம்பரத்தைப் பார்த்து தமிழகத்தினுடைய இளைஞர்கள் மத்தியிலே ஒரு பயம் கலந்த அச்ச உணர்வு ஏற்பட்டு உள்ளது. ஏன இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், 9-7-2006 தின மலர் நாளிதழில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய இரயில்வே இணை அமைச்சராக இருக்கும் வேலு



அவர்கள் அங்கம் வகிக்கின்ற அந்த இரயில்வே துறையினுடைய விளம்பரம் இந்தியிலே வந்திருக்கிறது.

அதைப்போலவே, மாண்புமிகு நிதியமைச்சராக இருக்கின்ற ப. சிதம்பரம் அவர்கள் படத்தைப் போட்டும், இரயில்வே துறை அமைச்சராக இருக்கின்ற லாலு அவர்களுடைய படத்தைப் போட்டும் ஒரு விளம்பரம் 4-8-2006 அன்று தின மலர் நாளிதழில் வந்திருக்கிறது. முழுக்க, முழுக்க தமிழகத்தினுடைய நாளேடுகளிலே, இந்தியிலே, அந்த விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆக, இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகின்றவரையில் ஆங்கிலம் தொடர்பு மொழியாகப் பயன்படுத்துதல் வேண்டும், தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் தீர்மானத்தை, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு ஏற்று, அன்றைக்கு உறுதிமொழி அளித்தார்கள். அதன்படி தொடர்ந்து வருகின்ற இணக்கமான சூழ்நிலையில், கடந்த சில நாட்களாக தமிழ் நாளேடுகளில் இப்படிப்பட்ட விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-25

உலக அரசியல் வரலாற்றில் மதத்திற்காகத் தீக்குளித்த வரலாறு உண்டு. அரசியல் இயக்கங்களுக்காகத் தீக்குளித்த வரலாறு உண்டு. கட்சித் தலைவர்களுக்காகத் தீக்குளித்த வரலாறு உண்டு. ஆனால், மொழிக்காகத் தீக்குளித்த வரலாறு உண்டு என்றால் அது தமிழகத்திலே மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேதான், இப்படிப்பட்ட விளம்பரங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே தலைதூக்கி இருக்கின்றன. எனவேதான், பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அண்மையிலேகூட நடுவண் அரசுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார்கள். தேசிய நெடுஞ்சாலையிலே பொறிக்கப்படுகின்ற அந்த மைல் கற்களிலே, அறிவிப்புப் பலகையிலே, இந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது. தமிழர்களுடைய உணர்வு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த subject-ஐ மாத்திரம் பேசுங்கள்.

**திரு. கோ. அரி:** தமிழர்களுடைய உணர்வு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த subject-ஐ மாத்திரம் சுருக்கமாகப் பேசுங்கள்.

[2006 ஆகஸ்ட் 25

**திரு. கோ. அரி:** முக்கியமான subject. சொல்லித்தான் ஆகவேண்டும். எதை எதையோ பேசுவதற்கு—இரண்டு நிமிடங்களில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லியிருப்பது, பத்திரிகையிலே, இந்தியிலே விளம்பரம் வந்திருக்கிறது என்பதைப்பற்றி. அதைவிட்டுவிட்டு, வேறு எங்கெல்லாமோ போகிறீர்களே?

**திரு. கோ. அரி:** தமிழர்களுடைய உணர்வு, இது இந்திய நாட்டிற்கே தெரியும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கேகூட நடுவண் அரசை எச்சரித்ததனுடைய விளைவாகத்தான் தேசிய நெடுஞ்சாலையிலே போடப்பட்டிருந்த அந்த மைல் கற்களிலேகூட மீண்டும் அன்னைத் தமிழ் அரியணை ஏறியது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போபாலிலே, அண்மையிலே நடைபெற்ற இரயில்வே பணிக்கான தேர்விலும் இந்தி மொழிக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்பட்டு, நமது மாநிலத்தைச் சார்ந்தவர்கள் வட மாநிலத்திலே போய் எழுதுகின்ற ஒரு சூழ்நிலையிலே, அன்றைக்கு வெளியிடப்பட்ட அறிவிக்கைகளில் எல்லாம் இந்தி தேவை இல்லை என்று சொல்லி இருந்தார்கள். ஆனால், நமது மாநிலத்திலிருந்து சென்று அங்கு தேர்வு எழுதும்போது, இந்தியில் கட்டாயமாக எழுதப்பட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில், நேரு அளித்த உறுதிமொழிக்கு மாறாக, இன்றைக்குத் தமிழகத்தில் இந்தி திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அரசு அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா என்பதுதான் இன்றைக்கு தமிழகத்து இளைஞர்களுடைய மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. இந்த அச்சத்தைப் போக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உங்கள் கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள். அதற்கான விளக்கத்தை, பதிலைச் சொல்வார்கள். (குறுக்கீடு) உங்கள் கேள்வி அது, அவ்வளவுதானே?

**திரு. கோ. அரி:** நாம் என்ன செய்யப் போகிறோம் இந்த நேரத்திலே? 'தம்பி, நான் ஏது செய்வேன்டா? தமிழைவிட இன்னொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தம் உண்டாகிறது' என்ற மகாகவியின் வேதனையில் இந்த அவை பங்கேற்கப் போகிறதா அல்லது தமிழ், தமிழகத்தின் விடியலுக்கு விடை காணப் போகிறதா?



2006 ஆகஸ்ட் 25] [திரு. கோ. அரி]

*"சொல்லவுங் கூடுவ தில்லை—அவை*
*சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை!*
*மெல்லத் தமிழினிச்..."*

என்று சொன்னாரே மகாகவி பாரதி, அப்படி உணர்வுபூர்வமாகச் சொன்னதற்கேற்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? எதற்கெடுத்தாலும் நன்றி சொல்லிக்கொள்கிறோம் என்று கூடுதலாக ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களும் நன்றி சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலையில், காங்கிரஸ் பேரியக்கமானாலும் சரி, பாட்டாளி மக்கள் கட்சியானாலும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, நீங்கள் சொல்ல வருகிற கருத்தைச் சொல்லி முடியுங்கள். Don't dilute your views.

**திரு. கோ. அரி:** இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களுடைய நிலை என்ன என்பதை நான் தெரிவிக்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றியுள்ள பிராணிகள் நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

**திரு. கோ. அரி:** நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவ்வளவுதானே. (குறுக்கீடு) அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு) அவர் Special mention–இலே சொல்லியிருக்கிறார். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். திரு. அரி, நீங்கள் சொல்லியாகிவிட்டது என்றால் உட்காருங்கள். இதற்குமேல் you are not permitted. I won't allow you. (Interruption) No, no.

**திரு. கோ. அரி:** கடைசியாக ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை மூன்று தடவை request பண்ணிய பிறகும் நீங்கள் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டேயிருந்தால் எப்படி? மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குள் நான் செல்லவில்லை. ஆனால் ஒன்று.

[திரு. பரிதி இளம்வழுதி] [2006 ஆகஸ்ட் 25

அவர்களுடைய கட்சித் தலைவி, மாநிலங்களவை உறுப்பினராக இருந்தபோது, மாநிலங்கள் அவையில் முதன்முதலில் பேசுகிறபோது இந்தியில்தான் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைத்தபோது இந்த அவையிலோ அல்லது அமைச்சரவையைக் கூட்டியோ ஒரு நன்றி அறிவிப்புத் தீர்மானம்கூடப் போடாதவர்கள்தான் இவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** That is not the subject before the House. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. அரி, நீங்கள் மாத்திரம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் திரு. ஜி.கே. மணி. எல்லோரும் உட்காருங்கள். திரு. அரி.

**திரு. கோ. அரி:** மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற தி.மு.க.-வினுடைய நிலை என்ன? அதனுடைய கூட்டணிக் கட்சிகளுடைய நிலை என்ன என்பதை இந்த நேரத்திலே சொல்லி, தமிழ் நாளேடுகளிலே வருகின்ற அந்த விளம்பரங்களை இந்த அரசு வரவேற்கிறதா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Don't precipitate your question. (குறுக்கீடு) உட்காருங்கள். அதுதான் Special mention–லே இருக்கிறதே! (குறுக்கீடு) அதிலே என்ன Point of Order? உட்காருங்கள், உட்காருங்கள்.

*முற்பகல் 10–30*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய பெயர்தான் Special Mention–லே இருக்கிறதே. என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒத்திவைப்புத் தீர்மானத்திலே (குறுக்கீடுகள்) அவருடைய கருத்துகளைச் சொன்னார். இடையிலே காங்கிரஸ் பேரியக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, இருபெரும் கம்யூனிஸ்ட் கட்சிகளையெல்லாம் இங்கே இழுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) ஆகவே, நான் அவருக்கு இங்கே விளக்கம் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அதற்கு அமைச்சரிடமிருந்து பதில் வரும். அவர் கேட்ட கேள்விக்கு.



2006 ஆகஸ்ட் 25]

**திரு. ஜி.கே. மணி:** அதற்கு முன்னால் விளக்கம் சொல்லிவிடுகிறேன். அமைச்சர் பதில் சொல்வதற்கு முன்னால், பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மத்திய இருப்புப் பாதைத் துறை சார்பில் தமிழ் நாளேடுகளில் வரக்கூடிய செய்திகளும், விளம்பரங்களும் தமிழிலே வந்துகொண்டிருக்கின்றன. நான்கூட டெல்லிக்கும், அமைச்சகத்துக்கும் தொடர்பு கொண்டு அதிகாரிகளிடத்திலே பேசினேன். (குறுக்கீடு) தொடர்ந்து தமிழிலே வந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள்மீது குற்றச்சாட்டு கூறினார் உங்கள் உறுப்பினர். உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லிவிடட்டும். சொல்லிவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஏதோ தவறி, அதிகாரிகளாலே ஒரு நாள் கொடுக்கப்பட்ட விளம்பரத்தை இங்கே கையிலே வைத்திருக்கிறார். நான்கூட நிறைய கத்தைக் கத்தையாக எடுத்து வந்தேன். இன்று எடுத்துவரவில்லை. நாளை எடுத்துவந்து உங்களிடத்திலே காட்டுகிறேன். ஆனால், ஒரு வேதனையை இங்கே சொல்கிறேன். மத்திய அரசினுடைய இருப்புப் பாதைத் துறை அமைச்சராக இருந்த அன்பிற்குரிய திரு. ஏ.கே. மூர்த்தி அவர்கள் அன்றைய முதலமைச்சரிடத்திலே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மையார் அவர்களிடத்திலே நேரிலே சென்று மனு கொடுத்தார். கடிதங்கள் பல முறை எழுதினார். என்ன என்று சொன்னால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இங்கே தமிழ்நாட்டிற்குள் செல்லக்கூடிய தொடர் வண்டிகளுக்கு தமிழிலே பெயரிட வேண்டும் என்று. அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசின் ஒப்புதலோடு தமிழ்ப் பெயர்களை வைத்தார் சில தொடர்வண்டிகளுக்கு. அதுமட்டுமல்லாமல், இன்று சென்னை தலைநகரிலே இருக்கிற அலுவலகம் சதர்ன் இரயில்வே என்று இருக்கிறது. ஆகவே, சதர்ன் இரயில்வே என்று இருக்கக்கூடிய அதை இங்கே 'தென்னக இருப்புப் பாதை' என்று மாற்ற வேண்டும். அதேநேரத்தில் சென்னை சென்ட்ரல் என்று இருக்கக்கூடியதை 'நடுவண் தொடர்வண்டி நிலையம்' என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்று அமைச்சர்வாயிலாக கடிதம் எழுதப்பட்டது. பலமுறை கடிதம் எழுதப்பட்டது. நேரிலே சென்று அமைச்சர் நினைவுகூர்ந்தார். ஆனால், முதலமைச்சரிடத்திலேயிருந்து,

[திரு. ஜி.கே. மணி] [2006 ஆகஸ்ட் 25

தமிழக அரசிடத்திலேயிருந்து வந்த பதில் என்ன தெரியுமா? அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நிராகரிக்கிறோம், தமிழில் பெயர் வைக்கமுடியாது என்று சொன்னவர்தான் முன்னாள் முதலமைச்சர், அ.தி.மு.க. அரசு. ஆகவே, தமிழைப் பற்றி இவர்கள் பேசுவதால் சொல்கிறேன், இந்த நேரத்தில் கூறுவதற்கு அருகதை இல்லை, தகுதி இல்லை என்பதை இங்கே பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) முதல்வர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அரி அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை, அவர் அதை வேறு திசைக்கெல்லாம் திருப்பினாலும்கூட, ஒரே திசையிலே அதை நோக்கும்போது, நம்மை அறியாமல் அல்லது நமக்குத் தெரியாமல் தமிழகத்திலே அன்று ஒரு நாள் வழங்கிய நேருவினுடைய உறுதிமொழி நிறைவேறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறதோ என்ற எண்ணம் தோன்றுகிறது. அதிலே சிறிதும் ஐயம் இல்லை. ஆனால், நேரு இதுபோன்ற விளம்பரங்களைப் பற்றி பாராளுமன்றத்திலோ அல்லது பொது சபைகளிலோ, எழுத்து மூலமாகவோ, வார்த்தை மூலமாகவோ இப்படி ஒரு உறுதிமொழி கொடுத்ததாக நினைவு இல்லை, கொடுக்கவும் இல்லை. ஆனால், ஆட்சி மொழியைப் பற்றி இந்தியாவினுடைய பொது மொழியைப் பற்றி சொல்லும்பொழுது, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கின்றார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே, அந்த உறுதிமொழியை தமிழகம் நேரு பெருமான் அவர்களிடத்திலே பெற்றது. அதைத்தான், இங்கே அரி அவர்கள் நினைவுபடுத்தி இருக்கின்றார். அத்தோடு அவர் விட்டிருந்தால், பொதுவாக இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளைச் சார்ந்த தமிழ் மக்களும், தமிழர்களும், இந்த மொழிப் பிரச்சினையிலே ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் வடக்கே இருப்பவர்களுக்கு அல்லது மத்தியிலே இருப்பவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்க முடியும். அதை விட்டுவிட்டு நாங்கள் இதை எழுப்புகிறோம், அதேநேரத்திலே மற்ற கட்சிகளைப் பற்றியும் பேசுகிறோம் என்று ஒருவருக்கொருவர் இங்கேயே விதண்டாவாதங்கள் நடத்திக்கொண்டிருப்பது மொழிப் பிரச்சினையிலே நாமெல்லாம் ஒரே நோக்கிலே இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைய முடியாது.



2006 ஆகஸ்ட் 25] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 10-35

கடந்த காலங்களில் மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எத்தனையோ வித்தியாசமான நடவடிக்கைகள் இந்தத் தமிழ் நிலத்திலே நடைபெற்றிருக்கின்றன. இந்தி ஆதிக்கத்தை நுழைய விடக்கூடாது என்று நடைபெற்ற போராட்டத்தில் இதே அவையிலே இருந்த, சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த, நம்முடைய பேராசிரியர் அவர்களும், அவரோடு சேர்ந்த 10 திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்களும், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டார்கள் என்பதற்காக ஒருநாள், இருநாள் அல்ல, இங்கே ஒரு கூட்டத் தொடர் முழுவதும் வெளியேற்றுவது அல்ல, இந்த அவையிலிருந்தே அவர்களுடைய பதவியைப் பறித்துக்கொண்டு வெளியேற்றிய நிகழ்ச்சியெல்லாம் நடைபெற்றிருக்கின்றது. ஆனால், எனக்கு என்ன மகிழ்ச்சியென்றால், அப்படிச் செய்தவர்கள் மனம்மாறி, இப்பொழுது இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வந்திருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த அளவிலே தமிழர்கள் மொழிப் பிரச்சினையிலே ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதில் நான் மனநிறைவுகொள்ளுகின்றேன்.

அரி அவர்கள் எழுப்பியது, டெல்லியிலேயிருந்து வெளியிடப்பட்ட ஒரு விளம்பரத்தில் லல்லு அவர்களுடைய படமும் இருக்கிறது, ப. சிதம்பரம் அவர்களுடைய படமும் இருக்கிறது, முழுக்க முழுக்க இந்தி மொழியிலே அந்த விளம்பரம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நானும் சொல்லுகின்றேன். அப்படி முழுக்க முழுக்க இந்தியிலே வந்த அந்த விளம்பரத்தை நானும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அவையிலே இருக்கின்ற எந்தக் கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்களைப் பற்றி உணர்ந்திருக்கின்ற காரணத்தால் நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தியும் இருக்கட்டும், தமிழும் இருக்க வேண்டும். இந்தி மாத்திரம் இருக்க வேண்டுமென்றால், அது தமிழர் அல்லாத பகுதிகளிலே வருகின்ற விளம்பரங்களிலே இந்தி மாத்திரம் இருக்கலாம்; அல்லது ஆங்கிலம், இந்தி இரண்டும் இருக்கலாம். ஆனால், இங்கே என்றால், ஆங்கிலம், தமிழ், இந்தி என்று வந்தால்தான், இந்தி இடம் பெறலாமேதவிர, தமிழைப் புறக்கணித்துவிட்டு, இன்னொரு மொழிக்கு ஆதிக்கம் இருப்பதை எந்தக் காலத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம், (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கிக்கொள்ள மாட்டோம் என்பதை அரி அவர்களுடைய, அவர் எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலாக அளித்து, இதை மேலும் விரிவாக

விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால், ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற அதே உணர்வைத்தான் நான் இங்கே பிரதிபலித்ததாக எண்ணி, இன்று நடைபெற்ற இந்தக் கருத்தோட்டத்தை டெல்லியிலே இருப்பவர்கள் அல்லது மத்தியிலே இருக்கின்றவர்கள் உணர்ந்து, இனி வெளியிடுகின்ற விளம்பரங்களில் தமிழர்களுடைய மனம் புண்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அளவில் இந்தப் பிரச்சினையை முடிவு செய்யலாம் என்று கருதுகின்றேன். (குறுக்கீடுகள்)

## (இ) நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். one by one-ஆக்த்தான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) one by one-ஆகத்தான் எடுக்க முடியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) திரு. சி. கோவிந்தசாமி.

(முற்பகல் 10-40)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு செய்தியை இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். வருகின்ற செப்டம்பர் 5 ஆம் நாள், கேரள மக்கள் மகிழ்வோடு கொண்டாடுகின்ற ஓணம் பண்டிகை வருகின்றது. நம்முடைய தமிழகத்திலே கேரள மாநிலத்தை ஒட்டியுள்ள மாவட்டங்களில் கணிசமாக கேரள மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பாக, குமரி, கோவை மற்றும் நீலகிரி போன்ற மாவட்டங்களிலும், சென்னையிலும் கணிசமாக கேரள மக்கள் வசிக்கிறார்கள். அதில் குமரி மாவட்டத்தில் மட்டும் தற்போது ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த கேரள மக்கள், நீண்டகாலமாக தங்களுக்கும் அந்த விடுமுறை அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வருகிறார்கள். அது இதுவரையில் நிறைவேறவில்லை. மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த நல்ல நேரத்தில் தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று பெரும் எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கேரள மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தில்



வாழக்கூடியவர்களுக்கு குமரி மாவட்டத்தைப் போல அவர்களுக்கும், அவர்களின் நீண்டநாள் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளித்து, கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கேரளத்தைச் சார்ந்த 'ஈழவா' சமூகத்தைச் சார்ந்த மக்கள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதில் தென்கேரளத்தைச் சார்ந்தவர்கள் 'ஈழவா' என்றும், வடகேரளத்தைச் சார்ந்தவர்கள் 'தியா' என்ற சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அவர்களும், குறிப்பிட்ட, அந்த இரண்டு மாவட்டங்களிலே கணிசமாக வசித்து வருகிறார்கள். குமரி மாவட்டத்திலே அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. கோவை மற்றும் நீலகிரியிலே ஏற்கெனவே வழங்கப்பட்டது. இடையிலே கடந்த ஆட்சியிலே அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த பிற்படுத்தப்பட்டோருக்கான சான்றிதழை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அந்த மக்களின் நீண்ட எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்போடு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**• மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை, நேற்றையதினம் ஒரு கடித வடிவத்திலே அவர்களால் என்னிடத்திலே விண்ணப்பமாகத் தரப்பட்டது. அதிலே நீலகிரி, கோவை, குமரி ஆகிய மாவட்டங்களிலும் ஓணம் பண்டிகைக்காக மாவட்ட அளவிலே விடுமுறை வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த விண்ணபத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குமரி, நீலகிரி, கோவை ஆகிய 3 மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலே ஓணம் பண்டிகைக்கான விடுமுறை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கோவிந்தசாமி, நன்றி வேண்டுமானால் சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு

உண்மையிலேயே நீண்டகாலமாக கேரளத்தைச் சார்ந்த மக்கள், அந்த மாவட்டங்களிலே வாழ்ந்து வரக்கூடியவர்களின் கோரிக்கையை இன்றைக்கு நிறைவேற்றித் தந்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நன்றி சொல்வதைக்கூட சிலர் பொறுத்துக்கொள்ள முடியாமல் எதற்கெடுத்தாலும் (குறுக்கீடுகள்) இருங்கள் அய்யா, சும்மா இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்று கேளுங்கள். நன்றி சொல்வதற்குரிய காரியங்களை இந்த அரசு செய்கிறபோது, மனப்பூர்வமாக நன்றி தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தகாலத்தில் நீங்கள் நன்றி சொல்வதற்குரிய எந்தக் காரியத்தையும் செய்யாத காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நன்றி சொல்வதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், நீங்கள் ஆத்திரப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நனறிதான் சொல்கிறார், திரு. கோவிந்தசாமி. உட்காருங்கள்.

## (ஈ) பேருந்து மறியலில் ஈடுபட்டு கைதாகியுள்ள சேலம் சட்டக் கல்லூரி மாணவர்களை விடுதலை செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்க வரலாற்றிலே மாணவர்களுடைய பங்கு என்பது, வரலாற்றிலே யாரும் மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஒன்றாக இருக்கின்ற ஒன்று. தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 10, 15 தினங்களுக்கு முன்பாகப் போராடி, கோட்டையிலே மனு கொடுக்க வந்தார்கள். அன்றைக்கு அந்தப் பிரச்சினையின் serious தன்மையைக்கூட நான் வலியுறுத்தி, பத்திரிகையை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே காட்டினேன். அதன் பிறகு அந்த சேலம் தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்தபோது, காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டு, கடுமையான சட்டப் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு, அவர்கள் வேலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது அவர்களை உடனடியாக விடுதலை செய்து அவர்களுடைய கோரிக்கைகளான அந்தக் கட்டணத்தைக் குறைத்து, அந்தக் கல்லூரி நிர்வாகத்தினுடைய அடிப்படைத் தேவைகள்



அனைத்தையும் பூர்த்தி செய்து, அரசு ஒதுக்கீடு ஏற்கெனவே 50:50 என்கிற நிலையிலே, இப்போது 65:35 என்று சொல்லி, அது இன்னும் அமல்படுத்தாத ஒரு நிலையும் இருக்கிறது. எனவே, இத்தனையும் கவனத்தில் கொண்டு, உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும்.

முற்பகல் 10-45

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்பொழுது நாங்கள் 17 ஆயிரம் ரூபாய் ஏற்றினோம் என்ற ஒரு கருத்தை நிச்சயமாகச் சொல்வார்கள். அது தவறு. அன்றைக்கு 4 ஆயிரம் ரூபாய் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, அன்றைக்குக் கோர்ட்டிலே தடையாணை வாங்கி 17 ஆயிரம் ரூபாயை அவர்கள் வசூல் செய்தார்கள். இதுதான் உண்மையான நிலை. எனவே, இதிலே நீங்களா, நானா என்று ego பார்க்காமல், மாணவர்களுடைய அந்தச் சூழ்நிலையை—இன்றைக்கு வேலூர் சிறையிலே அடைத்து, மாணவர்களுடைய அந்தத் திராவிட இயக்க வரலாற்றிலே அவர்களது பங்கு பெரிய பங்கு உள்ள சூழ்நிலையில், அவர்களை சிறையிலே அடைத்தோம் என்ற ஒரு கரும்புள்ளி அந்த வரலாற்றிலே ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் கடந்த 22-8-2006 ஆம் நாள் நம்முடைய கோட்டைமுன் இந்திய மாணவர் சங்கத்தைச் சார்ந்த செல்வா தலைமையிலே ஆர்ப்பாட்டம் செய்த நேரத்திலே தங்களுடைய கட்டணத்தைக் குறைக்க வேண்டும், அதுவும் குறிப்பாக அரசு நிர்ணயம் செய்திருக்கின்ற, அரசாங்கம் எந்தக் கட்டணம் அரசுக் கல்லூரிகளிலே நிர்ணயம் செய்திருக்கின்றதோ அந்த அளவிற்குக் குறைக்க வேண்டும் என்று இங்கே ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்த நேரத்திலே காவல் துறையினர், அவர்களில் இருக்கக்கூடிய தலைவர்களை அழைத்துப் பேசுவதற்கு, பிரதிநிதிகள் வாருங்கள், பேசுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று அழைத்தநேரத்திலே அவர்கள் மறுத்துவிட்டு, பஸ் மறியலிலே உடனே ஈடுபட்டார்கள். பஸ் மறியலிலே ஈடுபட்ட உடனே, அவர்கள் கைது செய்யப்பட்டு, அங்கே அருகிலே இருக்கக்கூடிய கொண்டித்தோப்பு காவல் நிலைய எல்லையில் இருக்கக்கூடிய ஒரு திருமண

மண்டபத்திலே வைக்கப்பட்டனர். அப்பொழுது அங்கே சட்டத் துறையைச் சார்ந்த எங்களுடைய துணைச் செயலர் அவர்களை, பூவலிங்கத்தை அனுப்பி, அரசு உங்களுடைய கோரிக்கையை பேச்சுவார்த்தையின் மூலமாகப் பேசித் தீர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றது என்று தெரிவித்தும், அவர்கள் அதை மறுத்தனர்.

அந்த நேரத்திலே, இந்திய மாணவர் சங்கத்தினுடைய செயலர் செல்வா அவர்கள்கூட அவர்களிடத்திலே, அரசினுடைய நியாயமான பதிலை நாம் ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைக்குச் செல்லலாம் என்றும், இதே அவையிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய பெரம்பூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள் நேரடியாகச் சென்று அரசு பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கின்றது, அரசிடம் பேசி ஒரு சுமுகத் தீர்வை நாம் காணலாம் என்று அவர்கள் பேசியும்கூட, அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

மறுத்துவிட்டதோடு மட்டுமல்லாமல், குறிப்பாக மறுநாள், அன்றையதினமே நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய (குறுக்கீடு) அதுதான் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய தலைவர் பால் கனகராஜ், தமிழ்நாடு Bar Association-யினுடைய சட்டப் பல்கலைக்கழக உறுப்பினர் திரு. சந்திரமோகன், இன்னும் பல வழக்கறிஞர்கள் எல்லாம் சென்று, அரசு சட்டக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்த அளவில், நிச்சயமாக இந்தப் பிரச்சினையைப் பேசி சுமுகமாகத் தீர்வு காண்போம் என்று சொன்ன நேரத்திலேகூட, அவர்கள் அதற்கும் மறுத்தார்கள். இருந்தும், இந்த அரசால் அன்றே, அவர்கள் கைது செய்யப்பட்டு உடனே விடுவிக்கப்பட்டார்கள். விடுவிக்கப்பட்டதற்குப் பின்னால், காலையிலே மீண்டும் அவர்கள் இங்கே பஸ் மறியலிலே ஈடுபட்டார்கள். குறளகத்திற்கு முன்னால், பஸ் மறியலில் ஈடுபட்டு, மக்கள் நெருக்கடியாக இருக்கக்கூடிய பாரி முனையிலே மறியலிலே ஈடுபட்ட நேரத்திலே கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு, குறிப்பாக உயர் நீதிமன்றத்தில் அன்றைக்கு ஆட்கொணர்வு மனு ஒன்று அவர்கள் மூலமாகத் தாக்கல் செய்யப்பட்டது. அன்றையதினத்திலே, உயர் நீதிமன்றத்தில் மக்களுக்கு இடையூறு செய்கின்ற வகையிலே பஸ் மறியலிலே ஈடுபடுவது மிகத் தவறு என்று நம்முடைய அரசு வழக்கறிஞர் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அரசு அவர்களை விடுவித்துவிட்டது என்று சொன்னவுடனே, அரசு விடுவித்தவுடனே ஆட்கொணர்வு மனு அங்கே எழவில்லை. இருந்தாலும், மீண்டும் அவர்கள் மக்களுக்கு இடையூறு செய்கின்ற வகையிலே மறியல்





போராட்டங்களிலே ஈடுபடக் கூடாது என்று உயர் நீதிமன்றத்தினுடைய நீதியரசர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, எச்சரித்தும்கூட, மாணவர்கள் தொடர்ந்து மறு நாள், அங்கிருந்து செல்கின்ற நேரத்திலே, காவல் துறையினுடைய வாகனங்களை, கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியிருக்கின்றார்கள். அன்று இரவு அமைச்சர் வந்து பேச வேண்டுமென்று சொன்னவுடனே, நானே நேரில் சென்று, உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கறிஞர்களுடைய வளாகத்திலே அவர்களிடத்திலே பேசிய நேரத்திலே, அவர்கள் சமாதானம் அடைந்தார்கள்.

*முற்பகல் 10–50*

நிச்சயமாக, இந்த அரசு பேசுவார்கள், நல்லதைச் செய்வார்கள் என்று எதிர்பார்த்த நேரத்திலே, நான் அங்கிருந்து வந்தவுடனே சிறிது நேரத்திலே, என்ன நடந்ததோ என்று தெரியவில்லை. சில விஷமிகளின் தூண்டுதலால், மீண்டும் நாங்கள் போராட்டம் நடத்துவோம் என்று சாலையிலே இரவு இரண்டு மணி வரை அமர்ந்திருக்கின்றார்கள். மீண்டும், அவர்கள் அங்கிருந்து தங்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். சென்றுவிட்டு, மறுநாள் காலையிலும், மீண்டும் பஸ் மறியல் போராட்டம் செய்வதற்காக இங்கே வந்து, பஸ் மறியல் செய்து கைது செய்யப்பட்டார்கள். குறிப்பாக, அவர்கள் தொடர்ந்து பொதுமக்களுக்கு இடையூறு செய்கின்ற வகையிலே ஈடுபட்ட காரணத்தால், அரசுக்கு வேறு வழியில்லாமல், கைது செய்யப்பட்டு, அவர்கள்மீது பல பிரிவுகளிலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, வேலூர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். கட்டணம் என்பது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவர்கள் என்னவோ உயர் நீதிமன்றம் தடை கொடுத்தது, கட்டணம் 17 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்று தடை கொடுத்தது, அதனால்தான் நாங்கள் வசூல் செய்தோம் என்று சொல்கிறார்கள். அந்தத் தடையை நீக்குவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? 2004 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நடவடிக்கையும் கடந்தகால அரசு எடுக்கவில்லை. ஆனால், இந்த அரசைப் பொறுத்தளவில் அவர்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயத்தை அழைத்துப் பேசுவதற்கு தயாராக இருந்தும், அவர்கள் வரவில்லையென்றால் இதிலே யார் பின்னணியிலே இருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. இ. பெரியசாமி] [2006 ஆகஸ்ட் 25

மாணவர்களுக்காக இந்த அரசு எல்லா காரியங்களையும் செய்திருக்கிறது. கட்டணத்தைக் குறைத்திருக்கிறது. எல்லாமே குறைத்திருக்கிறோம். உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் நீங்கள் செங்கல்பட்டு கல்லூரியிலே 17 ஆயிரம், அரசாங்க கல்லூரியிலே 17 ஆயிரம் வசூல் செய்தது, மாண்புமிகு உறுப்பினர் அமைச்சராக இருந்த காலத்திலேதான். அதை இரண்டாயிரமாக, உடனே குறைத்த ஆட்சி, எங்கள் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கு நன்மை செய்கின்ற ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி. ஏன் 17 ஆயிரம் நீங்கள் வைத்திருந்தீர்கள். அரசாங்க சட்டக் கல்லூரியிலே 17 ஆயிரம். அதுமட்டுமல்ல, ஏதோ அறிவு சார்ந்த சட்டக் கல்லூரி என்று 10 ஆயிரம் வைத்ததே உங்கள் ஆட்சியிலேதான். ஏழையெளிய மக்கள் எப்படிப் படிக்க முடியும்? ஆகவே, நான் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. 10 ஆயிரம் இந்தச் சட்டக் கல்லூரியினுடைய கட்டணத்தை வைத்ததே நீங்கள்தான். அதே மாதிரி 17 ஆயிரம் வைத்தது உங்கள் ஆட்சிக் காலத்தில்தான். இதை இரண்டாயிரமாகக் குறைத்த ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, மாணவர்கள்மீது அக்கறையாக இருக்கின்ற இந்த அரசு, நிச்சயமாக உடனே நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே நல்ல முடிவு எடுப்பார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரொம்ப விரிவான பதிலைச் சொல்லிவிட்டார்கள். இனி ஒன்றும் அதிலே துணைக் கேள்வியெல்லாம் கிடையாது. (குறுக்கீடு) ஜெயக்குமார், சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கொடுத்தார்கள். நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே சட்டத் துறை அமைச்சராக ஐந்து ஆண்டு காலம் நான் இருந்திருக்கின்றேன். சட்டக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தவரையிலே வீதியிலே வந்து போராடக்கூடிய நிலைமையை நாங்கள் ஏற்படுத்தவில்லை. நிச்சயமாக அந்த மாணவர்களுக்கும் தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.



2006 ஆகஸ்ட் 25]

**திரு. டி. ஜெயக்குமார்:** மாணவர்கள் உண்மை நிலையை அவர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன வித்தியாசம் என்பது நிச்சயமாக தெரிந்திருக்கும். அதை விவாதம் பண்ண வேண்டுமென்றால் அதற்கே கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாகும். நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. நான் ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு வேலூரிலே சிறையிலே அடைக்கப்பட்டிருக்கின்ற மாணவர்களை உடனடியாக விடுதலை செய்து, மீண்டும் அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, இந்த நீதிமன்றங்களில் இருக்கின்ற அந்த வழக்குகளை எல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து, மாணவர்கள் மகிழத்தக்க வகையிலே ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*(முற்பகல் 10-55*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமாக இப்போது விவாதிக்கப்பட்ட பிரச்சினை, சேலம் சட்டக் கல்லூரி மாணவர்களைப் பற்றிய பிரச்சினை. வேறு கல்லூரிகளில் இந்தப் பிரச்சினை வரவில்லை. சேலத்தில் தனியார் ஒருவர் நடத்துகின்ற சட்டக் கல்லூரியினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, இந்தப் பிரச்சினை. இதுபற்றி நம்முடைய முன்னாள் சட்ட அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, "எங்களுடைய காலத்திலே மாணவர்கள் இப்படி தெருவிற்கு வரவில்லை" என்று சொன்னார்கள். அவர்கள் தெருவிற்கு வருவதும், வராததும் அவர்களுடைய கையிலே இருந்த காரணத்தால் அப்போது அவர்கள் வரவில்லை. இப்போது வந்து இருக்கிறார்கள் என்றால், அதுவும் அவர்களுடைய கையிலே இருக்கின்ற காரணத்தால் தெருவிற்கு வந்து இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எனக்கு எப்படித் தெரியும் என்பது அவருக்குத் தெரியும். அதனால், அதையெல்லாம் விளக்கிக்கொண்டிருக்க நானும், ஜெயக்குமாரும் தயாராக இல்லை.

பொதுவாக, ஒரு நல்ல ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது நடைபெறுவதாகப் பொதுமக்கள் கருதிக் கொண்டிருக்கும்போது, நான் ஏகபோகமாக அந்த உரிமையை எடுத்துக்கொள்ளாமல், அப்படி பொதுமக்கள் கருதுகிறார்கள் என்று சொல்கின்றேன். அந்த நேரத்தில், ஏதாவது ஒரு களங்கத்தை, இந்த

ஆட்சிக்கு எற்படுத்த வேண்டும், என்று யாரோ சிலர் எண்ண, அதற்கு பகடைக்காயாக, பரிதாபத்துக்குரிய மாணவர்கள் பயன்படுத்தப்படுகிறார்களே என்றுதான் நான் மிகுந்த வேதனை அடைகின்றேன்.

இப்போது உண்மை என்ன? அரசுக் கல்லூரிகளிலே கட்டணம் குறைவு. தனியார் கல்லூரியிலும் அதே அளவுக்கு கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பது. தனியார் கல்லூரியில் என்ன கட்டணம் விதிக்கப்பட்டதோ அதை முதலில் ஒப்புக்கொண்டு, அந்தக் கல்லூரியிலே போய் சேர்ந்த மாணவர்கள், இந்தக் கிளர்ச்சியை நடத்த முன் வந்திருக்கின்றார்கள். அவர்கள் முதலில் ஒத்துக்கொண்ட பிறகு, ஒத்துக்கொண்டு அந்தக் கல்லூரியிலும் சேர்ந்த பிறகு, இப்போது அந்தக் கட்டணம் உயர்வு. அதைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சரி, அதைப்பற்றியாவது தனியார் கல்லூரி நிர்வாகி இடத்திலே பேசலாம், வாருங்கள் என்று சொல்லி, அவர்கள் வராத காரணத்தால், நீங்கள் வராவிட்டாலும் பரவாயில்லை. நாங்களே வருகிறோம் என்று நம்முடைய அமைச்சர் மாண்புமிகு ஐ. பெரியசாமி அவர்களே, அவர்கள் இருப்பிடம் நோக்கிச் சென்று அவர்களோடு இரவெல்லாம் நீண்ட நேரம் பேசி இருக்கின்றார்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; நேற்று காலையிலே 5½ மணிக்கு நான் மாண்புமிகு அமைச்சர் பெரியசாமி அவர்களைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, என்ன ஆயிற்று மாணவர் பிரச்சினை என்று கேட்டபோது, அவர், இன்னும் அரை மணி நேரத்திலே சொல்கிறேன் என்று சொன்னார். அரை மணி நேரத்திற்குப் பிறகு அவர் எனக்கு டெலிபோன் செய்து விவரம் சொன்னார்.

விடுதலைச் சிறுத்தைகளுடைய சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கின்ற திரு. ரவிக்குமாரும், அவரும் பேசியதாகவும், இதைப்பற்றி விடுதலைச் சிறுத்தைகளுடைய தலைவர் திருமாவளவனோடும் ரவிக்குமாரோடும், அமைச்சரோடும், அந்த சேலம் சட்டக் கல்லூரியினுடைய நிர்வாகியோடும், எல்லோரும் அமர்ந்து பேசி, இன்னும் இரண்டு நாளில் ஒரு முடிவு எடுப்பது என்று பேசி முடிவு செய்து இருக்கிறோம் என்று சொன்னார்.. அதற்குப் பிறகுதான், நேற்றைக்கு நான் இங்கே கோட்டைக்கே வந்தேன். வந்து இங்கே எல்லோருடனும் பேசிக்கொண்டு இருந்த நேரத்தில், ஓலை வந்தது. மாணவர்கள் பேச்சு வார்த்தைக்கு உடன்படாமல், மறியலிலே ஈடுபட்டு, கைதாகி இருக்கிறார்கள்; அவர்கள் வேலூருக்கு அனுப்பப்படுகிறார்கள் என்ற இந்தச் செய்தி எல்லாம் கோட்டையிலே உங்களோடு நான்



இருக்கும்போது எனக்குக் கிடைத்த செய்தியாகும். அமைச்சர் பேசப் போயும், பேசியும், நீண்ட நேரம் விவாதித்தும், பத்து நாள் எனக்கு கால அவகாசம் கொடுங்கள், அதற்குள் தனியார் கல்லூரி உரிமையாளரிடம் பேசி, ஏதோ ஒரு சமரச முடிவுக்கு வரலாம், உங்களுடைய கோரிக்கை பற்றியும் அவரிடம் வலியுறுத்துகிறேன் என்று அமைச்சர் சொன்ன பிறகும், முடியாது, இந்த நிமிடமே எங்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்று சொல்லிவிட்டு, அவர்கள் மறியலிலே ஈடுபட்டு இருக்கின்றார்கள். மறியலிலே ஈடுபட்டது மாத்திரமல்ல; வேறு என்னென்ன அங்கே நடைபெற்றது என்றெல்லாம் கூட அந்தச் செய்திகள் எல்லாம்கூட எனக்கு வந்தன.

முற்பகல் 11-00

நான் மாணவர்கள் பிரச்சினையை வளர்க்கவோ, அதை பெரிதுபடுத்தவோ, அல்லது அவர்களை அடக்கியே தீருவது என்ற மமதையோடு நடந்து கொள்ளவோ முற்படக்கூடியவன் அல்ல என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன். நான் சேலம், தனியார் சட்டக் கல்லூரியின் உரிமையாளர் திரு. தனபால் அவர்களுக்கு செய்தி அனுப்பியிருக்கின்றேன். இதே அளவுக்கு, அரசு விதிக்கிற அதே அளவு கட்டணத்தை விதித்திட வேண்டும் என்று ஓர் உத்தரவைப்போல செய்தி அனுப்பியிருக்கின்றேன். அவர் நீங்கள் இப்படி உத்தரவிட்டால் நான் கல்லூரியை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லியிருக்கிறார். என்ன செய்வீர்களோ தெரியாது. இதுதான் அரசாங்கத்தின் நிலை. அரசு சட்டக் கல்லூரியின் கட்டணத்தைப் போலவே உங்களுடைய கட்டணமும் இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். அதை அவர் ஏற்றுக் கொள்வாரா? இல்லையா? என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது. அப்படி விளைவுகள் ஏற்பட்டு, மாணவர்கள். ஜெயக்குமார் அவர்கள் சொன்னதைப்போல, நடுத் தெருவிலே நிற்கின்ற நிலைமை ஏற்படுமேயானால், யார் அவர்களைத் தூண்டி. விட்டார்களோ அவர்கள்தான் அதற்குப் பொறுப்பு என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) நான் மீண்டும் இந்த அவையில் உங்கள் சார்பாக. இந்த அரசின் சார்பாக அந்த தனியார் கல்லூரி உரிமையாளருக்கு நான் வலியுறுத்திச் சொல்லுகின்றேன். உங்களுடைய கட்டணத்தைக் குறையுங்கள் என்று வலியுறுத்திச் சொல்லுகின்றேன். அவர்கள் எடுத்து வைக்கின்ற வாதம்,

[கலைஞர் மு. கருணாநிதி]  [2006 ஆகஸ்ட் 25

நாங்கள் குறைத்தால், மற்ற தனியார் கல்லூரிகள் எல்லாம் குறைப்பார்களா? என்ற வாதத்தை எடுத்து வைக்கின்றார்கள். பிரச்சினை முடியத்தான் வேண்டும். ஒவ்வொரு நாளும் சட்டப் பேரவையிலே அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலை இல்லாமல், பிரச்சினை முடியத்தான் வேண்டுமென்றால்; நாம் நம்முடைய முடிவிலே உறுதியாகத்தான் இருக்க நேரிடும். ஏனென்றால், ஏதோ இந்தக் கட்டணத்திற்காக மாணவர்களை கஷ்டப்படுத்தவோ, அவர்களைச் சிறைச்சாலையிலே வைத்து வாட்டவோ நான் விரும்பவில்லை. அதை நான் அனுமதிக்கவும் இல்லை என்று கூறி, இதற்குமேல் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்களைத் தூண்டிவிட்டவர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும், சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று நான் அவர்களை இங்கிருந்தாலும், வெளியிலே இருந்தாலும், என்னுடைய வேண்டுகோள் அவர்களுடைய செவிகளிலே விழட்டும் என்று கூறி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### (அ) வால்பாறையில் அரசுப் பேருந்து பழுது காரணமாக விபத்திற்குள்ளானது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து பழுதடைந்து விபத்து ஏற்பட்டது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிக்கை

10-8-2006 அன்று காலை 10-15 மணிக்குக் கோயம்புத்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த, வால்பாறை - புதுக்காடு வழித்தடப் பேருந்து எண் TN 38/N.0546 வால்பாறை காந்தி சிலையிலிருந்து பணிமனையை நோக்கிச் செல்லும்பொழுது சுமார் 300 அடி கடந்தவுடன் சாலையின் இடது பக்கம் நிறுத்தி வைத்திருந்த இலகு வாகனங்களின்மீது மோதி பேருந்து இறுதியாக நின்றுவிட்டது.

ஓட்டுனர் பெயர்/பட்டியல் எண் : திரு. வி. ராதாகிருஷ்ணன், 017952.

நடத்துனர் பெயர்/பட்டியல் எண் : திரு. ஆர். சுப்பிரமணியன், 016495.

**விபத்திற்கான காரணம்:** பேருந்தின் தானியங்கி (self starter) அந்த நேரத்தில் இயங்காத காரணத்தினால், பேருந்தை நான்கு பேரின் உதவியுடன் தள்ளிவிட்டு start செய்வதற்கு ஓட்டுனர் முயற்சி செய்துள்ளார். அந்த நேரத்தில் காற்று அழுத்தம் (Air pressure) 6-KSC (Kilogram per sq.cm.) இருந்ததாக ஓட்டுனர் தெரிவித்துள்ளார். பேருந்தைத் தள்ளிவிட்டு start செய்ய முயற்சித்தபோது, காற்றின் அழுத்தம் 0 - நிலையில் வந்துவிட்டதால், பேருந்தை நிறுத்துவதற்கு முயற்சி எடுத்தும், பேருந்து நிற்காது சாலையின் இடதுபுறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட எட்டு இலகு வாகனங்களின்மீது மோதிவிட்டது. இதில் சேதமடைந்த வாகனங்களின் விவரம்:--

(1) டாடா சுமோ - 3

(2) அம்பாசிடர் - 2

(3) மாருதி ஓமினி - 2

(4) டாடா இண்டிகா - 1

இவற்றில் ஒரு டாடா சுமோ, ஒரு மாருதி ஓமினி, ஒரு டாடா இண்டிகா வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. மற்ற வாகனங்கள் சிறிது சேதம் அடைந்துள்ளன. மேற்படி இலகு வாகனங்களின் சேதத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ.5.5 இலட்சம். இவ்விபத்தினால்

சேதம் ஏற்பட்ட இலகு வாகனங்களின் ஓட்டுனர்கள் ஐந்து பேருக்கு சிறுகாயம் ஏற்பட்டு புறநோயாளியாக சிகிச்சை பெற்றார்கள்.

இக்கழகத்தின் கோட்ட மேலாளர் மற்றும் உதவிப் பொறியாளர்கள் இந்த விபத்தைப் பார்வையிட்டு இதில் மேற்படி பேருந்தின் ஓட்டுனர் அவசரகாலத் தடையை உபயோகிக்காமல் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன ஆய்வாளர், இப்பேருந்தினை ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

Unloaded Valve Instant Failure Leading to Air Leak.

மேற்படி இப்பேருந்தின் ஓட்டுனர்மீது வால்பாறை காவல் துறையினர் வழக்கு எண் 165/06 இந்திய தண்டனைச் சட்டம் எண் 279 மற்றும் 337 பிரிவின்படி வழக்குப் பதிவு செய்துள்ளனர். இப்பேருந்தின் ஓட்டுனர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வால்பாறையிலே அரசு பேருந்து 8 வாகனங்கள்மீது மோதி நின்று விட்டது. சம்பவம் நடந்த இடம் வால்பாறையிலே இருக்கின்ற அரசு மேல்நிலைப்பள்ளி, பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப் பள்ளி ஆகியவை இருக்கின்ற இடமாகும். நுழைவு வாயிலுக்கு அருகிலே இருக்கின்ற அந்தப் பகுதியில் சம்பவம் சரியாக முற்பகல் 10–45–க்கு நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 3,500 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். 10–45 மணிக்கு நடைபெற்ற அந்த விபத்து சரியாக ஒரு மணி நேரத்திற்கு முன்பாக 9-45-க்கு நடந்திருக்குமேயானால், அங்கே ஒரு மிகப் பெரிய விபரீதம் ஏற்பட்டிருக்கும். அந்த விபரீதத்தைப் பற்றி நாம் எல்லாம் வருத்தப்படுகின்ற அளவுக்கு மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். பொதுவாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விபத்து ஏற்பட்டால் பெரியவர்கள் சொல்வார்கள், மூதறிஞர்கள் சொல்வார்கள். என்ன புண்ணியம் செய்தார்களோ, இந்த விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருக்கிறார்கள் என்று சொலவார்கள்.



முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர், மரியாதைக்குரிய தமிழினத்தினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் செய்த புண்ணியத்தால், தர்மத்தால் அன்று நடைபெறவிருந்த மிகப் பெரிய விபத்து அதிர்ஷ்டவசமாக தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லை என்று சொன்னால், அந்தப் பள்ளியில் உள்ள 3,500 மாணவ, மாணவிகள் முக்கால் மணி நேரத்திற்கு முன்பாக நடந்து செல்வார்கள், மேலே பழுதடைந்த பேருந்து break இல்லாமல் கீழே வருகிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், அந்த அறிக்கையை படித்துப் பார்த்தீர்கள் அல்லவா? அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்துவிட்டு, அது சம்பந்தமாக இரண்டு கேள்விகளைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஆகவே, அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேருந்துகளால் வால்பாறையில் இதுபோல் விபத்துகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10–8–2006 அன்று காலை சுமார் 10–45 மணியளவில் அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த வால்பாறை–புதுக்காடு வழித்தடத்தில் TN 38/N 0546 என்ற வண்டி அங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தது. புறப்படுகின்ற நேரத்தில் self எடுக்காத காரணத்தால் அங்கிருந்த நான்கு பேரை வைத்துத் தள்ளி start செய்கின்றபோது, air break failure என்ற காரணத்தால், காற்று இல்லாமல், start ஆனவுடன் break பிடிக்காமல் எதிரே இருந்த வண்டிகளிலே மோதியிருக்கிறது. ஓட்டுனர் அவர்கள் மீதும், நடத்துனர் அவர்கள் மீதும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அங்கு இருக்கின்ற பொது மேலாளருக்கு ஒரு முக்கியமான கருத்து அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மலையிலே ஓடுகின்ற பேருந்துகள் self எடுக்கின்ற வகையிலே தொடர்ந்து சரிசெய்யப்பட வேண்டுமென்று அவர்களுக்கு

அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இனி இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் இந்தத் துறை பாதுகாக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் மேடு பள்ளமான பகுதிகள் உள்ளன. இனிமேல் பேருந்துகளை, அரசுப் பேருந்துகளை தள்ளி start செய்வதை தடை செய்ய வேண்டுமென்று அரசினுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லியாகிவிட்டது, instruction கொடுத்தாகிவிட்டது என்று சொல்லுகிறார் அல்லவா? உட்காருங்கள். நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. கோவை தங்கம்:** அதாவது, சொல்ல வருகிறேன், இருங்கள். நான் சென்ற வாரமே இந்த அவையிலே குறிப்பிட்டேன். வால்பாறையில் இருக்கின்ற பேருந்துகள் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன, ஆகவே, மிக அவசரமாக 7 புதிய தடங்களையும், பழுதடைந்த 17 பேருந்துகளையும் உடனடியாக மாற்றித் தருவதோடு, சென்ற அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஒரு பேருந்துகூட தாழ்த்தப்பட்ட தொகுதிக்கு தரப்படவில்லை, தாழ்த்தப்பட்ட என்னுடைய தொகுதிக்கு ஒன்றும் செய்யவில்லை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. கோவை தங்கம், உட்காருங்கள்.

### (ஆ) சென்னை புறநகர் பகுதிகளில் சாலையோரங்களில் திடக் கழிவுகளும், வடிகால் கழிவுகளும் சட்டத்திற்குப் புறம்பாக லாரிகள்மூலம் வெளியேற்றப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கி. ஆறுமுகம் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.



**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை புறநகர் பகுதிகளான பள்ளிக்கரணை, வேளச்சேரி சாலைகளில் குப்பைகள் மற்றும் கழிவுநீரை லாரிகள்மூலம் கொண்டு வந்து கொட்டுவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி, அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

*முற்பகல் 11-10*

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி மற்றும் வேளச்சேரி சாலையோரங்களில் லாரிகளின்மூலம் திடக் கழிவுகள் மற்றும் வடிகால் கழிவுகள் ஆகியவை சட்டத்திற்குப் புறம்பாக வெளியேற்றப்படுகின்றன. இவ்வாறு வெளியேற்றப்படுவதால் கீழ்க்கண்ட சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன:

குப்பைகள் கொட்டப்பட்டுள்ள பகுதியிலிருந்து வெளியாகும் கசிவில் நச்சுத்தன்மையுள்ள பொருட்கள் கலந்துள்ளதால் நிலத்தடி நீர் மாசடைகிறது.

நிலப்பரப்பு இழப்பு மற்றும் நிலத்தடி நீரின் மேம்பாடு பாதிக்கப்படுகிறது.

கழிவுகள் பெரும்பாலும் ஆலந்தூர் நகராட்சி, சென்னை மாநகராட்சி மற்றும் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டு, கொட்டப்படுகின்றன.

இது தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :

சென்னை மாநகராட்சி மற்றும் ஆலந்தூர் நகராட்சி ஆகியவற்றுக்கு அநேக முகாந்திர அறிக்கைகள் மற்றும் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:

கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்து, மக்கும் கழிவுகளை உரமாக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

மறுசுழற்சி செய்யத்தக்க கழிவுகளை மறுசுழற்சி செய்தல் வேண்டும்.

வினைபுரியா தன்மை கொண்ட கழிவுகளை பாதுகாப்பான நிலநிரப்பு செய்தல் வேண்டும்.

இப்பகுதியைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான திட்ட அறிக்கையினை காலக்கெடுவுடன் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

சென்னை மாநகராட்சியை இப்பகுதியில் விரைவில் மக்கும் கழிவுகளை உரமாக்கும் தளம் அமைக்குமாறும், பாதுகாப்பான நிலநிரப்பு அமைப்பினை அமைக்குமாறும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டு, இயக்கப்பட்டு வரும், பெருங்குடி கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் லாரிகள் மூலம் கொண்டு வரப்படும் வடிகால் கழிவுநீரை வெளியேற்றுமாறு இப்பகுதியில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இந்த நடவடிக்கை காரணமாக பள்ளிக்கரணை மற்றும் வேளச்சேரியைச் சுற்றி அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலிருந்து டேங்க்கர் லாரிகள்மூலம் கொண்டு வரப்படும் கழிவுநீரை தலா ரூ.100/– செலுத்தி பெருங்குடி கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேற்றுகின்றன. இது தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மேற்குறிப்பிட்டுள்ள வாரியத்திற்கும் உரிய உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

இந்நிலையத்திலிருந்து வெளியேறும் சேறு (Sludge) உரமாக பயன்படுத்தப்படத்தக்கது என ஆய்வின்மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே, சேற்றினை உரமாகப் பயன்படுத்தவேண்டும் எனவும், இப்பகுதியில் கொட்டப்படக் கூடாது எனவும் வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



இப்பகுதியில் கழிவுகள் சட்டத்திற்குப் புறம்பாக கொட்டப்படக் கூடாது எனவும், மீறினால் உரிய தண்டனை வழங்க சட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், வாரியம் நாளேடுகளில் செய்தி வெளியிட்டுள்ளது. வாரியம் கடந்த ஆண்டில் மேற்கொண்ட திடீர் சோதனைகளின்போது முறையின்றி கழிவுகளை வெளியேற்றிய லாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வாரியத்தின் அறிவுறுத்தலின்படி பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் காவல் நிலையங்கள் மூலமாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பகுதியைப் பாதுகாக்க முனைப்புடன் செயல்படுவோர், தன்னார்வ அமைப்புகள் அடங்கிய உள்ளூர் சுற்றுச்சூழல் குழுவினை வாரியம் ஏற்படுத்தி, இக்குழுவிற்கு பள்ளிக்கரணைப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பான புகார்களை பொதுமக்கள் அளிக்கலாம் எனவும் செய்தி வெளியிட்டுள்ளது. அவ்வப்போது இக்குழு கூடி விவாதித்து நடவடிக்கை மேற்கொள்கிறது.

இக்குழுவின்மூலமும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பசுமைப்படைமூலமும் இப்பகுதி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே இதுபோன்று சாலையோரங்களிலே கொட்டப்பட்டிருக்கிற கழிவுகளைக் கொட்டிய 8 லாரிகள்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக ஓர் அறிக்கையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஏராளமான லாரிகளில் இதுபோன்ற கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டுவது மட்டுமல்லாமல், நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளான சென்னை மாநகராட்சிக் கழிவுகளும், ஆலந்தூர் நகராட்சியினுடைய கழிவுகளும், சுற்றியுள்ள பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளினுடைய கழிவுகள் எல்லாம் அங்கே கொட்டப்படுவதாலே அங்கே நீர், நிலத்தடி நீர் மாசுபட்டிருப்பதும், அதேபோன்று, அந்தப் பகுதியிலே பல்வேறு வகையான பாதிப்புகள் மக்களுக்கு ஏற்படுகிற நிலைமைகளெல்லாம் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது, இந்தக் குறிப்பிலே.

அந்தப் பகுதியிலே வாழுகிற மக்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. சுவாசக் காற்றுகூட மாசுபட்டிருக்கிறது என்ற ஓர் ஆதங்கத்திலே மக்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்தப்

[திரு. கி. ஆறுமுகம்] [2006 ஆகஸ்ட் 25

பகுதியிலே நிலத்தடி நீர் பாதிக்கப்பெற்றிருக்கிறது. அது சதுப்பு நிலக் காடாக இருக்கிறது. பள்ளிக்கரணை என்பது சதுப்பு நிலம், இது சென்னைக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம் என்று புவியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். சென்னைக்கு நீர் கொடுக்கிற ஆதாரமாக அது இருந்து வந்துகொண்டிருக்கிறது. ஆனால், தற்போது அது குப்பைகளைக் கொட்டுகிற பகுதியாகப் போய்விட்டதாலே, சதுப்பு நிலங்கள் அழிகிற ஓர் அபாயம் இருக்கிறது. அதைவிட அந்தப் பகுதியிலே சாலையோரங்களிலே அந்தக் குப்பைகள், இரசாயனக் கழிவுகள், இரசாயன ஆலைகளினுடைய திரவக் கழிவுகள் எல்லாம் கொட்டப்படுகிறது. அந்தப் பகுதியிலே போகிற மக்கள், இரு சக்கர வாகனங்களிலே செல்கிறவர்களும், நடந்து செல்கிறவர்களும் தங்களுடைய கையிலே இருக்கிற கைக்குட்டைகளையெல்லாம் மூக்கிலே கட்டிக் கொண்டு செல்கிற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவ்வளவு மோசமான துர்நாற்றம் இருக்கிறது. கொசு உற்பத்தி செய்கிற மையமாக அது இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை, சென்னைப் பெருநகரப் பகுதிகளான பள்ளிக்கரணை, வேளச்சேரி ஆகிய சாலைகளில் சூழ்நிலைகள் மிகவும் பாதிக்கப்படுவதாக இருப்பதால், அவசர நடவடிக்கை தேவைப்படுகிறது. எனவே, இதனை நானும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை மாநகராட்சி மற்றும் ஆலந்தூர் நகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய துறைகளின் உயர் அதிகாரிகளுடன் மிக விரைவில் ஆய்வு ஒன்றை நடத்தி, தேவையான வழிவகைகளை வகுத்து, தலைவர் கலைஞரின் நல்லாட்சியில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மேலான ஆலோசனைகளைப் பெற்று, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஒப்புதலோடு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 8 லாரிகளுக்கு மட்டும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று விவர அறிக்கையில் இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது, பெருங்குடியிலே அமைக்கப்பட்டிருக்கிற கழிவுநீர் சுத்திகரிப்பு



2006 ஆகஸ்ட் 25] [திரு. டி.பி.எம். மைதீன்கான்]

நிலையத்திற்கு தினசரி சராசரியாக 40 முதல் 50 லாரிகள் வந்து கழிவுநீரை வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பகுதிகளில் சாலையோரங்களில், இந்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு லாரிகள் செல்லாமல், சிலபேர் சட்ட விரோதமாக அந்தச் சாலைகளில் கொட்டிவிடுகிற காரணத்தாலும், திடக் கழிவுகளையும் கொட்டிவிடுகிற காரணத்தாலும் இதுபோன்ற பிரச்சினை ஏற்படுகிறது. அதுசம்பநதமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய பள்ளிக்கரணை பகுதியிலே, ஆலந்தூர் நகராட்சியிலேயிருந்து கொட்டப்படுகின்ற அந்தத் திடக் கழிவுகள், அதிலேயுள்ள பயன்படுகின்ற பொருள்களை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சிலபேர் அதிலே தீயை வைத்துவிடுகிற காரணத்தால் அதிலேயிருந்து புகை வந்து அந்தப் பகுதி மாசுபடுகிறது. அதுசம்பந்தமாக நேற்றுமுன்தினம்கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நான் நேரிலே சென்று விளக்கம் கேட்டு, மேலும் அறிவுரை சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த அமைப்புகளெல்லாம், நல்ல வேளையாக இந்த நாட்டின்மீது அக்கறைகொண்ட நம்முடைய உள்ளாட்சித் துறையின் அமைச்சரிடம் அந்தப் பொறுப்புகள் இருக்கிற காரணத்தால், அவருடன் கலந்தாலோசித்து மிக விரைவில் இந்த மக்களைக் காப்பாற்ற, மாசு அடைவதிலிருந்து காப்பாற்ற, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை**

**(இ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – தமிழ் வளர்ச்சி பண்பாடு**

**(ஈ) கோரிக்கை எண் 18 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்**

---

## (அ) கோரிக்கை எண் 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.21,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2219, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்களின் பணி வயது வரம்பை மத்திய அரசு ஊழியர்களைப்போல் 60 வருடமாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2428, திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 2863, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3299, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5385, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு நிர்வாகம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9412, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த காலங்களில் தடை செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் சலுகைகள் அனைத்தையும் மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2369, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4913, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4115, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து அரசுத் துறைகளிலும் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4475, திரு. தி.க. ராஜா.



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தவறு செய்யும் அரசு ஊழியர்கள்மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6188, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் நல்ல முறையில் பொதுமக்களுக்குச் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் அரசு பரிசுகள் வழங்கி ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6611, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்.:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7129, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அரசுத் துறைகள் சிலவற்றை மேம்படுத்த கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7866, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2829, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3859, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2034, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுத் துறையிலுள்ள அனைத்து காலியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5215, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின்மூலம் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8072, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பணியாளர்களை இடமாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5527, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9449, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள நூலகங்களில் பணியாற்றி வருகின்ற நூலகர்களுக்கு சுமார் 20 ஆண்டு காலமாக குறைந்த அளவு ஊதியமே வழங்கி வருவதைக் கருத்தில்கொண்டு, நூலகர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2006 ஆகஸ்ட் 25

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8225, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலகங்களில் தினக்கூலிகளாக வேலைபார்க்கும் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1985, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5330, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர், காப்பாளினி ஆகியோர்கள் வாரத்தில் ஏழுநாட்கள் வேலை செய்யும் கட்டாயத்தில் இருப்பதால், ஒரு நாள் விடுப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.29,21,38,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2159, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.



2006 ஆகஸ்ட் 25]

## (ஆ) கோரிக்கை எண் 38 - பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38 - பொதுத் துறை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.186,84,92,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2232, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2431, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2866, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3302, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/- மற்றும்

சென்று தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1523, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், எறவார்பட்டி ஊராட்சி, கவுல்பட்டியில் வாக்குச் சாவடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9176, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2060, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழக அரசுக்கு எவ்வளவு நிதி செலவு ஆகி உள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2164, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 8785, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5678, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், தொப்பையாறு நீர்த்தேக்கம் அருகில் உள்ள அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.186,84,92,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5575, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,50,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2261, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் காலியாகவுள்ள

தமிழாசிரியர்கள் போன்ற பணியிடங்களை உடனே பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7528, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3308, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6396, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு மதிப்பெண் அளித்து, நுழைவுத் தேர்வில் உதவும் வகையில் முன்னுரிமை கொடுத்து, தொழில் துறைக் கல்லூரிகளில் அனுமதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9432, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2339, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசு கல்வி நிலையங்களில் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ்மொழியைக் கட்டாயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3756, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3979, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் இசைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4375, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப்போர் தியாகிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெருந்தொண்டு செய்தவர்களுக்கும், தமிழ் மேதைகளுக்கும் வழங்கி கௌரவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5828, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற மொழியிலுள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும்



மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6715, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு மதிப்பெண் அளித்து நுழைவுத் தேர்வில் உதவும் வகையில் முன்னுரிமை கொடுத்து தொழில் துறைக் கல்லூரிகளில் இடம் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7414, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8590, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8893, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3855, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6536, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6516, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5097, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனி தமிழுக்காக வாழ்நாளெல்லாம் அயராது உழைத்தவரும் ஆட்சி மொழி செயலாக்கத்திற்காக தொய்வில்லாது உழைத்தவருமான முனைவர் மு. தமிழ்குடிமகனார் அவர்களின் பெயரில் விருது வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5478, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறைகளில் தமிழை முழுமையாக அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2898, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டுமென்ற அரசு அறிவிப்பை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5919, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் 142 பேருக்கு தமிழ்மொழிக் காவலர் ஓய்வூதியம் வழங்க அரசாணை (நிலை) எண் 5, நாள் 10–1–2000–ன்படி 1–1–2000 முதல் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சிக்காலத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தமிழ்மொழிக் காவலர் ஓய்வூதியத்தை மீண்டும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5674, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக நிறுவனங்களில், தனியார் துறை நிறுவனங்களுக்குக் கட்டாயம் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3230, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழில் பேசினால் தண்டனைத் தொகை வசூலிக்கும் வழக்கத்தை மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலிருந்து ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8837, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் பகுதி, கொடை வள்ளல் குமணன் வாழ்ந்த இடம் என்று அழைக்கப்படுவதால் தொல்பொருள்



ஆராய்ச்சித் துறையின்மூலம் புதையுண்ட இடங்களைக் கண்டறிய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9019, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் B.L. (Hons.) படிப்பிற்குரிய நுழைவுத் தேர்வு ஆங்கில வழியில் மட்டுமே நடத்தப்படுகின்றது. இதனை தமிழ் மொழி வாயிலாக நடத்த உரிய ஆணை வெளியிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2176, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7276, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலக நாடுகளில் தமிழ்மொழியை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50 04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7308, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8752, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4905, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள தெருக்கூத்து கலைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4468, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்மொழி வாயிலாக பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9252, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள பர்வதமலை, பூதமங்கலம், எலத்தூர-மோட்டூர் நட்சத்திர கோயில் ஆகிய பகுதிகளில் தமிழ் வளர்ச்சி பண்பாடு



துறையின் சார்பில் வேத பாடசாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9141, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில் தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் பயிற்சி மையங்கள், சிறப்பு தமிழ் பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8696, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாய் தமிழ் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8144, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2456, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதியில் வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயிலில் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்களின் நினைவாகப் புத்தகக் கண்காட்சி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5780, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டந்தோறும் இசைக் கல்லூரிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6008, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தமிழ் இசைப் பள்ளி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு அரசு கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6872, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, "தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கங்கைகொண்டசோழபுரம் கோயிலில் ஆண்டுதோறும் ஏதாவது ஒரு நாளில் பாட்டரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம், நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4859, திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழை ஒரு பாடமாக அறிமுகப்படுத்திய திட்டத்தை அனைத்து வகுப்புகளுக்கும் ஒரே நேரத்தில் அறிமுகப்படுத்த வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1950, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு அலுவலகங்களில் அனைத்து நடைமுறைகள் மற்றும் கோப்புகள் தமிழ்மொழியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என ஆய்வு செய்து, தமிழ்மொழியை நல்லமுறையில் நடைமுறைப்படுத்துகிற அலுவலகத்திற்குப் பரிசுகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5530, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதியில் தமிழ்க் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,54,22,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,50,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



### (ஈ) கோரிக்கை எண் 18 - கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18-கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.34,45,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 5597, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட மதுக்கரை மரப்பாலம் பகுதியில் உள்ள கைத்தறி கதர் நிறுவனத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2751, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9414, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 3867, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 4569, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியத்தில் கிராமங்கள்தோறும் சிறு தொழில்கள் துவக்கி, இளைஞர்களுக்கு வருமான வாய்ப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 5001, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரில், கதர் கிராமத் தொழில் மூலம் உற்பத்தி செய்யும் பொருட்கள், கதராடைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு பெரிய விற்பனை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 5910, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனைத்து கைத்தறி உற்பத்தியாளர்களுக்கும் அவர்கள் வாழ்க்கை மேம்பட இலவசமாக உபகரணங்கள் அரசு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 6184, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரத்தில் கைவினைப் பொருட்கள் விற்பனை மையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண்

மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 7155, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியத்திற்குட்பட்ட பனைமலைப்பேட்டையில் விசைத்தறித் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 7472, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7717, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் கிராமந்தோறும் சிறு தொழில்கள் துவக்கி இளைஞர்களுக்கு வருமான வாய்ப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 8980, திரு. தி. வேல்முருகன்.



**திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் நெசவாளர்கள் நெய்யும் துணிகளை அரசே நல்ல விலைக்குக் கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9072, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6517, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3781, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர்த் துறையில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வருபவர்களுக்கு வீடுகட்ட வட்டியில்லா கடன் வழங்கவும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6787, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரத்தில் தயாராகும் பொம்மைகள் மற்றும் கைவினைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4917, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4840, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூரில் மூடிக்கிடக்கும் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் இயக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5084, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணியில் அமைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக கிராமத் தொழில் மற்றும் பயிற்சிக் கூடம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4609, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் துணிகளுக்கு அரசு மானியம் அளித்து தள்ளுபடி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5645, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர்த் துறை கடந்த காலத்தில் மிகவும் சீரழிந்து கொண்டு வந்ததை தடுத்து, அதற்குப் புத்துயிர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5363, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பனைத் தொழிலைப் பாதுகாக்க, பனை வாரியம் தனித்துச் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8494, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் உள்ள சிபகாட்டில் விசைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5473, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்கள் மூலம் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பு பெறும் வண்ணம், கதர் நூல் நூற்கும் இராட்டைகள்



மிகவும் பழுதடைந்த நிலையில் பழைய இராட்டைகளாக உள்ளன. அவற்றை மாற்றி புதிய இராட்டைகள் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2475, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திலும், தேனி ஊராட்சி ஒன்றியத்திலும் ஏதாவது ஒரு ஊராட்சியில் கிராமத் தொழில்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2379, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுப்புழுக் கூடு இறக்குமதி வரியை 32 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக மத்திய அரசு குறைத்துள்ளதால் மல்பரி விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 5628, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2037, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைவினைப் பொருட்கள் விற்பனையை மேம்படுத்த சிறப்பு அங்காடிகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9250, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் செயல்பட்டுவந்த உதவி இயக்குநர் அலுவலகம் (கதர் மற்றும் கிராமத் தொழில்கள்) விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டது. இதை மீண்டும் பிரித்து, திருவண்ணாமலைக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 9122, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் வாரியத்தில் ரூபாய் 13.63 இலட்சம் மோசடி செய்துள்ள சேலத்தைச் சேர்ந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9337, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் கிராம கைவினைப்பொருட்கள் தயாரிக்க மகளிருக்கு ஒரு தொழிற்கூடம் அரசு மூலம் அமைத்துக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8883, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலை அமராவதி, திருமூர்த்தி மலைப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு (மேற்கு மலைத் தொடர்) பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு பட்டுப்புழு வளர்ப்புத் தொழில், தேனீ வளர்ப்பு, ஊறுகாய், சீமாறு தயாரித்தல் போன்ற சிறு தொழில்களுக்குக் கடன்கள் மற்றும் மானியம் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5754, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் கைவினைஞர்கள் நலன் கருதி மாவட்டந்தோறும் கைவினைப் பொருள் கண்காட்சி தொடர்ந்து நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5704, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியில் உள்ள திருவரங்குளம் மற்றும் கோட்டைக்காடு பகுதியில் செயல்படாமல் உள்ள விதைத்தறிக்கூடங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2112, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6009, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப்பொருட்கள் உற்பத்தியினை மேம்படுத்தவும், ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5953, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கன்னியாகுமரி மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகத்திற்குக் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3835, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறிப் பூங்கா ஒன்று தருமபுரியில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.34,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6890 திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "ஜெயங்கொண்டம் பகுதியில் கதர்த் துறை மூலம் சோப்பு மற்றும்

கதர்ப் பொருட்கள் தயாரிக்கும் அலகு இதுவரை அமைக்கப்படவில்லை. உடன் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை- கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,15,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3250, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.53,09,64,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,15,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறையைச் சார்ந்த தமிழ் வளர்ச்சி பண்பாடு, இவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள

@ 129 முதல் 528 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I முதல் II, III, மற்றும் IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.



வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை– கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். 10 உறுப்பினர்களுக்கு மேலாகப் பேச வேண்டியிருக்கிறது. நான்கு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெறவிருக்கிறது. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அனைத்து உறுப்பினர்களும், 10 நிமிடங்களுக்கு மேற்படாத வகையில், தங்களுடைய உரையை நிகழ்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு (குறுக்கீடு) ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேல் அதிகமாகாத வகையில், 10 நிமிடங்களுக்குள் குறைவாகப் பேசி, உரையை நிகழ்த்த வேண்டுமென்று கேட்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்.

***திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–இல் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில் என்னை வேட்பாளராக அறிவித்து, என் வெற்றிக்காகப் பாடுபட்டு, வெற்றி பெறச் செய்தும், 2006–இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரண்டாவது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து, என்னை மீண்டும் வேட்பாளராக அறிவித்து, என் வெற்றிக்காகப் பாடுபட்டு, வெற்றி பெறச் செய்தும், எனக்கும், என் குடும்பத்திற்கும் தாயாய், தந்தையாய், ஆசானாய், அருள்புரியும் தெய்வமாய் விளங்கும் எங்கள்

@@ 529 முதல் 569 வரையிலான பக்கங்களில் இணைப்பு—V ஆக அச்சிடப்பட்டுள்ளன.

அன்பின் சிகரமே! ஆற்றலின் உறைவிடமே! பண்பின் இருப்பிடமே! பாசத்தின் பிறப்பிடமே! ஏழைகளின் இதயங்களில் என்றைக்கும் சிம்மாசனம் கொண்டிருக்கும் இதய தெய்வமே! சாதனை சகாப்தமே! நடமாடும் சரித்திரமே! மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களே, உங்கள் பொற்பாதங்களை வழிபடுவதே எனக்குக் கடவுள் வழிபாடு; வாழ்விக்க வந்த வள்ளலே, தங்களை வணங்குவதே நான் பெற்ற பேறு; தாயே, தங்களுக்கு என் முதல் வணக்கம்.

என் வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக மக்கள் கூட்டணியின் தலைவர்களுக்கும் கழக நிர்வாகிகளுக்கும், கழக செயல் வீரர்களுக்கும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்று நிரூபித்த கும்மிடிப்பூண்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி, நன்றி, நன்றி என நன்றியைக் கூறி என் உரையைத் துவக்குகிறேன்.

தமிழ் வளர்ச்சி. தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து வகைப் பள்ளிகளிலும் L.K.G. முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அறிவியல் தமிழை அறிமுகப்படுத்தினார். இதனால் தமிழ்நாட்டில் எந்த ஒரு குழந்தையும் தமிழ் கற்காமல் பள்ளிப் படிப்பை முடிக்க இயலாது என்பது உறுதி செய்யப்பட்டது. தமிழ் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் வீடு நினைவிடமாக மாற்றப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் நினைவாகவும், திருநெல்வேலியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் நினைவாகவும் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவுத் தூணும், மணிமண்டபமும் கட்டப்பட்டுள்ளன.

*முற்பகல் 11-30*

சென்னையில் பாரத இரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் நினைவிடத்தில் அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. ஓமந்தூர் கிராமத்தில் இராமசாமி ரெட்டியார் அவர்கள், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், ஓடாநிலையில் தீரன் சின்னமலை ஆகியோருக்கு மணிமண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.



சென்னையில் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், மதுரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், வல்லநாட்டில் வெள்ளையத் தேவன் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் திரு. சுந்தரலிங்கம் அவர்கள், மதுரையில் தேவநேயப் பாவாணர் அவர்கள், எட்டையபுரத்தில் உமறுப் புலவர் ஆகியோருக்கும் நினைவிடங்கள் மற்றும் மணிமண்டபங்கள். ஸ்ரீவைகுண்டம் கிராமத்தில் சி.பா. ஆதித்தனார் அவர்கள் பூர்வீக வீட்டை புதுப்பித்து நினைவிடமாக நிறுவப்பட்டது. திருப்பூரில் குமரன் அவர்களுடைய நினைவாக மார்பளவு வெண்கலச் சிலையும் மற்றும் சென்னையில் காந்தி மண்டபம் வளாகத்தில் தியாகி செண்பகராமனின் முழு உருவச் சிலையும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடலி கிராமத்தில் தேசிங்கு இராஜாவுக்கும், காரைக்குடியில் அரியக்குடி இராமானுஜ ஐயங்காருக்கும் நினைவிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தில் காங்கிரசை வேரோடும் வேரடி மண்ணோடும் துடைத்து ஆட்சியைப் பிடித்ததற்குப் பின்னால், 1968 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். பேரறிஞர் அண்ணா அவர்களின் உண்மைத் தம்பியாக விளங்கிய பாரத இரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை 1980 ஆம் ஆண்டு மதுரையில் நடத்திக் காட்டினார். பின்னர் தமிழ் மொழிக்கென்று தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை 1985 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் முதன் முதலில் அமைத்தார். புரட்சித் தலைவரின் ஒரே அரசியல் வாரிசான டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்.

தூய தமிழில் பெயர் வைத்து எடுக்கப்படும் படங்களுக்கு நிதி உதவி மற்றும் வரி விலக்கும் அளிக்கப்படுமாம். கருப்புப் பணம் கோடிகளில் வியாபாரமாகும் தமிழ்ப் படங்களுக்கு மக்கள் வரிப் பணத்திலிருந்து தானம் வழங்குவதால், தமிழக மக்கள் அடையப் போகும் இலாபம் என்ன? கலசப் பாத்திரத்தில் சாராயம் ஊற்றிக் கொடுப்பதுபோல், தமிழில் பெயர் வைத்துவிட்டு, ஆபாசமாகப் படம் ஆக்கினாலும், வரி விலக்கு என்பது கேவலமாக இல்லையா? தமிழகத்தில் தமிழில் பெயர் வைத்து தரமாக தயாரிக்கும் படங்களுக்கு வேண்டுமானால் வரி விலக்கு அளிக்கலாம். தமிழுக்குத் தொண்டு செய்வதாக நினைத்து, இதுபோன்ற அபத்தங்களைச் செய்யாமல், ஏழைகளுக்கு உதவும்படி

பல நல்ல திட்டங்களை உருவாக்குவதே மன நிறைவை அளிக்கும். அல்லது, தமிழ் அறிஞர்கள் பலரை அறிந்து அவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கலாம்.

26-12-1956 அன்று ஆட்சிமொழி செயலாக்கம் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. 50 ஆண்டுகள் ஆகியும் தமிழகத்தில் ஆட்சி மொழி என்னும் நிலை அரசு அலுவலகங்களில் இல்லை. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் வெளியிட்ட அத்தனை ஆணைகளும் ஆங்கிலத்தில் உள்ளன. குறிப்பாக அரசு ஊதியக் குழு நிலுவை ஆணை முழுமையும் ஆங்கிலத்தில் அமைந்துள்ளது. அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்களின் பணப் பயன் குறித்த ஆணை ஆங்கிலம் என்றால், ஆட்சிமொழி செயலாக்கத்தை நிறைவேற்றும் நிலையிலுள்ள அரசு அலுவலர்கள் எவ்வாறு தமிழைப் பயன்படுத்துவர்? அம்மாவின் ஆட்சிக் காலத்தில் வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளில் எழுதும்போது 5 அங்குலத்தில் தமிழிலும், 3 அங்குலத்தில் ஆங்கிலத்திலும், 2 அங்குலத்தில் பிற மொழிகளிலும் எழுதப்படல் வேண்டுமென்ற ஆணையை தமிழகத்தில் நிறைவேற்ற வேண்டி அவ்வப்போது வணிகப் பெருமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இன்றைக்கு சன் டி.வி. அலுவலகப் பெயர்ப் பலகை ஆங்கிலத்தில் பெரியதாகவும் தமிழில் சிறியதாகவும் எழுதி தமிழைப் பின்னுக்குத் தள்ளியுள்ளனர். சென்னையில் நூற்றுக்கு 5 விழுக்காடுகூட தமிழில் பெயர்ப் பலகை இல்லை. ஆனால், அயலகத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற அந்தக் கருத்தின்படி இந்த இரண்டு மாதத்திலே அப்படி ஆகிவிட்டதா? அல்லது ஐந்து ஆண்டுகாலத்திலே ஏற்பட்டதா என்பதை விளக்க வேண்டும். (குறுக்கீடு)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** முதலிலேயிருந்து அப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) முதலிலேயிருந்து என்பது நான் கடந்த ஆட்சியைச் சொல்லவில்லை. அதற்கு முன்னாலிருந்த வரலாற்றிலேயே அப்படித்தான் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்க காலத்திலேயிருந்து, கடந்த 2001-லேயிருந்து 2006 வரையில் நடைபெற்ற அந்த ஆட்சியில், 1982 ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை, அதாவது 5 அங்குல அகலத்திற்கு தமிழ் இருக்குமானால், 3 அங்குல அகலத்திலே ஆங்கிலம் இருக்க வேண்டும், 2 அங்குல அகலத்திலே எழுத்துகள் அமைந்ததாகப் பிற மொழி இருக்க வேண்டும் என்று சொன்ன ஆணையை ஐந்தாண்டு காலத்திலே நடைமுறைப்படுத்த முடியாமலே அந்த ஆட்சி இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** தி.மு.க. அமைச்சர் போக்குவரத்துத் துறை மானியத்திலே இரண்டு புதிய பேருந்துகள் பற்றிய அறிவிப்பில் Blue Line Bus, Yellow Line Bus என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் அறிவிப்பு ஆங்கிலத்தில் என்றால், இம்மண்ணின் மொழி தமிங்கலமா, தமிழா? அரசே இவ்வாறு அறிவிப்பு செய்யலாமா? ஊர்ப் பெயர்களை, அலுவலக முத்திரைகள், அச்சுப் படிவங்கள், விண்ணப்பங்கள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் அமைப்பதற்கு, தமிழ் வளர்ச்சித் துறையின் அனுமதி பெறல் வேண்டும். அவ்வாறு எனில், Blue Line Bus, Yellow Line Bus என்பதை தமிழ் வளர்ச்சித் துறை ஏற்று பரிந்துரைத்ததா? மாவட்டந்தோறும் தமிழ் அறிஞர்களைக் கொண்டு, தமிழ் வளர்ச்சிக் கழகம் உருவாக்கவேண்டும். தமிழ் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கவேண்டும்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கன்னிப்பேச்சுதான். அப்படிப் பதில் சொல்லமுடியாத அளவிற்கு இங்கு பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர், திருமதி பதர் சையீத் அவர்கள் வந்து ஆங்கிலத்திலே பேசுகிறார்களே, அவர்களுக்கு ஏதாவது சொல்வாரா இவர். (குறுக்கீடுகள்) ஆங்கிலத்திலே அவர் பேசுகிறாரே!

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இந்த மன்றத்திலே நீங்கள் அறிவித்ததைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** We will allow her to speak. (குறுக்கீடு) திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (சிரிப்பு), நீங்கள் எல்லாம் சிரிக்கிறீர்கள், வெறும் அந்த ஒரு வார்த்தை நான் சொன்னேன். பிறகு full –ஆக தமிழிலே பேசினால் என்ன செய்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. But, English–லே பேசுவதற்கு இந்த Assembly Rules–லே இடம் இருக்கிறது. நீங்கள் பேசவேண்டாமென்றால் நான் தாராளமாக தமிழில் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களை யாரும் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை.

**திருமதி பதர் சயீத்:** தாராளமாக தமிழிலேயே பேசுகிறேன். (சிரிப்பு) ஒரு problem–மும் இல்லை எனக்கு. பிரச்சினையே இல்லை. நான் தமிழிலேயே பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார்

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** தமிழ்ப் பண்பாடு ஆதிகால பழமையைச் சிறப்பு செய்கின்ற வகையில், தமிழ்நாட்டிலுள்ள கிராமக் கலைஞர்களுக்கு அரசு உதவி செய்யவேண்டும். கலைப் பண்பாட்டு இயக்கத்தை உருவாக்கவேண்டும். பள்ளிகளில் ஒரு வகுப்பைக் கிராமியக் கலைகள் பயிற்றுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை தவிர்க்கப்படவேண்டும். தமிழ் மொழியில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கவேண்டும். தமிழைச் செம்மொழியாக்கிவிட்டால் மட்டும் போதாது.

குஜராத்திலே மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் தாய் மொழியிலேயே, குஜராத்தி மொழியிலே கற்பிக்கப்படுகிறது. வங்காளத்திலே, சாந்தி நிகேதனில், இரவீந்திரநாத் தாகூர் பல்கலைக்கழகத்தில் வங்காள மொழி, பயிற்சி மொழியாகச் செயல்படுகிறது. இதைப்போல், தமிழ்நாட்டிலும் மருத்துவக் கல்லூரிகளில், நம் தாய்மொழியான தமிழில் கற்பிக்கப்படவேண்டும். தமிழ்நாட்டில் அரசு 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற நிலை உருவாகவேண்டும். நீதிமன்றங்களில் எல்லா நடவடிக்கைகளும் தமிழில் வரவேண்டும். அரசாணைகளில் இன்னும் ஆங்கில மோகம் இருக்கிறது.



எல்லா உத்தரவுகளும் தமிழில் பிறப்பிக்கப்பட வேண்டும். ஜெர்மன் நாட்டில் ஜெர்மனி மொழியில் படித்து விஞ்ஞானிகள் ஆகிறார்கள். சீனா, பிரெஞ்ச், ஜப்பான், ரஷ்யா மொழிகளில் ஆராய்ச்சி செய்து விஞ்ஞானிகளாக ஆகிறார்கள். அதேபோல், தமிழில் கற்று ஆராய்ச்சி செய்து விஞ்ஞானிகளை உருவாக்கவேண்டும்.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை. கடந்த 2003 ஆம் வருடம், முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தற்காலிக அரசுப் பணியாளர்களின் சம்பளம் 4,000 ரூபாய். இவர்களை நிரந்தரப்படுத்தவில்லை. அரசு ஊழியர்களின் காவலனாக உள்ளதாகக்கூறும் தி.மு.க. அரசு தொகுப்பூதிய ஆசிரியர்களை நிரந்தரப்படுத்தும்போது, குறைந்த சம்பளம் அவர்களுக்குப் போதாது என்று இரக்கம் மிகுந்த வார்த்தைகளை கூறிய தி.மு.க. அரசு, இந்த அரசுப் பணியாளர்களும் முழுமையான கல்வித் தகுதி கொண்டவர்கள் தானே. எனவே, இவர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பணியாளர் சீர்திருத்தம் தேவை. உயர்மட்ட அளவில் மூன்று ஆண்டுகளுக்குமேல் ஒரே இடத்தில் பணி புரிபவர்கள் மாற்றம் செய்யப்படவேண்டும். சில நகராட்சிகளில் பணியாளர்கள் மனம்ஒத்த மாறுதல் செய்யப்படும்போது, ஒரு வழி உத்தரவைப் பின்பற்றுகிறார்கள். இதில் மாற்றம் தேவை. அனைத்துத் துறைகளிலும் தவறு செய்யும் அரசு அலுவலர்கள்மீது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** உடனுக்குடன் முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பணியாளர்களின் சம்பள விகிதத்தில் சீர்திருத்தம் தேவை. அனைத்து வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒரே வகையான சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டும். கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்களில் அளிக்கப்படும் சம்பளத்திற்கு இணையாக வழங்கப்படவேண்டும். வீடு இல்லாத அரசுப் பணியாளர்களுக்கு எளிமையான முறையில் வீட்டுவசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

பொது நிர்வாகம் என்பது ஆட்சியை நடத்துபவர்களும், அதிகார வர்க்கமும் அரசு ஊழியர்களும் ஒருங்கிணைந்து நடத்தப்படுவதாகும். இரட்டை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியைப் ஓட்டிச் செல்லும்போது, வண்டியிலே பூட்டப்பட்டுள்ள மாடுகள் ஒரே நேர்கோட்டில் செல்லும்போது வண்டியும் தடம் மாறாமல் செல்லும். இரண்டு

மாடுகளும் வெவ்வேறு திசையில் ஓட ஆரம்பித்தால் வண்டி தடம் புரளும். அரசு நிர்வாகத்தினரும், ஆட்சியாளர்களும் ஒருவ்ரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்பட்டால்தான் ஓர் அரசு மக்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும்.

*(முற்பகல் 11-40)*

2001-ல், நீங்கள் ஆட்சியைவிட்டு இறங்கும்போது, அரசின் நிதிநிலைமை அதல பாதாளத்தில் இருந்ததை நீங்களும் அறிவீர்கள்; அரசு ஊழியர்களும் அறிவார்கள்; இந்த நாடும் அறியும். கஜானா காலி; களஞ்சியம் காலி; அன்றாடச் செலவிற்கே பணம் இல்லாத நிலையில், பாரத ஸ்டேட் வங்கி முதல், உலக வங்கி வரை, தமிழக அரசுக்குக் கடன் கொடுக்கமுடியாத சூழ்நிலையில், இவற்றையெல்லாம் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் தெரிந்துகொண்ட எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள், நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தினார். உடனே இன்றைய முதல்வர், அன்றைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். பொய்யை ஒருமுறை கூறினால், அதற்கு இறக்கை முளைத்து, உடனே அது ஊர் முழுவதும் பரவிவிடும். ஆனால், உண்மையை உரத்த குரலில் எத்தனை முறை கூறினாலும், அது அவ்வளவு எளிதில் சென்றடையாது.

அப்பாவி மக்களின் நிலைமை அப்படியிருந்தாலும், அன்றைய அரசின் நிதி நிலைமை குறித்து, வெள்ளை அறிக்கை ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று, இதே பேரவையில் சமர்ப்பித்தார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம், 13 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** அந்த வெள்ளை அறிக்கையில், உண்மை புட்டுப்புட்டு வைக்கப்பட்டது. தற்போதைய முதலமைச்சர், அன்றைக்கு, அந்த வெள்ளை அறிக்கைக்கு, எந்தவித மறுப்பு அறிக்கையும் தெரிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அரசு நிதி நிலைமை சீர்திருத்த நடவடிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்தார். வாக்களித்த மக்கள் நலமாக இருக்க, நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், முதலில் அரசு ஊழியர்கள் விஷயத்தில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஒரு வீட்டில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பது அந்த வீட்டுத் தலைவனுக்கும், தலைவிக்கும் தெரியும். அதற்கேற்ப, குடும்பச் செலவுகளை அதிகரித்தும், குறைத்தும் செய்வார்கள். அதுபோன்ற



நிலையில்தான், அன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள், சில நடவடிக்கைகளை எடுத்தபோது, எல்லாம் அறிந்த அரசு ஊழியர்கள அதை எதிர்த்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்போதும் சரி, இப்போதும் சரி; நீங்கள் தொடர்ந்து சொல்லி வருவது, 'அரசு ஊழியர்களை நாங்கள் பழி வாங்கிவிட்டோம்; வேலை நியமனத் தடைச் சட்டத்தை அமல்படுத்தி விட்டோம்' என்றுதான். ஆனால், அரசு கஜானா காலியாக இருந்தபோது, சில நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டார். தனது சிறந்த நிர்வாகத் திறனால், அன்றைக்கு நீங்கள் வைத்துவிட்டுப் போன கடன்களையெல்லாம் அடைத்து, அதே நேரத்தில், மக்கள் பயனடையும் திட்டங்களை நிறைவேற்றி, அரசின் நிதி நிலைமைகளைச் சரிசெய்ததற்குப் பின்னால், அரசு ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்; வேலை நியமனத் தடைச் சட்டத்தை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி வைத்து குற்றச்சாட்டுகளைப் படிக்கிறார். குற்றச்சாட்டுகளை எழுதி வைத்துப் படிக்கக்கூடாது. அப்படியே இருந்தாலும்கூட, அவர் படித்ததற்கு, படித்த காரணத்தால் பதில் சொல்கிறேன்; உரையாக பேசிக் கொண்டிருந்தால், நான் பதில் சொல்லாமல்கூட இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாறி, அ.தி.மு.க. ஆட்சி வந்தபோது வைக்கப்பட்ட கடன், கலைஞர் ஆட்சியிலே வைத்திருந்த கடன் 28 ஆயிரம் கோடி. இப்போது கலைஞர் மறுபடியும் ஆட்சிக்கு வருகிறபோது, அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலே வைக்கப்பட்டிருக்கிற கடன் 56 ஆயிரம் கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு, அரசாங்க ஆட்சி நிர்வாகத்திலே அப்படிக் கடன் ஏற்பட்டாலும்கூட, அதை இந்த அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 2001-லேயிருந்து, 2006 முடிய, அரசினுடைய கடன் கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தளவிற்கு, அரசாங்கத்தினுடைய asset, சொத்தினுடைய மதிப்பும் கூடியிருக்கிறது, ஒன்று. இரண்டாவதாக, 2001-ல், திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சி மாற்றப்பட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, ஏற்கெனவே வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், செய்து முடிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளின் ஒப்பந்ததாரர்களுக்கு, கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் என்றளவிற்கு கடன் பாக்கி, பற்று இருந்தது. அதை, நாங்கள் வந்துதான் சரி செய்தோம் என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், "800 கோடி ரூபாய் கடன் வைத்து விட்டார்கள்; அதையும் நாங்கள்தான் கொடுத்தோம்" என்று சொல்கிறார். அது, 28 ஆயிரம் கோடியோடு, 800 கோடியைச் சேர்த்துக் கொள்ளுங்கள். 29 ஆயிரம் கோடி என்று சொன்னால்கூட நான் ஒத்துக்கொள்கிறேன். இப்போது கடன் இருப்பது 56 ஆயிரம் கோடி ரூபாய். ஒருவேளை, 56 ஆயிரம் கோடியும் அரசாங்கச் சொத்தாக ஆகிவிட்டது என்றால், 28 ஆயிரம் கோடி ரூபாய் அரசாங்கச் சொத்தாக ஆன காரணத்தால்தான், 56 ஆயிரம் கோடி ரூபாய் அரசாங்கச் சொத்தாக ஆகமுடியும். அந்த 28 ஆயிரம் கோடியை, அரசுச் சொத்தாக ஆக்காமல், 56 ஆயிரம் கோடியை யாரும் அரசுச் சொத்தாக ஆக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இரண்டு நிமிடங்கள், இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, பேசப் பேச பிரச்சினைகளாக வருகின்றன. (குறுக்கீடு)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** வேலை நியமனத் தடைச் சட்டம் கொண்டு வந்தோம் என்று ஊர்தோறும் சொல்கிறீர்கள். இருக்கும் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலையை



ஏற்படுத்திவிட்டு, நீங்கள் அன்றைக்கு ஆட்சியை விட்டு இறங்கினீர்கள். இதில் எப்படிப் புதிதாக ஆட்களைச் சேர்த்திருக்கமுடியும் என்பதையும், எடுத்துவிட்டுச் சம்பளம் கொடுத்திருக்கமுடியும் என்பதையும் மனசாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தேவைப்படுகிற துறைகளிலே எல்லாம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. குறிப்பாக, காவல் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை ஆகிய துறைகளில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். கடந்த 5 ஆண்டுக் காலத்திலே, ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம், எந்தவொரு அரசியல் குறுக்கீடும் இல்லாமல், மிக நியாயமான முறையிலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். 62,608 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பொதுத் துறை...

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓரே ஒரு நிமிடத்தில் பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 194, அதில் சட்டமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள், சிறப்பு உரிமை, விதி விலக்குகள் போன்றவை கூறப்பட்டுள்ளன. மக்கள் உத்தரவைப் பெற்றவர்கள் இந்த சபையில் அமர முடியும். அரசு விழாக்கள் தொகுதியில் நடைபெறும்போது அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடப்பட்டு உரிய மரியாதை அளிக்க வேண்டும். அது, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்த அந்த மக்களுக்கு அளிக்கும் மரியாதையாக அமையும். இல்லாவிட்டால் அது மக்களை அவமரியாதை செய்வது போலாகும். இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகு சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை அவமதிக்கும் வகையில்தான் அவர்களுடைய பெயர் அழைப்பிதழில் இடம் பெறுகிறது. இது தொடர்பாக பிரச்சினை எழுப்புவதற்கு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நியாயமான கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினரை இந்த அவையில் அவமதிக்கக் கூடாது. ஆனால். சட்டமன்ற உறுப்பினர் அவையை அவமதிக்கலாமா? இந்த அவை நடைபெறுகிற முறையையே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவமதித்தால்,

அவமதிக்கிற முறையிலே நடந்தால், அந்தச் சட்டமன்ற உறுப்பினர் யாராக இருந்தாலும், அவையினுடைய மரியாதையைக் காப்பாற்ற, அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை, பேரவைத் தலைவருக்கு ஏற்படுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கேட்ட வேண்டுகோள் அரசு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது, அந்த நிகழ்ச்சிகளுக்கு முறைப்படி protocol இருக்கிறது. அதன்படி சட்டமன்ற உறுப்பினர் பெயர் இல்லாமல் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டினாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் அ.தி.மு.க. உட்பட அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்களை அரசு நிகழ்ச்சிகளிலே நாங்கள் போடுகிறோம். உதாரணத்திற்கு, பேசிக் கொண்டிருக்கின்ற விஜயகுமார் அவருடைய பெயரை 20 ஆம் தேதி அலமாதியிலே நடைபெற்ற 400 கிலோ வாட் துணை மின் நிலையத்தைத் திறக்கின்ற விழாவில் அவர் பெயரைப் போட்டிருந்தோம். அதிகாரிகள் அவரிடத்திலே அனுமதி கேட்டுத்தான் போட்டார்கள். இருந்தாலும் கடைசிவரையிலே வரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், 2001–2006 வரை (குறுக்கீடுகள்) திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மாவட்டத்திலே திருவள்ளூர் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகிய என் பெயரைப் போடாமலே பல நிகழ்ச்சிகள் சென்ற ஆட்சிக் காலத்திலே நடைபெற்றன. அதற்குப் பல்வேறு சான்றுகள் வேண்டுமானால், நாளை காலை கொண்டு வந்து கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, (குறுக்கீடுகள்) 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. இல்லை, இல்லை, இருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், (குறுக்கீடுகள்) இல்லை, முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிட்டேன். திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடுகள்) அவரால் பேசி முடிக்க முடியாது. அவருக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) முடிக்கத் தெரியவில்லை, பாவம். (குறுக்கீடுகள்) விஜயகுமாருக்கு முடிக்கத் தெரியவில்லை.

***திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி பண்பாடு, கைத்தறி, கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விஜயகுமார், ஒரே ஒரு sentence–ல் முடியுங்கள்.

**திரு. கே. எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தொகுதியில் 20 ஆம் தேதி நடைபெற்ற விழாவில் நான் பங்கேற்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். அந்த விழாவே என் தொகுதியில் நடைபெறுகிறது. ஆனால், என்னுடைய பெயர் கடைசி இடத்திலே போடப்பட்டுள்ளது. இதற்கு சம்பந்தமே இல்லாத திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெயர் முன்னாலேயும், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பெயர் இரண்டாவதாகவும், என் தொகுதியில் நடைபெறும் அந்த விழாவிற்கு என் பெயர் மூன்றாவது இடத்திலும் அரசு அச்சடித்த பத்திரிகையிலே இருப்பதுதான் நிதர்சனமான உண்மை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த உறுப்பினர் பெயரை முன்னாலும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் பெயர் இரண்டாவதாகவும் போடுகின்ற அவல நிலை இந்த அரசில்தான் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடு) இல்லை, நான் என்ன சொல்கிறேன் என்றால், அவர் ஆரம்பத்திலேயே பிரச்சினைக்கு வரவில்லை. உட்காருங்கள்.

**திரு. சபா இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் பெயரையாவது போடுகிறோம். கடந்த ஆட்சியிலே எங்கள் பெயரையெல்லாம் எந்த இடத்திலும் போட்டதில்லை. (குறுக்கீடு)

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு) என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கொறடா அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டது என்னவென்று சொன்னால், பெயரைப் போடுவதிலே---அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, எங்கள் பெயரையெல்லாம் அந்தக் காலத்திலே போடுவதில்லை, இப்போதுதான் நாங்கள் போடுகிறோம் என்று சொன்னார்கள்.— நாங்கள் கேட்க விரும்புவது, சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கும்போது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரின் பெயரை முதலிலே போடுவது, எந்த அடிப்படையிலே இருக்கிறது என்பதை மட்டும்தான் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினா திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

***திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பளித்த, சரித்திரப் புகழ்பெற்ற இந்தப் பேரவையின் பேரவைத் தலைவருக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் குறள் நெறிக்கேற்ப, என்றும் நிலைத்த புகழோடு, சட்டமன்ற வாலாற்றிலேயே இதுவரை யாரும்



படைக்காத சாதனையாக, 11 முறையும் தேர்தலில் நின்றபோதெல்லாம் வென்று, தன் வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி, எத்தகைய சோதனைகள், வேதனைகள் வந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கு நிகர் தானே என, உலகமெலாம் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராய், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை மக்களின் வாழ்வில் ஒளியேற்றி, இருளை நீக்கும் சூரியனாய், தமிழ்நாட்டில் ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்று, தமிழின் தந்தையாகவும், தமிழினத்தின் தலைவராகவும் வாழும் ஈடு இணையற்ற தமிழக முதல்வர் தலைவர் அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், கழகத்தின் பொருளாளர் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சென்னையின் சிங்காரம், வருங்காலத் தமிழகத்தின் கிழக்கு வானம், எழுச்சித் தலைவர், எழுஞாயிறு, தளபதி என்ற அடைமொழிகளால் எங்களால் சிறைப்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது தலைவர் கலைஞரின் நல்லாட்சியில் உள்ளாட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற எங்கள் இளம் தலைவரே, உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து, எனது வெற்றிக்குத் தோள் கொடுத்த, எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், இன்று பிறந்தநாள் காணும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பல முகங்கள் இணைந்து, ஒருமுகமாகச் செயல்பட்டு, மக்கள் விரோத அரசை மண்ணிலே புதைத்து, அதன்மூலம் கழக அரசைத் தந்து, எனது வெற்றிக்கு அரும்பாடுபட்டு உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு வாக்களித்து, இந்த மாமன்றத்தில் இடமளித்த நெல்லிக்குப்பம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்தநேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் என் தலை வணக்கம். என்னை ஈன்றெடுத்த பெற்றோர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மக்களால், மக்களுக்காக, மக்களின் அரசாக விளங்குகின்ற தலைவர் கலைஞர் அரசின் வளர்ச்சி மற்றும் நலப் பணிகளில், அரசுப்

பணியாளர்கள் முக்கியப் பங்காற்றுகிறார்கள். தலைவர் அவர்கள், அரசுப் பணியாளர்களை எப்பொழுதும் அரவணைத்துப் பாதுகாத்து வருகிறார்கள். எனவேதான், அரசு அதிகாரிகளும், அலுவலர்களும் தலைவர் கலைஞரின் பக்கமே இருக்கின்றார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியில், ஒரேநாளில் 1 இலட்சத்து, 75 ஆயிரம் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். அதைப்பற்றி நம் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையில் குரல் எழுப்பியபோது, நீங்கள் நமது மக்கட்தொகையில் ஐந்து சதவிகிதம் உள்ளவர்களுக்காகக் கவலைப்படுகிறீர்கள்; ஆதரிக்கிறீர்கள்" என்று எதிர்வாதம் வைத்தார்கள். ஆனால், 95 சதவிகிதப் பொதுமக்களுக்கு இந்த ஐந்து சதவிகித அரசு ஊழியர்கள் உழைத்தால்தான், அரசின் நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடையும் என்பதை மறந்து பேசினார்கள். உழைக்கும் அரசு ஊழியர்களின் இழந்த சலுகைகளைத் திரும்பக் கேட்டபோது, அரசின் அப்போதைய கடன் தொகை, ரூ.28 ஆயிரம் கோடி. ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற நாளில், புதிய வரிகள் விதிக்காத நிலையில், தமிழகத்தின் மொத்தக் கடன் தொகை ரூ.56 ஆயிரம் கோடி. அதாவது, ஒரு மடங்கு கடன் தொகை இருந்தபொழுது கேட்ட சலுகைகள் தரமுடியவில்லை. ஆனால், இரு மடங்கு கடன் தொகை இருக்கும்பொழுது கேட்ட சலுகைகள் தரமுடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குறைவான கடன் இருந்தபொழுது ஏன் முடியவில்லை. அதிகமான கடன் இருக்கும்பொழுது எப்படி முடிகிறது? அதுதான் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு ஊழியர்களோடு வைத்துள்ள அதிக அக்கறை ஆகும். அப்படி அக்கறையோடு செயல்பட்டதால்தான் எத்துறையின் சாதனைகளும் அக்கரைக்குப் போகும், இல்லாவிட்டால், அது இந்தக் கரையிலே நின்றுவிடும்.

முற்பகல் 11–55

அரசு ஊழியர்களை கடந்த அரசு எவ்வாறு கொடுமை செய்தது? நள்ளிரவு கைது விரும்பிகள் அவர்களை கைது செய்ய அவர்களின் வீடுகளில் இரவில் அத்துமீறி நுழைந்து, குடும்ப உறுப்பினர்களையும் பார்க்கவிடாமல், புழல் சிறையிலே அடைத்து, சில நாட்களுக்கு அந்தச் சிறையை புயல் சிறை ஆக்கினார்கள். இப்படி சிறைப்படுத்தப்பட்டவர்களின்மீது இன்னமும் கரித்துக் கொட்டுகிறார்கள். கடந்த தேர்தலில் 20, 30 வாக்குகள்வரை ஒவ்வொரு பூத்திலும் அரசு ஊழியர்கள் தி.மு.க.விற்கு சாதகமாக வாக்களித்தார்கள் என்று, முன்னாள் முதல்வர் இந்த மாமன்றத்தில் புகார் செய்தார்.



நஞ்சு விதைக்கும் அம்மாவிடம் பிஞ்சுக் குழந்தைகள் கொஞ்சவா செய்யும்! பார்த்ததும் பதற்றத்தோடு எட்ட எட்ட அல்லவா ஒதுங்கி எங்கேயோ போய் பதுங்கிக்கொள்ளும்! அப்படித்தான் இந்த அரசு ஊழியர்களும், அதாவது முன்னாள் முதலமைச்சரைக் கண்டு ஓடி ஒளிந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் வந்த வீழ்ச்சிதான் இங்கு இந்த எதிர் வரிசைகளின் காட்சி. அரசை நடத்தும் அரசு ஊழியர்களுக்கு, முந்தைய ஆட்சியில் பல கேடுகள் விளைவிக்கப்பட்டன. அவை இந்த ஆட்சியில், இப்பொழுது களையப்பட்டுள்ளன. அரசு ஊழியர்களின் அட்சயப் பாத்திரமாம், தலைவர் கலைஞர் அவர்களின் காருண்யப் பட்டியல்களின் வரிசைப் பட்டியல் இதோ!

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்பொழுது ஒப்படை செய்து பணம் பெறும் 240 நாட்கள் ஈட்டிய விடுப்பில், 180 நாட்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் அனுமதிக்கப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகள், எஞ்சிய 60 நாட்களுக்கும் அனுமதிக்கத்தக்க வகையிலே 1997–1998–ல் ஓர் அரசாணை.

கடந்த கால ஆட்சியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியம், இன்னும் விடுப்பாக அறிவிக்கப்பட்டிருந்த நாட்களில் பணிக்காலமாக முறைப்படுத்தி ஆணை வெளியிட்டு, அவர்களை நிம்மதியாக வாழ வைத்தது கழக அரசுதான்.

வீடுகட்டும் கடன் ரூபாய் 4 இலட்சம் என்பது ரூபாய் 6 இலட்சமாக 2001–ல் உயர்த்தப்பட்டதும், இந்தக் கழக அரசுதான். இப்படி, இழந்த சலுகைகளை மீண்டும் பெற்றுள்ள அரசு ஊழியர்கள், கடந்த ஆட்சியில் தங்களை மிகவும் பாதித்த சில கோரிக்கைகளை மீண்டும் தலைவரிடம் வைத்துள்ளார்கள். அவை, 2003 ஜூலை 2–ல் நடந்த போராட்டத்தில் அரசு ஊழியர்கள் கலந்துகொண்டதற்காக, அவர்களை அச்சுறுத்தும் வகையில், தலைமைச் செயலக ஊழியர்கள் மாறுதலின்றி தலைமைச் செயலகத்தில் தொடர்ந்து பணியாற்றும் வகையிலுள்ள விதிகளை மாற்றம் செய்து, எந்த நேரத்திலும் செயலகத்திலிருந்து அவர்களை மாற்றம் செய்யலாம் என்று ஆணைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆணையை இரத்து செய்து, தலைமைச் செயலக ஊழியர்களின் தலையாய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று, அவர்கள் கழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

[திரு. சபா. இராஜேந்திரன்] [2006 ஆகஸ்ட் 25

முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டுகள் போதுமென்றும், இறுதியாகப் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியங்களைக் கணக்கிடவும், தலைவர் கலைஞர் அவர்களின் இன்றைய அரசு ஆணை பிறப்பித்து, அந்த ஆணை 31-7-2006 முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்துள்ளது. உள்ளபடியே அரசு ஊழியர்களை மகிழ்வித்தாலும், அதே சமயம் கடந்த அரசு ஊழியர் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைவாசம், பணி நீக்கம் உள்ளிட்ட துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் பணியிலிருந்து ஓய்வுபெற்றவர்கள் மேற்படி ஓய்வூதியப் பலன்களைப் பெறும் வாய்ப்பை இழந்து நிற்கிறார்கள் என்றும், அவர்களுக்கும் இந்த பலன் கிடைக்க 13-9-2003 முதல் இந்த ஆணையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், அரசுக்கு இவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இக்கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த பணக்கொடையை இரண்டு மடங்காக வரும் ஆகஸ்ட் 1 முதல் உயர்த்திக் கொடுக்க தலைவர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். தமிழக முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு, ஏற்கெனவே 2002-2003 ஆம் ஆண்டு வரை உயர் கல்விகளில் இவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு இட ஒதுக்கீட்டைத் திரும்பவும் தொடர மைய அரசுக்கு, மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது.

உயர் கல்வி பயிலும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்லூரிகளில் கட்டணச் சலுகை எதுவும் தற்போது இல்லை. எல்லா உடைமைகளையும் இழந்துவிட்டு, நமது ஆதரவை மட்டுமே நம்பி இங்கே தஞ்சம் அடைந்திருக்கும் அந்த இலங்கைத் தமிழ் மக்களின் ஏழ்மை நிலைமையைக் கருத்தில்கொண்டு, அரசு கல்லூரிகளிலும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து முற்றாக விலக்களித்து. உத்தரவிட வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள ஊர்க்காவல் படையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.30 மட்டுமே வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மாதத்தில் 4 முறை மட்டுமே வேலை வழங்கப்படுகிறது. எனவே, மாதம் 12 முதல் 150 ரூபாய் வரை மட்டுமே வருமானம் ஈட்டக்கூடிய நிலையில்



2006 ஆகஸ்ட் 25] [திரு. சபா. இராஜேந்திரன்]

உள்ளார்கள். இவர்களுக்கு உயர் ஊதியம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தாய்மொழியாம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு என்று ஒரு தனி அமைச்சகம் அமைத்து, 1996-1997-ல் ஆந்திர மாநிலம், குப்பம் பகுதியில் அமைந்த திராவிட பல்கலைக்கழகத்திற்கு ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, பின்னர் தலைவர் கலைஞர் அவர்களின் இடைவிடாத முயற்சியால் மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்கள் பாரதப் பிரதமராக பொறுப்பேற்றுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசில், அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், நம் அன்னைத் தமிழ் செம்மொழி என்ற தகுதியோடு உலா வர ஆரம்பித்துள்ளது.

வடக்கு வாழும். தெற்கு தேயும் என்பார்களே அதை மெய்ப்பிக்கும்வகையில் சமஸ்கிருதம் வாழ்ந்து, தமிழ் தேய்ந்து போனால் பரவாயில்லை என்று தலைப்பாகை கட்டிக் கொண்டவர்களுக்கு முன்னால், தமிழை ஒரு உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க ஆவன செய்த கலைஞர் அவர்களை, தரணி இருக்கும் வரை இந்தத் தமிழ்கூறும் நல்லுலகம், பாராட்டும். (மேசையைத் தட்டும் ஒலி )

பட்டு வளர்ச்சித் துறை மூலம் புழு வளர்ப்பு மனை கட்டவும், நவீன புழு வளர்ப்பு தளவாடங்களைக் கொள்முதல் செய்யவும், தரமான கிருமிநாசினிகளை விநியோகிக்கவும் இந்த அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

என்னைத் தேர்ந்தெடுத்த நெல்லிக்குப்பம் தொகுதி மேம்பாட்டுக்கு என்று சில கோரிக்கைகளையும் எனது இந்தக் கன்னிப் பேச்சிலே இந்த அவையிலே வைக்க விரும்புகின்றேன். அந்தக் கோரிக்கைகள் விரைவில் கனிந்து வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

நெல்லிக்குப்பத்தில் அனைத்து வசதிகளோடு, ஒரு புதிய பேருந்து நிலையம் வரவேண்டுமென்பது, அங்குள்ளவர்களின் நீண்டகால ஆசை. கடந்த ஆட்சியில் இந்தக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது. தற்போது மக்கள் நலன் காக்கும் அரசு இங்கே கோலோச்சுகிறது. எனவே, கழக அரசிடம் மக்கள் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள் கனிவோடு இக்கோரிக்கையை பரிசீலித்து, அனைத்து வசதிகளோடு, ஒரு புதிய பேருந்து நிலையம், தோற்றுவிக்கப்படும் என்ற நல்லறிவிப்பை, இந்த மாமன்றத்திலே அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பிற்காக

அவர்களுக்கு என் தொகுதி மக்களின என் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் தொகுதிக்குட்பட்ட மலட்டாறு பிரச்சினை என்பது, தொகுதி மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையாகும். இந்தப் பகுதியிலுள்ள 60 கிராம மக்களும், ஒரு இலட்சம் விவசாய நிலங்களும் பயன்பெறும் வண்ணம் மலட்டாறில் நீர் கொண்டுவருவதற்கான திட்டத்தை, பொதுப் பணித் துறையும், வனத் துறையும் சேர்ந்து நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லிக்குப்பம் நகரத்தை புதுவை மாநிலத்தோடு இணைக்கும் வான்பாக்கம் மேம்பாலம் ஒன்றை அமைத்துக் கொடுத்தால், நெல்லிக்குப்பமானது தொழில் மற்றும் வணிக வளர்ச்சி காணும் நகரமாக பரிணமிக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

முந்திரி சாகுபடியாளர்கள் உள்ள என் தொகுதி மக்கள் மேம்படும்வகையில், கடலூர் மாவட்டத்தில் முந்திரி ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தலைவரின் இந்த தலையாய அறிவிப்பிற்கு நான் தலை வணங்குகின்றேன். இப்படி தலைவணங்குகின்ற இந்த சமயத்தில், முந்திரிக்கொட்டை விலையை நிர்ணயித்து, வியாபாரத்தை தாறுமாறாக்கும் சில வியாபாரிகளால், வியாபாரிகள் பலர் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, 80 கிலோ கொண்ட முந்திரி மூட்டை ஒன்றிற்கு ரூ. 5 ஆயிரம் என குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்ய பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** ஒரே நிமிடம், ஒரே நிமிடம். நெல்லிக்குப்பம் தொகுதிக்குட்பட்ட, புதுப்பேட்டை, நடுவீரப்பட்டு, சி.என். பாளையம், பாலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு இலவச மின்சாரம் மற்றும் சிட்டா நூலுக்கு வரி விலக்கு வழங்கிய, நெய்யும் தொழிலுக்கு மானங்காத்த, தலைவர் அவர்களை இந்த நேரத்தில் வாஞ்சையோடு நினைத்துப் பார்க்கிறேன்.



எனது தொகுதிக்குட்பட்ட நடுவீரபபட்டு பகுதியிலே, அமைந்துள்ள புறக் காவல் நிலையத்தை, நிரந்தர காவல் நிலையமாக, மாற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால், தொகுதி சம்பந்தமான எனது கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உரிய அமைச்சர்களுக்கும் அளித்துள்ளேன். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பினை அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன்.

பிற்பகல் 12-05

**திரு. ம. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் சம்பந்தப்பட்ட துறைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே அரசுப் பணியாளர்கள் நடத்தப்பட்ட விதம், அவர்கள் நடந்துகொண்டவிதம், நான் இங்கே சொல்லி மக்களுக்கும், இந்த அவைக்கும் தெரியத் தேவையில்லை. ஏற்கெனவே இந்தத் துறையினுடைய நிலைகள் பல்வேறு சூழல்களுக்குப் பின்னால் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்திருக்கிறது. அப்படி வந்திருக்கின்றபொழுது, பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத் துறை என்பது இடையிலே உருவாக்கப்பட்டிருந்தாலும், இந்தத் துறையின் கட்டுப்பாட்டிலேதான் தேர்வாணையத் துறையும் வருகிறது. இந்தத் தேர்வாணையத் துறையின்மூலம்தான் reservations சரி செய்யப்படுகிறது அல்லது நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படி நிர்ணயம் செய்யப்படுகின்றபொழுது, அரசுப் பணியாளர்களுடைய நிலைகள், O.C., B.C., M.B.C., S.C., S.T., ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இந்தத் தேர்வாணையம் சரியாக வழங்குகிறதா, பகிர்ந்தளிக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு தேர்வாணையக் குழு உறுப்பினர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி நியமிக்கப்படுகின்றபொழுது, அந்தக் குழுவிலே இருப்பவர்கள் அரசு நிர்ணயித்திருக்கின்ற percentage

அடிப்படையில் அந்தத் தேர்வாணையக் குழு உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்று எண்ணிப்பார்த்தால், இல்லை.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்தியிலே U.P.S.C. என்று சொல்கிறோம். தமிழகத்திலே T.N.P.S.C. என்று சொல்லுகிறோம். பல தேர்வு மையங்களை வைத்திருக்கிறோம். அதிலே உறுப்பினர்களாக வரக்கூடியவர்கள் விகிதாச்சார அடிப்படையிலே, S.C.,S.T.–க்கு 18 plus 1, 19 percentage வழங்குவதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது. அந்த வழிவகை சரிதானா என்று கண்காணிக்கின்ற அந்தக் குழுவிலே மூன்று தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கவேண்டும். ஆனால், ஒருவர்தான் இருக்கிறார். அந்த ஒருவரை வைத்துக்கொண்டு, இந்த சதவிகித விழுக்காடுகள் நிரப்பப்படுகின்றனவா என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அப்படியே ஏற்றுக்கொண்டாலும்கூட, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 5 ஆண்டு காலமாக தமிழகத்திலே T.N.P.S.C. தேர்வு என்பது நடைபெறவில்லை. அப்படி நடைபெற்றிருந்தால் அது நிரப்பப்பட்டிருக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களிலே 'A' பிரிவிலே, D.R.O., R.D.O. போன்ற பணிகளுக்கு, தமிழகத்திலே 1,398 பேர்கள் இருந்திருக்க வேண்டும், S.C.–இலே. 78 பேர்கள் இருக்கவேண்டும், S.T.–இலே. ஆனால், இன்றைக்கு நிலை என்ன? 566 பேர்கள் S.C.–இலேயும், 22 பேர் S.T.–இலேயும் இருக்கிறார்கள். முதல் நிலை 'A' Grade Officer பதவிகளிலே 832 பேர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடங்கள் vacant–ஆக வைக்கப்பட்டிருக்கின்றன. 'B' பிரிவிலே, 19,088 பேர்கள் பணியிலே இருக்கவேண்டும். ஆனால், பணியிலே இருப்பவர்கள் 15,099; vacant ஆக இருப்பவை 3,989. அதாவது, 'B' பிரிவு என்பது, Tahsildar, B.D.O., Municipal Commissioner போன்ற பதவிகளிலே தாழ்த்தப்பட்டவர்களுடைய காலியிடங்கள். 'C' பிரிவு, Clerk போன்ற பதவிகளுக்கு 73,000 பேர்கள் S.C.–யிலேயும், 4,056 பேர்கள் S.T.–யிலேயும் இருக்கவேண்டும். ஆனால், S.C.–யிலே 65,662 பேர்களும்; S.T.–யிலே 1,120 பேர்களும் இருக்கிறார்கள். vacant 7,338 பேர். 'D' பிரிவு என்று வருகின்றபொழுது, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்குக் காரணம், சமூக நீதி என்று பேசுகிறோம். அந்த சமூக நீதி இந்த மண்ணிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்திருக்கிறதா இந்த ஆணையத்தின்மூலம் என்று பார்த்தால், அதை உங்கள் முடிவுக்கே நான் விட்டுவிடுகிறேன்.



பிற்பகல் 12–10

'D' பிரிவு. அலுவலகத்திலே தண்ணீர் மொண்டு கொடுக்க, பெஞ்ச் துடைக்க, பெருக்குவதற்கு, கூட்டுவதற்கு, Tea வாங்கிக் கொடுப்பதற்கு, மதிய நேரத்திலே Tiffin வாங்கிக் கொடுக்கின்ற பதவிகளுக்கு மட்டும், தமிழகத்திலே 'D' பிரிவிலே தாழ்த்தப்பட்டவர்கள் 21,545 பேர் இருக்க வேண்டும். ST–லே 1997 பேர் இருக்க வேண்டும். ஆனால், அந்தப் பணியிலே இருப்பவர்களின் எண்ணிக்கை 26,531 என்று சொன்னால், இதிலே 4,867 பேர் கூடுதலாகவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், தாழ்த்தப்பட்டவன் இந்த மண்ணிலே பெருக்குவதற்கும், கூட்டுவதற்கும், Tea வாங்கிக் கொடுப்பதற்கும், துடைப்பதற்கும்தான் தகுதி படைத்தவன் என்பதை இந்தத் தேர்வாணையங்கள் நிர்ணயித்திருக்கிறதா? ஆகவேதான், இதை நான் சொல்கிறேன். ஏற்கெனவே நான் சொன்னதுபோன்று, தேர்வாணையத்திலே நியமிக்கவேண்டிய 18....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், நீங்கள் ஒரு Senior Member, Group 'D' என்கிற பிரிவு, it is not coming under the purview of TNPSC.

**திரு. ம. போளூர் வரதன்:** மன்னிக்க வேண்டும். இந்தத் துறை என்பது அரசுப் பணியாளர்கள், அரசிலே அவர்களும் சம்பளம் பெறுகிறார்கள் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி சொல்லவில்லை, TNPSC–க்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ம. போளூர் வரதன்:** 'D' பிரிவு, TNPSC–க்குள் வராது என்று எனக்கும் தெரியும் சார். பியூன் வேலையைப் போய் TNPSC select பண்ணாது. அது எனக்குத் தெரியும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி, அவர்களுக்கும் போய் சேருகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குச் செல்லவேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன். அது எனக்கும் தெரியும். அப்படி பேரவைத் துணைத் தலைவர் சொல்வது உண்மையானால், 'A' Grade என்ன ஆனது அப்பொழுது? TNPSC–லே 'A' Grade–லே இருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்கிறீர்கள் இப்பொழுது? இது right என்றால் நான் வாபஸ் வாங்குகிறேன் பேசியதை. அப்பொழுது 'A' Grade–லே, R.D.O., D.R.O.–லே 832 பேர் vacant இருக்கிறதே, அதற்கு என்ன சொல்கிறது இந்த TNPSC. சொல்லுங்கள். இல்லை, 'B' Grade–லே சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Recruitment இல்லை என்று அர்த்தம்.

**திரு. ம. போளூர் வரதன்:** இல்லை, recruitment ஏன் இல்லை? தாழ்த்தப்பட்டவனுக்கு மட்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுவாகவே இல்லை.

**திரு. ம. போளூர் வரதன்:** பொதுவாகவே இல்லை என்றால் இது என்ன நியாயம்? எங்கே உங்கள் சமூக நீதி? சமூக நீதியைப் பற்றி அரசியல் கட்சிகள் பேசுகிறீர்கள். எங்கே உங்கள் சமூக நீதி? யாருக்குக் கிடைத்திருக்கிறது? அந்தத் தாழ்த்தப்பட்டவனுக்கு ஏன் கிடைக்கவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலங்களில் எப்படி இருந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைக்கு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஐந்தாவது முறையாக வந்ததற்குப் பின்னாலே, இன்றைக்கு தலைமைச் செயலகத்திலே S.C., S.T. இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் 9 பேர் இன்றைக்கு துறைகளினுடைய செயலாளர்களாக வந்திருக்கிறார்கள். ஆகவே, கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, அந்தத் துறையிலே இருக்கின்ற சீர்கேடுகளைப்பற்றி சம்பந்தப்பட்ட நிர்வாக சீர்திருத்தத் துறைச் செயலாளரிடம் போய் கேட்டால், அவர் சொல்கிறார், இது எனக்கு சம்பந்தப்பட்டது இல்லை, நீங்கள் போய் பணியாளர் துறையைப் பாருங்கள் என்று சொல்கிறார். அந்த Secretary-யிடம் போய் கேட்டால், அவர் சொல்கிறார், Department Secretary–ஐப் போய் பாருங்கள் என்று சொல்கிறார். Department Secretary–இடம் போய், இந்தக் குறையைக் கேட்டால், அவர் என்ன சொல்கிறார், எங்களுக்கு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையிடமிருந்தோ அல்லது தலைமைச் செயலாளரிடமிருந்தோ எந்த உத்தரவும் வரவில்லை. இது என்னுடைய பொறுப்புக்கு அப்பாற்பட்டது என்று தட்டிக்கழிக்கிறார். இந்த நிலை இருக்குமானால் மக்களுக்கு எங்கே சமூக நீதி கிடைக்கப்போகிறது? அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். யார் மீதும் நான் குறை சொல்லவில்லை. அதிகாரிகள் செய்கின்ற தவறுகள் ஆட்சியாளர்களை பாதிக்கிறது.



அதுமட்டுமல்ல, மாதா மாதம் தலைமைச் செயலாளர் தலைமையிலே இப்படிப்பட்ட reservations எல்லாம் சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க தலைவர் கலைஞர் அவர்கள் 9-4-1997-லே ஓர் உத்தரவை, அரசாணை 65-ஐ பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவின்படி, மாதத்திற்கொருமுறை தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறை செயலாளர்களை அழைத்து, இந்த reservation சரியாக செயல்படுத்தப்படுகிறதா? அதில் ஏற்படுகின்ற குறைபாடுகள் என்ன? அதைப் போக்குவதற்கு வழிமுறைகள் என்ன என்பதை ஆய்ந்து அரசுக்கு அறிக்கை தரவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், இதுநாள்வரையில் தலைமைச் செயலாளர் கூட்டுகின்ற அந்தக் கூட்டத்திலே இதுபற்றி பேசியிருக்கிறார்களா என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அப்படிப் பேசியிருந்தால் இவ்வளவு பிரச்சினைகள் இங்கே எழுந்திருக்காது, எழும்பவும் வாய்ப்பு இல்லை. அதுமட்டுமல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் வரதன் அவர்கள் சொல்லுகின்றார்கள். தலைமைச் செயலாளராக என் காலத்திலே சென்ற முறை இருந்தவரே நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நம்முடைய' என்றால் நம்முடைய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த முத்துசாமிதான் தலைமைச் செயலாளராகவே இருந்தார் என்பதையும், சென்னை மாநகரத்தினுடைய கமிஷனராக இருந்தவர் காளிமுத்து என்பதையும், அவரும் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் என்பதையும், இப்படி முக்கியமான key post–களில் எல்லாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள் என்பதையும், D.G.P.–ஆக துரை அவர்கள் இருந்தார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

**திரு. ம. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லிய அத்தனையும் உண்மை, அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வது,

ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் Chief Secretary–ஆக இருக்கின்றபோது, அந்த மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, இப்படி உத்தரவைத் தாருங்கள் என்று கேட்டபோது, மனமுவந்து பெருந்தன்மையோடு அந்த உத்தரவை நீங்கள் இட்டிருக்கிறீர்கள். அந்த உத்தரவு, 9-4-1997-லே இடப்பட்ட உத்தரவு. அதன் அடிப்படையிலே இதுவரையில் எத்தனை கூட்டங்களைக்கூட்டி அரசுத் துறைச் செயலாளர்கள் இதை ஆய்வு செய்து, தலைமைச் செயலாளரிடத்திலே கொடுத்து, அது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. கடந்த காலத்திலே விட்டுவிட்டார்கள் என்பதற்காக இந்தக் காலத்திலேயும் விட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவிலே உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) வரதன், விரைவிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** 6 நிமிடங்கள்தான் ஆகியிருக்கிறது. மற்றவர்களுக்கு 25 நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அதுபோல் எனக்கும் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. யாருக்கும் 25 நிமிடங்கள் கொடுக்கவில்லை.

**திரு. ம. போளூர் வரதன்:** நான் 6 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு) அதுமட்டுமல்ல, இன்றைக்கு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை என்பது, அந்தத் துறையிலே உள்ள சில குறைகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்று சொல்வதற்குக் காரணமே, எதிர்காலத்திலே ஒரு நல்ல அரசுக்கு இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் நான் சொல்கிறேன். 20 ஆண்டு காலத்திற்கு முன்பு சில துறைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் உயர் அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக உள் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, தொழில் துறை ஆகிய நன்மை செய்யக்கூடிய துறைகளிலே 20 ஆண்டுகளுக்கு முன்னாலே S.C. அதிகாரிகள், உயர் அதிகாரிகளாக இருந்திருக்கிறார்கள். அந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஒருவர்கூடவா தகுதியானவர்கள் இப்போது இல்லை, அந்தத் துறைகளுக்குச் செல்வதற்கு. அதுமட்டுமல்ல, நேற்றையதினம்கூட, ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே இங்கே பேசிய உறுப்பினர்கள் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஒன்றை நான் மாண்புமிகு முதல்வர்



அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம், அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஒரு பெருந்தன்மையான காரணம். எங்கள் சகோதரியை தன்னுடைய மருமகளாக ஏற்றுக்கொண்டு, இந்தச் சமுதாயத்திற்கு இன்றைக்கு அரணாக விளங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு அம்பேத்கர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இதைச் சொல்லுகிறேன். நிதித் துறை இந்தக் கோட்டையிலே இருக்கிறது. இந்தக் கோட்டையிலே இருக்கின்ற தலைமைச் செயலாளரிடத்திலே இருக்கின்ற நிதித் துறையிலே ஒரு உறுப்பினர்கூட, ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிஸர்கூட, ஒரு தாழ்த்தப்பட்டவன் உள்ளே செல்ல முடியாத ஒரு நிலை. இதுவரையில் யாரேனும் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையே. நீதித் துறையிலே வந்திருக்கிறார்களா? இல்லையே. என்ன காரணம்? தகுதி என்பது ஜாதியால் அல்ல, திறமை. திறமை படைத்த அனைவரும் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ்.–ஆக வருகிறார்கள். திறமையை ஒப்புக்கொண்ட பின்னர்தான் மத்தியத் தேர்வாணையம் அவர்களை அங்கீகரிக்கிறது. அப்படி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவன் இந்த நிதித் துறையில் காலடி வைத்தாலே, தாழ்த்தப்பட்டவன் காலடி வைத்தாலே...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நீதித் துறையிலே வந்தார்களா என்று கேட்டார்கள். தமிழ்நாட்டு சரித்திரத்திலே நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, தி.மு.க. ஆட்சியில், நான் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் வரதராசன் என்பவர் நீதித் துறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) மிகப்பெரும் பொறுப்பிலே அமர்த்தப்பட்டு, அவர் சுப்ரீம் கோர்ட் வரையிலே சென்றார் என்பது சரித்திரம்.

**திரு. ம. போளூர் வரதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிடுவது, Judicial side–ல் அல்ல. Law Department side-ல் Law Secretary-ஆக அந்தத் துறையிலே தாழ்த்தப்பட்டவன் காலடி வைத்திருக்கின்றானா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏன்? எங்களுக்குத் தகுதி இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மன்னிக்கவேண்டும். Law படித்தவர்தான் நீதிபதி ஆக முடியும்.

**திரு. ம. போளூர் வரதன்:** உங்கள் காலத்திலே நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, இறுதியிலே நான் பேசி முடிக்கின்றபோது ஒரு வாசகத்தைச் சொல்லி முடிக்கவேண்டுமென்று எண்ணினேன். ஆனால், எனக்குக் கொடுக்கின்ற நேரத்திலே கடைசி இரண்டு நிமிடங்கள் முதலமைச்சரைப் பற்றி சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டு, அதற்கு பதிலை பின்னால் சொல்கிறேன்.

இன்றைக்குப் பல துறைகள் இருக்கின்றன. துறைகள் வாரியாக நாம் ஒரு நிலைப்பாட்டை எடுக்கின்றபோது, முதலில் கோயில். கோயில் என்று வருகின்றபோது, நான் சின்னப் பிள்ளையாக இருந்தபோது தெருவிலே நடக்க முடியாது. செருப்பு போட்டுக்கொண்டு போக முடியாது. மற்ற குழந்தைகளோடு bench–ல் உட்கார்ந்து பாடம் கறறுக்கொள்ள முடியாது. மற்ற குழந்தைகளெல்லாம் முன்னால் இருப்பார்கள். பினனால் மணல் கொட்டியிருப்பார்கள். அந்த மண்ணிலே அமர்ந்து கல்வி கற்றவன். எங்கள நிலைமைகளை இன்றைய முதல்வர் அவர்கள் நன்கு அறிந்தவர், உணர்ந்தவர். ஏனென்றால், அவருக்கும் அந்தக் காலத்தில் அதுதான் நிலை. அப்படிப் படித்து இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே வந்து இன்றைக்கு உரிமைக்குக் குரல் கொடுக்கின்றேன் என்று சொன்னால், கலைஞர் போன்றவர்கள் பேசிய பேச்சாற்றல், அவர் எழுதிய எழுத்தாற்றல். 20, 21 ஆம் நூற்றாண்டுகளிலே நான் படித்திருக்கிறேன். M.A., B.L. பட்டம் பெற்றிருக்கிறேன். சென்னையிலே படித்தவன். எனக்கும் தெரியும். ஆனால், எல்லாத் தலைவர்களோடும் பழகியிருக்கிறேன்.

நான் மாணவர் பருவத்திலே B.A. படித்துக் கொண்டிருந்தபோது, சென்னை மாவட்ட மாணவர் சங்கத் தலைவராக இருந்தபோது, எம்.சி. ராஜா ஹாஸ்டலில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அன்றைய அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் முயன்றார்கள், முடியவில்லை. இறுதியிலே அருமைத் தலைவர் காமராசர் அவர்கள் என்னை அழைத்து, 'நான் முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன், போய் பார்' என்று சொன்னார்கள். நாங்கள் சற்றுத் தயங்கி, முதல்வர் இல்லத்திற்குச் சென்றபோது, என்னுடைய அருமை நண்பர், இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் கல்லூரி மாணவர். அவர் வீட்டு வாசலில்



10 பேர் முதலமைச்சரைப் பார்ப்பதற்கு நின்றுகொண்டு இருந்தோம். அனைத்துக் கல்லூரி மாணவர்கள், சங்கத் தலைவர்கள், நாங்கள் போகின்றபோது, இவர் இப்படியெல்லாம் நடந்துகொள்கின்றாரே, நம்மை எப்படி நடத்துவார் என்ற அச்சத்தோடு சென்றோம். அங்கு உள்ளே சென்றவுடன், சிரித்த முகத்தோடு எங்களை வரவேற்றார். 'இங்கே 6,7 பேர்தான் உட்காருகின்ற அளவுக்கு இடம் இருக்கிறது. நான் நின்றுகொண்டே பேசுகிறேன்' என்று சொன்னார். நாங்கள் சொன்னோம், அய்யா நீங்கள் உட்காருங்கள், நாங்கள் நிற்கிறோம், பரவாயில்லை என்று சொன்னோம். அப்பொழுது அவர் சொன்னார்கள். 'நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற 19 கோரிக்கைகளில், 18 கோரிக்கைகளை இன்றே, இதே இடத்திலேயே ஏற்றுக்கொள்கிறேன், உத்தரவிடுகிறேன்' என்று படிக்காமலேயே சொன்னார்கள். இது என்ன ஆச்சரியமாக இருக்கிறதே, நாம் சொன்னதை இவர் படிக்கவில்லையே. திடீரென்று உத்தரவு என்றாரே. நாங்கள் நம்பவில்லை. சிரித்துக்கொண்டே சொன்னார்கள், 'தலைவர் காமராசர் அவர்களிடத்திலே இருந்து அந்த மனு என்னிடத்தில் வந்திருக்கிறது. நான் படித்துவிட்டேன். ஒன்றை மட்டும் என்னால் செய்ய முடியாது, அவரிடம் போய் சொல்லுங்கள். அவர் நினைத்தால் செய்ய முடியும்' என்று சொன்னார். என்ன என்று கேட்டோம். Scholarship–ஐ உயர்த்தித் தாருங்கள் என்று சொன்னார். நாங்கள் அருமைத் தலைவர் காமராசரைச் சந்தித்து இந்த உண்மையைச் சொன்னவுடன், சிரித்துக்கொண்டே சொன்னார்கள், 'அவர் இந்தச் சமுதாயத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டவர், அந்தச் சமுதாயத்தோடு நெருங்கி வாழ்ந்தவர், நான் படிக்காதவன். அவர் படிக்காதவர்தான். இருந்தாலும், மக்களுடைய உள்ளங்களை, இந்த நாட்டினுடைய எண்ணங்களைப் படித்துத் தெரிந்துகொண்ட காரணத்தால், இரண்டாவது முறையாக முதல்வராக இருக்கிறார். அவர் நல்லவர். நீங்கள் அணைத்துச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். அன்று முதல் இன்று வரை எனக்கு கலைஞர் மீது தனி பாசம் உண்டு. பல்வேறு காலக்கட்டங்களிலே நான் அவரை எதிர்த்திருக்கிறேன், வசை பாடியிருக்கிறேன், திட்டியிருக்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது அதிகம்.

**திரு. ம. போளூர் வரதன்:** ஆனால், அன்று முதல் இன்று வரை ஒன்றை மட்டும் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். என்ன அது? அவர் பேசிய தமிழாற்றல் தமிழ். அவர் எழுதுகிற ஒவ்வொரு முறையும் நான் முரசொலியிலே அவர் எழுதுகின்ற கடிதங்களை வாங்கி படிப்பேன். இதையெல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கின்றபொழுது (குறுக்கீடுகள்)

Demand-க்கு வருகிறேன் சார். எனக்கும் Demand-ஐப்பற்றிப் பேசத் தெரியும், நான் ஏற்கெனவே இந்த Demand-ஐப்பற்றிப் பேசி இருக்கிறேன். நீங்களும் பேசி இருக்கிறீர்கள். அந்த Demand -ஐப் பற்றி நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்பதை மக்கள் புரிந்துகொள்ளப் போகிறார்கள். இப்போது நான் சொல்வது அந்த டிமாண்டிற்குத்தான் வருகிறேன். இப்படித் தமிழ் ஆற்றல் பெற்ற ஒரு மனிதர், தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி புரிந்தவர் அவர்களை நான் எதிர்த்தவன். ஆதரித்தவன் அல்ல. எங்கள் இயக்கம் அவரை ஆதரித்தபொழுதுகூட நான் எதிர்த்தவன். இன்றைக்கு மனம் திறந்து பேசுகிறேன் என்று சொன்னால் 83 வயதிலே ஓர் இளைஞராக இன்றைக்குப் பணியாற்றி இந்த நாட்டிற்கு நல்ல வழியைக் காட்டுகிறார்கள்.

*பிற்பகல் 12-25*

காலையிலேகூட தமிழைப் பற்றிப் பேசினார்கள். அப்படி தமிழைப் பற்றிப் பேசுகின்றபோது, என்ன தமிழ், (குறுக்கீடு) Hindi-ஐப்பற்றிச் சொல்கிறீர்கள், English பற்றிச் சொல்கிறீர்கள். தமிழைப் பற்றிச் சொல்கிறீர்கள். நான்கூட 30, 35 வருடமாக அரசியலில் இருக்கிறேன். தேசிய கட்சியிலே இருக்கிறேன். எனக்கு Hindi தெரியாது. Hindi பற்றி இன்றைக்குப் பேசுகிறீர்களே, கடந்த கால ஆட்சியிலே Central Board of School Education-ல் Hindi இல்லையா? (மணியடிக்கப்பெற்றது) Matriculation School-ல் Hindi இல்லையா? அதையெல்லாம் தடுப்பதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? செய்யாமல் வந்து குறை சொல்லிவிட்டு, ஏதோ மத்திய சர்க்கார் மேலே குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வரதன், முடித்துவிடுங்கள். முடிக்கிறேன் என்று சொன்னீர்களே.

**திரு. ம. போளூர் வரதன்:** முடித்துவிடுகிறேன் சார். என் தொகுதியைப் பற்றிச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே இரண்டாவது முறையாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். கடந்த முறையும் இந்த அவையிலே நான் பேசியிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே செய்யாற்றின் குறுக்கே, ஓரவந்தவாடி, பனைஓலைப்பாடி என்ற கிராமத்திற்கிடையே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது திரு. வரதன்.



**திரு. ம. போளூர் வரதன்:** நான் இரண்டு நிமிடங்கள் பேச வேண்டும். பரவாயில்லை, அவர் room-ல் இருந்துகூடக் கேட்கட்டும். தப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இல்லை. ஒரு உறுப்பினருக்கு இவ்வளவு தான் time என்று இருக்கிறது.

**திரு. ம. போளூர் வரதன்:** சார், எத்தனை நிமிடங்கள் ஆகியிருக்கின்றன என்று நீங்களே கணக்கு பண்ணிப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டது.

**திரு. ம. போளூர் வரதன்:** 12-06-க்கு ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 12-04-க்கு ஆரம்பித்தீர்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** சரி, இன்னும் ஒரு 2 நிமிடங்களிலே முடித்துவிடுகிறேன். தொகுதி கோரிக்கை, சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதோ உணர்ச்சிபூர்வமாகப் பேசினீர்கள் என்பதால்தான் கொஞ்ச நேரம் அதிகமாகக் கொடுத்தோம்.

**திரு. ம. போளூர் வரதன்:** செய்யாற்றின் பாலத்தின் குறுக்கே, செய்யாற்றின் ஓரவந்தவாடி, பனைஓலைப்பாடி குறுக்கே ஒரு மேம்பாலமும், அதேமாதிரி சுரியமங்கலம் என்று சொல்லக்கூடிய பகுதியிலிருந்து தேசிய நெடுஞ்சாலை திருவண்ணாமலை-பெங்களூர் நெடுஞ்சாலை பகுதியிலே கொட்டகுளத்தின் அருகே ஒரு ஆறு ஓடுகிறது, செய்யாறு. அந்தப் பகுதி மழைக் காலங்களிலே துண்டிக்கப்படுகிறது. அதிலே ஒரு மேம்பாலமும், நீர்ப்புத்துறைக்கும் அம்மாப்பேட்டைக்கும் இடையே அது தருமபுரி district-ஐயும் திருவண்ணாமலை district-ஐயும் இணைக்கக்கூடிய ஒரு ஆறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எழுதிக் கொடுத்தாலே செய்து விடுவார்கள்.

**திரு. ம. போளூர் வரதன்:** தென்பெண்ணை ஆறு, அந்த ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்காக ஏற்கெனவே அரசு திட்டங்கள் வெளியிட்டிருக்கிறது. அந்தப் பாலத்தை நிறைவேற்றித் தரவேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்திலே பாலிடெக்னிக்குகள், கல்லூரிகள் இதுவரையில் இருந்ததில்லை. அது என் தொகுதிக்கு

[திரு. ம. போளூர் வரதன்] [2006 ஆகஸ்ட் 25

கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பகுதியிலே பூக்கள் நிறைய விளைகின்றன. அந்தப் பூக்களைக் கொண்டு தொழிற்சாலைத் துவங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மேல்செங்கத்திலே விவசாயப் பண்ணை இருந்தது. அது இன்றைக்கு மூடப்பட்டு ... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. முடிந்துவிட்டது.

**திரு. ம. போளூர் வரதன்:** இல்லை, இல்லை, ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தமிழ்ச்செல்வன். (குறுக்கீடுகள்) செல்வி இராமஜெயம், எழுந்து நின்று கேளுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம், (குறுக்கீடு) செல்வி ராமஜெயம், சொல்லுங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய துணைவியார் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. ம. போளூர் வரதன்:** தலைவர் அவர்களே, நானே சொல்கிறேன். என்னுடைய மனைவியார் பிராமண இனத்தைச் சேர்ந்தவர்தான். அதற்காக மேல் சாதிக்காரன் செய்வதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது பொறுப்பாகுமா? கலப்புத் திருமணம் செய்துகொள்வது இந்த நாட்டில் தவறல்ல. சாதியைப் பற்றிப் பேசுபவர்கள்—அப்படி என்று சொன்னால் என்னுடைய குடும்பத்திலே இல்லாத சாதியே கிடையாது. முதலியார் சாதி இருக்கிறது, ரெட்டியார் சாதி இருக்கிறது. நாயுடு சாதி இருக்கிறது, வன்னியர் சாதி இருக்கிறது. எல்லா சாதிகளும் இருக்கின்றன என்னுடைய வீட்டிலே. என் மனைவி மட்டும் அல்ல. என் குடும்பத்தில் எல்லா இன மக்களும், எல்லா சாதிகளும் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Personal, அதெல்லாம் personal. அடுத்து, செந்தமிழ்ச்செல்வன். (குறுக்கீடு)



2006 ஆகஸ்ட் 25]

**திரு. ம. போளூர் வரதன்:** கேள்விக்குப் பதில் சொல்கிறேன். சார், ஒரு நிமிடம் சார். (குறுக்கீடுகள்)

***திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை மீதான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் மக்கள் நலன் காக்கும் இந்த அரசு பொறுப்பேற்றத்திலிருந்து பணியாளர் மற்றும் நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து வருவதை நாட்டு மக்கள் நன்கு அறிவர். கொள்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பாராட்டி வரவேற்கிறேன். கடந்த கால ஆட்சியின் வேலை நியமனத் தடைச் சட்டத்தால் மூன்று இலட்சம் அரசுப் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றை நிரப்புவதில் உறுதி பூண்டுள்ள இந்த அரசு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 45,985 ஆசிரியர்களை காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வந்ததையும், பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் பணியமர்த்தியதையும், சாலைப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளித்ததையும், 12,618 ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்களைப் பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வந்ததையும் வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

பிற்பகல் 12–30

கடந்த கால ஆட்சியில் வேலையின்மையால் ஐந்து ஆண்டுகள் வயது வரம்பை நீட்டித்த நம்முடைய கலைஞருடைய அரசு இன்றைக்கு தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளர் பதவிக்கு பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கடந்த தி.மு.க. ஆட்சியில் 1996–2001–லிருந்த வயது உச்சவரம்பு 33–ஐக கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 28–ஆகக் குறைத்ததை, மீண்டும் தாங்கள் 35 வயது என நிர்ணயித்து அவர்களைக் காவல் துறையிலே பணியில

தேர்வு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் அனைவருக்கும் கல்வி இயக்கம், S.S.A. திட்டம் இன்றைக்கு சிறப்பாக தமிழகத்திலே செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் பணிபுரியும் கட்டடப் பொறியாளர்கள் மற்றும் கணினி இயக்குபவர்கள் கடந்த எட்டு ஆண்டுகளாக தொகுப்பூதியத்திலே பணிபுரிந்து வருகின்றனர். இவர்களை நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலை நியமனத் தடைச் சட்டத்தை நீக்கிய அதே நேரத்தில் அனைத்துத் துறைகளிலும் காலியாக உள்ள பணியிடங்களை விரைவாக நிரப்பி, நிர்வாகம் மேலும் செம்மையாக நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கால நேரம் பாராமல் உழைக்கின்ற அரசுப் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்களுக்கு ஓய்வூதியம், அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போன்று இவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் அனைத்துத் துறைகளிலும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பி, படித்த இளைஞர்களின் இன்னல் போக்க, வேலைவாய்ப்பளித்திட இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை ஊழியர்களின் பணி நிரந்தரம் மற்றும் ஊதியம் பற்றி ஆராய குழுவை அமைத்து, அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கான பணிகளை இந்த அரசு விரைந்து வழங்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சுருக்கெழுத்து பயில்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. தமிழ்ச் சுருக்கெழுத்து உயர்வேகத் தேர்வுகளில் கலந்துகொள்பவர்களுடைய எண்ணிக்கை மிகச் சொற்பமாக உள்ளது. தேர்வு எழுதும் சிலரில் ஒருவர் அல்லது இருவரோ தேர்ச்சி பெறுகின்றனர். தமிழகம் முழுவதும் எடுத்துக்கொண்டால், கடந்த பல ஆண்டுகளில் தமிழ்ச் சுருக்கெழுத்து உச்சபட்ச உயர்வேகத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை



10, 15 நபர்கள்தான் இருக்கும். எனவே, தமிழ் உச்சபட்ச உயர்வேகத் தேர்வினை ஊக்குவிக்கும் வகையில், இத்தேர்வில் தேறிய அரசு ஊழியர்களுக்குக் கூடுதலாக ஓர் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஏற்படக்கூடிய நிதிச் சுமை மிகவும் குறைவு.

அடுத்து, பொதுத் துறை. பொதுத் துறை நிறுவனங்கள் வளர்ந்தால்தான் வேலைவாய்ப்பு பெருகும். எனவே, பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைத்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து பொதுத் துறை நிறுவனங்களைச் செழிப்படைய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

என்ற கொள்கை முனைப்பு கொண்டது இந்த அரசு. இந்தப் பூ உலகின் முதல் மொழியும், மூத்த மொழியும் தமிழ் மொழிதான் என்பதும், நமக்கு கிடைத்த ஒரு இலட்சம் கல்வெட்டுகளில் 60 சதவீதம் தமிழில்தான் உள்ளன என்பதும் ஆராய்ச்சியாளர்களாலும், தொல்லியல் நிபுணர்களாலும் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை. பூர்வீகக் குடிகள் தமிழர்கள்தான் என்ற கருத்தை தேவநேய பாவாணர், பி.டி. சீனிவாச ஐயங்கார், கனகசபை பிள்ளை போன்றோர் கூறியது குறிப்பிடத்தக்கது.

மைசூரில் உள்ள கல்வெட்டு ஆராய்ச்சி மையத்தைப் பிரித்து, தமிழகத்தில் ஒரு தனி இயக்குநரகத்தை ஏற்படுத்தி, தமிழ் மொழியின் வரலாற்றையும், முக்கியத்துவத்தையும் உலகிற்கு உணர்த்த வேண்டும். உலகின் முதல் குடிமக்கள் எங்கும் தாக்கப்படாமல் காக்கப்பட வேண்டும். உலகின் ஒட்டுமொத்த தமிழர்களின் நலன் காக்க, கேரளாவில் மலையாளிகளின் நலன் காக்க தனி அமைச்சர் உள்ளது போல், உலகத் தமிழர்களுடைய நலன் காக்க ஓர் அமைச்சரை நியமிக்க வேண்டும்.

தமிழ் மொழிக் காவலர்களின் வாரிசுகளுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் அரசாணையை மீண்டும் புதுப்பித்து செயல்படுத்த வேண்டும்.

மழலையர் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அனைத்துப் பாடங்களையும் தமிழில் படிப்பதற்கு இந்த அரசு சட்டம் இயற்றுவதோடு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக,

மருத்துவம், பொறியியல், விவசாயம், சட்டம் போன்ற தொழிற்கல்வியை தமிழில் படிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12–35*

நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்து, இன்றைக்கு உலகத்திலே வாழ்கிற தமிழர்களுக்கு எல்லாம் ஒரு சிறப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார். அதோடுமட்டுமல்லாமல், தமிழை மத்தியிலே ஆட்சி மொழியாக ஆக்குகிற ஒரு நிலையை ஏற்படுத்த, நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய அரசை வலியுறுத்தி, விரைவில் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உலகப் பொதுமறையாம் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழி பெயர்க்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் மொழி படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் தமிழிலே வாதாடவும், தீர்ப்புகளைத் தமிழிலேயே வழங்கிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகம் சார்ந்த உயர் நீதிமன்ற–உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் கிடைத்திட ஆவன செய்திட வேண்டும். குறிப்பாக, அலகாபாத் உயர்நீதிமன்றத்திலே, இன்றைக்கு அந்த மாநில மொழியிலேயே தீர்ப்புகளும், விவாதங்களும் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழர் பண்பாட்டைச் சிதைக்கும் திரைப்படங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வகை செய்ய வேண்டும். தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்கும் பத்திரிகைகள், ஊடகங்கள்மீது, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடத்த படிப்படியான நடவடிக்கைகளின்மூலம், ஆலயங்கள் முழுவதிலும் தமிழ் ஓசை கேட்டிட வேண்டும். தமிழ் இசை, தமிழர்கள் மத்தியில் மீண்டும் கொண்டு வரவேண்டும். பள்ளிகளில் தமிழிசை ஒரு பாடமாக நடைமுறைப்படுத்த வேண்டும். மாவட்ட தலைநகரங்களில் இசைப் பள்ளிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கி, தமிழிசை வளர்த்திடல் வேண்டும்.



கைத்தறித் துணிநூல். தமிழ்நாட்டில் முதன்மைத் தொழிலான விவசாயத்திற்கு அடுத்து இருப்பது துணி நூல் உற்பத்தி. இதன்மூலம் வேலைவாய்ப்பையும், உற்பத்தியையும் பெருக்க முடியும். நெசவுத் துணி உற்பத்தி இல்லாத மாவட்டங்களில் விரிவாக்கம் செய்ய வேண்டும். நெசவாளர்கள் நலன்மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மறு சீரமைக்கப்பட வேண்டும். மானியத்துடன் கடன் உயர்த்தி வழங்கப்பட வேண்டும். மாவட்டம்தோறும், கைத்தறி நெசவுப் பூங்காக்களை அமைத்து, ஒன்றியத்திற்கு 100 பேர் தேர்வு செய்து, மகளிர் மற்றும் இளைஞர்கள் குழுக்களுக்கு, சுய உதவி குழுக்களுக்கு பயிற்சி அளித்து நெசவுப் பூங்காக்களை உருவாக்கி, வேலைவாய்ப்பினைப் பெருக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி கோரிக்கைகளை நான் இந்த அவையிலே முன்வைக்க விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கிற என்னுடைய மேல்மலையனூர் தொகுதி, மிக மிகப் பின்தங்கிய பகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியில் விவசாயத்தையே இன்றைக்கு தொழிலாகக் கொண்டிருக்கிற மக்களுக்கு, பாசனத்திற்கு உதவி செய்யக்கூடிய வகையில் ஏரி, குளங்களை தூர் வாரி, நீர்நிலைகளை உண்டாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு விழுப்புரம் மாவட்டத்தில், நெல் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எங்கள் மேல்மலையனூர், செஞ்சிப் பகுதியிலே விளைகிற, பொன்னி நெல்லுக்கு சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே நல்ல வரவேற்பு இருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல இரக அரிசி; சுவை மிக்க அரிசி உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு அந்த நெல்லுக்கு, கட்டுப்படியான விலை இல்லை. எனவே, ... (மணியடிக்கப்பெற்றது) அரசாங்கமே கொள்முதல் செய்து, அந்த நெல்லை கட்டுப்படியான விலைக்கு வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே சம்பங்கி, முல்லைப் பூக்கள் அதிகமாக விளைகின்றன. அந்தப் பூக்களை பெங்களூருக்கும், சென்னைக்கும் கொண்டு சென்று விவசாயிகள் விற்கிற நிலை இருக்கிறது. எனவே, எனது தொகுதியில் ஒரு scent தொழிற்சாலை ஏற்படுத்தினால் வேலைவாய்ப்பும் பெருகும். அங்கே பூ உற்பத்தி செய்கிற விவசாயிகளும் பயன்பெறுவார்கள் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கிற முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையில், கரும்பு வெட்டுகிற அந்த உத்தரவை 17 மாதங்கள் கழித்துத்தான் வழங்குகிறார்கள். இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். அந்த நஷ்டத்தை அந்த ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே அனந்தபுரம் பேருராட்சியிலும், அவலூர்ப்பேட்டையிலும் ஒரு தீயணைப்பு நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியான மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயிலுக்கு தினம் தினம் மட்டுமல்லாமல் பௌர்ணமி, அமாவாசை காலங்களிலே மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் வாகனங்களிலே வந்து செல்கிறார்கள். எனவே, அந்தப் பாதையை வளத்தியிலே இருந்து அவலூர்ப்பேட்டை வரையிலே 4 வழிப் பாதையாகவும், அதேபோன்று மேலச்சேரி முதல் செவலப்பேரி வரை உள்ள தரைப் பாலங்களை மேம்பாலங்களாக ஆக்கியும், மேல்மலையனூரில் இருந்து அவலூர்ப்பேட்டையில் இருக்கிற இரண்டு தரைப் பாலங்களை மேம்பாலங்களாக ஆக்கியும், அதேபோன்று செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற காளப்பாடி முதல் புதுப்பாளையம் வரை இருக்கிற தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்திடவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம் பனை மரங்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே, அங்கே பனைப் பொருட்களை உற்பத்தி செய்ய பனை நல வாரியம்மூலம் இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12–40*

அடுத்து என்னுடைய தொகுதியிலே பாம்புக் கடிக்கு அங்கே இருக்கிற அரசு மருத்துவமனைகளிலே மருந்தே இல்லை. ஏறக்குறைய 45 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற திருவண்ணாமலைக்கோ அல்லது விழுப்புரத்திற்கோ சென்றால்தான் அந்த பாம்புக் கடிக்கு சிகிச்சை பெறவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, என்னுடைய தொகுதியில் இருக்கிற அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பாம்புக் கடிக்கு மருந்தை இந்த அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய விழுப்புரம மாவட்டத்தில் இருக்கின்ற புராதனச் சின்னங்களில் செஞ்சிக் கோட்டையும் ஒன்று. அந்த செஞ்சிக் கோட்டையில் மக்கள் இராஜா கோட்டைக்கும், இராணிக் கோட்டைக்கும் ஏறி இறங்குவது சிரமமாக இருக்கிறது. எனவே, இராஜா கோட்டையையும், இராணிக் கோட்டையையும் இணைக்கிற பகுதிக்கு ஒரு ரோப் கார் வசதியை ஏற்பாடு செய்து சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும். அங்கே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலம் ஓர் உணவு விடுதியும், மேல்மலையனூரிலே சுற்றுலாத் துறையின் மூலம் ஓர் உணவு விடுதியும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நட்பின் சின்னமாக விளங்குகிற இராஜாதேசிங்கு மன்னன் என்னுடைய தொகுதியில் இருக்கிற கடையில் உயிர் நீத்த இடத்திற்கு ஒரு நினைவு மண்டபத்தை அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூர் பேரூராட்சியில் இயங்கி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், ரூபாய் 1 கோடியில் நிறுவிய நெல் அவியல் இயந்திரம் கடந்த 5 ஆண்டுகளாக இயங்கவில்லை. காரணம், நீர் இல்லாமல் இருக்கிறது. உடன், தென்பெண்ணை ஆற்றிலிருந்து நீர் எடுத்து வந்து அதனை இந்த அரசு இயக்க வேண்டும். இதனால் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கும்.

அரகண்டநல்லூர், மிகமிகப் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதியிலே ஓர் அரசுக் கல்லூரியை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த விவாதத்திலே பங்கெடுத்துக் கொள்கிற வாய்ப்பு கிடைத்தமைக்கு மீண்டும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் குறிப்பிடுகிறபொழுது, அரசு ஊழியர்கள் போராட்டத்தின்பொழுது கடந்த காலத்தில் அவர்கள் பழி வாங்கப்பட்டதையும், மீண்டும் அவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிற சூழல் உருவாகியதையும் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் நீண்ட விளக்கம் வழங்கப்பட்டிருக்கிறது.

அவர்களை எல்லாம் மீண்டும் பணிக்கு அமர்த்தி, பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அவர்கள் தலைமையிலான அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தப் போராட்டத்தைப் பற்றி குறிப்பிடுகிறபொழுது, கொள்கை விளக்கக் குறிப்பு 7 ஆம் பக்கத்தில், 2–ஆம் பத்தியில் "இந்நிலையில், வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தொழிற் சங்கத் தலைவர் திரு. செ. குப்புசாமி, எம்.பி. அவர்கள் தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003–ஐ எதிர்த்தும், பணிநீக்கம் செய்யப்பட்ட சுமார் 1,75,000 ஊழியர்களைப் பணியில் அமர்த்தவும், பல்வேறு மனுக்களைத் தாக்கல் செய்தார். எந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல் அரசு, இலட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்களைப் பணிநீக்கம் செய்ததில், அவர்கட்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைவதற்கு உச்சநீதிமன்றம், வேலைநீக்கம் செய்த பணியாளர்களை வேலையில் சேர்க்க வேண்டுமென்று ஆணையிட்டது. அதன்படி 1,56,106 பணியாளர்கள் 25–7–2003 அன்று பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்." என்ற விவரம் வருகிறது.

அதிலே ஒரு திருத்தத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. குப்புசாமி, எம்.பி. அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தது உண்மை. அதேசமயத்தில் A.I.T.U.C. தலைவர் திரு. எஸ்.எஸ். தியாகராஜன் அவர்களும் முறையீடு செய்திருந்தார். C.I.T.U.-வினுடைய தலைவர் தோழர் டி.கே. ரங்கராஜன் அவர்களும் முறையீடு செய்திருந்தார். இந்தத் தீர்ப்பு என்பது C.I.T.U.-வினுடைய தலைவர் தோழர் டி.கே. ரங்கராஜன் அவர்கள் முன்வைத்த மனுவின்மீதுதான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை இந்தக் குறிப்பிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சில கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பகுதி நேர ஊழியர்கள், அரசு ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவது, 1972 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் ஆட்சி காலத்திய நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். வேலை நியமனத் தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அது தாமதம் ஏற்படக்கூடிய சூழலும் ஏற்பட்டுள்ளது. விரைவில் வேலை கிடைக்க வழி செய்ய வேண்டும். பள்ளிகளில் Non-teaching staff பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.



கடந்த அரசு ஊழியர்கள் வேலை நிறுத்த காலத்தில் பணியில அமர்த்தப்பட்ட ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்கிற அரசு ஊழியர்கள் சங்கக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். பறிக்கப்பட்ட ஓய்வூதியப் பயன்கள் 1–4–2003 முதல் 30–6–2006 முடிய ஓய்வு பெற்றவர்களுக்கும் பொருந்த வேண்டும்.

பிற்பகல் 12–45

அரசு ஊழியர்களுக்கு, அவர்களுடைய சங்கங்களுக்குத் தொழிற் சங்க உரிமை போன்ற உரிமைகள் மேற்கு வங்கத்தில் வழங்கப்பட்டிருப்பதைப் போல வழங்க வேண்டும். 1,19,888 ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள TNGEA அதாவது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கம் ஆகிய அமைப்புகள் அங்கீகாரம் பெற வேண்டும் என்கிற அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

சட்டமன்ற செயலக ஊழியர்கள், பாராளுமன்ற செயலக ஊழியர்களைப் போன்று நடத்தப்பட வேண்டும். சட்டமன்ற செயலகத்தில் தற்காலிகப் பணியாளர்களாக உள்ள பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். இங்கே உள்ள O.A. என்கிற பிரிவினருக்கு வருங்காலத்தில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

பொதுத் துறை என்பதைப் பொறுத்தவரையில், வீரப்ப மொய்லி அவர்களுடைய அறிக்கை, அகில இந்திய அளவில் வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அரசியல்வாதிகளும், இந்தியக் குடிமைப்பணி அதிகாரிகளும் இரு கண்கள் என்று தெரிவித்திருக்கிறார். அந்த அடிப்படையில் அரசியல்வாதிகளும் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிகாரிகளும், தங்களுடைய சொந்த பலத்தில் நிற்க வேண்டியிருக்கிறது. அதிகாரிகளில், நல்லவர்களும் உண்டு, வல்லவர்களும் உண்டு. அதிலே, சில பலவீனங்களையும் நாடு கண்டிருக்கிறது; சிறப்பையும் கண்டிருக்கிறது. கடந்த சுனாமி ஏற்பட்ட காலத்தில் நாகை, கடலூர், தஞ்சை மாவட்ட கலெக்டர்களுடைய சிறப்பான செயல்பாட்டை அறிந்தோம். குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பலவீனமான அம்சத்தையும் அறிந்தோம். சமீபத்தில், செங்கோட்டையில் ஒரு போலீஸ் கமிஷனர் பற்றிய செய்தி, நாடு கவலைப்படுவதுபோல் அமைந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் அறிவுத் திறனைக் காட்டி பொறுப்புக்கு வருகிறார்கள்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்"

என்று வள்ளுவர் பெருந்தகை குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, அவர்களுக்கு மக்கட்பண்பு என்பதை வலியுறுத்தக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியக் குடிமைப் பணி பயிற்சிக்காக சென்னையில் ஒரு கல்லூரி இருக்கிறது. அது கொள்கை விளக்கக் குறிப்பிலும் இருக்கிறது. இதேபோன்று மதுரையிலும் உருவாக்கப்பட வேண்டும். தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாணவர்களும் பயன்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி என்பதைப் பொறுத்தவரையில், பரிதிமாற் கலைஞருக்கு செய்திருக்கிற சிறப்புக்கு நன்றி கூறுகிறேன். இந்தக் காலம் அமரர் ஜீவானந்தம் அவர்களுடைய நூற்றாண்டு விழாக் காலம். சிராவயலில் அவர் ஆசிரமம் அமைத்திருந்தார். சேரன்மகாதேவி ஆசிரமத்திற்கு எதிராக அமைக்கப்பட்ட ஆசிரமமாக அது இருந்தது. காந்தியடிகள் வந்ததெல்லாம் ஒரு நீண்ட வரலாறு. ஆகவே, ஜீவா அவர்களைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் சிராவயலில் அவர் ஆசிரமம் அமைத்திருந்த இடமும் நினைவுச் சின்னம் ஆக்கப்பட வேண்டும் என்று அந்த ஊர் மக்கள் விரும்புகிறார்கள். அதனை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும். நீதிமன்றங்களில் தமிழ்ப் பயன்பாட்டுக்காக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் இயற்றப்பட வேண்டும்.

மொழிப்போர் தியாகிகள் ஓய்வூதியத்திற்காக மனு செய்து பலபேர் இன்னும் காத்திருக்கிறார்கள். ஒரு நாள் சிறையில் இருந்தாலும், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகிற முறை பின்பற்றப்பட வேண்டும். திண்டுக்கல்லில் உள்ள சார்லஸ் மற்றும் ஜானகிராமன், பெத்தானியாபுரம் சீனிவாசன் போன்றவர்களும், குமரி மாவட்டத்தில் 142 பேர், ஏற்கெனவே ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் உரிமை கிடைப்பதற்கு வழி ஏற்படுத்த வேண்டும். நீண்ட காலமாக தவம் கிடக்கக்கூடிய அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். சிறைச் சான்றிதழ் இருந்தாலே போதும் என்கிற முறையைப் பின்பற்றி,



அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதங்கோட்டு ஆசான், தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட அவையினுடைய தலைவன், அவருக்கு குமரியில் சிலை இருக்கிறது. அது பராமரிக்கப்பட வேண்டும். நலிவுற்ற எழுத்தாளர்களுக்கும்—கலைஞர்களுக்கும் வழங்குகிற ஓய்வூதியம் போன்று எழுத்தாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்து 50 ஆண்டுகள் ஆகின்றது. அந்த விழா நடத்தப்பட வேண்டுமென்ற மாவட்ட மக்களின் விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாகை மாவட்டத்தில், தனித் தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகளாருக்கு சிலை எழுப்ப வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. நினைவு மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கதர் கிராமத் தொழில். 862 ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்களை உரிய பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கதர் கிராமத் தொழில் பூதுநிலை நூற்பாளர்கள் 1,000 ரூபாய் ஊதியத்தில் உள்ளனர். அதை காலமுறை ஊதியமாக வழங்க வேண்டும். தொழிலாளர்களுக்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலும், அதனை நிறைவேற்றாமல் மேல்முறையீடு செய்யும் போக்கு வாரியத்திடம் உள்ளது. அது கைவிடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுத் தொழில் வளர்ச்சி பெற, மல்பரி நடவு மானியம் விவசாயிகளுக்கு 500 ரூபாய் என்று இருப்பதை, 1,000 ரூபாயாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். பட்டு வளர்ச்சித் துறை ஊழியர்களுக்கு பணிப் பாதுகாப்பும், பதவி உயர்வும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். பட்டுப் புழு வளர்ப்பதற்கு மேற்குத் தொடர்ச்சி மலை பயன்படுத்தப்படுவதை கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது. அதில் மதுரை, நாகமலைப் பகுதி அந்தத் துறைக்குப் பயன்படுத்தப்படுவதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–50*

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், ஒற்றுப் பிழை, சந்திப் பிழைகளெல்லாம் மாணவர்களுக்கு ஏற்படுவதை கொள்கை விளக்கக் குறிப்பு குறிப்பிட்டிருக்கிறது. இதனைப் போக்குவதற்காக, ஆங்கிலத்தில் ஆங்கில இலக்கணம் கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்களுக்கும், அவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்கிற காரணத்தினால், தமிழ் இலக்கணம் பற்றியும் ஓர் அறிவு அவர்களுக்கு ஏற்படுத்தப்படும் என்றால், ஆங்கில இலக்கணமும் மாணவர்கள் முறையாகப் பயின்று, தமிழ் இலக்கணத்தையும் முறையாகப் பயின்று, எதிர்காலத் தலைமுறை—இப்போது 'Andal' என்பதற்கும் அதே 'L' தான், அதேபோல, 'Palanisamy', என்பதற்கும் ஒரே 'L' தான், அதேபோல, 'Lakshmanan' என்பதற்கும் அதே 'L' தான். அதனாலே, இந்த 'லகரம்', 'ளகரம்', 'ழகரம்', எல்லாம் இன்றைய தலைமுறையில் இருப்பவர்களுக்கு, ஆங்கில வழியில் படித்து வருகிற காரணத்தினால், தமிழில் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலம் கற்பிக்கிற ஆசிரியர்களும் ஓரளவுக்குத் தமிழ் ஞானம் பெற்றவர்களாக உருவாக்குவதற்கு, உரிய முறையை ஏற்படுத்தினால், வருங்காலத் தமிழகத்தில் இதுபோன்ற நிலைமை ஏற்படாது. Spell Checker என்று வைக்கப்படுவதைப்போல, தமிழிலும் உச்சரிப்புக்கும், அதனை எழுத்துமூலம் கொண்டுவருவதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயில்கின்ற மாணவர்களுக்கு, முதல் மதிப்பெண் பெறுகிற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படுகிற முறை இப்போது இருக்கிறது. இந்த முறை தொடர வேண்டும். இதில் பெரும்பாலும் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள்தான் வருகிறார்கள். மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் அந்த இடத்தைப் பிடிக்க முடியவில்லை. ஆகவே, தமிழை மட்டுமே படிக்கக்கூடிய, தமிழ் வழியில் மட்டுமே படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் முதல் மதிப்பெண் பெறுகிற மாணவருக்குப் பரிசு என்று வழங்குகிறபோது, இந்தப் பாகுபாடு குறைவதற்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்து, பேச அனுமதித்ததற்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. வீர. இளவரசன்.



***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மொழியே மக்களுடைய மனதைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடி' என்றார் ஓர் அறிஞர். 'The Language is the mirror of the people's mind.' என்று சொல்வார்கள். ஐரிஷ் நாட்டின் விடுதலை இயக்கத்திற்காகப் போராடிய அந்த விடுதலை இயக்கத்தினுடைய தலைவர் எமன் டி வேரலா சொன்னார், 'உன் தாய்மொழியைக் காப்பாற்றிவிட்டால், உன்னுடைய தாய் நாட்டைக் காப்பாற்றிவிடலாம்' என்று சொன்னார்கள். தாய் மொழியைக் காப்பது மட்டுமல்ல, தாய் மொழியை வளர்ப்பதும் நம்முடைய கடமையாகக் கருத வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். எனவே, ஒரு மொழி, ஓர் இனத்தினுடைய மொழி வாழ்ந்தால்தான், அந்த இனம் வாழ முடியும், வளர முடியும்.

எங்கே முதன்முதலில் மனிதன் தோன்றினானோ, அங்கேதான் முதன்முதலாக மொழியும் தோன்றியிருக்க முடியும். குமரிக் கண்டத்திலேதான் முதன்முதலில் மனிதன் தோன்றியதாக வரலாறுகள் கூறுகின்றன. அப்படியென்றால், அங்கேதான் மொழியும் தோன்றியிருக்க முடியும். அங்கே தோன்றிய மொழி தமிழ் மொழி என்று சொன்னால், அதுதான் நம்முடைய தாய் மொழி, தமிழ் மொழி என்பதாக தேவநேயப் பாவாணர் அவர்கள் தம்முடைய கருத்தாக எழுதி வைத்திருக்கிறார்கள்.

கி.மு. 10 ஆம் நூற்றாண்டில், 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகம் சிரியா, பாபிலோன், எகிப்து போன்ற நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. அப்படி வாணிபத் தொடர்பு கொண்டிருந்த காலத்திலே அங்கே பயன்படுத்தப்பட்ட மொழி, தமிழ் மொழி என்பதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

இராமாயணத்திலேகூட, அனுமன் சீதாபிராட்டியாரிடம் தூது சென்றபோது ஒரு மதுர மொழியிலே பேசினான் என்று சொல்கின்றபோது, வால்மீகி சுந்தரகாண்டத்திலே சொல்கின்ற அந்தச் செய்தியைப் பற்றி, அந்த மதுரமான மொழி என்பது நம்முடைய தமிழ் மொழியாகத்தான் இருக்க வேண்டுமென்று மகா வித்துவான் இராகவ ஐயங்கார் கூறியிருக்கிறார். 'பாண்டி நன்னாடுடைத்து நல்ல தமிழ்' என்று பாடினார் ஔவையார். பாண்டிய மன்னர்கள் சங்கம் வளர்த்து புலவர்களுக்கு ஊக்கம் ஊட்டி, தமிழை வளர்ப்பதற்குத் தொண்டாற்றினார்கள் என்பதை வரலாற்றிலே காண முடிகிறது.

பிற்பகல் 12-55

அந்த அடிப்படையிலேதான் முதற்சங்கம், கடல்கோளுக்கு முன்னால், தென்மதுரையில் இருந்ததாகவும், அந்த முதற்சங்கத்தில் அகத்தியர், முரஞ்சியூர், முடிநாகராயர் முதலிய 549 புலவர்கள் அந்தச் சங்கத்திலே இருந்ததாகவும், அந்தச் சங்கம் 4,440 ஆண்டுகள் அங்கே இருந்ததாகவும், அதேபோல பரிபாடல், முதுநாரை போன்ற நூல்கள் எல்லாம் அந்தக் காலக்கட்டத்திலே இயற்றப்பட்டதாகவும் வரலாறுகள் இங்கே கூறுகின்றன. அகத்தியமே அதற்கு இலக்கண நூலாகப் பயன்படுத்தப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது.

அதேபோல, இடைச்சங்கம் கபாடபுரத்திலே இருந்ததாகவும், தொல்காப்பியர், வெள்ளூர்க் காப்பியன் உள்ளிட்ட 59 புலவர்களும், அந்த இடைச்சங்கத்திலே இருந்ததாகவும், 3,700 ஆண்டுகள் அந்தச் சங்கம் இருந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. அந்தச் சங்கத்திலே கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலிய நூல்கள் இயற்றப்பட்டதாகவும் பார்க்க முடிகிறது.

அதேபோல, கடைச்சங்கம் உத்தர மதுரையில் அமைந்திருந்தது என்றும், சிறுமேதாவியார், பெருங்குன்றூர்கிழார், நக்கீரனார் முதலிய 49 புலவர்களோடு ஏறத்தாழ 1,800 ஆண்டுகள் அந்த உத்தர மதுரையில் கடைச்சங்கம் இருந்ததாகவும் இறையனார் களவியலுரை எடுத்துக்காட்டுகிறது. நமக்குக் கிடைக்கின்ற தொன்மையான நூல், இலக்கண நூல் தொல்காப்பியம்தான். அந்தத் தொல்காப்பியத்தில் சொல், பொருள், எழுத்து என்ற மூன்று பிரிவுகளாக தொல்காப்பியம் பகுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், அகத்தையும், புறத்தையும் பாடுபவைகளாக இருக்கின்றன. எட்டுத்தொகையிலே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்ற ஐந்தும் அகத்தைப்பற்றிப் பாடுபவையாக அமைந்திருக்கிறது.

அதேபோல, பத்துப்பாட்டிலே, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பவையும் அகப்பொருளைப் பற்றி பாடுபவையாக அமைந்திருக்கிறது. உலகத்திலே எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, தனிச் சிறப்பு நம்முடைய தமிழ் மொழிக்கே இருக்கிறது. காலத்திற்கேற்ப, காலத்தின் தேவைக்கேற்ப, அந்தக் காலத்திலே தமிழ் மக்களுடைய வாழ்வுக்கும், வளர்ச்சிக்குமான எதிர்பார்ப்புகளுக்கேற்ப,



உருமாறிக்கொள்கின்ற சக்தி தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழ் மொழி, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து, எத்தனையோ பெரிய படையெடுப்புகளையும், தாக்குதல்களையும், அதேபோல, தூற்றுதல்களையெல்லாம் தாங்கிக் கொண்டு, தன்னிகரற்ற மொழியாக இன்றைக்கு தமிழகத்திலே இருந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சோழ, பாண்டிய நாட்டை களப்பிரர்களும், அதேபோல நடுநாட்டையும், தொண்டை நாட்டையும் பல்லவர்களும் ஆண்டபோது, அவர்கள் களப்பிரர்கள் பாலி மொழியை ஆதரித்தார்கள். அதேபோல, பல்லவர்கள் பிராகிருத மொழியை ஆதரித்தார்கள். அந்தக் காலம்தான் தமிழக இலக்கியத்திற்கு, தமிழ்மொழிக்கு ஓர் இருண்ட காலம் என்று சொல்லக் கூடிய காலம். அந்தக் காலத்திலேயும் தமிழ்மொழி வளர்ந்தது.

அந்தக் காலத்தில்தான் பதினெண்கீழ்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் எல்லாம் அங்கே உருப்பெற்றன என்பதை மறுக்க முடியாது. நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஏலாதி போன்ற நூல்கள் எல்லாம் அந்தக் காலக்கட்டத்திலேதான் உருவானது என்பதை மறுக்க முடியாது. சோழப் பேரரசர்கள் ஆண்ட காலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். 1-00 மணிக்குள் முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** சோழப் பேரரசர்கள் ஆண்ட காலம், தமிழ்ப் பண்பாட்டின் பொற்காலம் என்று கூறலாம். இக்காலத்தில்தான் தமிழ் இலக்கியங்கள் நன்கு ஆதரிக்கப்பட்டன. நாயன்மார்களும், ஆழ்வார்களும், கல்நெஞ்சத்தைக் கனிய வைக்கும் இசைப்பாடல்களை இந்தச் சோழர் காலத்திலேதான் அங்கே தொகுத்தார்கள். அதேபோல, ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் போன்றவர்கள் எல்லாம் இந்தக் காலத்திலேதான் தமிழை வளர்த்தார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. நாயக்கர்கள் காலத்திலும் பல புலவர்கள் தோன்றி தமிழை வளர்த்தார்கள். பரிமேலழகர், வீரகவிராயர், அதிவீரராமபாண்டியன் போன்றவர்கள் எல்லாம், பரஞ்சோதிமுனிவர் போன்றவர்கள் எல்லாம் இந்தக் காலக்கட்டத்தில் தமிழை வளர்ப்பதற்குப் பாடுபட்டார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது.

*பிற்பகல் 1–00*

ஆண்கள் மட்டுமல்ல, தமிழை வளர்ப்பதிலே பெண்களும் பங்காற்றினர் என்பதைப் பார்க்க முடிகிறது. ஔவையார், பாரி மகளிர், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பெண்கள் எல்லாம், பெண் கவிஞர்கள் எல்லாம், புலவர் பெருமக்கள் எல்லாம் தமிழை வளர்ப்பதற்குப் பாடுபட்டார்கள். இஸ்லாமிய கவிஞர்களும், உமறுபுலவர், குணங்குடி மஸ்தான் சாகிப் போன்றவர்களும், கிருத்தவப் பாதிரிமார்கள், ஐரோப்பியர்கள், வீரமாமுனிவர், ஜி.யு. போப் போன்றவர்கள் எல்லாம் நம்முடைய தமிழை வளர்ப்பதற்காகப் பாடுபட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

அதுமட்டுமல்ல, பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி, கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்க பிள்ளை, இராமலிங்க அடிகள், சுந்தரம் பிள்ளை போன்றவர்கள், உ.வே. சாமிநாத ஐயர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றவர்கள் எல்லாம் தமிழுக்குப் பெரும் பணியாற்றியிருக்கிறார்கள். 'தமிழ் இனிமைபெற இரவல் எதற்காகப் பெறவேண்டும்? புள்ளி கலாபம் படைத்த மயிலுக்கு, வான்கோழி சிறகாலான் த் தோகையைத் தரவேண்டுமா? கிளி அழகுபெற அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா? கேட்க வேண்டாம் தம்பி! எண்ணிப்பார் அது போதும்' என்றாரே அறிஞர் அண்ணா. அந்த அண்ணாவும் தமிழை வளர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் இவர்கள் எல்லாம் இந்த மண்ணிற்கு வாணிபம் செய்ய வந்தபோது, தங்கள் ஆதிக்கத்தை இந்த மண்ணில் நிலைநிறுத்த முயன்றபோதுதான் அவர்களுக்குள் போட்டியும், சண்டைகளும் வந்து, போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், டேனிஷ்காரர் அவர்கள் எல்லாம் வெளியேறி விட்ட நிலையில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், தங்களுக்குள் சண்டையிட்டு, முடிவில் ஆங்கிலேயர் வெற்றிபெற்றுத் தங்கள் ஆதிக்கத்தை இந்த மண்ணில் நிலை நாட்டியபோதுதான் அச்சு இயந்திரங்கள் நம்முடைய நாட்டில்-- குறிப்பாக தமிழகத்திற்கு 19 ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரங்கள் வந்தன.-- அச்சு இயந்திரங்கள் வந்ததற்குப் பின்னால்தான் இங்கே தமிழ் நூல்கள் அச்சடிக்கப்பட்டன. பல நூல்கள் அச்சடிக்கப்பட்டு வெளியாயின என்பதை யாரும் மறககமுடியாது. அதற்குப் பிறகு இந்த நிலையில்தான் 1937-லே நம்முடைய தாய் மொழி தமிழுக்கு ஓர் ஆபத்தான காலகட்டம வந்தது.



இராஜாஜி அவர்களால் இந்தி திணிக்கப்பட்டபோது அதை தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், முடியுங்கள் சீக்கிரம். முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் அப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்று அந்தப் போராட்டத்திற்கு துணை இருந்தார். இங்கே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய இனமான பேராசிரியர் அவர்கள், நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்கள் எல்லாம் அந்தப் போராட்டத்திலே பங்கேற்றார்கள். இந்த இயக்கத்திற்குத் தோள் கொடுத்தார்கள் என்பதை மறுக்கமுடியாது.

அதேபோல நீதிக் கட்சித் தலைவர்கள், ஏ.டி. பன்னீர்செல்வம், அதேபோல ராஜா சர் முத்தையா செட்டியார், பி.டி. ராஜன் போன்றவர்கள் எல்லாம் அந்த மொழிப் போராட்டத்திற்குத் துணை நின்று நம்முடைய தாய் மொழி தமிழைப் பாதுகாத்தார்கள். பல போராட்டங்கள், எத்தனையோ இழி மொழி, அவைகளை எல்லாம் தாங்கிக் கொண்டு, அவர்கள் அன்றைக்கு, இந்தி மொழியை விரட்டுவதற்கு, தாய் மொழி தமிழைப் பாதுகாப்பதற்கு இந்த மண்ணில் தங்களைத் தியாகத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. இராஜாஜி அவர்கள் இந்தியைத் திணிக்க முயன்றபொழுது, அதை பெரியார் அவர்கள் எதிர்த்தார்கள். அப்பொழுது சொன்னார். ஆணவத்தோடு, அதிகாரத்தோடு சொன்னார் இராஜாஜி அவர்கள்; இராமசாமிக்காகப் பயந்து இந்தியை நான் எடுத்து விடுவதா, முடியாது என்று சொல்லிவிட்டு, இந்த நாட்டை ஆள்வது நானா அல்லது இராமசாமி நாயக்கரா பார்த்துவிடுகிறேன் என்று சொன்ன இராஜாஜி அவர்கள், அதற்குப் பிறகு பெரியார் அவர்களை பெல்லாரி சிறையிலே அடைத்தபோது மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள், அவருடைய வயதுக்கு, உடம்புக்கு அந்த வெப்பமான அந்தப் பகுதி, பெல்லாரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், முடியுங்கள். இன்னும் இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும்.

**திரு. வீர. இளவரசன்:** அவர்களுககு ஒத்துக்கொள்ளாது என்று சொன்னபோது பெரியாருக்கு உஷ்ணமான அந்த சீதோஷ்ண நிலை

இருக்கும் பெல்லாரி சிறைதான் சரியாக இருக்கும் என்று சொன்னவர் இராஜாஜி அவர்கள். அவரே, பிறகு ஒரு காலத்தில் மனம் மாறி நிலைமைகளுக்கேற்ப, தன்னுடைய முடிவை மாற்றிக்கொண்டார் என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

'புற்றிலிருந்து ஈசல் வருவதுபோல, இவ்வளவு பெரிய கூட்டம் எங்கிருந்து வந்தது? இந்தச் சனியனுக்கு இவ்வளவு தொல்லை இருக்கும் என்று தெரிந்தால், நிச்சயமாக இந்தியை நான் புகுத்தி இருக்கமாட்டேன்' என்று சொல்கின்ற அளவுக்கு வந்த இராஜாஜி அவர்கள், பிறகு சொன்னார், 'English ever, Hindi never' என்று சொல்லக்கூடிய ஒரு காலகட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களால் அன்றைக்கு உருவாக்கப்பட்டது என்பதை மட்டும் சொல்லி, அப்படிப்பட்ட நம்முடைய தமிழ்மொழியைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவருடைய கடமை என்பதைச் சொல்லி இந்தத் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு நம்முடைய அரசாங்கம் இன்றைக்கு பல திட்டங்களை இங்கே வைத்திருக்கிறது என்றாலும், கொள்கைக் குறிப்பிலே சில வார்த்தைகள் இந்தி வார்த்தைகள் நம்முடைய தமிழுக்கு ஒவ்வாத வார்த்தைகள் எல்லாம், கைத்தறியிலே புங்கர் பீமா யோஜனா திட்டம், அதேபோல் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம், கிஷோரி சக்தி யோஜனா போன்ற பல்வேறு வகையான குறிப்புகள் எல்லாம் இந்தி மொழியிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றுவதற்கு, தமிழிலே மொழி பெயர்த்து அவற்றை மாற்றுவதற்கு..

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** நம்முடைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன, திரு. வீர. இளவரசன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள் என்று சொல்லியிருக்கிறேன், திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டேயிருந்தால் எப்படி? (குறுக்கீடு) சொல்லுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** ஒரேயொரு கோரிக்கையை மட்டும் வைத்து நான் விடைபெற விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் கோரிக்கைகளைத்தான் வைத்துப் பேசினீர்கள்.

**திரு. வீர. இளவரசன்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** நம்முடைய நாட்டில் இருக்கின்ற உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டிலும், தமிழில் வாதம் செய்வதற்கோ அல்லது வழக்காடுவதற்கோ ஒரு வாய்ப்பில்லாத சூழ்நிலை இருந்துவருகிறது. நம்முடைய வழக்கறிஞர் பெருமக்கள் எல்லாம் நீண்டநாள் கோரிக்கையாக இதனை வைத்து வருகிறார்கள். உத்தரப்பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், இராஜஸ்தானிலும், இந்தியிலே வாதம் செய்வதற்கும், வழக்குகள் தாக்கல் செய்வதற்கும், அங்கே வாய்ப்புகள், வசதிகள், உரிமைகள் இருக்கின்ற நிலையில், மேற்கு வங்காளத்திலே பெங்காலி மொழியில் வாதம் செய்வதற்கும், வழக்குகள் தாக்கல் செய்வதற்கும் அங்கே உரிமைகள் தரப்பட்டிருக்கின்ற நிலையில், அதேபோல, கேரளாவிலே மலையாளத்தில் வாதம் செய்வதற்கும், வழக்குகள் தாக்கல் செய்வதற்கும் உரிமைகள் இருக்கின்ற நிலையில், நம்முடைய தமிழகத்தில் மட்டும் இங்கே, சென்னையில் உள்ள உயர் நீதிமன்றத்தில், மதுரையில் இருக்கின்ற உயர் நீதிமன்றக் கிளையில் அப்படி ஓர் உரிமை நமக்குத் தரப்படவில்லை, வசதிகள் இல்லை. எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு நம்முடைய அரசாங்கம் மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இழித்தரை என்னும் குக்கிராமத்தில் பிறந்து, அரசுத் துறையில் 5 ஆண்டு காலம் பணியாற்றிய என்னை, கிளைக் கழகச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர், நிலவள வங்கித் தலைவர், தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் பெருந்தலைவர், மாவட்டப் பஞ்சாயத்துத் துணைத் தலைவர் ஆகிய பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பினைத் தந்து, கூடலூர் சட்டமன்ற வேட்பாளராக என்னை அறிவித்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சர் என்ற பொறுப்பினைத் தந்த என்னுயிர் தலைவர், யாகம் செய்தால் போதும், எல்லாம் நடந்துவிடும் என்போர் உள்ள இந்த நாட்டில் தியாகத்தையே

வாழ்க்கையாக அமைத்துக்கொண்ட, தன்னலமறியாத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், ஐந்தமிழ் அறிஞர், பகுத்தறிவுச் செம்மல், ஏழையெளியோரின் பாதுகாவலர், தமிழுக்கு உயர் தனிச் செம்மொழி பெற்றுத் தந்த செம்மல், நாட்டு மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்லும் தமிழ் மறவர், என் உயிர் மூச்சு முழுமையும் நிறைந்துள்ள அய்யா கலைஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, தன்மானச் சுடர் இனமான பேராசிரியர் மாண்புமிகு நிதியமைச்சர் அய்யா அவர்களையும் வணங்கி, தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று, அயராது பணியாற்றி வரும், பெருமதிப்பிற்குரிய கழகப் பொருளாளர் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும் வணங்கி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து, எனக்காக உரையாற்றி, இரவு பகல் பாராது, ஊண், உறக்கம் இன்றி, என் போன்றவரையும் சட்டமன்றத்திற்குக் கொண்டுவர பாடுபட்ட, தமிழக மக்களின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், கொள்கை என்னும் மத்தினை, போராட்டம் என்னும் கயிறு கொண்டு, நாட்டு நலம் எனும் மலையைக் கடைந்தபோது, கிடைத்த அமிழ்தமாக விளங்கிவரும், போற்றுதலுக்குரிய நல்லாட்சியின் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்கி, 35 ஆண்டுக் காலம் அடிப்படைத் தொண்டனாக கழகப் பணியாற்றி வந்த என்னை, அரசியலில் வெளிச்சம் போட்டுக்காட்டி மென்மேலும் உற்சாகத்துடன் பணியாற்ற வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த மதிப்பிற்குரிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. குண்டன் அவர்களையும் வணங்கி, வரலாற்றுப் புகழ்மிக்க இந்த மாமன்றத்திலே நான் அமர்வதற்கு வாக்களித்த நீலகிரி மலை மாவட்டத்தின் கூடலூர் தொகுதியைச் சார்ந்த ஏழைத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட என்னுயிர் வாக்காளப் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், கழகத்தின் அனைத்துத் தரப்பு நிர்வாகிகளுக்கும், செயல்வீரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கதர் மற்றும் கிராமத் தொழில் துறை மானியக் கோரிக்கைக்கான எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 1-10

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுமார் 865 பணியாளர்கள் மிகையானவர்கள் என்பதனைக் காரணம் காட்டி, அவர்களைப் பணி



நீக்கம் செய்ய முடிவு செய்து, அதில் 97 பணியாளர்களை 12-3-2004 முதல் பணி நீக்கம் செய்துள்ளனர். அப்பணியாளர்கள் நீதிமன்றம் சென்றதன் பேரில், நீதிமன்றம் தன் உத்தரவின்படி மீண்டும் அவர்களுக்கு வேலை தர வேண்டும் என்று கூறியது. தமிழகத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பின்பு மேல்முறையீட்டிக்குச் செல்வதைத் தவிர்த்து, 97 பணியாளர்கள் வயிற்றில் பால் வார்க்கும்வகையில், பணிகளைக் கொடுத்தே பழக்கப்பட்ட உழைப்பாளிகளின் ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் ஆணைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) உடனே பணியமர்த்தப்பட்டனர்.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை துரிதப்படுத்தி, முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்குடன், 1960 ஆம் ஆண்டு இந்த வாரியம் துவங்கப்பட்டது. ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை, அப்பகுதியிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு குறைந்த மூலதனத்தில் கிராமத் தொழில்களை உருவாக்கித் தருவது இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் அடையாளம் கண்டுள்ள 116 கிராமத் தொழில்கள் விளிம்புத் தொகைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் தொழில் முனைவோருக்கு திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக 30 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையம் இந்த ஆண்டு விளிம்புத் தொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த 3.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதனை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாரியத்தில் 183 கிராம நூற்பு நிலையங்கள், 57 உப கிளைகள், 12 நேபாளி தறி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 20 ஆயிரம் கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 12,500 பேர் கிராமியப் பெண்களாவர். நடப்பு ஆண்டில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கதர் வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் போன்றவற்றை உற்பத்தி செய்து, அரசு மருத்துவமனைகள், கல்வி, இரயில்வே, துறைமுகம் போன்ற துறைகளுக்கு தேவையின் அடிப்படையில் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதனை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீருடைத் துணியின் தரத்தை உயர்த்த திருச்சிராப்பள்ளி மாவட்டம், கருங்குளம் மற்றும் என். பூலான்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள நேபாளி தறி அலகுகளிலுள்ள தறிகளில் கதர் ஆணையத்தின் நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தி, புதிய வடிவமைப்பில் உற்பத்தி பெருக்குதல் திட்டத்தின்கீழ் 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கட்டுப்பாட்டின்கீழ் 27 கதர்ப்பட்டு உப கிளைகள் இயங்கி வருகின்றன. புதிய வடிவமைப்பு பட்டுப் புடவைகள் ரூ.2,500/- மதிப்பில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாரியம் சுமார் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி மதிப்பிற்கு கதர்ப் பட்டுச் சேலைகளை வாரியத்தால் உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள் கிண்டி, வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் பேட்டை ஆகிய ஏழு இடங்களில் இயங்கி வருகின்றன.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அறைகலன்கள், இவ்வலகுகளிலிருந்து உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் தோல் தொழில் அலகுகளில் 19 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டு, பயனடைந்து வரும் சுமார் ஆயிரம் கைவினைஞர்களில் பெரும்பாலானோர் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர்கள்.

. தற்பொழுது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவை உற்பத்தி செய்யும் குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவைக் கட்டி மற்றும் தூள், ரப்–அப் பாத்திரம் துலக்கும் கட்டி, கிளீனிங் பவுடர் ஆகியவை பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன என்பதனை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாரியம் மூலிகா குளியல் சோப்பு, மூலிகை கை கழுவும் திரவம், எழில் ஷாம்பு மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணி தைலம், மற்றும் கூடுதலான நறுமணத்தோடு கூடிய புதிய வெள்ளை நிற குளியல்



சோப்புகளைத் தயாரித்து சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. வாரியத்தின் சோப்புவகைகளின் விற்பனையை நியாய விலைக் கடைகளின்மூலம் அரசு அறிமுகப்படுத்தியதிலிருந்து இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. வாரியமானது ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்கும், சிறைவாசிகளுக்கும் தேவையான குளியல் சோப்பு மற்றும் பற்பொடியினை விநியோகம் செய்து வருகிறது.

உபயோகிப்பாளரைக் கவரும்வண்ணம் சோப்பு அட்டைப் பெட்டிகள் நவீனமாக வடிவமைக்கப்பட்டு மேம்பாடு செய்வதற்கு இந்த அரசு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. நடப்பு ஆண்டு சாதாரண மக்கள் பயனடையும் வகையில், புதியதாக கிளிசரின் சோப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியம், தேனீ வளர்ப்பவர்களிடமிருந்து பச்சைத் தேன் கொள்முதல் செய்து பாட்டில்களில் நிரப்பி, பதப்படுத்தி அக்மார்க் முத்திரை பெற்று, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துக் கோயில்களுக்கும், தேன் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின்மூலம் பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வு திட்ட நிதி (SFURTI) என்னும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கென பொது வசதி மையம் அமைப்பதற்கு நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைமுறைக் காகிதத் தொழில்–'கழிவிலிருந்து செல்வம்' எனும் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டதாகும். இத்துறை நான்கு நிலைகளில், அட்டைப்பெட்டிகள், காகிதப் பை, உறைத்தாள், கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், Bond Paper, Manifolding paper, கைப்பைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்துவருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஊரகப் பகுதிகளில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு

வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும்பொருட்டு, மூன்று மட்பாண்ட அலகுகள் நடத்திவருகின்றது. இங்கு அழகு வண்ண அலங்கார மட்பாண்டப் பொருட்கள், பூந்தொட்டிகள், Ice Cream குடுவைகள் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

வாரியத்தின் அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 169 கதரங்காடிகளும், 10 கிராமப் பொருள் விற்பனை நிலையங்களும் மற்றும் 7 தோல்பொருள் விற்பனை நிலையங்களும் வாரியத்தின்கீழ் இயங்கிவருகின்றன. கண்காட்சிகள் நடத்துவதன் மூலமும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை செய்வதன் மூலமும், இணையதளம் இயக்கப்படுவதன் மூலமும், கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்களை மக்களிடையே விற்பனை செய்திட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாரியத்தின் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு, புதுடெல்லியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கென்று தனியே இடம் ஒதுக்கி, காதி கிராமோதய பவன் மூலம் கதர் வாரியப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விற்பனைப் பிரிவில், குறிப்பாக வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் குறிஞ்சி மற்றும் நீம் சோப்பு, ஜவ்வாது பவுடர், சுகப்பிரியா தைலம் போன்றவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விமானப் பணிப் பெண்களுக்குச் சீருடை வழங்க Air India மற்றும் Indian Airlines ஆகிய நிறுவனங்களை வாரியம் அணுகியுள்ளது. மாதிரி சீருடைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள், நடப்பு ஆண்டில் கதர் விற்பனை குறியீடாக 22 கோடியே 54 இலட்சம் ரூபாய், தோல் தொழிலுக்கு குறியீடாக 6 கோடி ரூபாயும், தச்சு மற்றும் கருமாரத் தொழில்களுக்காக 4 கோடியே 40 இலட்சம் ரூபாயும், சோப்புத் தொழிலுக்காக 4 கோடியே 50 இலட்சம் ரூபாயும், கைமுறை காகிதத் தொழிலுக்காக 60 இலட்சம் ரூபாயும், தேனீ வளர்ப்புத் தொழிலுக்காக 1 கோடியே 10 இலட்சம் ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதனை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை மேலும் மேலும் சிறந்து, சிறப்பாகச் செயல்படுவதற்காக முழு மூச்சுடன் எனது பணியைச் சிறப்பாக செய்து, இந்தத் துறையை மேலும் மேலும் வளர்க்கப் பாடுபடுவேன் என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்



தர கேட்டுக்கொள்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மறந்துவிட்டேன். அறிவிப்புகள், புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகளை, நான் @ படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேடுகளில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-20

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட மானியங்களான, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, பொதுத் துறை, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை ஆகியவற்றைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளையெல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்தத் துறைகளைப்பற்றிப் பேசுகிறபோது, எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், கடந்த காலத்தில் நடைபெற்ற, அவர்கள் சாதித்த, சாதித்ததாக அவர்கள் நம்புகிற, அவற்றையெல்லாம் எடுத்துச்சொல்லி, இன்னும் சொல்லப்போனால், அதற்கு முன்னாலே தொடங்கிய பணிகளையெல்லாம்கூட எடுத்துச் சொல்லி, தங்களுடைய பெருமையாக அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அதை நான் தவறு என்று கருதவில்லை. ஆனால், எந்த ஆட்சி வந்தாலும், அதற்கு முன்னால் நடைபெற்ற ஆட்சியில் நடைபெற்ற காரியங்களை அடிப்படையாக வைத்துத்தான், மேலே மேலே வளரமுடியுமேதவிர, கடந்த காலத்திலே நடைபெற்ற ஆட்சியினாலே ஏற்பட்ட விளைவுகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, எந்தவொரு புது ஆட்சியும், எந்தக் காலத்திலேயும் நடைபெறமுடியாது.

---

@ 571 முதல் 574 வரையிலான பக்கங்களில் இணைப்பு-VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.

ஜனநாயகத்திலே இந்தப் பரிமாற்றம், மிக சர்வசாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆட்சி மாற்றம், அடியோடு மாறும் நிலை மாற்றம் அல்ல. புதிய வளர்ச்சி மாற்றங்கள்தான் வருமே தவிர, அடிப்படை நிலைகள் அப்படியே நிலைக்கும். ஒரு பாலத்தைக் கட்டிக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சி மாறுமானால், பாதி அளவிலே கட்டப்பட்ட அந்தப் பாலத்தை, புதிய ஆட்சி தொடர்ந்து, விரைந்து கட்டுவதுதான் முறை. சில ஆட்சிகள்தான், இருக்கிற பாலத்தை இடித்துப் பார்ப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பொதுவாக உலகம் முழுவதும், அது அமெரிக்காவாக இருந்தாலும், இங்கிலாந்தாக இருந்தாலும், இந்தியாவிலே உள்ள வேறு பல மாநிலங்களாக இருந்தாலும், நடைபெற்ற ஆட்சியினுடைய விளைவுகளை ஏற்றுக்கொண்டு, அதிலே ஏதேனும் திருத்தங்கள் வேண்டுமானால் செய்து, புதிய வளர்ச்சிக்கு வழி காண்பார்கள். அந்த முறையிலே, இந்த ஆட்சி, இந்தத் துறைகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையைப் பொறுத்தவரையில் நடைபெறுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றொன்று; இங்கே பேசிய தி.மு.க. நண்பர், திரு. இராஜேந்திரன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே தொடங்கப்பட்ட பல காரியங்களை எடுத்துச் சொன்னார்கள். அதை நான் நினைவிலே கொண்டு மகிழ்கிறேன்.

திரு. போளூர் வரதன் அவர்கள், இங்கே உரையாற்றுகிறபோது, நேற்று நடைபெற்ற வாதத்தினுடைய தொடர்ச்சியாக இன்றையதினம் அவர் உரையை முடித்து வைத்தார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய உரிமையை உணர்வுபூர்வமாக இந்தச் சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு, அந்தச் சமுதாயத்திற்குத் தரவேண்டிய முக்கியத்துவம், ஒவ்வொரு துறையிலேயும் இடம்பெற வேண்டுமென்று அவர்கள் வாதாடிச் சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய மொத்த எண்ணிக்கையிலேதான், அந்த விகிதாச்சார அளவிற்கு, அவர்களுடைய நியாயமான உரிமைகளைப் பங்கிட்டுக் கேட்கலாம். துறைதோறும் கேட்பதென்றால், அறிவியல் துறையிலே, ஆய்வுத் துறையிலே, எந்தச் சமூகத்தார் ஒருவர், இருவர் வருகிறார் என்று கணக்கிட்டு காணவே முடியாது; அத்துறைகளில் யாரோ வருவார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அறிவியலிலே, ஆய்வுத் துறையிலே, சர்.சி.வி. இராமன் வந்தாரே என்பதற்காக, போட்டி போட்டுக்கொண்டு



சர். சி.வி. இராமனைப்போல இன்னொருவரைச் சொல்லமுடியாது. அதேபோல, டாக்டர் அம்பேத்கர் வந்ததைப்போல, இன்னொருவரை, இன்னொரு சமூகத்திலே, உடனே சொல்லமுடியாது. ஆகவே, சில துறைகளில், சமூக அடிப்படையிலே உள்ள நீதிக்காக தகுதியுடையவர்களை அடையாளம் காட்டமுடியாது.

சமூக நீதியினுடைய நியாயங்களை நாம் உணர்ந்து, ஏற்றுக்கொள்கிற அந்த உணர்வில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எல்லாத் துறைகளிலேயும், தகுந்த அளவிற்கு இடம் கிடைக்க வேண்டுமென்ற உணர்வை, திரு. போளூர் வரதன் அவர்கள், அவருடைய சொந்த அனுபவத்திலேயிருந்து விளக்கியதற்காகவும், அதேநேரத்தில், அவருடைய குடும்பத்தில் அனைத்துச் சாதியினரும் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்று சொன்ன, அந்தச் சமூக நீதிக்காகவும் நான் அவரைப் பாராட்டுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தமிழ்ச்செல்வன் அவர்கள், பல்வேறு வகையில், இந்தத் துறைகளிலே நடைபெற வேண்டிய, பல பணிகளைப் பற்றி அவர்கள் ஆர்வத்தோடு எடுத்துச் சொன்னார்கள்; அதையும் நான் வரவேற்கிறேன்.

நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்டு தலைவர், திரு. என். நன்மாறன் அவர்கள், நிர்வாக முறையிலே, இன்னும் பல சீர்திருத்தங்கள், பணியாளர் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும்; இப்போது தற்காலிகப் பணியாளர்களாக இருப்பவர்கள், தொகுப்பூதியம் பெறுகிறவர்கள், யாராக இருந்தாலும், உடனடியாக அவர்கள் நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதையும், ஊதியம் முறைப்படுத்தப்பட்ட, ஊதிய உயர்வுக்கு உறுதி செய்யப்பட்ட, அந்த நிலையான பணி வழங்கப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து என்றாலும், நடைமுறைப்படுத்தப்படுகிறபோது இந்த ஆட்சி அமைந்து இந்த நூறு நாட்களில் பல முயற்சிகள் செய்யப்பட்டிருப்பதை நம்முடைய நன்மாறன் அவர்கள் நிச்சயமாக அறிவார்கள்.

பிற்பகல் 1-25

அப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சியில் ஒவ்வொரு ஆணை பிறப்பித்ததற்குப் பின்னாலும், அந்த ஆணையினுடைய செயல், நடைமுறையில் செயல்படுத்துவதற்கு குறைந்தது மூன்று

மாதங்களிலேயிருந்து ஆறு மாதங்கள் ஆகும். சில ஆட்சியிலே ஐந்தாண்டுகள் ஆகும். ஆனால், இந்த ஆட்சியிலே நான் குறிப்பிட விரும்புகிறேன் ஆறு மாத அளவில் அறிவிக்கப்பட்டவை நிறைவேறும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று, ஏற்கெனவே இருந்த உரிமைகள் பறிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அந்த உரிமைகள் வழங்கப்படும். இழந்த உரிமைகளை அலுவலர்களுக்கு வழங்குவதன்மூலமாக அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு இந்த அரசு முன்னாலேயே அறிவித்து செயல்படுத்துகிறது. அப்படி வேலையிலே நியமிக்கிறபோது ஏற்கெனவே இருக்கிற ஏற்கப்பட்ட பணிகள், sanctioned posts அந்த இடங்களிலே காலி இருக்குமானால், உடனே அந்தந்தத் துறையினில் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அந்த அலுவலிலே நியமிக்க முடியும். ஆசிரியர் பணியிலே 500 இடங்கள் காலி இருக்கிறது என்றால், அந்த 500 இடங்களையும் விரைவாக நிரப்ப முடியும். ஆனால், புதிதாகத் தேவைப்படுகிற 300 ஆசிரியர்கள் நியமனம் என்று வருகிறபோது அது அடுத்த ஆணையிலேதான் புதிய தேவைகளுக்கு வழி செய்யலாம். ஏற்கெனவே உள்ள குறைகளைப் போக்குவதற்கே ஒரு பெரும் சுமை இருக்கிறபோது, புதிய தேவைகளுக்கு - உடனடியாக ஆணை பிறப்பிக்க இயலாது.

அதுமட்டுமல்லாமல், மற்றும் ஒன்று. ஏற்கெனவே தற்காலிகப் பணியாற்றுகிறவர்கள் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திற்கு முன்னாலே இருந்து தொடர்ந்து தற்காலிகப் பணியில் இருந்தால், அது கால ஓட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் இத்தனை ஆண்டு பணியாற்றியவர்களுக்குப் பணி நிரந்தரம் என்ற ஒரு முறை இருக்கிறது. நிதிச் சுமையைப் பகிர்ந்துகொள்வதற்காக வருகிற ஆண்டு, அடுத்த ஆண்டு என்று முறைப்படுத்தி, அவர்களை எந்த அளவு ஆண்டுதோறும் நிரந்தரம் செய்ய முடியுமோ, அந்த முறையிலே செய்யப்படும்.

மூன்றாவது, contract labour அல்லது contract அலுவலர் இருக்கக் கூடாது என்பது ஒரு கொள்கை. ஆனால், சில துறைகளில் contract பணியாளர்கள் இருந்தே தீர வேண்டும் என்ற ஒரு கட்டாயம் இருக்கிறது. சில மருத்துவமனைகளிலே நீங்கள் பார்த்தால், நிரந்தர ஊழியர்கள் 200 பேர், 150 பேர் இருக்கிற இடத்தில் பணிகளே நடைபெறுவதில்லை. Contract பணியாளர்கள் 50 பேர் இருக்கிற இடத்தில், அந்த 50 பேருக்கான Contract பணி நடைபெறுமானால் அந்த ஒப்பந்தக்காரர் அந்த 50 பேரைக் கொண்டு, 100 பேர் பணியை மிகச் செம்மையாக நிறைவேற்றுவதை நாம் பார்க்கிறோம். சென்னை மாநகராட்சி மன்றத்திலேகூட துப்புரவுத் தொழிலை நிறைவேற்றுவதற்கு



நிரந்தரப் பணியாளர்கள் 100 பேர், 500 பேர் இருந்து நிறைவேற்றியதைவிட contract பணியாளர்கள் மிகச் சிறப்பாக நிறைவேற்றியதாகவும் contract முறை மூலமாக பொதுமக்கள் திருப்தி அடைந்தார்கள் என்றும் கூறுகின்றனர். ஆகவே, அடியோடு contract கூடாது என்பது நிர்வாக முறையிலே முழு அளவுக்கு நமக்கு திருப்தி தருவதாக இருக்காது என்பதால், contract-யும் நாம் எந்தெந்த இடத்திற்கு கட்டாயத் தேவையோ, அவசியமாக இருக்கிறதோ அந்த இடங்களிலே பயன்படுத்த வேண்டியிருக்கிறது, அதுவும் பொதுமக்கள் நலனுக்காக என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை contract labour முறை அல்ல. அரசாங்கம் கூடுமானவரையில் contract முறையைத் தவிர்த்து நிரந்தரப் பணி வழங்க முன்வரும். தற்காலிக நியமனம் 10(a)(1) ஏற்கெனவே கைவிடப்பட்டு, இப்போது அதற்குப் பதிலாக தொகுப்பூதியத்திலே நியமனம் செய்வது என்பது ஒரு புதுப் பழக்கத்திற்கு வந்திருக்கிறது. தொகுப்பூதிய நியமனத்தை மாற்றி நிரந்தரமாக உரிய முறையில் அலுவலிலே சேர்க்கிற முறையில் ஆட்களை எடுப்பதற்கு, வேலையில் சேர்ப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கும். அதற்குத் தொடர்ந்து இந்த அரசு தகுந்த ஆணைகளை வெளியிடும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பொதுத் துறை குறித்த பல செய்திகளை பல மாண்புமிகு உறுப்பினர்கள் முழுவதும் கவனித்திருக்க முடியாது. இருந்தாலும் இந்த எண்ணங்கள் உங்களுடைய மனதிலே இருக்கும் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. பொதுத் துறை என்பது அரசாங்கத்தினுடைய பல கடமைகளிலே வெவ்வேறுவிதமாக பங்கு பெறுகிறது. அதிலே ஒன்று, முன்னாள் இராணுவத்தினருடைய பாதுகாப்பு, முன்னாள் படைவீரர்கள் – Ex-servicemen – அது ஒரு பெரிய கடமை. நாட்டுக்காக, சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக எல்லையிலே நின்று போராடிய வீரர்கள், அப்படிப்பட்ட வீரர்களுடைய பரம்பரையிலே உள்ளவர்கள், அந்த வீரர்கள் உயிரிழந்து அவர்களுடைய குடும்பம் பாதுகாக்கப்பட வேண்டிய நிலை. அப்படியெல்லாம் பல நேரம் பலர் வருகிறபோது, அதற்காக இருக்கிற ஒரு பெரிய அமைப்பு, ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிறது. அது தமிழ்நாட்டிலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறது.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அந்தமுறையிலே, முன்னாள் படைவீரர்களுடைய பாதுகாப்பு, அவர்களுடைய நலத் திட்டங்கள், அவற்றை நிறைவேற்றுவது பொதுத் துறையிலே ஒரு பகுதியினருடைய பணியாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, அகதிகளைக் காப்பாற்றுகிற ஒரு பெரிய பொறுப்பு. அதுவும் இப்போது அகதிகள், ஆயிரக்கணக்கிலே வருகின்றனர். அந்த எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. குறிப்பாக, இலங்கையிலேயிருந்து வருகிற அகதிகள் எண்ணிக்கை வளர்கிறது. இருந்தாலும், அந்த அகதிகளுடைய நிலைமையை, நம்முடைய அமைச்சர்கள் திரு. சுப. தங்கவேலன் அவர்களும் (ஒதுக்கீடு) அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதுகிறேன், அவர்களும் சென்று பார்த்துவிட்டு வந்து, அவர்களுடைய இரங்கத்தக்க நிலையைச் சொன்ன காரணத்தால், கலைஞர் அவர்கள், அகதிகளை அகதிகளாகவே விட்டுவிடக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கு ஏற்கெனவே மாதம் ஒன்றிற்கு, ஒரு adult என்று சொல்லக்கூடிய ஒருவருக்கு, மாதம் 200 ரூபாய் தரப்பட்டது. அது, இப்போது 400 ரூபாய் ஆக்கப்பட்டது. கூடுதல் நபருக்கு, ஒரே குடும்பத்திலே, அவரோடு சேர்ந்திருக்கிற மற்ற நபர்களுக்கு, 144 ரூபாய், மாதம் வழங்கப்பட்டது, தற்போது 288 ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முதல் குழந்தைக்கு 90 ரூபாய் வழங்கப்பட்டது. அது 180 ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, அடுத்த குழந்தைகளுக்கு ஏற்கெனவே 45 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது 90 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு வழங்கப்படுகிற அரிசி, கிலோ ஒன்றிற்கு, 57 காசுக்கு அவர்களுக்கென்று வழங்கப்படுகிறது. அதன்மூலமாக அவர்கள், பசி, பட்டினி இல்லாமல், தங்களுக்குப் பல்வேறுவிதமான துயரம் இருந்தாலும்கூட, அவர்களுடைய மனதிலே வேதனை இருந்தாலும்கூட, அவர்களைப் பசி, பட்டினியிலே வாடவிடாமல் அவர்களைக் காப்பாற்றுவதற்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டிருப்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த 2006-2007 ஆவது ஆண்டிற்கு, சில புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்று, அனைத்திந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குடியிருக்க சென்னையில் அரசு வாடகைக் குடியிருப்பு மிகவும் குறைவாக இருப்பதால், சென்னை



காயம்பேட்டில் உள்ள தெற்காசிய விளையாட்டுக் கிராமத்தில், ுவர்களுக்கு வாடகைக் குடியிருப்பு கட்டும் திட்டம் சயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்திற்கு மொத்தச் செலவினத் தாகை 8.9 கோடி ரூபாயில் 2006-2007 ஆம் நிதியாண்டில், 40 ழுக்காடு தொகையான 3.56 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ந்தப் பணி, குடியிருப்பு வசதியைப் பெருக்குகிற அந்தப் பணி டைபெறத் தொடங்குகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இந்திய ஆட்சிப் பணி பயிற்சியாளர்களுக்கு, துணை ட்சியர் தகுதிகாண் பருவத்தினர், மாவட்டப் பயிற்சியின்போது, ளப்பயிற்சி மற்றும் அனைத்து அலுவலகங்களிலும் பயிற்சி மற்கொள்ள பயணம் செய்வது இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. துதாவது, ஒவ்வொரு மாவட்டத்திலேயும், I.A.S., போன்ற குதிபெற்றவர்கள், பயிற்சி பெறுகிறபோது, அவர்களுக்கு உதவுவதற்கு, ப்புக்கள்—Jeep—தேவையைக் கருத்தில் கொண்டு, அரசு 10 புதிய ப்புக்கள் வாங்கவும் ஆணையிட்டிருக்கிறது. இவையெல்லாம் பொதுத் றையைச் சார்ந்த செய்திகள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, அது ரு தொடர் இயக்கம். தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றால்தான் ர்வாகம் சிறக்கும். அவ்வப்போதும் சீர்திருத்தம் தேவை. அவ்வப்போதும் விழிப்புணர்வுப் பணிகள் தேவை. நிர்வாகச் ர்திருத்தம் என்பதும், அவ்வப்போது பார்த்து, குறைகளைக் ளைவதன்மூலமாக, ஒரு பகுதியிலே போதுமான பணியாளர்கள் ல்லையென்றால், அங்கே பணியாளர்கள் கிடைக்கச் செய்ய வண்டும் என்பதற்காகவும் அதிகப் பணியாளர்கள் ருப்பார்களேயானால், அதைக் குறைப்பதற்கும், இப்படிப் பல்வேறு லோசனைகளை வழங்குகிற ஒரு துறையாக இந்தத் துறை இருக்கிறது. அதிலே, நம்முடைய நன்மாறன் அவர்கள் பேசுகிறபோது, அரசு ஊழியர்கள் ஏறத்தாழ 1 இலட்சத்து 75 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில், வேலையிலிருந்து விரட்டப்பட்ட அந்தக் காலகட்டத்தில், அவர்களுடைய சங்கத் தலைவர்கள் கைதான அந்தக் காலகட்டத்தில், அந்தப் பெரிய பிரச்சினையிலே அவர்களைக் காத்திட, ழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து, திராவிட முன்னேற்றக் ழகத் தொழிற்சங்கச் செயலாளர், தொ.மு.ச. தலைவர், வடசென்னை ாடாளுமன்ற உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்கள், உச்சநீதிமன்றத்தில் னு செய்த அந்தச் செய்தியை நான் அந்தத் துறைக்குத் தெரிவித்தபோது, அவர்கள் அதை இந்தக் குறிப்பில் சேர்த்துக்

கொண்டார்கள். அப்போது நான், நம்முடைய நன்மாறன் அவர்கள் சொன்னார்களே, C.I.T.U. தலைவரும், அதைப்போல விண்ணப்பம் மேல்முறையீடு செய்திருந்தார் என்று. A.I.T.U.C. தலைவரும் விண்ணப்பம் மேல்முறையீடு செய்திருந்தார். அதிலே C.I.T.U. தலைவருடைய மேல்முறையீடுதான், அங்கே எடுத்துக்கொள்ளப்பட்டது என்று சொன்னார்களே, அதனைக் கூறத் தவறிவிட்டேன். ஆனால், அந்த மேல்முறையீடுகள் ஒன்றுக்கு மூன்றாக இருந்த காரணத்தால்தான், நீதிமன்றம் உடனே எடுத்தது. ஆகவே, மேல்முறையீடுகளெல்லாம் ஒரே குறிக்கோளிலே போடப்பட்டு, அந்த நேரத்தில் அது எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உச்ச நீதிமன்றத்திலே ஏற்படுத்திய காரணத்தால், அதனுடைய அவசரத் தன்மையை உணர்ந்து, உடனடியாக அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுக்கவேண்டுமென்ற பொதுவான ஆணையும், யார் மீதாவது குற்றச்சாட்டு ஏற்கெனவே பதிவாகியிருக்குமானால், அது விசாரிக்கப்படலாம் என்றும் ஆணையிட்டு, அவர்களுக்கும்கூட வேலை அளிக்கக்கூடிய ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

*பிற்பகல் 1–35*

அப்படித் தெரிவிக்காமல் இருந்திருந்தால், இப்பொழுது தமிழ்நாட்டிலே ஒரு அரசாங்கமே நடக்க முடியாது. 1,75,000 பேர், அரசு அலுவலர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, எந்த அரசாங்கமும் நடக்கமுடியாது. ஆகவே, அப்படி ஒரு நிலைமை வராமல், அவர்களுக்கும் வாழ்வளித்து, அவர்களுடைய குறைகளைப் போக்கி, உரிமைகளைக் காப்பாற்றிய அந்த நிகழ்ச்சியை, நான் இப்பொழுதும்கூட, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளில் மிகவும் பாராட்டத்தக்க ஒரே தீர்ப்பு அதுதான் என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைப்பற்றி இங்கே குறிப்பிடுகிறபோது, அதிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஒரே ஓர் அம்மையார் செயலாளராக இருப்பதாக நான் கருதுகிறேன். இடைக்காலத்திலே, கடந்த ஆட்சியிலேதான் அவ்வளவுபேரும் நியமிக்கப்பட்டார்கள். வருங்காலத்திலே, தாழ்த்தப்பட்ட சமூகம், எந்தெந்த சமூகம், ஒடுக்கப்பட்ட சமூகம் என்று உணரப்படுகிறதோ, அந்தச் சமூகத்தை அங்கே அமர்த்துவதற்கு, கலைஞர் வழி காண்பார். அவர் அதற்குப் பழக்கப்பட்டவர். ஆகவே,





பழக்கப்பட்ட அந்தத் தலைவர், வழக்கப்படி செயலாற்றுவார் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பொதுவாக அரசாங்க அலுவலர்களிடத்திலே நாம் அனுதாபம் காட்டுகிறோம், அவர்களுடைய உரிமையை மதிக்கிறோம், அவர்களுடைய வேலை நிரந்தரமாக அவர்களுக்கு இருப்பதாக, ஓர் உணர்வு அவர்களுக்கு இருக்க வேண்டுமென்றும் நாம் கருதுகிறோம். அகவிலைப் படி போன்றவை, அவர்களுக்கு முறைப்படி வழங்கப்படுவதிலே, மத்திய அரசு எவ்வெப்போது அகவிலைப் படியை உயர்த்துகிறதோ, அவ்வப்போது எல்லாம் அகவிலைப் படியை, உயர்த்தி வழங்குகிற அந்த முறையை கலைஞருடைய ஆட்சியிலே, கடந்த காலத்திலே நாம் செயல்படுத்தினோம்.

சொல்லப்போனால், மத்திய அரசு உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய தலைமையில் ஒரு கமிஷனை நியமித்து, அந்த கமிஷன் தந்த ஆலோசனையின்படி ஊதியத்தை உயர்த்தியபோது, அது மிகப் பெரிய அளவு உயர்த்தப்பட்டதாக ஓர் உணர்வு இருந்தாலும்கூட, தமிழக அரசு அதை வரவேற்று, அந்த அடிப்படையில் செயல்பட்டதை, நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆனாலும், அரசு ஊழியர்களை ஆதரிக்கிற உணர்வு, அவர்களுடைய நலனைக் காப்பாற்றுகிற உணர்வு இருந்தாலும்கூட, சமுதாயத்தினுடைய நலனுக்காகத்தான் அரசு ஊழியர்களுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். சமுதாயத்தைக் கடந்து, அரசு ஊழியர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ யாரும் சமுதாயத்தைவிட, தனிப்பட்ட முறையிலே உயர்ந்தவர்களாக ஆகிவிட முடியாது. அவர்கள் தவறு செய்யாமல் இருப்பதைக் கண்காணிக்கவேண்டிய கட்டாயம், காலச் சூழலால் வளர்ந்துகொண்டே வருகிறது. மிகப் பழங்காலத்திலேகூட, ஊழல் இருந்தது என்று ஒரு பெரிய தலைவர் ஒருகாலத்திலே சொன்னார். ஆகவே, எல்லா காலத்திலேயும் ஊழல் இருக்கும். எல்லா காலத்திலேயும் கையூட்டு இருக்கும். எனினும், ஊழல் வளர்கிற ஒரு நிலையும் காலப்போக்கில் இருக்கிறது. சமூகத்திலே மக்களுடைய எண்ணிக்கை பெருகுவது காரணமாக, தேவைகள் வளர்வது காரணமாக, அரசினுடைய பணிகளை மக்கள் அதிகம் எதிர்பார்ப்பது காரணமாக, அரசுப் பணியிலே உள்ளவர்களிடத்திலே, குறைகள் வளர்கிற ஒரு நிலை இருக்கிறது. அந்தக் குறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, திருத்துவதற்காக, முறைப்படுத்துவதற்காக

மாநில விழிப்புப் பணி ஆணையம் செயல்படுகிறது. இந்த விழிப்புப் பணி ஆணையத்தின் சார்பாக, பல்வேறு பணிகளில், ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநரகம் என்னென்ன பணிகளை மேற்கொள்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன், எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

*(1)* இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து, நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, புலனாய்வு செய்வது, மற்றும் 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் குற்றச்செயல்கள் குறித்து புலனாய்வு செய்வது.

*(2)* பொதுமக்கள், அரசு, விழிப்புப் பணி ஆணையர் மற்றும் துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்படும் பொது ஊழியர்கள்மீதான குற்றவியல், தவறான நடத்தை, (இலஞ்சம் மற்றும் ஊழல்), குற்றவியல் கையாடல் மற்றும் குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி தொடர்பான புகார்கள்மீது விசாரணை மேற்கொள்வது.

*பிற்பகல் 1–40*

*(3)* மாவட்ட ஆய்வுக் குழு மற்றும் துறைத் தலைவர்களின் உதவியுடன் பல துறைகளில் உள்ள ஊழல் நடைபெறும் முக்கியமான இடங்களில், ஊழல் தடுப்பு நடவடிக்கையாக திடீர் ஆய்வு மேற்கொள்வது.

ஆக, இந்தப் பணிகள் எவ்வளவு இன்றியமையாத பணிகள் என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக எண்ணுவார்கள், கருதுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இந்த ஊழல் தடுப்பு முதலான பல கடமைகளைச் செய்கிற விழிப்புப் பணி ஆணையத்தினுடைய பணிகளைப் பற்றி தமிழ்நாடு விஜிலன்ஸ் கமிஷன் இதனுடைய 32–வது ஆண்டு அறிக்கை – இந்த அவையிலே வைக்கப்படுவதற்குரியது, இது ஏறத்தாழ, ஒரு 6–7 ஆண்டுகளுக்கு முன்னாலேயே எந்தெந்த ஆண்டினுடைய ரிப்போர்ட் என்றால், ஏப்ரல் 1997 முதல் 31 மார்ச் 1998 முடிய உள்ள பகுதிக்கான அறிக்கை. அதேபோல, 1998 முதல் 1999 மார்ச் வரையிலுள்ள அறிக்கை, அதேபோல 1999 ஏப்ரல் முதல் 31 மார்ச் 2000 வரையுள்ள அறிக்கை—இப்படி வந்திருக்கின்ற இந்த அறிக்கைகள் கடந்த 4–5 ஆண்டுகளுக்கு முன்னாலே—அந்தத் தேதி விவரம் எல்லாம்கூட தேவையானால் நான் சொல்லத் தயார்—அரசுக்கு அனுப்பப்பட்டு, முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு, அன்றைய முதலமைச்சர் இவற்றைச் சட்டமன்றத்திலே வைப்பதற்குரிய அனுமதியை வழங்காத காரணத்தால்,



இன்னும்சொல்லப்போனால், எங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற காலம் பற்றியது. அந்தக் காலத்து அறிக்கைகளைக்கூட இந்த அவையிலே வைப்பதற்கு அந்தக் காலகட்டத்தில் கையொப்பமிட்டு, அனுப்பாத காரணத்தால் அப்படியே தேங்கியிருந்து இப்பொழுது, மறுபடியும் கலைஞரிடத்திலே அந்த அறிக்கைகள் எல்லாம் வந்து, அவற்றை அவையிலே வைக்கப்படக்கூடிய ஒரு நிலைக்கு வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விஜிலன்ஸ் கமிஷன் அறிக்கை, இது அரசாங்க நிர்வாகத்தைப் பற்றியது. இதை நான் குற்றமாகக்கூட அல்ல, நிலைமை விளக்கமாக–தன்னிலை விளக்கம் அல்ல, பொதுநிலை விளக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, இங்கே இந்தத் துறையிலே ஒரு முக்கியமான பகுதியாக அமைந்துள்ளது, தமிழ் வளர்ச்சி–பண்பாடு துறை; அவற்றினுடைய வளர்ச்சிக்காக அரசு ஆற்றுகிற பணியைப் பற்றிய விளக்கங்கள். இது ஒரு மிக முக்கியமான பகுதி. அந்த முறையில் இங்கே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. இளவரசன் அவர்கள் ஆற்றிய அந்த உரை இந்தத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு முன்னுரையாக இருந்தது என்று அவரை நான் பாராட்ட விரும்புகிறேன்.

தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கி, கலைஞர் காலத்திற்கு வந்தார்கள். ஆக, தமிழ் எப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு மொழி என்ற அந்தப் பெருமையையெல்லாம் அவர் எடுத்துச் சொன்னது, அது ஆட்சி மொழி தகுதியும் உடையது, செம்மொழி சிறப்புக்கும் உரியது, என்றைக்கும் நம்முடைய வாழ்வோடு இணைந்தது என்ற உணர்வோடு நம்மால், என்றைக்கும் பாதுகாக்கப்படவேண்டியது என்பதை உணர்த்தியது.

அதேபோல அவர்கள் மேலும் சொன்னார்கள், தமிழ்நாட்டில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்தியைத் திணித்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் அதை எதிர்த்தார்கள். அந்தப் போராட்டம் நடைபெற்று, அதிலேயிருந்துதான் இந்த மொழிப்பற்றும், விழிப்புணர்ச்சியும் அதிகமாயிற்று என்று ஒரு விளக்கம் சொன்னார்கள்.

மூதறிஞர் இராஜாஜி இந்தியைக் கொண்டு வந்த காரணத்தினால் நமக்கு எதிரியாகிவிடவில்லை. ஆகவேதான் இந்த அவையிலேகூட, ஒரு பக்கம் மூதறிஞர் இராஜாஜி, இன்னொரு பக்கம் பெரியார்,

இருவருடைய படமும் இருக்கிறது. சட்டமன்றம், என்னென்ன கொள்கைகள் நாட்டிலே இடம்பெற்றிருந்தாலும்கூட, அந்தக் கொள்கைகளுக்கிடையில் அவ்வப்போது, காலத்தையொட்டி சீர்தூக்கிப் பார்த்து, ஏற்ற கொள்கையை—எது நல்லது என்பதைத் தீர்மானிக்கிற ஓர் இடமாக இருப்பதற்கு அடையாளமாக இந்த அவையிலே, இருக்கிறது பேரறிஞர் அண்ணா படம். திருவள்ளுவர் நடுநிலையாக விளங்குகிறார். மகாத்மா காந்தி வழிகாட்டியாக விளங்குகிறார். மூதறிஞர் இராஜாஜி, பெரியார், அண்ணா, காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், காமராஜர் ஆகிய அப்படிப்பட்டவர்களுடைய படங்கள் இங்கே இருக்கிறபோது, (குறுக்கீடுகள்) நான் அடிக்கடி மறந்துவிடுகிற பெயர் அது. இருந்தாலும்கூட, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் – அவருக்கும் ஒரு கொள்கை உண்டு. அந்தக் கொள்கை என்ன என்பது கடைசி வரையில் எனக்குப் புரியாவிட்டாலும்கூட, அவருக்கென்று ஒரு கொள்கை இருந்தது. அந்தக் கொள்கை வழியிலே அவர் நடந்தார். தமிழ் மக்களுடைய அன்பைப் பெற்றவர் என்றமுறையிலே, அவருக்கு ஒரு சிறப்பு நிச்சயமாக உண்டு. மக்களின் அன்பை இழக்காதவர்; பெற்றது மட்டுமல்ல, இழக்காதவர். சில பேர், பெற்று இழந்துவிடுவார்கள். ஆகவே, எம்.ஜி.ஆர். அவர்கள், மக்களிடத்திலே அன்புடையவர் என்ற முறையிலே அவருக்கு உரிய மதிப்புக் கொடுப்பதிலே எனக்கு எந்த மாறுபாடும் இல்லை. எனவே, அவர்களுக்கிடையில் பல்வேறு விதமான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, அந்தக் கருத்து வேறுபாடுகள்தான் ஜனநாயகத்திற்கே வேராக இருக்கிறது எனலாம். இவற்றிலிருந்து ஒரு தெளிவு ஏற்படுகிறபோதுதான் ஜனநாயகத்திற்குப் பலன் கிடைக்கிறது என்பதற்கு அடையாளமாக, இந்த மன்றத்தில் அத்தனை தலைவர்களும் உள்ளனர். எத்தனைப் போராட்டங்களை ஒருவருக்கொருவர் எதிர்த்து நடத்தியிருந்தாலும்கூட, நாட்டிற்காக, சமுதாயத்திற்காக, மக்களுக்காகத்தான் அவர்கள் போராடினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–45*

தமிழ் வளர்ச்சி–பண்பாடு என்பதில் தமிழ்மொழி இப்போது ஏறத்தாழ ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த மானியக் கோரிக்கையினுடைய தமிழ் விளக்க ஏட்டில் பல செய்திகள் சொல்லப்பட்டாலும்கூட, அவை அனைத்தும், அந்தந்தப் பகுதியிலே இடம் பெறுகிற காரணத்தால், அவற்றை ஒரு சாதனையாக அல்லது திட்டமாக பல பேர் எண்ணிப்பார்க்கக்கூடிய வாய்ப்பு அந்த



அறிக்கையிலே அமையவில்லை. ஆகவே, நான் சொல்ல விரும்புகிறேன். ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இந்த ஆண்டு ஆட்சிமொழித் திட்டப் பொன் விழா கொண்டாடப்படும். ஆட்சிமொழியைச் செயல்படுத்துகிற திட்டப் பொன் விழா கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் தற்போது ரூ.500/– நிதியுதவி பெற்று வருகின்றனர். திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் இந்த நிதியுதவி 500/– ரூபாயிலிருந்து 1000/– ஆக உயர்த்தி இந்த நிதியாண்டிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், மொழி பெயர்ப்புகள் முதலிய படைப்புகளைப் படைத்து, தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் எழுத்தாளர்கள் பலர் நலிவுற்ற நிலையில் உள்ளனர். தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இத்தகைய படைப்பாளர்களைப் பேணிக் காக்க வேண்டியது இன்றியமையாதது என்ற நோக்கத்தில் 'எழுத்தாளர்கள் நல நிதித் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 100 படைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில் காப்பீடு செய்து – உடல் நல மருத்துவக் காப்பீடு செய்து—Insurance for Health Scheme—ஒரு இலட்சம் மதிப்பில் காப்பீடு செய்து, அதற்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தவணைத் தொகையை அரசே செலுத்தும். இதனால் அரசுக்கு ஓர் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் செலவினம் ஏற்படும்.

பிற மாநிலங்களில் தமிழ் மொழி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும், தமிழை ஒரு பாடமொழியாகப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விலும், பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்விலும், அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும். முதல் பரிசு ரூ.10,000/–, இரண்டாவது பரிசு ரூ.5,000/–, மூன்றாவது பரிசு ரூ.3,000/– எனப் பரிசுகள் வழங்கப்படும். புதுடெல்லி, மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஆந்திரம் மற்றும் கேரளா ஆகிய 6 மாநிலங்களில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும்.

நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை போன்ற நூல்கள் வைக்கப்பட்டுள்ளதைப்

போன்று ஆங்கில மொழியாக்கத்துடன்கூடிய திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், புதுடெல்லி தமிழ்நாடு இல்லம் மற்றும் சென்னை அரசினர் விருந்தினர் இல்ல அறைகளிலும் வைக்கப்படும். இந்த நூல்கள் இலவசமாக வழங்கப்படும். இதனால் இந்த உணவக விடுதிகளில் தங்கும் வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் திருக்குறள் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

தமிழ் மொழியின் மேம்பாட்டிற்கும், வளமைக்கும் தொண்டாற்றிய–தொண்டாற்றி வருகின்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழறிஞர்களைப்பற்றி விளக்கப்படச் சுருள் – Documentary film– தயாரிக்கும் திட்டம் செயற்படுத்தப்படும்.

தமிழ்ப் படைப்பாளிகளில் யார், எவர்? எனும் தொகுப்பு நூல், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம் மற்றும் தமிழ் இலக்கணக் கலைக் களஞ்சியம் ஆகிய நூல்கள் தயாரித்து வெளியிட ஒரு குழுவை அமைத்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

வாரணாசி இந்து பல்கலைக்கழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத–கொண்டு இல்லாத, தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஒருவருக்கும், முனைவர் பட்டத்திற்கு மேற்பட்ட முதுநிலை ஆய்வு மாணவர் ஒருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும்.

பிற்பகல் *1–50*

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி, அது தேவநேயப் பாவாணர் அவர்கள் இருந்தபோது, அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. அகரமுதலித் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் மேலும் 7 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்படும்.

கலை–பண்பாட்டு இயக்ககம். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழா இந்த ஆண்டு கொண்டாடப்படும்.

நலிந்த நிலையில் வாழும் கிராமியக் கலைஞர்கள் உட்பட, தற்போது—இங்கேகூட இந்த மன்றத்தில் நலிந்த நிலையில் வாழும்



கலைஞர்களைப் பற்றி குறிப்பிட்டு, உதவ வேண்டும் என்று கேட்டார்கள்—அந்த நலிந்த நிலையில் வாழும் கிராமியக் கலைஞர்கள் உட்பட தற்போது 5,150 கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில், மேலும் 500 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000/– வீதம் நிதி உதவி வழங்கப்படும்.

17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் தற்போது குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய பிரிவுகளில் இசை பயிற்றுவிக்கப்படுகிறது. இவ்விசைப் பள்ளிகளில் கூடுதலாக வயலின் மற்றும் மிருதங்கப் பிரிவுகள் ரூபாய் 52.70 இலட்சம் செலவினத்தில் தொடங்கப்படும்.

நான்கு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளி மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்காக பரதநாட்டிய அணிகலன்கள் வாங்கப்பெறும்.

சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் சிற்பக் கலைப் பிரிவில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பெறும்.

மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிக்கு நூலகம் மற்றும் கணினி மையம் ரூபாய் 20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் மற்றும் மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை ஊக்குவிக்கவும், பழங்குடியினர் கலை விழா நடத்தவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் அமைக்கப்படும்.

கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு ஓர் அலுவலகக் கட்டடம் கட்டப்பெறும்.

தொல்லியல் துறை. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 87 வரலாற்றுச் சின்னங்களுள் 6 வரலாற்றுச் சின்னங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மதுரை மாவட்டத்தில் உள்ள மாங்குளம் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள நெடுங்கூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணி மேற்கொள்ளப்படும்.

நாகப்பட்டினம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கல்வெட்டு நூல் அச்சிட்டு வெளியிடப்படும்.

கரூர் மற்றும் குற்றாலத்தில் உள்ள தொல்லியல் அருங்காட்சியகங்கள் மேம்படுத்தப்படும்.

மதுரை திருமலை நாயக்கர் மகால் ரூபாய் மூன்று கோடி செலவில் சீர்திருத்தப்படும், மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் குறிப்பேட்டிலே இடம்பெறாமல் இப்பொழுது அறிவிக்கின்ற செய்திகளாக—

*"வள்ளுவன் தன்னை உலகினுக்கே-தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டிற்கு"*

வருகைதரும் வெளி நாட்டவர்களும், பிற மாநிலத்தவர்களும், அரசு விருந்தினர்களும் திருக்குறளின் பெருமையை தெரிந்துகொள்ளும் வகையில் அய்யன் வள்ளுவரின் அடிதொடரும் இவ்வரசு புதிய ஒரு திட்டத்தை செயல்படுத்த முன்வந்துள்ளது. அதன்படி, நட்சத்திரத் தகுதி பெற்ற - ஏற்கெனவே குறிப்பாக சொல்லப்பட்ட செய்தி — நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை போல திருக்குறளும் ஆங்கில மொழிபெயர்ப்போடு வைக்கப்படும். சமுதாயத்தின் உருவாக்கமாக மொழி தோன்றினும், அம்மொழியின் வளர்ச்சிக்கு தனி மனிதர்களின் படைப்புகளும், பங்களிப்பும் இன்றியமையாதனவாகும். அவ்வகையில் தன்னைப் பற்றியோ, குடும்பத்தின் வளர்ச்சி பற்றியோ கருதாமல், படைப்பு இலக்கியங்களால் தமிழின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவியாகும் எழுத்தாளர்கள் அரசின் போற்றுதலுக்கும், பாராட்டுதல்களுக்கும் உரியவர்கள் ஆவார்கள். அவ்வாறு கவிதைகள், கட்டுரைகள் முதலான மொழிபெயர்ப்புகள் முதலிய படைப்புகளைப் படைத்து, தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் செய்யும் எழுத்தாளர்களுக்கு அவர்களுடைய நலிவை நீக்குவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில், நான் முன்னால் சொன்ன மருத்துவ உதவி பெறும் வகையிலான அந்தத் திட்டம் ஒன்று இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். ஆகவே, இப்படி அறிவிக்கப்படும் இந்தத் திட்டத்தையும் மறுபடியும் துறையினர் விரிவாக எழுதித் தந்திருக்கிறார்கள். நான் சுருக்கமாக முதலிலேயே படித்துவிட்டேன். ஆகவே, விரிவாக உள்ளதை மீண்டும் படித்து, உங்களுடைய நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, இப்படி இந்த மூன்று துறைகளும் ஆற்றுகிற பணிகள் தொடர்ந்து வருபவை. கடந்த



காலத்திலே, 20 ஆண்டுகள், 25 ஆண்டு காலமாக, படிப்படியாக வளர்ந்து வருகிற பணிகள். மேலும் வளர்கிற பணிகள். இவற்றைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த வெட்டுத் தீர்மானங்கள் ஏராளம் இருக்கின்றன.

பிற்பகல் 1-55

வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் நான் எடுத்துவைத்த, விளக்கங்களை உங்களுக்குச் சொல்வதாக இருந்தால், அதைக் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய அளவுக்கு காலம் இடம் தராது. ஆகவே, அந்த வெட்டுத் தீர்மானங்களை நிச்சயமாக அந்தந்த துறையினர்கள் உரிய முறையில் பரிசீலித்து, ஆற்றக்கூடிய பணியை, நிறைவேற்றக்கூடிய கடமைகளை அரசுக்குத் தெரிவித்து, அவற்றை நிறைவேற்ற முன்வருவார்கள். நான் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை கோரிக்கையாகக் கருதி, இயன்றவரையில் நிறைவேற்ற முயற்சிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், என்னுடைய வேண்டுகோளை ஏற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு, இந்த அவையிலே உள்ள அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் சொல்கிறபோது, புரட்சித் தலைவரைப்பற்றி, அவருடைய கொள்கை என்ன என்பது எனக்குப் புரியவில்லை என்று சொன்னார்கள். வரையாது வழங்குவதே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்தவர் புரட்சித் தலைவர் என்பதை அவர் புரிந்துகொண்டால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்களை டிஸ்மிஸ் செய்தபோது, 15,000 அரசுப் பணியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 4,000 ரூபாய் தொகுப்பூதியமாக அவர்களுக்கு வழங்கி, முந்தைய அரசு அப்போது பணியிலே அமர்த்தியது. அவர்களை நிரந்தரமாக்குகின்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் துறையிலே ஈடுபட்டிருப்பதுதான் பூதான இயக்கம். அந்தப் பூதான இயக்கத்திற்கு கடந்த பல ஆண்டுகளாக, 'Board of Directors' போடாத காரணத்தினால் அந்தப் பூதான இயக்கத்தினுடைய பணிகள் முடக்கப்பட்டு கிடக்கின்றன. ஆகவே, அந்தப் பூதான இயக்கத்திற்குரிய அந்த 'Board of Directors' என்கின்ற அந்தக் குழுவினை அரசு விரைவிலே உருவாக்கித் தருமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திரு. செங்கோட்டையன் அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொடை வள்ளலாகத் திகழ்ந்ததைச் சொன்னார்கள், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர், கொடை வள்ளலாகத் திகழ்ந்த காரணத்தால்தான் நாடே அவர் கையிலே போய்விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுதர்சனம் அவர்கள், இடையிலே, அரசு அலுவலர்கள் நீக்கப்பட்ட நேரத்தில் தற்காலிகமாக வேலைக்கு எடுக்கப்பட்டவர்களையெல்லாம் நிரந்தரமாக ஆக்குவீர்களா என்று கேட்டார். 'ஆக்கலாம்' என்ற எண்ணம் இருந்தாலும்கூட, ஆக்குவதற்குச் சில தடைகள் இருக்கின்றன. அவை ஆய்வு செய்யப்படுகின்றன. அதற்குப் பின்னர்தான் முடிவு அறிவிக்க முடியும். அனைவரையும் ஆக்க முடியுமா? சிலருக்குத்தான் தகுதி இருக்கிறதா? இன்னும் சொல்லப்போனால் சமூக நீதி அடிப்படையிலே, Communal G.O. அடிப்படையிலே, இட ஒதுக்கீடு அடிப்படையிலே, அவர்கள் அனைவரையும் நேரடியாக எடுக்கக்கூடிய நிலை இருக்குமா என்பதை ஆய்வு செய்து அந்த அடிப்படையிலேதான் தெரிவிக்க முடியும்.

அதேபோல அம்மையார் அவர்கள் பூதான இயக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். பூதான இயக்கம் வெளியிலே நடக்கவில்லை. ஆகவே, அந்தத் துறையேகூட நிலச் சீர்திருத்தத் துறையோடு சேர்த்து, இணைத்து அதன்மூலமாகச் செயல்படுவதற்கு, Revenue இலாகாவிலே இணைப்பதற்கு கருதப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். (குறுக்கீடுகள்) போதும், இத்தனைக் கேள்விகள் போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)



## (ஆ) கோரிக்கை எண் 35 – பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. (குறுக்கீடுகள்) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.29,21,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.21,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 2-00

## (ஆ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38– பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.186,84,92,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (இ) கோரிக்கை எண் 46 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி-பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.



திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

திரு. கு. செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜான் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.43,54,22,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,50,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஈ) கோரிக்கை எண் 18 — கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 18 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

[2006 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.53,09,64,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.34,45,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்றும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-8-2006) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

25. 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

91. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1997 முதல் 31-3-1998 வரையிலான கால அளவுக்கான முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)



2006 ஆகஸ்ட் 25]

92. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1998 முதல் 31-3-1999 வரையிலான கால அளவுக்கான முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

93. தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையத்தின் 1-4-1999 முதல் 31-3-2000 வரையிலான கால அளவுக்கான முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

94. மானியக் கோரிக்கை எண்35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

95. மானியக் கோரிக்கை எண்38-பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

96. மானியக் கோரிக்கை எண்38-தேர்தல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

97. மானியக் கோரிக்கை எண்46-தமிழ்வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ்வளர்ச்சி-பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

98. மானியக் கோரிக்கை எண்18 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

99. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006-2007. (தமிழ்)

100. உடுக்குறியிடாத வினாக்கள் விடைகள் பட்டியல (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

# இணைப்பு I

*(336 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

1973 ஆம் ஆண்டு மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 1976 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாளில் தோற்றுவிக்கப்பட்டது. அரசின் செயல்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும் அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் இத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகும் தனித்தனிச் செயலாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது.

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி) துறை

2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையானது அறிவுரை வழங்கும் பணிகள், சட்டப்பூர்வமான பணிகள் மற்றும் நிருவாகப் பணிகள் ஆகிய முக்கிய பணிகளை ஆற்றி வருகிறது.

### 3. அறிவுரை வழங்கும் பணிகள்

"தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்" ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக அறிவுரை வழங்கும் ஒரு துறையாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது:

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின்கீழ் வரும் பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீட்டை நிர்ணயம் செய்தல், பதவி உயர்வு மற்றும் உயர்பதவியில் பணி நியமனம் ஆகியவற்றுக்கான தேர்ந்தபட்டியல் தயாரித்தல்.

(ii) அரசு அலுவலர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாகச் சிறப்பு / பொது விதிகளைத் தளர்த்துவது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்.

(iii) அடிப்படை விதிகளில் உள்ள பல்வேறுபட்ட காப்புரைகள் குறித்த ஆலோசனை வழங்குதல்.

(iv) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொதுவிதி 35 இன்கீழ் முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வுசெய்தல்.

(v) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல் / அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப்படும் 'அங்கீகரிப்புக் குழு' முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடல்.

## 4. சட்டப்பூர்வமான பணிகள்

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாக பின்வரும் சட்டமுறை மற்றும் ஒழுங்குமுறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:

(அ) மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணி விதிகள் (அகில இந்திய பணிகள் நீங்கலாக):-

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள் (பகுதிகள் I மற்றும் II) ;

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

(iv) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;

(v) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;



(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணி விதிகள்:-

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள்–இனம் XXII.

(இ) தலைமைச் செயலகப் பணி:-

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள்–இனம் XII மற்றும் XII அ

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

## 5. அரசு அலுவல்கள்

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவல்கள் பின்வரும் விதிகளின்படி இத்துறையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகின்றன:-

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;

(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

## 6. நிருவாகப் பணிகள்

தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் நிலை வரை அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்தும் இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் முன்பிருந்த தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்

ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

## 7. பணியாளர் சங்கங்கள்

பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது ஆகியவை இத்துறையின் பொறுப்பாகும்.

## 8. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடன் நல்லுறவு

அரசின் செயல்பாடு மற்றும் அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மிக முக்கிய பணியில் ஈடுபட்டுள்ளதால், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் அரசுடனான நல்லுறவின் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது.

2. 2003 ஆம் ஆண்டில், அரசின் நிதிப் பற்றாக்குறை என்ற காரணம் காட்டி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்றுவந்த பின்வரும் சலுகைகள் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் விலக்கிக்கொள்ளப்பட்டன:–

(i) முழு ஓய்வூதியம் பெறும் தகுதியை 30 ஆண்டிலிருந்து 33 ஆண்டாக உயர்த்தியது;

(ii) இறுதி நாள் ஊதியத்தில் 50 சதவிகிதத்திற்குப் பதிலாக இறுதி 10 மாத ஊதியத்தின் சராசரியில் 50 சதவிகிதத்தை ஓய்வூதியமாக நிர்ணயித்தது;

(iii) ஒப்படை ஓய்வூதியத்தை 40 சதவிகிதத்திலிருந்து குறைத்து 33.33 சதவிகிதமாக நிர்ணயித்தது.

(iv) போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்குவதை 2002 ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டது.

(v) ஈட்டிய விடுப்பு ஒப்பளித்து பயன் பெறும் சலுகை முழுமையாக நிறுத்தப்பட்டது.

3. புதியதாக எந்தச் சலுகையும் வழங்கப்படாத நிலையில், 2002 ஆண்டுவரை பெற்று அனுபவித்து வந்த ஓய்வூதியம் உள்ளிட்ட சலுகைகள் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து அரசு ஊழியர்கள் தமது அமைப்பின்மூலம் கோரிக்கை வைத்து அது ஏற்கப்படாததால் காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தை ஒடுக்கும் எண்ணத்தோடு அப்போதைய அரசு



தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை இயற்றியது. அதன் அடிப்படையில் 1,70,241 அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓரே அரசு ஆணையினால் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் 554 தலைமைச் செயலகப் பணியாளர்கள்மீதும். பிற துறைகளைச் சார்ந்த 1,657 பணியாளர்கள்மீதும், சாலை மறியலில் ஈடுபட்டதாகவும், அரசுப் பேருந்துகளைச் சேதப்படுத்தியதாகவும், பொய் வழக்குகள் புனையப்பட்டு 2,211 பேர் (நள்ளிரவில் கைது செய்யப்பட்டு) சிறையில் அடைக்கப்பட்டனர். சுய மரியாதையோடு வாழ்ந்த அரசுப் பணியாளர்கள் பலர் பொய் வழக்குகளுக்குப் பயந்து இரவோடு இரவாக தலைமறைவான சம்பவங்களும் நடந்தன. அவர்கள்மீது எடுக்கப்பட்ட இத்தகைய கடும் நடவடிக்கையினால் மனம் நொந்து 50-க்கும் மேற்பட்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உயிரிழந்தனர்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட அரசுப் பணியாளர்கள் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், உயர் நீதிமன்றத் தனி நீதிபதி, "விசாரணையின்றி ஊழியர்களைப் பணியிடை நீக்கம் பணியறவு செய்த அரசின் நடவடிக்கையை நிறுத்திவைத்தும், அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்து பணியில் தொடருமாறும்", இடைக்கால உத்தரவு வழங்கினார். இவ்வுத்தரவை எதிர்த்து மாநில அரசு உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அரசு ஊழியர்கள் சார்பில் தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003-ஐ எதிர்த்து மனுக்கள் போடப்பட்டன. அரசின் மேல்முறையீட்டை விசாரித்த டிவிஷன் பெஞ்ச், "மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தை அணுகித் தங்கள் குறையைப் போக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் நேரடியாய் உயர் நீதிமன்றத்தை அணுகியது தவறு" என்ற காரணம் கூறி இடைக்கால உத்தரவை தள்ளுபடி செய்து 11-7-2003 அன்று தீர்ப்பு வழங்கியது. மேலும், பணியறவு / இடைக்காலப் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் டெஸ்மா சட்டப் பிரிவு 7(3)-ன்கீழ் அரசுக்கு முறையீட்டு மனு கொடுக்கலாம் எனவும் தீர்ப்பளித்தது. தமது முறையீட்டை அரசு பரிவுடன் கருதத் தடையாகிவிடுமோ என்ற கலக்கத்தில், உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பை எதிர்த்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டமைப்பு மேல்முறையீடு செய்யவில்லை.

இந்நிலையில், வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தொழிற் சங்கத் தலைவர், திரு செ. குப்புசாமி, எம்.பி., அவர்கள்

[2006 ஆகஸ்ட் 25

தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003-ஐ எதிர்த்தும், பணிநீக்கம் செய்யப்பட்ட சுமார் 1,75,000 ஊழியர்களைப் பணியில் அமர்த்தவும், பல்வேறு மனுக்களைத் தாக்கல் செய்தார். எந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல் அரசு இலட்சத்திற்கு மேற்பட்ட பணியாளர்களைப் பணிநீக்கம் செய்ததில் அவர்கட்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைவதற்கு உச்ச நீதிமன்றம், வேலைநீக்கம் செய்த பணியாளர்களை வேலையில் சேர்க்க வேண்டுமென்று ஆணையிட்டது. அதன்படி, 1,56,106 பணியாளர்கள் 25-07-2003 அன்று பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பின்னர், 06-08-2003 அன்று 8,427 பணியாளர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் உச்ச நீதிமன்ற ஆணையின்படி நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவினர் மேற்கொண்ட விசாரணை முடிவின் அடிப்படையில் 17-11-2003 மற்றும் 31-12-2003 தேதிகளில் 4,705 பணியாளர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். குற்றச்சாட்டு காரணமாக 1,003 பணியாளர்கள் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுக்கும் பின்னர், 10-02-2004 அன்று பணி வழங்கப்பட்டது. முறையில்லாமல் பறிக்கப்பட்ட சலுகைகள் திருப்பி அளிக்கப்பட்டாலும், உச்ச நீதிமன்ற ஆணையால் பணியறவு மற்றும் பணிநீக்க ஆணைகள் திரும்பப் பெறப்பட்டாலும், பாதிப்புக்கு ஆளான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோருக்கும் அரசுக்கும் இடையிலான உறவுகளில் சுமுகமற்ற நிலைதான் தொடர்ந்தது. மே 2006-ல் பதவியேற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நியாய உணர்வு காரணமாக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் குறைகளைப் போக்கவும் கோரிக்கைகளை நிறைவேற்றவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:-

(i) 7-6-2006 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கைமூலம் தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் (டெஸ்மா) திரும்பப் பெறப்பட்டது. (இரத்து செய்யப்பட்டது)

(ii) வேலையில் எவரையும் சேர்க்க விதித்த தடையாணையால் அக்காலகட்டத்தில் விண்ணப்பிக்க வாய்ப்பின்றிப் பாதிக்கப்பட்டுக் காத்துக்கிடந்த இளைஞர்களுக்கு தற்போது அந்த வாய்ப்பு அளித்திட அரசுப் பணியில் சேர நிர்ணயிக்கப்பட்ட வயது உச்ச வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(iii) 23-06-2006 அன்று தலைமைச் செயலகச் சங்கம் நடத்திய விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சர்



2006 ஆகஸ்ட் 25]

அவர்கள் வழங்கிய அறிவிப்பினைத் தொடர்ந்து பின்வரும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(அ) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 10-04-2003 மற்றும் 01-07-2003 முதல் 04-07-2003 வரையிலான நாட்கள், ஊதியமில்லா விடுப்பாக முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டிருந்ததை இந்த அரசு பணிக் காலமாக ஏற்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) தலைமைச் செயலகத்தில் மாலை நேரத்தில் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இடும் முறை இரத்து செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

(இ) 2006-2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி பின்வரும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(i) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட காலமான, 23-10-2002 முதல் 01-11-2002 வரையிலான நாட்கள் (ஏற்கெனவே ஊதியமில்லாத காலமாக கருதப்பட்டது) தற்போது ஊதியத்தோடு கூடிய பணிக் காலமாகக் கருதப்படும் என 31-7-2006 நாளிட்ட ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது.

(ii) 33 ஆண்டுகள் பணிபுரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

(iii) ஓய்வு பெறுவதற்கு முந்தைய 10 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதமே ஓய்வூதியமாக கணக்கிடப்பட வேண்டும் என்பதை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் ஆகியவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

(iv) ஐந்தாவது ஊதியக் குழு நடைமுறைபடுத்தப்பட்டு ஊதிய நிலுவைத் தொகையில் எஞ்சியிருந்த 60 சதவிகித நிலுவைத் தொகையை இந்த நிதியாண்டிலிருந்து மூன்று சம ஆண்டு தவணைகளில் ரொக்கமாக வழங்கப்படும் எனவும்,

[2006 ஆகஸ்ட் 25

முதல் தவணை நடப்பு மாதமான ஆகஸ்ட் திங்களில் வழங்கப்படும் எனவும், ஓய்வு பெற்றவர்களுக்கு மீதமுள்ள இரண்டு தவணைத் தொகைகளும் ரொக்கமாகவே வழங்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(v) பொங்கல் பண்டிகையின் போது மிகை ஊதியம், சிறப்பு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு ஆகியவை மீண்டும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*(ஈ)* அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் என ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணமாக்கிக் கொள்ளும் சலுகை 1980 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சலுகை 2001 ஆம் ஆண்டிலிருந்து முந்தைய அரசினால் நிறுத்தி வைக்கப்பட்டது. 21-10-2004 முதல் ஆண்டு ஒன்றுக்கு ஏழு நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பு சரண் செய்ய அனுமதிக்கப்பட்டது. பின்னர், 8-2-2006 முதல் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணமாக்கிக் கொள்ளும் பழைய முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. முந்தைய அரசினால் பறிக்கப்பட்டிருந்த இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை 30 நாட்கள் சரண் செய்யும் சலுகை திராவிட முன்னேற்றக் கழக அரசில் மீண்டும் வழங்கப்பட்டு தற்போது ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

*4.* அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மன நிறைவுடன் அரசுப் பணிகளில் ஈடுபட்டுக் கடமையில் ஆர்வம் கொள்வர்.

## 9. நிருவாகச் சீர்திருத்தங்கள்

ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பது இவ்வரசின் நோக்கமாகும். அரசின் நிருவாகச் செயல்பாடுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், தேவையற்ற கடிதப் போக்குவரத்தைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத்தில் 'நிலை தாண்டுதல்' மற்றும் 'ஒற்றைக் கோப்பு' போன்ற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*2.* வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகம் அளிக்கும் பொருட்டு, குறை தீர்க்கும் மனுக்களைப் பெற்று, 3 நாட்களில் ஒப்புகைச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும்,



2006 ஆகஸ்ட் 25]

60 நாட்களுக்குள் மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து, மனுவின் மீதான இறுதி முடிவினை மனுதாரருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், அரசு அறிவுறுத்தியுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் குறித்த கோப்புகள் விரைவாக முடிக்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியர்களும், அரசுச் செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*3.* அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்து, அன்றாட வாழ்வில் பொதுமக்கள் அணுகும் அலுவலகங்களில் நிலவும் காலதாமதத்திற்கும், ஊழலுக்கும் அடிப்படைக் காரணமான சிகப்பு நாடா முறையினை (Red Tapism) அகற்றிடத் தேவையான பரிந்துரைகளை வழங்கிடப் பலதுறை வல்லுநர்களைக் கொண்ட நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

## 10. மக்கள் சாசனம்

ஒவ்வொரு துறையிலும் மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் சாசனம் என்பது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து மக்களுடைய கேள்விகட்கு பதில் சொல்லும் பொறுப்பையும், அதில் ஒளிவு மறைவற்ற தன்மையையும் உறுதி செய்யவேண்டும். பொதுமக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புண ்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்து கொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். மேலும் அத்துறையின் திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப்பணி கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு உருவாக்கவும் தொடர்புடைய துறைக்கு மக்கள் சாசனம் உதவுகிறது.

*2.* மக்கள் சாசனத்தை தயாரிப்பதற்கான கோட்பாடுகளை உள்ளடக்கி 'கையேடு' ஒன்று தயாரித்து அனைத்துத் துறைகளுக்கும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையினால் அனுப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளும் (விலக்களிக்கப்பட்ட ஐந்து துறைகள் தவிர) மற்றும் சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து அவற்றைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்துள்ளன. பொது, மக்களுடன் நேர்முகத் தொடர்பு இல்லாத காரணத்தினால் மக்கள் சாசனத்தை தயாரிப்பதிலிருந்து கீழ்க்கண்ட ஐந்து துறைகளுக்கு விலக்களிப்பட்டுள்ளது:-

[2006 ஆகஸ்ட் 25

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ii) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(iii) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(iv) பொதுத் துறை

(v) சட்டத் துறை

*3.* அனைத்து மக்கள் சாசனங்களும் www.tn.gov.in. (NICNET / INTERNET) இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விணைய தளம் தலைமைச் செயலகத் துறைகள் / துறைத் தலைமை அலுவலகங்கள்/தமிழ்நாடு அரசின்கீழ் உள்ள வாரியங்கள் / கழகங்கள் ஆகியவை தயாரிக்கும் மக்கள் சாசனங்களையும் உள்ளடக்கியதாகும்.

## 11. தகவல் மற்றும் சேவை மையம்

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும், அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்து கொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசின் ஆணைக்கேற்ப தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

## 12. மின்–ஆளுகை

ஒளிவுமறைவற்ற, சிறந்த நிருவாகத்திற்கு மின் ஆளுகையை உரிய அளவுக்குப் பயன்படுத்த இத்துறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக, அனைத்துச் சட்டங்களும், விதிகளும் அரசு வலை தளத்தில் (Website) பதிவு செய்யப்பட்டுள்ளன.

*2.* அனைத்துச் சட்டங்களும், விதிகளும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு (Compendium) உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் (CD–ROM) பதிவு செய்யப்பட்டுத் துறைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

*3.* இத்துறையால் வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் உள்ளடக்கிய மின்னணுவியல் தொகுப்பு (Compendium) இன்றைய நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டு, கணினி குறுந்தகடுகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 25]

*4.* சட்டங்களிலும், விதிகளிலும் அவ்வப்போது செய்யப்படும திருத்தங்கள் உடனடியாக மின்னணுவியல் தொகுப்பில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கென ஒரு தகவல் வங்கி (Reference Bank) உருவாக்கப்பட்டுள்ளது.

*5.* தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்தம் முழுமையான பணி விவரக் குறிப்புகள் கணினியில் மின்னணுப் பதிவாக உருவாக்கப்பட்டுள்ளன.

*6.* தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் இந்திய ஆட்சிப் பணி சாராத கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தனிச் செயலாளர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக எழுத்தர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

*7.* பொதுமக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணி விதிகள் போன்றவை தலைமைச் செயலக வலைதளம் மற்றும் தமிழ்நாடு அரசின் இணைய தளத்தில் உடனுக்குடன் பதிவு செய்யப்படுகின்றன.

*8.* தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கென்றே தனியானதொரு இணைய தளம் உருவாக்கப்பட்டு வருகிறது.

*9.* மின்னணு கோப்பு நிலையறி–கண்காணிப்பு முறை இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

*10.* மேற்குறிப்பிட்ட மின்னணு முறைகள் இத்துறையில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்படவுள்ள தலைமைச் செயலக தகவல் முறையின் (Secretariat Knowledge System) ஒரு பகுதியாகும்.

## 13. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் 12–12–1988 அன்று நிருவாக தீர்ப்பாயச் சட்டம், பிரிவு 4 (2)–ன் படி ஒற்றை நடுவர் ஆயமன்றமாக நிறுவப்பட்டது. இரண்டாவது நடுவர் ஆயமன்றம் 20–07–1990–ல் ஏற்படுத்தப்பட்டது.

**2.** 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி தீர்ப்பாயத்தின் ஆணைகள் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டவையாகும். எனவே, பணி தொடர்பான வழக்குகளில் உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமுமே போதுமானது என அரசு தீர்மானித்தது.

*3.* தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்து விடலாம் என 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அரசு கொள்கை முடிவெடுத்தது. சென்னை உயர் நீதிமன்றம் அளித்த நீதிப் பேராணை எண் 1724, 2516, 2517 மற்றும் 5833/2005 தீர்ப்பில், எந்தவொரு நடைமுறையையும் எதிர்பார்க்காமல் தீர்ப்பாயத்தைக் கலைக்க அறிவிக்கை வெளியிடுமாறு மத்திய அரசைப் பணித்தது. அதன் அடிப்படையில் மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்து, மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளையும், ஆவணங்களையும் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறும், மைய அரசு அரசிதழ் அறிவிக்கை வெளியிட்டது. அதன் அடிப்படையில், தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்த வழக்குகள் அனைத்தும் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

## 14. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பும், பணிகளும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளை சுயமாகவும் சீராகவும், பாகுபாடு இன்றியும் செயல்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)–ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம் தலைவர் மற்றும் பதினொன்று உறுப்பினர்களைக் கொண்டது. இத்தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

**2.** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320–ல் கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவற்பணிகளை மேற்கொண்டு வருகிறது:–

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத்தேர்வாணையத்தின் தலையாய பணியாகும்.



(ii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள், அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு ஆகியன குறித்த எல்லாவற்றிலும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

(iii) அரசுப் பணியாளர்களுக்கான சிறப்புத் தேர்வுகள் மற்றும் துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகிறது.

(iv) டேராடூன் இந்திய பாதுகாப்பு கல்லூரிப் பள்ளியின் நுழைவுத் தேர்வுகளை, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாகத் தேர்வாணையம் நடத்துகிறது.

*3.* சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்துச் செலவினங்களும் மாநில அரசு தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணையத்தின் ஆண்டு அறிக்கை, தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபடும் இனங்கள் ஏதும் இருப்பின் அதற்கான விளக்கக் குறிப்புடன், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

*15.* மாநில விழிப்புப் பணி ஆணையம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், அண்ணா மேலாண்மை நிறுவனம், ஆய்வுப் பிரிவு, பயிற்சிப் பிரிவு மற்றும் அமைப்பு மற்றும் செயல் முறைப் பிரிவு ஆகியவைகளின் நிருவாகம் தொடர்பான பணிகளைப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறைச் செயலாளர் கவனிக்கிறார்.

## 16. மாநில விழிப்புப் பணி ஆணையம்

தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு மாநில விழிப்புப் பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. இவ்விழிப்புப் பணி ஆணையம் பொதுப் பணிகளில், ஊழல் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளில் உள்ள முக்கிய நிருவாக பிரச்சினை பற்றியும் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட ஊழல் நேர்வுகளில் எவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்தும் அரசிற்கு அறிவுரைகள் வழங்குகிறது. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநரகம், விழிப்புப்பணி ஆணையம் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்தும் அறிவுரைகள் வழங்கியும் வருகிறது.

[2006 ஆகஸ்ட் 25

2. மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:-

i. பொது ஊழியர் ஒருவரின் நேர்மையற்ற செயல்பாடு அல்லது ஊழல் செயல்பாடு பற்றி, அவர்களின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள் மீதான சந்தேகப்படும் செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்துதல்.

ii. ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்கு தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகவோ அல்லது உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்பட்ட புகார்மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளல்.

iii. இத்தகைய தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களைத் தேவைப்படின் சேகரித்தல்.

iv. தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய எந்த ஒரு விபரத்தையும் அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

## 17. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

1964 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. தற்போது இவ்வியக்குநரகம் கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இயக்குநருக்கு உதவியாக காவல் அலுவலர்கள் மற்றும் சட்ட அலுவலர்கள் முறையே காவல் துறை மற்றும் குற்றவழக்குத் தொடர்பு இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டு பணிபுரிகின்றனர்.

2. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநரகம், பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது:

(1) இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து புலனாய்வு செய்வது மற்றும் 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 49, 1988) கீழ் வரும் குற்றச் செயல்கள் குறித்து புலனாய்வு செய்வது.



2006 ஆகஸ்ட் 25]

(2) பொது மக்கள், அரசு, விழிப்புப் பணி ஆணையர் மற்றும் துறைத் தலைவர்களிடம் இருந்து பெறப்படும் பொது ஊழியர்கள் மீதான குற்றவியல், தவறான நடத்தை (இலஞ்சம் மற்றும் ஊழல்), குற்றவியல் கையாடல் மற்றும் குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி தொடர்பான புகார்கள்மீது விசாரணை மேற்கொள்வது.

(3) மாவட்ட ஆய்வுக் குழு மற்றும் துறைத் தலைவர்களின் உதவியுடன் பல துறைகளில் உள்ள ஊழல் நடைபெறும் முக்கியமான இடங்களில் ஊழல் தடுப்பு நடவடிக்கையாக திடீர் ஆய்வு மேற்கொள்வது.

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு அனுப்பிவைக்கிறது. மாநில விழிப்புப் பணி ஆணையம், அவ்வறிக்கைகளை ஆய்வு செய்து, தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளுக்கு, தேவைக்கேற்ப, எவ்விதமான மேல்நடவடிக்கைகள் தொடரப்படவேண்டும் என்ற அறிவுரையுடன் அனுப்பி வைக்கிறது.

4. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தை நவீனப்படுத்தவும், வசதிகளை மேம்படுத்தவும், கணினிகள் மற்றும் துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் நாகர்கோவில் பிரிவு அலுவலகம் கட்டுவதற்கும் ஆகிய இரு திட்டங்களுக்கு ஒரு திட்டத்திற்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 2006-2007 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 18. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயமும், நீதி முறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. இத்தீர்ப்பாயங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகளின் பணிநிலைப் பிரிவில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பில் உள்ளனர். தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன்கீழ், ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்களுக்கு அரசினால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அவ்விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டனவா அல்லது நிரூபிக்கப்படவில்லையா என்பது கண்டறியப்பட்டு, அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி,

தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும நாகர்கோவில் ஆகிய பத்து இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் இயங்கி வந்தன. தஞ்சாவூர் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் அலுவலகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகவும் மற்றும் இராமநாதபுரம் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் அலுவலகம், மதுரை ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் அலுவலகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு மதுரையைத் தலைமையிடமாகவும் கொண்டு செயல்பட அண்மையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 19. பயிற்சி

அரசுப் பணியாளர்களின் செயல்திறன் மற்றும் திறமைகளை மேம்படுத்தி, பொதுமக்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்குச் செவ்வனே பணியாற்ற வழிவகுப்பதே பயிற்சியின் முக்கிய நோக்கமானது ஆகும். பல்வேறு துறைகளின் தற்போதைய நடைமுறைகளை அறிந்து, நவீன உத்திகளைக் கையாளுவதன்மூலம் அரசின் சேவைகள் மக்களுக்குச் சென்றடைவதில் முன்னேற்றம் காணப்படும். அரசு ஊழியர்களுக்கு விதிகள் மற்றும் நெறிமுறைகளைப் பற்றிய பயிற்சி அளிப்பதால் அவர்கள் தங்களின் பணியில் செயல்திறனை வளர்த்துக் கொண்டு, சிறந்த முறையில் முடிவெடுக்கவும் இயலுகிறது. இதற்கென, ஒரு பயிற்சித் துறை, அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் தனியாக இயங்கி வருகிறது. இப்பயிற்சித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

### 1. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

இப்பயிற்சி நிலையத்தில், தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் உதவிப் பிரிவு அலுவலர்கள் (நேரடி நியமனம்) / உதவியாளர்கள்/ தட்டச்சர்கள்/ நேர்முக எழுத்தர்கள் ஆகியோர்களுக்கு பொது நிருவாக நடைமுறைகள் குறித்த அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை மற்றும் நீதிமன்ற / நடுவர் மன்ற நடவடிக்கைகள் தொடர்புடைய சட்ட சார்பான பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. இதுவரை, 55 அணிகளுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



### 2. அண்ணா மேலாண்மை நிலையம்

தமிழ்நாட்டின் முதன்மைப் பயிற்சி நிலையமாக விளங்கும் அண்ணா மேலாண்மை நிலையம், இயக்குநர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. அனைத்து நவீன அடிப்படைக் கட்டுமான வசதிகளுடன் கூடிய 'மகிழம்பூ' என்ற புதிய கட்டட வளாகத்தில் இந்நிலையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் மேலாண்மை வளர்ச்சித் திட்டங்கள், நிறுவன மேம்பாட்டு அடிப்படைக் கோட்பாடுகளுடன்கூடிய பயிற்சித் திட்டங்கள் ஆகியன பொது மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்தவர்களுக்கான பயிற்சியும் மற்றும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பயிற்சித் திட்டங்களும் நடத்தப்படுகின்றன. தேசிய இயற்கைப் பேரழிவு மேலாண்மை குறித்த பயிற்சி அளிப்பதில், அண்ணா மேலாண்மை நிலையம் மிகவும் தேர்ந்த நிறுவனமாகும். இதற்கென இந்நிறுவனத்தில் பேரிடர் மேலாண்மைப் பிரிவு ஒன்று மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தின் உதவியோடு இயங்கி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிறுவனம் பேரிடர் மேலாண்மை பற்றியும் பல்வகை இயற்கை பேரழிவுகளை சமாளிப்பது பற்றியும் 19 பயிற்சி வகுப்புகளை நடத்தி உள்ளது.

2. 2005 ஆம் ஆண்டு மத்திய அரசால் அமல்படுத்தப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம் தொடர்பாக அண்ணா மேலாண்மை நிலையம் அனைத்து துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு இச்சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த நான்கு பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. நிருவாக மேம்பாட்டில மாறிவரும் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் அரசுப் பணியாளர்களுக்கு மின் ஆளுகை மற்றும் பல்வேறு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளையும் நடத்தி வருகிறது. தனது 25 ஆண்டு கால வரலாற்றில் அண்ணா மேலாண்மை நிலையம் பல்வேறு துறைகளிலும் 3000–க்கும் மேற்பட்ட பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. இதுவரை 71,000 பேர் இதன்மூலம் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர். 2005–2006 ஆம் ஆண்டில், அண்ணா மேலாண்மை நிலையமானது பொது நிர்வாகம், தகவல் தொழில்நுட்பம், நிதி மற்றும் தனிநபர் ஆளுமை மேம்பாடு ஆகியவற்றில் இதுவரை 343 பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது. இதன்மூலம் இதுவரை, 9,158 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

[2006 ஆகஸ்ட் 25

### 3. அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை

அனைத்திந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் ஏனைய மாணவர்களுக்கு உணவு, இருப்பிடம், நூலகம் மற்றும் கணினி வசதிகள் அளிப்பதுடன், தீவிர பயிற்சியும் இந்நிலையத்திலேயே அளித்து, அவர்கள் இந்தியாவின் மிகவும் உயர்ந்த குடிமைப் பணிகளில் நுழைய உதவுவதே இப்பயிற்சி மையத்தின் முக்கிய நோக்கமாகும். ஆண்டுதோறும் 300 தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அகில இந்திய பணிகளுக்கான முதல் நிலை மற்றும் மூலத் தேர்வு எழுத உதவுவதுடன், நேர்காணலை எதிர்கொள்ளும் வகையில் அவர்களுக்கு மாதிரி நேர்காணல் நடத்தியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 4. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974-ல துவங்கப்பட்டது. ஆண்டுதோறும், இப்பயிற்சி மையத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு 60 நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சி 6 அணிகளாகப் பிரித்து நடத்தப்படுகிறது. இப்பயிற்சியானது, இப்பயிற்சியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கு முன் தகுதியாக அமைகிறது. துணை வட்டாட்சியர்களுக்கான பணியிடைப் பயிற்சி இந்நிலையத்தில் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும், சுமார் 2100 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 180 துணை வட்டாட்சியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில், 43,283 இளநிலை உதவியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 2,082 இளநிலை உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதுவரை பயிற்சி பெற்ற துணை வட்டாட்சியர்களின் எண்ணிக்கை 2,906 மற்றும் பயிற்சி பெற வேண்டிய துணை வட்டாட்சியர்களின் எண்ணிக்கை 150 ஆகும்.

### 5. 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களின் பயிற்சி நிலையம், சென்னை

அண்ணா மேலாண்மை நிலையத்தின்கீழ் இயங்கிவரும் 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த பதவி உயர்வு மூலம் பணி அமர்த்தப்படும் 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு சிறந்த ஒலி மற்றும் ஒளி வசதிகளுடன் பயிற்சிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்கள் சாசனம், பாலின பிரச்சினைகள், தகவல் பெறும் உரிமை,



2006 ஆகஸ்ட் 25]

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு போன்ற பயிற்சித் திட்டங்கள் மற்றும் நிர்வாக மேம்பாட்டிற்காக அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த சிறந்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில், இப்பயிற்சி நிலையத்தில் 'அ' மற்றும் 'ஆ' தொகுதி அலுவலர்களுக்கு 19 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம், 393 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 20. ஆய்வுப் பிரிவு

மாவட்ட அளவிலான அலுவலகங்களில் திறமையை மேம்படுத்தவும், சார்நிலை அலுவலகங்களின் பணியைத் துரிதப்படுத்தவும், அலுவலகப் பணியாளர்களின் பணியைச் சரியாக கட்டுப்படுத்தவும் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (ஆய்வு) துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த ஆய்வுக் குழுக்கள் விரிவான ஆய்வுகளை செய்வதோடு மாவட்ட அளவிலான அலுவலகங்களை திடீர் தணிக்கையையும் செய்து வருகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துப் பகுதியிலுமுள்ள அலுவலகங்களில் அலுவலக நடைமுறை குறித்தான திறமையை மேம்படுத்தும் பொருட்டும், தற்போது நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் வரைமுறைகள் குறித்த தெளிந்த அறிவைப் பெறுவதற்கும் இந்த ஆய்வுக் குழுக்கள் வழிவகுக்கின்றன. ஒவ்வொரு ஆய்வுக் குழுவும் ஏழு அலுவலர்களைக் கொண்டுள்ளது.

2. மாவட்ட ஆய்வுக் குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களை ஆண்டுதோறும் ஆய்வு மற்றும் திடீர் ஆய்வு செய்வதோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்பேரில், பொதுமக்களின் புகார்களுக்குள்ளான அலுவலகங்களை திடீர் தணிக்கை செய்ய மாவட்ட விழிப்புக் குழு அலுவலர்களுக்கு உதவிபுரிகின்றன. இந்த ஆய்வுக் குழு மேற்கொள்ளும் பணிகள் மாவட்ட நிர்வாகத் திறனை மேம்படுத்தவும், தூய நிர்வாகத்தை ஏற்படுத்தவும் மிகவும் உதவுகின்றன. இக்குழுக்களால் நடத்தப்படும் புத்தாக்கப் பயிற்சிகள் / பயிற்சி வகுப்புகள் மூலம் மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலர்கள் / பணியாளர்கள் அலுவலக நடைமுறை மற்றும் இன்றைய நிலையிலுள்ள பணி விதிகளை அறிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன. பதினொன்று மாவட்ட ஆய்வுக் குழுக்களும் 2005–2006 ஆம் ஆண்டில், 131 விரிவான ஆய்வுகளையும், 2,570 திடீர் தணிக்கைகளையும், 129 விழிப்புக் குழு அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டங்களையும் (Liaison Meetings) நடத்தியுள்ளன.

[2006 ஆகஸ்ட் 25

3. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின்கீழ் மூன்று ஆய்வுப் பிரிவுகள் உள்ளன. ஆய்வுப் பிரிவுகள் I மற்றும் II தனித்தனியாக துணைச் செயலாளர் அளவிலான ஆய்வு அலுவலர் மேற்பார்வையிலும், ஆய்வுப் பிரிவு III மாவட்ட வருவாய் அலுவலரின் மேற்பார்வையிலும் இயங்குகின்றன. அவை, செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. இந்த ஆய்வுக் குழுக்கள், தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தலைமை அலுவலகங்களை ஆய்வு செய்யும் பணியோடு மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு முன்னோடி ஒழுங்கு நடவடிக்கை பயிற்சி வகுப்புகளையும் கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு குறுகிய கால அலுவலக நடைமுறை தொடர்பான பயிற்சி வகுப்புகளையும் அளித்து வருகின்றன. மேலே உள்ள பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வோர் ஆண்டும் ஐந்து நாட்களுக்கு நடத்தப்படுகின்றன. மொத்தத்தில் 30 முன்னோடி வகுப்புகளும் மற்றும் 30 குறுகிய கால பயிற்சி வகுப்புகளும் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றன.

4. 2006–2007ஆம் ஆண்டில் நிதி வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மாவட்ட ஆய்வுக் குழுக்களின் நிர்வாகச் செலவினங்களுக்காகவும், முன்னோடி மற்றும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான செலவினங்களுக்காகவும் வழங்கவுள்ள நிதி ஒதுக்கீடு ரூ.1,30,04,000/ ஆகும்.

## 21. அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவு

அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவின் முக்கிய நோக்கம், அரசின் பல்வேறு துறைகளிலுள்ள வழிமுறைகளையும் நடைமுறைகளையும் எளிதாக்குதல், பணிக்கு வேண்டிய பணியாளர்களை மதிப்பீடு செய்தல், அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல், பதிவேடுகளைச் சிறந்த முறையில் பராமரித்தல், சிக்கனத்தைக் கடைப்பிடித்து செயல்திறனை மேம்படுத்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதே ஆகும்.

2. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவில், இரண்டு நிருவாக அணிகள் இயங்கி வருகின்றன. ஒரு நிருவாக அணி, அமைப்பு மற்றும் செயல்முறை வல்லுநர், நிலை-I அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுகின்றது. மற்றொரு நிருவாக அணி, அரசு துணைச் செயலர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்களின்கீழ் செயல்படுகின்றது. இந்த இரண்டு அணிகளும் துணைச் செயலரின் ஒருங்கிணைப்பில்



2006 ஆகஸ்ட் 25]

இயங்கி வருவதோடு கண்காணிப்புக் குழுவும் அவர்களின்கீழ் இயங்கி வருகிறது. இக்கண்காணிப்புக் குழு, ஒரு ஆராய்ச்சி அலுவலரையும் மற்றும் ஒரு உதவிப் பிரிவு அலுவலரையும் கொண்டுள்ளது. இது, நிருவாக அணிகளின் அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் பேரில் தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பான பணியைக் கவனிப்பதோடு, இப்பகுதிக்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும் மற்றும் வரவு- செலவுத் திட்டம் தயாரிக்கும் பணிகளையும் மேற்கொண்டுவருகிறது.

3. ஒவ்வோராண்டும், கண்காணிப்புப் பிரிவு, அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும், தலைமைச் செயலகத் துறைகளுக்கும் அவர்களுடைய துறைகளில் பிரச்சினைக்குரிய பகுதிகள் எவையேனும் இருக்கிறதா என்றும் அவற்றிற்கு, அமைப்பு மற்றும் செயல்முறைப் பிரிவின் ஆய்வு தேவைப்படுகிறதா என்பது குறித்தும், தகவலளிக்குமாறு கடிதம் ஒன்றை அனுப்புகிறது. அவர்களுடைய வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. அதற்கிணங்க ஒவ்வொரு குழுவிற்கும் ஆய்வுப்பணி ஒதுக்கப்படுகிறது. இதுவரை அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு 226 ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக துறைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகங்களில் இரண்டு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

## 22. 2006–2007 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்

2006–2007ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதி 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன:—

### 1. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை – தலைமைச் செயலகம்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் மின்னணுவியல் முறையில் கோப்புகளில் நடவடிக்கை எடுக்கும் ஏற்பாட்டு முறையைச் செயற்படுத்துவதற்காக LAN, சீர்வளி சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் உள்ளிட்ட மென்பொருளுடன் கூடிய கணினிகள் மற்றும் ஏனைய துணை பாகங்கள் வாங்கப்பட உள்ளன. மேலும், LCD புரொஜெக்டர் ஒன்று வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிரவும் இரண்டு ஒளி நகலி சாதனங்களும் வாங்கப்பட உள்ளன.

**2. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்**

இயந்திரமயமாக்கும் கணினி மென்பொருள், கணினி மற்றும் துணை பாகங்கள் (20 எண்ணிக்கைகள்) வாங்கவும், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

50 கணினிகள் கூடிய லேன், சர்வர் அறை, உரிய சர்வர்கள், இன்வெர்டர்கள், உரிய பிரிண்டர்கள், கம்பிவடங்கள், லைன் பிரிண்டர் ஆகியவை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மற்றும் விடைத்தாள் புத்தகங்களை ஸ்கேன் செய்வதற்கு இமேஜ் ஸ்கேனர் சாதனங்கள் வாங்குவதற்கும் தேவையான மென்பொருள் வாங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. அண்ணா மேலாண்மை நிலையம்**

அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் அவர்களுக்கு ஒரு மடி கணினி வாங்குவதற்கும், எம்எஸ் ஆபீஸ் 2003 புரொஃபெஷனல் பேக் 1 மற்றும் எம்எஸ் விண்டோஸ் 2003 சர்வர் (5 யூசர் லைசென்ஸ்) வாங்குவதற்கும், மேசை, நாற்காலிகள் மற்றும் பொருத்திகள் வாங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

கணினி பரிசோதனைக் கூடத்தில் பழைய கணினிகள் மற்றும் துணை பாகங்களுக்குப் பதிலாக புதிய கணினி மற்றும் துணை பாகங்கள் வாங்குவதற்கும் தற்போதுள்ள நூலகக் கட்டடத்தின் முதல் தளத்தில் கூடுதல் கணினிகளுடன், ஆய்வுக் கூடம் மற்றும் கணினி வழி கலந்துரையாடல் அறை கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தவிரவும் பழைய காருக்கு பதிலாக புதிய கார் வாங்கவும் மேசை, நாற்காலிகள் வாங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு II

(336 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

தலைமைச் செயலரின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் பொதுத் துறை, மாநிலத்தின் பொது நிருவாகம் சம்பந்தப்பட்ட முக்கியமான பணிகளை கவனித்து வருகிறது. பொதுத் துறையில் கவனிக்கப்பட்டு வரும் சில முக்கிய பணிகள் பின்வருமாறு:–

- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் குறித்த பணிகள்.
- சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்த பணிகள்.
- மரபுப் பணி மற்றும் மிக முக்கிய விருந்தினர்கள் வருகை.
- மத்திய மாநில அரசுகளுக்குப் பொதுவான நிர்வாக அம்சங்கள்.
- வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்புப் பணி.
- அயல்நாட்டுப் பிரமுகர்கள் மற்றும் குழுக்கள் வருகை.
- இலங்கை அகதிகள் மறுவாழ்வு மற்றும் தாயகம் திரும்பியோர் நலன்.
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் நலப் பணிகள்.
- முன்னாள் படை வீரர்களின் நலன் மற்றும் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தோர் நலன்.
- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் நிர்வாகம்.
- இந்தியாவிற்கு வருகை புரியும் அயல் நாட்டவரின் விசா காலத்தை நீட்டித்து வழங்கல். (பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் நீங்கலாக)
- முதலமைச்சரின் தனிப் பிரிவு.
- புதுடில்லி, சென்னை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிருவகித்தல்.
- மாநிலங்களுக்கு இடையேயான மற்றும் தென் மாநில மண்டலக் குழுக்கள் குறித்த அலுவல்கள்.

[2006 ஆகஸ்ட் 25

2. மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ்நாடு மாநில தகவல உரிமை ஆணையம் மற்றும் சட்டம்-ஒழுங்கு மற்றும் உணர்வைத் தூண்டும் பொருள் தொடர்பாக 1952 ஆம் ஆண்டின் விசாரணை ஆணையச் சட்டத்தின்கீழ் அரசால் நியமிக்கப்படும் ஆணையங்கள் குறித்த பணிகளை இத்துறை கவனித்து வருகிறது. தகைசால் பெருமக்களுக்குத் தேவையான மரபுசால் வசதிகளை வரையரைப்படி வழங்கும் பணியினையும் இத்துறை செய்து வருகிறது.

## அகதிகள் மறுவாழ்வு

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக, இலங்கைத் தமிழர்கள் புகலிடம் தேடி இந்தியாவிற்கு அகதிகளாக வரத் துவங்கினர். 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் அகதிகள் வருகை நின்று விட்டது. தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாகவும் அங்கு போர் மூளும் அபாயம் உள்ளதாலும் 12-01-2006 முதல் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு அகதிகள் வரத் தொடங்கியுள்ளனர். 21-08-2006 அன்றைய நிலவரப்படி தமிழ்நாடு முழுவதிலும் 24 மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட 105 அகதிகள் முகாம்களில் 16,837 குடும்பங்களைச் சேர்ந்த 60,423 அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் அனைத்து நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அகதிகளின் பராமரிப்பிற்கான அனைத்து செலவினங்களும் மாநில அரசால் முதலில் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசினால் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன.

## அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

### (1) பணக்கொடை

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு பின்வரும் விகிதங்களில் பணக்கொடை அளிக்கப்பட்டு வந்தது:-

| | | |
|---|---|---|
| 1. | தனிநபர்(12 வயதிற்கு மேல்)/ குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூபாய் 200 |
| 2. | ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 144 |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூபாய் 90 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 45 |



2006 ஆகஸ்ட் 25]

இப்பணக்கொடை தற்போது 2006 ஆகஸ்டு 1 முதல் பின்வருமாறு உயர்த்தப்பட்டிருக்கிறது:-

| | | |
|---|---|---|
| 1. | தனிநபர் (12 வயதிற்கு மேல்)/ குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூபாய் 400 |
| 2. | ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 288 |
| 3. | முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூபாய் 180 |
| 4. | அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 90 |

இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.17.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் அனைவருக்கும் மாதமொன்றிற்கு சுமார் ரூ.1.58 கோடி பணக்கொடை 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் வழங்கப்பட்டு வருவதால் அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.9 கோடி கூடுதல் செலவாகும்.

### 2. மானிய விலையில் அரிசி

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மானிய விலையில் கிலோ ஒன்றிற்கு ரூ.0.57 வீதம் மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட பின்வரும் அளவுகளில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

அ. பெரியவர்கள் (8 வயதும் அதற்கு மேலும்)
(நாளொன்றிற்கு) 400 கிராம்

ஆ. குழந்தைகள் (8 வயதிற்குட்பட்டவர்கள்)
(நாளொன்றிற்கு) 200 கிராம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் சில கூட்டுறவுச் சில்லறை அங்காடிகள் மூலமாகவும் இம்மானிய விலை அரிசி, முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான விலை வித்தியாச தொகையை அரசு மேற்படி கழகத்திற்கு வழங்கி வருகிறது. மானிய விலையில் அரிசி வழங்க நடப்பு நிதியாண்டில் ரூ. 9.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 5-8-2005 முதல் மைய அரசு அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்கும் திட்டத்தினை இடை நிறுத்தம் செய்தது. ஆயினும், இத்திட்டம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைக்கொண்டு தொடரப்பட்டு வருகிறது. இலங்கை அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்கும் திட்டத்தை நீட்டிக்கக் கோரி மைய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது.

**...மணிகள் மற்றும் பாய்கள்**

...ல்வேறு அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு ...மணிகள், பாய் ஆகியவை ஆண்டுதோறும் மைய அரசால் ...ணயிக்கப்பட்ட அளவுகளில் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் ஈராண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு குடும்பத்திற்கும் போர்வைகள் வழங்கப்படுகின்றன.

**4. பாத்திரங்கள்**

முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்து அகதிகள் குடும்பங்களுக்கும் வீட்டு உபயோகப் பாத்திரங்கள் ஈராண்டுகளுக்கு ஒருமுறை இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகள் முகாம்களுக்குத் தற்போது ஒவ்வொரு நாளும் அகதிகள் வருகை அதிகரித்து வருவதால் அவர்களுக்கும் மேற்படி வசதிகள் செய்துதர வேண்டியுள்ளது. இதனால் அரசிற்கு செலவினம் அதிகரிக்கின்றது. நடப்பு நிதி ஆண்டில் துணிமணிகள் மற்றும் பாத்திரங்கள் வழங்குவதற்காக ரூ.3.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. மருத்துவ உதவி**

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**6. கல்வி வசதிகள்**

அகதிகளின் குழந்தைகளுக்கு தமிழ்நாடு அரசு கல்வி கற்கும் வசதியினை வழங்கி வருகிறது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் கற்றதற்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே அவர்கள் படிப்பைத் தொடர தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குச் சீருடைகள், மதிய உணவு, பயணச்சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள், மிதிவண்டிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாமிற்கு வெளியே தமிழ்நாட்டிற்குள் தங்கிப் படிக்கும் குழந்தைகளுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள், சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள்மூலம் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே, 2002–2003 ஆம் ஆண்டு வரை உயர் கல்வியில் இவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு





இட ஒதுக்கீட்டைத் திரும்பவும் தொடர மைய அரசுக்கு மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**7. முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் அகதிகள் முகாம்களுக்கு அடிப்படை வசதிகளான தெரு விளக்கு அமைத்தல், கொட்டப்பட்டு அகதிகள் முகாமிற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் மண்டபம் அகதிகள் முகாமில் கழிவு நீர்க்குழாய்கள் பழுது பார்த்தல் ஆகியவற்றிற்கு ரூ.23.81 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. மேலும், தற்போது பெருமளவில் தமிழகத்திற்கு வரும் அகதிகளுக்காக மண்டபம் சிறப்பு முகாமிலுள்ள அகதிகள் குடியிருப்புகளுக்கு சிறப்பு மராமத்துப் பணிகளுக்காகவும், சாலை வசதி, கழிப்பறை வசதி, மின் வசதி ஆகிய அடிப்படை மற்றும் இதர வசதிகள் செய்துதர 27-06-2006 அன்று சிறப்பு இனமாக ரூ.27.42 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

**8. அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்**

அகதிகளின் சொந்த விருப்பத்தின் பேரில் அவர்களின் சொந்தச் செலவில் தங்களது தாய்நாட்டிற்கோ அல்லது வேறு வெளிநாடுகளுக்கோ செல்ல விரும்பும் அகதிகளை அவ்வாறே செல்ல அனுமதித்து வெளியேற அனுமதி வழங்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 770 வெளியேற்ற அனுமதிச் சீட்டுகள் மாவட்ட ஆட்சியர் மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

**முன்னாள் படைவீரர் நலத் துறை**

போர் முனையில் உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார்கள் மற்றும் உடல் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்கள் நலனைப் பேணிக்காக்க முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்பட்டு வருகிறது. 25 மாவட்டங்களிலுள்ள நல அலுவலகங்கள் மூலமாக இந்நலப் பணிகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னாள் படைவீரர் நலத் துறையின் மொத்த நிர்வாகச் செலவில், 50 விழுக்காடு மத்திய அரசு ஈடுசெய்கிறது. 30–06–2006 அன்றுள்ள நிலவரப்படி 1,84,487 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர் மாவட்ட அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர்.

## மறுவாழ்வு நலத் திட்டங்கள்

1. மறுவேலைவாய்ப்பு அளித்தல்
2. சுயவேலை வாயப்புத் திட்டங்கள்
3. பல்வேறு பயிற்சித் திட்டங்கள்
4. நலிந்தோர் நல உதவித் திட்டங்கள்

### 1. மறுவேலை வாய்ப்பு அளித்தல்

மாநில அரசுப் பணிகளில் குரூப் 'சி' பிரிவில் 5 விழுக்காடும் அடிப்படைப் பணிகளில் 10 விழுக்காடும், வனத் துறையில் காவலர் மற்றும் பாதுகாவலர் பணிக்கு 15 விழுக்காடும் முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு சார்ந்த நிறுவனங்களில், அடிப்படைப் பணியில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், காவல் துறையில் தொழில்நுட்பப் பிரிவில் கிரேடு 2 காவலர் பணிகளில் சேர்வதற்கு, உடல் தகுதி மற்றும் மருத்துவப் பரிசோதனைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசுப் பணியில், போரில் உயிர்நீத்த/ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் அமைதி காலத்தில் உயிர்நீத்த படைவீரர்களின் குடும்ப வழியினரான 28 நபர்களுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 2. சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்

சுயதொழில் துவங்கும் முன்னாள் படைவீரர்கட்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகளின் வாயிலாக கடன்பெற வழிவகை செய்வதுடன் அவர்கள் செலுத்தும் வட்டியில் 50 விழுக்காடு, தொகுப்பு நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வகையில் நடப்பு ஆண்டில் 1000 முன்னாள் படைவீரர்களுக்கு வட்டி மானியமாக ரூ.15.00 இலட்சம் வரை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரர்கள்/போரில் இறந்த படைவீரர்களின் விதவைகள் ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்ட சுயஉதவிக் குழுக்கள் பெறும் ரூ.7.5 இலட்சம் வரைக்கான வங்கிக் கடனுக்கு வட்டி முழுவதும் தொகுப்பு நிதியிலிருந்து வங்கிகளுக்குச் செலுத்தப்படுகிறது. வேலூரில் 27 சுயஉதவிக் குழுக்களும், திருவள்ளூரில் 3 சுயஉதவிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.



### 3. பல்வேறு பயிற்சித் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் விரைவில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஏதுவாக கணினிப் பயிற்சி, இருசக்கர வாகனம் பழுதுபார்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் போன்ற இனங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இத்தகைய பயிற்சி 150 முன்னாள் படைவீரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர்களுள் முனனதாக உடற்பயிற்சிக் கல்வி தகுதி பெற்றவர்கள் அரசுப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் நியமனம் பெற்றிடும் வகையில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின்மூலமாக அவர்கட்கு 4 மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 4. சேம நல நிதி மற்றும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவிகள்:

இத்திட்டத்தின்கீழ் கடந்த நிதியாண்டில் 16,315 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் நிருவகிக்கப்படும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேம நல நிதியிலிருந்து ரூ.8.72 கோடி வழங்கியுள்ளதுடன் 2,057 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 60.35 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

### 5. வீரச்செயல்கள்/சிறப்பாகப் பணிபுரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு மற்றும் படைப்பணிக்கு மகன்/மகளை அனுப்பும் பெற்றோருக்கு ஊக்க மானியம்

வீரதீரச் செயல்களுக்கான வீரப்பதக்கங்கள் மற்றும் பாராட்டத்தக்க பணி புரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு பணமுடிப்பு வழங்கப்படுகிறது. வீரவிருது பெற்ற இராணுவ வீரர்களுக்கு மைய அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தொகைக்கு இணையாக ரொக்கத் தொகையும் மற்றும் வருடாந்திர உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. மேலும் மகன்கள்/மகள்களை படைப் பணிக்கு அனுப்பும் பெற்றோர்களை ஊக்குவிக்கும் வகையில், போர்ப் பணி ஊக்க மானியமும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

நாட்டின் எல்லைப்புறத்தில் இன்னுயிரை ஈந்த இராணுவ வீரர்/எல்லைப் பாதுகாப்பு படைவீரர்களின் தியாகத்தை அங்கீகரிக்கும் வகையில், வீரமரணம் அடைந்தவர்களுக்கு உரிய இறுதி மரியாதை அளிக்கப்படுகிறது. இறுதிச் சடங்கில் ஓர் அமைச்சர் மற்றும் அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர்/காவல் கண்காணிப்பாளர்

ஆகியோர் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6. கார்கில் போராட்ட வீரர் நிவாரண நிதி**

இந்த நிவாரண நிதி அரசின் பொதுத் (இராணுவ) துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த இராணுவ வீரர்கள்/எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள், பகைவருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளபோது உயிரிழந்தால், அவரது குடும்பத்தினருக்கும், ஊனமுற்ற படைவீரருக்கும் பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:–

1. உயிரிழந்தவர் குடும்பத்துக்கு : ரூ.5 (ஐந்து) இலட்சம்
2. ஊனமடைந்தவர்களுக்கு:–
   (i) முழுவதுமாக ஊனமடைந்த வர்கள்/ இரு கால்களோ, கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள். : ரூ.3 (மூன்று) இலட்சம்
   (ii) ஒரு கால், ஒரு கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள். : ரூ.1 (ஒரு) இலட்சம்

தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு எதிரான நடவடிக்கைகளில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சார்ந்த இராணுவவீரர் அல்லது எல்லைப் பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்திற்கு 2005–2006ஆம் நிதியாண்டில் 5 குடும்பங்களுக்கும், நடப்பு நிதியாண்டில் ஜூலை மாதம் முடிய 3 குடும்பங்களுக்கும் தலா ரூ.5 இலட்சம் வீதம் கார்கில் இராணுவ வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குடிமுறை நிர்வாகத்திற்கு உதவிடும் நடவடிக்கைகளின்போது, உயிரிழந்த படைவீரரின் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம், ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் பாதிப்புக்கேற்ப ரூ.10,000/– முதல் ரூ.40,000/– வரையும் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. இவ்வகையில் கடந்த நிதியாண்டில் 15 படைவீரர்களின் குடும்பத்தினருக்கு மொத்தம் ரூ.2.75 இலட்சம் அரசு நிதியிலிருந்து கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.



**7. இராணுவப் பணியில் சேர்வதற்கான தேர்வுக்கு முன்பயிற்சி**

தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் அதிக அளவில் சேரும் பொருட்டு அதற்கான ஆயத்தப் பயிற்சி அளித்திட ரூ.27.76 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த நிதியாண்டில் 500 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**8. அலுவலகங்களுக்கு கணினி மற்றும் வாகன வசதி ஏற்படுத்துதல்**

முன்னாள் படைவீரர் நலத் துறையின் மாவட்ட அலுவலகங்களை கணினிமயமாக்கும் வகையில், ரூ.18.00 இலட்சம் செலவில் 23 கணினிகள் நிறுவப்பட்டன. ஐந்து மாவட்ட அலுவலகப் பயன்பாட்டிற்கென ரூ.17.00 இலட்சம் செலவில் 5 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**9. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு**

தமிழ்நாட்டிலுள்ள பல்வகைப்பட்ட கல்வி நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினரின் சிறார்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொறியியல் பட்டப் படிப்புக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் 6 இடங்களும், இதர பொறியியல் கல்லூரிகளில் 75 இடங்களும், மருத்துவப் பட்டப் படிப்புக்கு 2 இடங்களும், பல்மருத்துவப் படிப்புக்கு 1 இடமும், செவிலியர் பயிற்சிப் படிப்புக்கு 60 இடங்களும், பல்தொழில் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்கு 80 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டப் படிப்புக்கு 6 இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் 132 இடங்களும், சட்டப் படிப்பு பிரிவில் ஒரு விழுக்காடு இடமும் இவற்றில் அடங்கும். இதுமட்டுமன்றி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்பில் 1 இடமும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரையுள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இடங்களும், இரண்டிற்கு மேல் பாடப் பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் 3 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**10. படைவீரர் மாளிகை**

முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக நிதி ஆதாரத்தை அதிகரிக்க அவர்களின் சேம நல நிதியின்மூலம் பல்பொருள் அங்காடி மற்றும் அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஈரோட்டில் ரூ.1.94 கோடி

[2006 ஆகஸ்ட் 25

செலவில் படைவீரர்கள் மாளிகை நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானச்செலவினம் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் சேம நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. இதுதவிர, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவிலில் மாவட்ட அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு முறையே ரூ.47.81 இலட்சம் மற்றும் ரூ.1.02 கோடி தமிழ்நாடு முன்னாள் படைவீரர் சேமநல நிதியிலிருந்து செலவிட அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**11. கோயில் பாதுகாப்புப் படை**

தமிழகக் கோயில்க்ளிலுள்ள சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காக முன்னாள் படைவீரர்களைக் கொண்ட கோயில் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டுள்ளது. இப்படையில் பணியாற்றும் முன்னாள் படை வீரர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.1,500/-- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 2,413 முன்னாள் படை வீராகள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**12. கொடி நாள் நிதி**

கொடி நாள் நிதி வசூலில் தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு முதல் முன்னிலை வகித்து வருகிறது. நடப்பு கொடி நாள் ஆண்டிற்கு (07-12-2005 முதல் 06-12-2006 வரை) இலக்கு ரூ.6.60 கோடி ஆகும். இதில் 17-07-2006 வரை ரூ.4.39 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை 06-12-2006-க்கு முன்பாகவே அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் ( டெக்ஸ்கோ)**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) நிறுமங்கள் (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28-01-1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் சுய ஆதாரவுள்ள, இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும். இதன் உரிமை பெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூபாய் 50 இலட்சம் மற்றும் ரூ. 22.91 இலட்சம் ஆகும்.

இக்கழகத்தின் முக்கியச் செயல்பாடுகள் கீழ்வருமாறு: -

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நலத்திற்கு வழிவகுக்கும் பல திட்டங்களை திட்டமிடுதல், உருவாக்குதல் அவற்றைச் செயல்படுத்துதல்.
2. வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவது.



2006 ஆகஸ்ட் 25]

பதிவு பெற்ற முன்னாள் படைவீரர்களை, பெரும்பாலும் மைய மற்றும் மாநில அரசு நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பாளர்கள், எழுத்தர்கள், ஓட்டுநர்கள், செவிலியர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள் மற்றும் தொலை செய்தி பணியாளர்கள் ஆகிய பணிகளில் இக்கழகத்தால் அமர்த்தப்படுகின்றனர். இப்பணிகளுக்கென 12 விழுக்காடு சேவைக் கட்டணமாக மேற்கண்ட அரசு நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ பெற்று வருகிறது.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட, நிர்ணயம் செய்யப்பட்ட முக்கிய இடங்களில், வாகனங்களை நிறுத்துவதற்குப் பணம் வசூலிக்கும் பொறுப்பினை இக்கழகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்த அடிப்படையில் அளித்துள்ளது. இப்பணியில் ஏற்படும் நிகர இலாபத்தில் 70 விழுக்காடு சென்னை மாநகராட்சிக்கு உரிமக் கட்டணமாக அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் ஹெலிகாப்டர் மற்றும் விமானத்தைப் பராமரித்து நிர்வகிக்கும் பணியினை டெக்ஸ்கோ செய்து வருகிறது. இவற்றைப் பராமரித்து நிர்வகித்து வரும் செலவை இக்கழகம் ஏற்று பின்னர் இத்தொகையை தமிழக அரசிடமிருந்து திரும்பப்பெற்றுக்கொள்கிறது. இப்பணிக்காக இக்கழகத்திற்கு பராமரிப்புச் செலவில் 2 விழுக்காடு சேவைக் கட்டணமாக அரசால் அளிக்கப்படுகிறது.

31-03-2006 நிலவரப்படி, இக்கழகத்தால் 8,532 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இக்கழகம் கடந்த நிதியாண்டு 2005-2006-ல், உத்தேச இலாபமாக ரூ. 4.40 கோடி ஈட்டியுள்ளது.

**முதலமைச்சரின் தனிப் பிரிவு**

முதலமைச்சரின் தனிப் பிரிவு பொது மக்களின் குறைகளுக்கு உரிய தீர்வு காண்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு தனி அலுவலரின் தலைமையில் இயங்குகிறது. பொது மக்களின் குறைகளை உடனடியாகக் களைவதற்கு அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களிடமும் நேரடியாகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2. பொதுமக்களிடம் பெறும் மனுக்கள் மாவட்ட வாரியாகவும், துறை வாரியாகவும் பிரிக்கப்பட்டு உடனடி நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றன. மனுக்களில் கண்டுள்ள அனைத்து விபரங்களும் தொடர் நடவடிக்கைக்காக

[2006 ஆகஸ்ட் 25

கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. தனி அலுவலர் அனைத்து வேலை நாட்களிலும் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெறுகிறார். மேலும் மின்னஞ்சல், நிகரி மற்றும் அஞ்சல் மூலமாகவும் தனிப் பிரிவில் மனுக்கள் பெறப்படுகின்றன.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின் பேரில் முதலமைச்சர் தனிப் பிரிவுமூலமாக வறிய குடும்பங்களில் உள்ள சிறுவர்களின் கல்விக்காகவும், உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்காகவும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## 07-08-2006 வரை வழங்கப்பட்ட நிதியுதவி

தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பிலிருந்து 13-5-2006-க்குப்பிறகு 110 நபர்களுக்கு [96 இருதய அறுவை சிகிச்சை, 8 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, 1 சிறுநீரக கல் அகற்றும் அறுவை சிகிச்சை, 4 புற்றுநோய் அறுவை சிகிச்சை மற்றும் 1 முதுகு தண்டு வடம் அறுவை சிகிச்சை] ரூ. 25,11,518/- வழங்கப்பட்டுள்ளது.

தனிப் பிரிவில் பெறபபடும் மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு செய்ய, மாவட்டங்களிலுள்ள தனித்துணை ஆட்சியர்களுடனும் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தலைமைச் செயலக துறைகள் மற்றும் துறை தலைமையகங்களில் உள்ள முதலமைச்சரின் தனிப் பிரிவு மனுக்களுக்கான ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடனும் சென்னையில் தனி அலுவலர் காலமுறை ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கிறார்.

4. முதலமைச்சரின் தனிப் பிரிவின் நடைமுறைகளை நெறிமுறைபடுத்தி நடத்திச்செல்லும் பொருட்டு சமீபத்தில் இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் முறையே (1) தனி அலுவலர் முதலமைச்சரின் செயலகம் மற்றும் (2) தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப பிரிவு ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் செயலக தனி அலுவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முகாம் அலுவலகத்தில் வரப்பெறும் கோரிக்கை மனுக்களைக் கவனிப்பதோடு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலர்களின் சுற்றுப்பயணங்களிலும் கலந்து கொணடு பொதுமக்களின் மனுக்களைப் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தனிப் பிரிவின் தனி அலுவலர் தலைமைச் செயலகத்தில் உள்ள முதலமைச்சரின் தனிப் பிரிவில் அனைத்து அலுவல்களையும் கவனித்து வருகிறார். பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் குறைகளை



2006 ஆகஸ்ட் 25]

நிவர்த்தி செய்வதில் முன்னேற்றம் காணும் வகையில் இந்த நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. இவ்வலுவலகத்தில் 13-05-2006 முதல் 31-07-2006 வரை 90,616 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 13-05-2006-க்கு முன்னதாக நிலுவையில் இருந்த 1,47,073 மனுக்களுக்கான பதிலறிக்கைகளையும் சேர்த்து, இதே காலகட்டத்தில் மொத்தம் 67,856 பதிலறிக்கைகள் வரப்பெற்று மனுக்கள் முற்றாக்கப்பட்டுள்ளன.

## 2006 - 2007 ஆம் ஆண்டிற்கான பகுதி II புதிய திட்டங்கள்

1. இந்திய ஆட்சிப் பணி மற்றும் துணை ஆட்சியர் தகுதிகாண் பருவத்தினர், மாவட்ட பயிற்சியின்போது களப் பயிற்சி மற்றும் அனைத்து அலுவலகங்களிலும் பயிற்சி மேற்கொள்ள பயணம் செய்வது இன்றியமையாத ஒன்றாகும். மேலும் அவசரத் தேவையின்போது இவர்களின் சேவையைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் பயிற்சியாளர்களுக்கு உதவுவதற்கும், ஈப்புகளின் தேவை அத்தியாவசியமாகிறது. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அரசு 10 புதிய ஈப்புகள் வாங்கவும், அவ்வாறு வாங்கும் ஈப்புகள் இந்திய ஆட்சிப் பணியாளர் பயிற்சியினருக்கும் மற்றும் துணை ஆட்சியா பயிற்சியினருக்கும் தலா 5 ஈப்புகளை அவர்கள் எந்த மாவட்டத்திற்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்களோ, அம்மாவட்டத்திற்கு அவ்வாகனங்களை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2. புதிய அமைச்சரவை பதவி ஏற்றதன் காரணமாக முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அமைச்சர்கள் அறைகளில் பயன்பாட்டிற்காக புதியதாக கணினிகள் / பிரிண்டர்கள் / உதிரி பாகங்கள் மற்றும் பொதுத் துறையில் உள்ள கணினி அறைக்கு ஓர் அதிஅழுத்த பிரிண்டரும் ரூ.12.85 இலட்சம் செலவில் வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் கணினிமயமாக்கும் பணி அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளபோதிலும, அனைத்து மாவட்ட கணினிகளையும் இணைக்கும் பணி முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. அனைத்து மாவட்டங்களையும் கணினிமூலம் இணைக்க சென்னை மாவட்டத்தில் ரூ.2.50 இலட்சம் மதிப்பில் சர்வர் மற்றும் பெரிபரல் (Server with Peripherals) வாங்க கருதப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 25

4. மாநிலத்தின் 25 மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில், 17 மாவட்ட அலுவலகங்களுக்கு தமிழ்நாடு அரசால் வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட முப்படைவீரர் வாரிய அமைப்புகளைச் சீரமைத்திடும் உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மீதமுள்ள 8 மாவட்ட அலுவலகங்களுக்கு ஈப்புகள் வாங்க கருதப்பட்டுள்ளது.

5. உதகமண்டலத்திலுள்ள தமிழகம் விருந்தினர் இல்லத்திலுள்ள பணியாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க ரூ.11.62 இலட்சம் செலவிலும் மற்றும உதகை தமிழகம் விருந்தினர் இல்லத்திற்கு சமையலறைப் பாத்திரங்கள், பாத்திரதுலக்கி போன்ற சாதனங்களை ரூ.6.38 இலட்சம் செலவிலும் மற்றும் ஜெனரேட்டர் ரூ.2 இலட்சம் செலவிலும் வாங்க கருதப்பட்டுள்ளது.

6. அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2–ல் 24 அறைகளிலுமுள்ள படுக்கை விரிப்புகள், தலையணைகள் போன்றவை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதியவைகள் வாங்க ரூ.2.80 இலட்சத்திலும், 21" அளவுள்ள 24 கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.2.88 இலட்சத்திலும், மற்றும் 24 குளிரூட்டிகள் (1.5 Ton Air conditioner) ரூ.4.32 இலட்சம் செலவிலும் வாங்க கருதப்பட்டுள்ளது.

7. புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்பட்டு தற்போது பயனற்ற நிலையில் உள்ள கம்பளி, மெத்தை, போர்வை போன்றவற்றை ரூ.9 இலட்சம் செலவில் மாற்றவும், புதுடெல்லியிலுள்ள கூடுதல் விருந்தினர் மாளிகையில் கணினி, அச்சு நகலி, தடையில்லா மின்கருவி இயந்திரங்கள் போன்றவை ரூ.5.61 இலட்சத்தில் வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

8. அனைத்திந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குடியிருக்க சென்னையில் அரசு வாடகைக் குடியிருப்பு மிகவும் குறைவாக இருப்பதால் சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் அவர்களுக்கு வாடகைக் குடியிருப்பு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு மொத்த செலவினத் தொகையான ரூ.8.91 கோடியில், 2006–2007 ஆம் நிதியாண்டில் 40 விழுக்காடு தொகையான ரூ.3.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 25]

## கோரிக்கை எண் 38

## பொதுத் துறை

### 2006–2007–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

| | 2006–2007 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | 2004-2005 | 2005-2006 | 2006-2007 | 2006-2007 |
| | கணக்குகள் | திருத்த மதிப்பீடு திட்ட மதிப்பீடு | இடைக்கால வரவு செலவுத் மதிப்பீடு | திருத்த வரவு செலவுத் திட்ட |
| 2014 நீதி நிருவாகம் | 2,48 | 5,00 | 5,00 | 5,00 |
| 2015 தேர்தல்கள் | 46,92,30 | 71,40,38 | 74,57,98 | 95,56,58 |
| 2052 தலைமைச் செயலகம் பொதுவான பணிகள் | 13,69,92 | 17,37,76 | 17,95,95 | 18,34,62 |
| 2059 பொதுப் பணிகள் | 1,91,85 | 2,30,23 | 2,83,41 | 3,85,41 |
| 2070 ஏனைய நிருவாகப் பணிகள் | 12,84,81 | 36,28,95 | 15,87,72 | 16,50,50 |
| 2075 பல்வகைப் பொதுவான பணிகள் | 2,84,59 | 2,72,52 | 2,86,99 | 4,11,14 |
| 2216 வீட்டு வசதி | 2,20 | 3,00 | 3,00 | 3,00 |
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் | 31,51,19 | 31,36,88 | 33,42,49 | 48,41,63 |
| 2251 தலைமைச்செயலகம் – சமூகப் பணிகள் | 2,97 | 4,47 | 4,22 | 4,24 |
| 4070 ஏனைய நிருவாகப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 1,13,60 | 1 | 1 | 1 |

[2006 ஆகஸ்ட் 25

## இணைப்பு III

*(336 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் (தேர்தல்கள்) துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

தேர்தல்களுக்கான நிதி ஒதுக்கீடு 2015 என்ற தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் இடம்பெற்றுள்ளது. இம்மானியக் கோரிக்கையின்கீழ் 01–01–2007-ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்வதற்கும், தகுதிபெற்ற எஞ்சிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கும், 2006-ல் நடைபெற்ற தமிழக சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் செலவுகள் மற்றும் தேர்தல் நிர்வாக அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம், பயணப்படிகள் போன்ற பிற செலவினங்களுக்கும் 2006–2007 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.95,56,58,000/–நிதி தேவைப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான 13-வது பொதுத் தேர்தல் 8–5–2006 அன்று நடைபெற்றது. தற்போது சட்டமன்றப் பேரவையில் 143.மதுரை (மத்திய) சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டுள்ளது. இடைத் தேர்தல் நடத்துவது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் உரிய நேரத்தில் முடிவெடுக்கும்.

தேர்தல்கள் என்பதன்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-ல் 2006–2007 ஆம் ஆண்டிற்குக்கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.95,56,58,000/– (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)

102. தேர்தல் அதிகாரிகள்

| | |
|---|---|
| எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் | ரூ.5,89,58,000 |

103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

| | |
|---|---|
| எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் | ரூ.33,67,35,000 |



2006 ஆகஸ்ட் 25]

104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.

| | |
|---|---|
| எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள். | ரூ.27,38,000 |

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.

| | |
|---|---|
| எஎ. இடைத் தேர்தல்கள் (அடையாள ஒதுக்கீடு) | ரூ. 18,000 |
| எபி. மக்களவைக்குத் தேர்தல் (அடையாள ஒதுக்கீடு) | ரூ. 24,000 |

106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்.

| | |
|---|---|
| எஎ. மாநில சட்டப் பேரவை | ரூ.41,66,58,000 |

108. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்

| | |
|---|---|
| எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் | ரூ.14,05,27,000 |
| **மொத்தம்** .. | **ரூ.95,56,58,000** |

மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்கான செலவு மேற்கொள்வதற்காகத் தேவைப்படுகின்றது.

### 102. தேர்தல் அதிகாரிகள்

**எஎ.சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் மதிப்பீடு** **ரூ.5,89,58,000/–**

தமிழகத்திலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/சரிபார்த்தல் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். மாநிலத் தலைமையகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவிபுரிய மூன்று இணை/துணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் இணை/துணைச் செயலர் அந்தஸ்தில் உள்ளனர். சார்புச் செயலர்

அந்தஸ்தில் ஒரு உதவித் தலைமைத் தேர்தல் அதிகாரியும் உள்ளார். பொது (தேர்தல்கள்)த் துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் நிர்வாகப் பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள், உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பணிகளைக் கவனிக்க, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர்–தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வருகின்றனர்.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலக செலவினம், இதர செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள், இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில், 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்கின்றது.





**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

**எ. சட்டப் பேரவைத் தொகுதிகள் மதிப்பீடு ரூ.33,67,35,000**

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லா விதமான செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக, தற்காலிகமாக நியமிக்கப்படும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்துணைத்தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தரப் பணியிடங்களான ஓர் உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி, மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் இடைத் தேர்தலுக்கு முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக் காலத்தில் அறிவுறுத்தினாலும், திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலையும் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து வெளியிடப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

01–01–2007-ஐத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் அடுத்த வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கான அட்டவணையை அக்டோபர் 2006-ல் அறிவிக்கக்கூடும்.

[2006 ஆகஸ்ட் 25

2007 ஆம் ஆண்டிற்கான சுருக்கத் திருத்தத்தின் வரைவுப் பட்டியல்கள் வாக்காளர்களின் புகைப்படங்களைக் கொண்டிருக்கும். மேற்சொன்ன வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிக்காக வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், உதவியாளர் பணியிடங்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரி/தேர்தல் பதிவு அலுவலர்/உதவித் தேர்தல் பதிவு அலுவலர் ஆகிய அலுவலகங்களில் ஜூன் 2006 முதல் மார்ச் 2007 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பணியிடங்கள் தவிர, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்), இரண்டு துணை வட்டாட்சியர்கள் மற்றும் இரண்டு உதவியாளர்கள் பணியிடங்கள் காஞ்சீபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்குக் கூடுதலாக வழங்கபபட்டுள்ளன.

**103. கணினி கட்டமைப்பு**

கடந்த சில வருடங்களாக இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் செய்ய, தகவல் தொழில்நுட்ப கணினியில் உள் மற்றும் வெளிப் பயன்பாடு மற்றும் இது தொடர்பான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தேவையான கணினி கட்டமைப்புகள் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அலுவலருக்கும் 5 கணினி மற்றும் 1 செர்வர் வீதம் வழங்கப்பட்டுள்ளன. தலைமைத் தேர்தல் அலுவலரது அலுவலகத்திற்கு 1 செர்வர் மற்றும் 14 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்பு ஒன்றை மாநில அளவிலான முகவராக நியமிக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, "சி.எம்.சி. லிமிடெட்" எனும் நிறுவனம், தேர்தல் பணி குறித்த கணினி தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ளவும், கணினி மென்பொருள் உருவாக்கத்திற்கும், கணினிகளைப் பராமரிப்பதற்கும், அனைத்து மாவட்டங்களிலும் கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்ளத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களை அமர்த்தவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி/மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (கிருஷ்ணகிரி நீங்கலாக) அலுவலகங்களில் கணினி முனையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள அனைத்து கணினி செர்வர் மற்றும் அதன் உதிரி பாகங்களைப் புதிதாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய



2006 ஆகஸ்ட் 25]

கணினி தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான சம்பளம், கணினி பராமரிப்பு மற்றும் கணினி உதிரி பாகங்களுக்கான செலவுகள் இத் துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 50 விழுக்காடு செலவினம் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**103. ஏடி. புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்**

இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் முறையில் சில சீர்திருத்தங்களைச் செய்யவும் மற்றும் போலி வாக்காளர்களைத் தடுக்கவும் திட்டமிட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் கணினிமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கும் பணியின்போது நான்கு கட்டங்களில் எடுக்கப்பட்ட புகைப்பட விவரங்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களிடம் உள்ளது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிறுவனங்களிடமே வாக்காளர் புகைப்பட பட்டியல் தயாரிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கும்போது, லேமினேஷன் செய்யப்பட்ட மினியேச்சர் தாள்கள், வட்டார அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அலுவலகங்களில் உள்ளது. முதற்கட்டமாக புகைப்பட வாக்காளர் பட்டியல் தற்போது கணினியில் உள்ள விவரங்களைக் கொண்டும், வாக்காளர் புகைப்பட விவரங்களைக் கொண்டும் மற்றும் இவ்விரண்டையும் இணைத்தும் தயாரிக்கப்படுகிறது. புகைப்பட வாக்காளர் பட்டியல் வீடு வீடாகச் சென்று சரிபார்க்கப்பட்ட பின், எஞ்சியுள்ள வாக்காளர்களின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட மூன்று முறைகளில் எடுக்கப்படும்:

(1) டிஜிட்டல் கேமராக்கள் மூலம் புகைப்பட மையங்களில் புகைப்படம் பிடித்தல்.

(2) புகைப்படம் இல்லாத வாக்காளர்களிடமிருந்து புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

(3) நேரடியாக வாக்காளர்களின் வீட்டிற்குச் சென்று புகைப்படம் எடுத்தல்.

[2006 ஆகஸ்ட் 25

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கானச் செலவுகள்:**

**எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்.**

**மதிப்பீடு ரூ.27,38,000**

மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. தொடர் செலவினமான தேர்தல் பொருட்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை வைப்பதற்கான கட்டடங்களின் வாடகை, வாக்குப் பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் பொது (தேர்தல்கள்)த் துறையின் வாகனங்களின் பராமரிப்பு செலவுகள் ஆகியவையும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குப் பதிவுக்குரிய உபகரணங்கள் ஆகியவை வேலூர் கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும், விருத்தாசலம் விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சீபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் ஆகியவை மேற்கண்ட துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கானச் செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள் ரூ.18,000 (அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்திலுள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது இச்செலவினங்கள் அனைத்தும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.



2006 ஆகஸ்ட் 25]

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கானச் செலவுகள்**

**எபி. மக்களவைக்குத் தேர்தல் ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு)**

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாகப் பெறப்படும். 14-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல்கள் 10-5-2004 அன்று நடைபெற்றது. மக்களவைக்கான அடுத்த தேர்தலுக்கு மே மாதம் 2009 வரை கால அவகாசம் உள்ளதால், வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே இந்தத் துணைத் தலைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கானச் செலவுகள்**

**எஎ. மாநில சட்டப் பேரவை மதிப்பீடு ரூ.41,66,58,000**

மாநில சட்டமன்றப் பேரவைக்கு பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பானச் செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான 13-வது பொதுத் தேர்தல் 8-5-2006 அன்று நடைபெற்றது. இத்தேர்தலுக்காக சிறப்புப் பணியிடங்களில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்களின் சம்பளம் மற்றும் இதரப் படிகள், பயணப் படி, பிரிவு எழுத்தர்களுக்கான ஊதியம், தேர்தல் பணியாளர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசிக் கட்டணங்கள், ஏனைய இதர செலவினங்களான ஒளி நாடா படச் செலவு, தேர்தல் பார்வையாளர்களின் செலவுகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தைப் பயன்படுத்துவது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மேற்கொண்ட செலவினங்கள், வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்புத் தடுப்புகள் மற்றும் மின் வசதி செலவுகள், தேர்தல் சம்பந்தப்பட்ட பொருட்கள் வழங்குதல், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையாளரால் தேர்தலுக்காக வழங்கப்படும் பொருட்களுக்கான செலவினம், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் பணியாற்றிய பணியாளர்கள் மற்றும் BEL நிறுவனத்தின் தொழில்நுட்ப ஊழியர்களின் ஊதியம், தேர்தலுக்காக உபயோகப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் மசக்கெண்ணெய் தொடர்பான செலவுகள் மற்றும் அச்சுச் செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 25

தற்பொழுது சட்டமன்றப் பேரவையில் 143.மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் காலியிடம் ஏற்பட்டுள்ளது. இடைத் தேர்தல் நடத்துவது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் உரிய நேரத்தில் முடிவெடுக்கும்.

பொதுத் (தேர்தல்கள்) துறையில் மின் தட்டச்சுகள், போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் மற்றும் தொலை அச்சுக் கருவிகள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மறுவரையறை**

2001 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 84-வது திருத்தங்களின்படி (21-2-2002-இல் அறிவிக்கப்பட்டது) அரசியலமைப்புச் சட்டத்தின் 81, 82, 170, 330 மற்றும் 332-வது ஷரத்துக்கள் திருத்தங்களுக்கேற்ப, எல்லை மறுவரையறை சட்டம், 2002, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் 3-வது பிரிவிற்கேற்ப எல்லை மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டு 4-7-2002 முதல் எல்லை மறுவரையறை ஆணையம் செயல்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. ஜஸ்டிஸ் குல்தீப்சிங் இவ்வாணையத்தின் தலைவராவார். இவ்வாணையத்தில், இந்தியத் தேர்தல் ஆணையர் ஒருவரும் (தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர்) அந்தந்த மாநில தேர்தல் ஆணையர்களும், அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 மக்களவை உறுப்பினர்களும், அம்மாநில சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களாக (Associate Members) நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை. ஆயினும், மறுவரையறைப் பணிகள் குறித்து இவர்களிடம் மறுவரையறை ஆணையம் கலந்தாலோசிக்கும்.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், மாவட்ட தேர்தல் அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற மக்கள் தொகை விவரம் மற்றும் மாநில, மாவட்ட வரைபடங்கள், எல்லை மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான எல்லைகளையும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்படவேண்டிய தொகுதிகளைக் காட்டும் செயல் திட்டத்தை (Working Paper)



2006 ஆகஸ்ட் 25]

மறுவரையறை ஆணையம் தயார் செய்து இதன் ஒருங்கிணைப்பு உறுப்பினர்களுடன் இது குறித்து விவாதிக்கப்பட்டது. ஒருங்கிணைப்பு உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் வரைவு கருத்துரு (Draft Proposals) ஒன்றை எல்லை மறுவரையறை ஆணையம் தயாரித்து, அவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைவு கருத்துருக்கள் இந்திய அரசிதழிலும், சம்பந்தப்பட்ட மாநில அரசிதழிலும் வெளியிடப்படும். வரைவு கருத்துருக்களின்மீது பொதுமக்களின் மறுப்புரை மற்றும் கருத்துகள் வரவேற்கப்படும். அவ்வாறு பெறப்படும் கருத்துகள் மற்றும் எதிர்ப்புகள் எல்லை மறுவரையறை ஆணையத்தின் ஒருங்கிணைப்பு உறுப்பினர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.

கருத்துகள் மற்றும் மறுப்புரைகளை பெறுவதற்குரிய இறுதி நாளுக்குப்பின் மாநிலத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் மக்களின் கருத்துகளை கேட்டறிய ஆணையம் கூட்டங்கள் (Public Sittings) நடத்தும்.

அவ்வாறு நடத்தப்படும் கூட்டங்களில் மக்களிடமிருந்து வாய்மொழியாக மற்றும் எழுத்து மூலமாகப் பெறப்படும் கருத்துகளை ஒருங்கிணைப்பு உறுப்பினர்களோடு கலந்தாய்வு செய்து வரைவு கருத்துருக்களின்மீது தேவையான மாற்றங்களைச் செய்து இறுதி ஆணையைத் தயாரிக்கும். எல்லை மறுவரையறை ஆணையத்தின் இறுதி ஆணை இந்திய அரசிதழ் மற்றும் மாநில அரசிதழில் அறிவிக்கை செய்யப்படும். பிறகு இந்த ஆணையை எந்த நாள் முதல் அமல் செய்யலாம் என்பது குறித்து அறிவிக்கை செய்ய இந்திய குடியரசுத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுவார். இவ்வாணையின் நகல்கள் மக்களவையிலும், சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றப் பேரவையிலும் வைக்கப்படும். ஆனால், அதற்கு மாற்றங்கள் எதுவும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

எல்லை மறுவரையறை தொடர்புடைய பணிகளுக்கான எழுதுபொருள், அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான போக்குவரத்துச் செலவு, மாவட்ட/வட்ட வரைபடங்கள் தயாரிப்பிற்கான செலவு, கூட்டங்களுக்கான விளம்பர வெளியீட்டுச் செலவு முதலிய செலவினங்கள் அனைத்தையும் இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேற்சொன்ன செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசே முழுமையாக ஏற்றுக்கொள்ளும்.

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எஎ. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

**மதிப்பீடு ரூ.14,05,27,000/-**

அனைத்து பொதுத் தேர்தல்கள் மற்றும் மக்களவை, சட்டமன்றங்களுக்கான இடைத் தேர்தல்களில் வாக்காளர்கள் தங்கள் அடையாளங்களை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைமூலம் உறுதி செய்ய வேண்டும் என இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை அமல்படுத்தவும், அட்டைத் தயாரிப்புக்குத் தேவையான மென்பொருள் மற்றும் விவரங்கள் தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அவ்விரிவான வழிகாட்டுதல்கள் 2000 ஆம் ஆண்டு பெறப்பட்டன. தமிழ்நாட்டில் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம் நான்கு கட்டங்களாக இதுவரை நடத்தப்பட்டுள்ளது. 1996–1998–இல், முதல் கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டு, பின்னர் மைய இடத்தில் அடையாள அட்டை தயாரிக்கப்பட்டு, இறுதியாக தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் மாவட்ட தேர்தல் அலுவலர் மூலமாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் பின்னர் வழங்கப்பட்ட விரிவான வழிகாட்டுதல்களின்படி, இரண்டாம் கட்ட புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாகவும், மூன்றாம் கட்டப் பணிகள் 2002–2003 ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்டன. நான்காம் கட்டப் பணிகள் பிப்ரவரி 2006 முதல் மே மாதம் 5 ஆம் தேதி 2006 வரை நடத்தப்பட்டன.

இம்மாநிலத்தில் நான்குக் கட்டப் பணிகளுக்குப் பிறகு (21–6–2006) வரை தற்போது 3.55 கோடி வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டத்தில், மீதமுள்ள வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். இப்பணி அக்டோபர் 2006–க்குள் முடிக்கப்படவுள்ளது. புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது, புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கும் புகைப்பட அட்டை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



மேற்படி இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிப்பு மற்றும் முந்தைய தயாரிப்புகளுக்கான நிலுவைத் தொகை ஆகிய செலவினங்கள் மேறகொள்ளப்படுகின்றன. இச்செலவினத்தில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

[2006 ஆகஸ்ட் 25

## இணைப்பு IV

*(336 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

*உயர்தமிழ்த்தாய் இந்நிலத்தில்*
*அடைகின்ற வெற்றியெலாம்*
*உன்றன் வெற்றி!*

–பாவேந்தர் பாரதிதாசன்

உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஒலிக் குறியீடுகளாக வெளியிடத் தலைப்பட்டு, அதன்மூலம் பொருள் புலப்படுத்தும் சொற்களை உருவாக்கி, அதனைக் கருத்திற்கு எருவாக்கிக் கொண்டு, அவற்றைச் சொற்றொடராக வெளியிடும் ஆற்றல் பெற்றவர்களே மாந்தராவர். உயிரினங்களிலே பல தம்மிடையே பேசத் தெரிந்தனவாக இருப்பினும், பகுத்தறிவுடைய மாந்தரின் பேச்சு வளர்ச்சியால் ஏற்பட்ட மொழித்திறன் மாபெரும் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாயிற்று என்பது அதன் சிறப்பாகும்.

அதனால்தான், மலையிடை தோன்றி மாபெரும் அறிஞர்களால் போற்றி வழிபடத்தக்கதாக விளங்கி, இந்த உலகின் அறியாமையைப் போக்கும் தகுதி உடையன இரண்டு என்றனர். ஒன்று மலையிடை தோன்றும் கதிரவன்; மற்றது பொதிகை மலையில் பிறந்ததாகக் கூறப்படும் தன்னேரிலாத தமிழாகும். நமது மொழி, தொன்மை மிக்க மொழி. வளம் மிக்க மொழி. நமது உயிரினும் மேலான தாய்மொழியாம் தமிழ், பல மொழிகளை ஈன்றெடுத்தமையால் அவற்றின் தாய்மொழியும் ஆகும். தமிழ் மொழியின் தொன்மைக்குச் சான்றாகத் தொன்னாளில் பிறந்த இலக்கணமான தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் திகழ்கின்றன. தமிழ்மொழி பெற்றிருக்கும் எண்ணி மதிப்பிடற்கியலாச் சொற்செல்வங்களும், செந்தமிழ் மொழியின் பல்வேறு வகைப்பட்ட இலக்கண வளர்ச்சிக் கூறுகளும் அம்மொழிப் பழைமையை நிலைநாட்டும் நல்ல சான்றுகளாகும் என்றும், தமிழ் போன்ற திராவிட மொழியை நன்றாகக் கற்ற ஐரோப்பியர் எவரும் அத்தகைய வியத்தகு மொழியைத் தமது தாய்மொழியாகக் கொண்டு வளர்த்துள்ள மக்களினத்தை மதிப்போடு கருதாமல் இருக்க முடியாது என்றும் தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு திராவிட மொழிகளை எல்லாம்



2006 ஆகஸ்ட் 25]

கற்றுத் தேர்ந்து ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட மேனாட்டு அறிஞர் கால்டுவெல் கூறியுள்ளார். வடமொழி முதலான பிறமொழிகள் துணையின்றி இயங்கவல்ல ஆற்றல் படைத்த மொழி தமிழ் என்றும் விளக்கியுரைத்தார் அவர்.

இவ்வகையில் அவர் மட்டுமன்றி, அறிஞர் ஜி.யூ. போப், வீரமாமுனிவர், டாக்டர் வின்ஸ்லோ முதலான மேனாட்டு அறிஞர்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருக்கின்ற இனிய மொழி நம் தமிழ் மொழி. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் மொழியின் திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதையும், உலகப் பொதுமறை எனப் போற்றப்படுவதையும் எண்ணி எண்ணி இறும்பூது எய்தாமல் இருக்க இயலாது. மிக உயர்ந்த பணபாடு வளர்த்த மொழி நமது என்று நாம் பெருமைப்படாமலும் இருக்க முடியாது. பெருமை கொள்ளும் அதேநேரத்தில தமிழ் மொழிக்கு மேன்மேலும் சிறப்பும் வளமும் சேர்க்க வேண்டியது நமது கடமை என்பதை மறத்தலும் இயலாது. தமிழ் அறிஞர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக அமைந்திடினும், நாங்கள் அதை முன்னெடுத்துச் சென்றதன் பயனாக, மைய அரசு தமிழ்மொழியின் தொன்மைச் சீரினையும் தனித் தகுதியையும், பிற சிறப்புக்களையும் ஏற்று, தமிழ்மொழியைச் செம்மொழித் தகுதியுடையதென அறிவித்துச் சிறப்பித்துள்ளது. ஆளுநர் உரையில் தெரிவித்தவாறு, தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகிய பெரும் புலவர்கள் பெயர்களில் செம்மொழி விருதுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. மேலும் தமிழ்மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்கவும் திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்கவும் வலியுறுத்தியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக "உலகத்தின் மற்ற தொன்மையான மொழிகளோடு ஒப்பிடத்தக்க வகையில் தமிழ் மொழியில் இலக்கிய ஆய்வினை மேற்கொள்வதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை 'உலகத் தமிழ்—செம்மொழி ஆய்வு நிறுவனமாக அறிவித்து, செம்மொழி ஆராய்ச்சிக்கான மத்திய அரசின் நிதியுதவியினை இந்த நிறுவனத்திற்கு வழங்கிடுமாறு இந்த அரசு மைய அரசை வலியுறுத்தும் எனவும், தொன்மையான மொழி என்பதோடு தொடர்ந்து மக்கள் பேச்சு வழக்கிலுள்ள மொழியாகவும், உலக இலக்கியங்களோடு ஒப்பிடத்தக்க இலக்கிய வளத்தினைத் தொடர்ச்சியாகப் பெற்றுவரும் மொழியாகவும் விளங்கும் இனறைய தமிழ் இன்றைய தலைமுறைக்கும் இனிவரும்

[2006 ஆகஸ்ட் 25

தலைமுறைக்கும் பயன்பாடு மிகுந்த மொழியாகவும் விளங்கிட 'அறிவியல் தமிழ் மன்றம் உருவாக்கப்படும்' எனவும் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், தமிழைச் செம்மொழி என்று உலகோர் மதிக்க வேண்டுமென நூறாண்டுகளுக்கு முன்பே முதற்குரல் கொடுத்தவரும், சூரிய நாராயண சாஸ்திரி என்ற தமது பெயரைப் 'பரிதிமாற் கலைஞர்' என்னும் தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவரும், திருப்பரங்குன்றத்தில் பிறந்து இந்தத் திருவிடம் முழுவதும் புகழ் செதுக்கியவருமான பெருமகனாரது நினைவைப் போற்றும்வகையில் அவரது அஞ்சல் தலையை வெளியிட மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தவும், திருப்பரங்குன்றத்திற்கு அருகில் உள்ள விளாச்சேரி கிராமத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவில்லமாக ஆக்கவும், அவரது நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவரது வழித் தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கவும் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழுக்கு ஆக்கம் செய்யும் குறிக்கோளோடுதான் தமிழ்மொழி-கலை-பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சி கருதிய பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் கீழியங்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம், மொழிபெயர்ப்புப் பிரிவு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தொல்லியல் துறை, அருங்காட்சியகத் துறை, கலை-பண்பாட்டு இயக்ககம், மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள், அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள், அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசு கட்டட-சிற்பக் கலைக் கல்லூரி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண் கலைக் குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியன உரிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

### 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (தொகு மொத்தம்)

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | துறைத் தலைமை | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 46 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 2,67,04 | ... | ... | 2,67,04 |
| 2 | 46 02 | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | அனுமதித்தது | 15,44,89 | ... | ... | 15,44,89 |



2006 ஆகஸ்ட் 25]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 46 03 | தொல்லியல் துறை | அனுமதித்தது | 4,26,90 | 1 | ... | 4,26,91 |
| 4 | 46 04 | அருங்காட்சியகத் துறை | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>4,71,91 | ...<br>1,20,03 | ...<br>... | 1<br>5,91,94 |
| 5 | 46 05 | கலை பண்பாட்டு இயக்ககம் | அனுமதித்தது | 15,97,75 | 30,00 | ... | 16,27,75 |
| 6 | 46 06 | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | அனுமதித்தது | 45,73 | ... | ... | 45,73 |
| | | மொத்தம்: | சாட்டியது<br>அனுமதித்தது | 1<br>43,54,22 | ...<br>1,50,04 | ...<br>... | 1<br>45,04,26 |
| | பெருமொத்தம்: | | | 43,54,23 | 1,50,04 | ... | 45,04,27 |

### 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு

| | கணக்குத் தலைப்பு (1) | திட்டப் பணிகள் (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| | **வருவாய்ப் பகுதி** | | | |
| 2059 | **பொதுப் பணிகள்** | | | |
| 01 | அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 053 | பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 1,17,95 | 1,17,95 |
| 2202 | **பொதுக் கல்வி** | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | | | |
| 102 | பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | | 4,74,54 | 4,74,54 |
| 05 | மொழி வளர்ச்சி | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 2,30 | 3,01,42 | 3,03,72 |
| 102 | இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 2 | 65,00 | 65,02 |
| 800 | எனைய செலவு | 71,97 | 6,66,02 | 7,37,99 |
| 2205 00 | **கலையும் பண்பாடும்** | | | |
| 001 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் | 75 | 70,79 | 71,54 |
| 101 | நுண்கலைக் கல்வி | 2,84,76 | 4,18,01 | 7,12,77 |
| 102 | கலை–பண்பாட்டை வளர்த்தல் | 95,50 | 6,95,94 | 7,91,44 |

[2006 ஆகஸ்ட் 25

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 103 | தொல் பொருளியல் ஆய்வு | 42,98 | 3,16,10 | 3,59,08 |
| 105 | பொது நூலகங்கள் | 2 | 39,75 | 39,77 |
| 107 | அருங்காட்சியகங்கள் | 14,62 | 4,08,72 | 4,23,33 |
| **2251. 00** | **தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள்** | | | |
| 090 | தலைமைச் செயலகம் | — | 2,67,04 | 2,67,04 |
| **மூலதனப் பகுதி** | | | | |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை–பண்பாடு குறித்த மூலதனச் செலவு | | | |
| 04 | கலையும் பண்பாடும் | — | — | — |
| 101 | நுண்கலைக் கல்வி | 30,00 | — | 30,00 |
| 106 | அருங்காட்சியகங்கள் | 60,02 | — | 60,02 |
| ஏஜ. | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 60,01 | — | 60,01 |
| 800 | ஏனைய செலவு | 1 | — | 1 |
| **மொத்தம்–நிகரக் கோரிக்கை** | | 6,62,99 | 38,41,28 | 45,04,27 |
| கூட்டுக – திருப்பி வசூலிப்பவை | | — | — | — |
| **மானியக் கோரிக்கை எண் 46** | | **6,62,99** | **38,41,28** | **45,04,27** |

## 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

| வ. எண் (1) | திட்டங்களின் விவரங்கள் (2) | 2006–2007–ல் செலவு தொடர் செலவு (3) | தொடராச் செலவு (4) | மொத்தம் (5) |
|---|---|---|---|---|
| 105 | பொது நூலகங்கள் | 2 | 39.75 | 39.77 |
| | **தலைமைச் செயலகம்–தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை** | | | |
| | **திட்டத்தில் சேராதது** | | | |
| 1 | புதிய டிஜிட்டல் நகல் எடுக்கும் கருவி வாங்குதல் | — | 1.20 | 1.20 |
| 2 | புதிய ஒளி நகலி வாங்குதல் | — | 0.60 | 0.60 |
| | **தமிழ் வளர்ச்சி இயக்ககம்** | | | |
| | **திட்டத்தில் சேராதது** | | | |
| 3. | ஆட்சி மொழித் திட்டப் பொன் விழாக் கொண்டாட்டம் | — | 2.00 | 2.00 |



2006 ஆகஸ்ட் 25]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4 | துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக் கணினிகள் வாங்குதல் (ஒவ்வொன்றும் ரூ.50,000/– விலையில் 15 கணினிகள்) | — | 7.50 | 7.50 |
| 5 | தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மண்டல மற்றும் மாவட்ட அளவிலான அலுவலகங்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல் | — | 0.58 | 0.58 |
| | **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 6 | வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் பட்ட ஆய்வு மற்றும் முதுநிலை ஆய்வு மேற்கொள்ளும் பிறமொழி மாணவர்களுக்கு நிதியுதவி | 2.00 | — | 2.00 |
| 7 | தமிழ் எழுத்தாளர்கள், இலக்கியம் மற்றும் இலக்கணப் படைப்புகள் குறித்த கலைக் களஞ்சியம் தயாரிப்பதற்காகக் குழு அமைத்தல் | — | 6.00 | 6.00 |
| 8 | ஆட்சி மொழிப் பயிற்சி மையத்திற்கு அறைகலன்கள் வாங்குதல் | — | 1.64 | 1.64 |
| 9 | தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்கள் பற்றிய ஆவண விளக்கப்படம் | — | 10.00 | 10.00 |
| 10 | கலை பண்பாட்டு இயக்ககத்திற்காகத் தமிழ் வளர்ச்சி வளாகத்தில் தற்போதுள்ள கட்டடத்தின்மீது இரண்டாம் தளம் கட்டுதல் | — | 20.00 | 20.00 |
| | **தொல்லியல் துறை** | | | |
| | **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 11 | நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் | — | 11.00 | 11.00 |
| 12 | கரூர் மற்றும் மதுரையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்தல் | — | 5.00 | 5.00 |
| 13 | தனி வரைவு நூல் வெளியிடுதல் | — | 0.30 | 0.30 |
| 14 | திண்டுக்கல் மாவட்டத்தின் தொல்லியல் குறித்த கையேடு வெளியிடுதல் | — | 0.30 | 0.30 |
| 15 | நாகப்பட்டினம்,கோவை மற்றும் ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகளை வெளியிடுதல் | — | 1.50 | 1.50 |
| 16 | துறை அச்சகத்திற்காகச் சிறிய ஆப்–செட் அச்சிடும் இயந்திரம் வாங்குதல் | — | 5.00 | 5.00 |
| 17 | சென்னையிலுள்ள தொல்லியல் வேதியல் ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துதல் | — | 0.95 | 0.95 |

[2006 ஆகஸ்ட் 25

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 18 | கரூர் மற்றும் குற்றாலத்தில் தொல்லியல் அருங்காட்சியகங்களை மேம்படுத்துதல் | — | 2.00 | 2.00 |
| 19 | தொல்லியல் குறித்த கருத்தரங்குகளை நடத்துதல் | — | 5.00 | 5.00 |
| | **அருங்காட்சியகத் துறை** | | | |
| | **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 20 | மாவட்ட அருங்காட்சியகங்களுக்குத் தொலைபேசி மற்றும் இணையதள வசதிகள் செய்து கொடுத்தல் | 1.50 | 6.60 | 8.10 |
| 21 | பழைய வெளியீடுகளை மீண்டும் அச்சிடுதல் மற்றும் புதிய வெளியீடுகளை அச்சிடுதல் | — | 5.00 | 5.00 |
| | **கலை–பண்பாட்டு இயக்ககம்** | | | |
| | **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 22 | அனைத்து 17 இசைப் பள்ளிகளிலும் வயலின் மற்றும் மிருதங்கப் பிரிவுகளை ஏற்படுத்துதல் | 39.95 | 12.75 | 52.70 |
| 23 | இசைக் கல்லூரிகளுக்குப் பரதநாட்டிய அணிகலன்களை வாங்குதல் | — | 8.10 | 8.10 |
| 24 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் சுவர் ஓவியங்களுக்காகச் சுவர் கட்டுதல் | — | 10.00 | 10.00 |
| 25 | சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள சிற்பத் துறையில் கவின் கலை பட்ட மேற்படிப்பைத் தொடங்குதல் | 2.00 | 3.00 | 5.00 |
| 26 | மாமல்லபுரத்திலுள்ள கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை அரசுக் கல்லூரியில் நூலகம் மற்றும் கணினி மையத்திற்குக் கட்டடங்கள் கட்டுதல் | — | 50.00 | 50.00 |
| 27 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொன் விழாக் கொண்டாட்டம் | — | 5.00 | 5.00 |
| 28 | சென்னை அரசு இசைக் கல்லூரிக்கு ஒளி நகலி இயந்திரம் வாங்குதல் | — | 0.60 | 0.60 |
| 29 | தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களுக்கும் பயிற்சிப் பொருட்கள் வாங்குதல் | — | 5.00 | 5.00 |
| 30 | மாநில அளவில் கலைத்திறன் குறித்த பயிலரங்கம் நடத்துதல் | 1.20 | — | 1.20 |
| 31 | கன்னியாகுமரியில் நிரந்தரமாகக் கலைக்கூடங்கள் அமைத்தல் | 3.00 | 1.50 | 4.50 |
| 32 | தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவிற்கு ஒளி நகலி இயந்திரம் வாங்குதல் | — | 0.60 | 0.60 |



2006 ஆகஸ்ட் 25]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 33 | தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் பாரம்பரிய இளம் கலைஞர்கள் முகாம் நடத்துதல் | — | 1.00 | 1.00 |
| 34 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் பழங்குடியினர் கலைவிழா நடத்துதல் | — | 2.50 | 2.50 |
| 35 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கலைக் கூடத்தில் ஒலி வசதியையும் இருக்கை வசதிகளையும் செய்து தருதல் | — | 1.00 | 1.00 |
| 36 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகக் கட்டடத்தில் ஒளி, ஒலி நூலகம் அமைத்தல் | — | 5.00 | 5.00 |
| 37 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் மற்றும் மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைக் குழுக்களை ஊக்குவித்தல் | — | 3.50 | 3.50 |
| 38 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ஒரு பக்கம் சுற்றுச் சுவர் கட்டுதல் | — | 15.00 | 15.00 |
| | **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்** | | | |
| | **பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | | | |
| 39 | தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் 1 பகுதியை வெளியிடுதல் | — | 2.00 | 2.00 |
| 40 | நிகரி இயந்திரம் வாங்குதல் | — | 0.10 | 0.10 |
| 41 | திட்டப் பயனுக்கு அவசியமான குறிப்புப் புத்தகங்கள் வாங்குதல் | — | 0.20 | 0.20 |
| | **மொத்தம்** | **49.65** | **189.02** | **238.67** |

## தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் தலையாய பணிகளை ஆட்சிமொழிச் செயலாக்கப் பணி, தமிழ் வளர்ச்சிப் பணி என இரண்டு வகையாகக் குறிப்பிடலாம்.

### ஆட்சிமொழிச் செயலாக்கம்

**ஆய்வு**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டம் *1956* ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாட்டின் ஆட்சிமொழி தமிழ் ஆகும். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியாகத்

தமிழ் பயன்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. இதில் குறிப்பிடத்தக்கது ஆட்சிமொழித் திட்ட ஆய்வுப் பணியாகும். தலைமைச் செயலகத் துறைகள் உட்படத் தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத்தும் ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பில் ஆய்வு செய்யப்படுகின்றன. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள், மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு அரசு நிருவாகத்தில் தமிழ்மொழியை முழுமையாகப் பயன்படுத்தச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆட்சிமொழிச் செயலாக்கப் பயிற்சி

ஆட்சிமொழிச் செயலாக்கம் பற்றிய அரசாணைகளையும், தமிழில் குறிப்புகள், வரைவுகள் எழுதும் நடைமுறைகளையும் அரசுப் பணியாளர்கள் நன்கு அறிந்திருப்பது இன்றியமையாததாகும். அப்போதுதான் அரசு நிருவாகத்தில் ஆட்சிமொழியாகத் தமிழ் பயன்படுத்தப்படும் முறை சிறப்பாக அமையும். இதைக் கருத்திற்கொண்டு, பவானிசாகரில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் நிருவாக நடைமுறைப் பயிற்சியின்போது ஆட்சிமொழித் திட்டப் பயிற்சியும் இவ்வியக்ககத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைகள் தம் பணியாளர்களுக்கு அளிக்கும் புத்தாக்கப் பயிற்சியின்போதும் இத்துறையால் ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், துறைவாரியாகப் பணியாளர்கள் அழைக்கப்பட்டு தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலுள்ள ஆட்சிமொழிப் பயிற்சி மையம் வாயிலாகவும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

மாவட்ட ஆட்சிமொழிக் கருத்தரங்கில் மாவட்டத்திலுள்ள அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் முதலியோர் கலந்துகொள்கின்றனர். ஆட்சிமொழித் திட்டச் செயற்பாடுகள் பற்றி இக்கருத்தரங்கில் எடுத்துரைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### ஆட்சிச் சொல்லகராதி

அரசு அலுவலகங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்த உதவும்வகையில், ஆங்கிலத்தில் உள்ள ஆட்சிச் சொற்களுக்கு





இணையான தமிழ்ச் சொற்களைக் கொண்ட ஆட்சிச் சொல்லகராதி நூல்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து அலுவலகங்களுக்கும் இத்துறையால் வழங்கப்படுகின்றன.

### மொழிபெயர்ப்பு

அரசு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு வேண்டப்பெறும் படிவங்கள், பதிவேடுகள், விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் முதலியன தமிழில் மொழிபெயர்ப்பு செய்து அளிக்கப்படுகின்றன.

### சொல்வங்கி

அன்றாடம் புழக்கத்திற்கு வரும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள், திங்கள்தோறும் நடைபெறும் சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அளிக்கப்படுகின்றன.

### கேடயம், பரிசுகள்

ஆட்சிமொழிச் செயலாக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையில் தமிழ் மொழியைச் சிறப்பாகப் பயன்படுத்தும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயங்களும், பணியாளர்களுக்குப் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### தமிழ் வளர்ச்சிப் பணி

காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஆட்சி மொழி வளம்பெற வேண்டியது இன்றியமையாததாகும். இதைக் கருத்திற்கொண்டு ஆட்சிமொழிச் செயலாக்கப் பணியுடன் தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் இத்துறை ஆற்றி வருகிறது. அவற்றுள் சில இங்கே குறிப்பிடப்படுகின்றன.

### தமிழ் நூல்கள் வெளியிட நிதியுதவி

பல்வேறு துறைகளிலும் நூலகள் வெளிவருவது மொழிக்கு வளம் சேர்ப்பதாக அமையும். இதைக் கருத்திற்கொண்டு, தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையிலான நூல்கள் வெளிவருவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. நூல் அச்சிட ஆகும் செலவில் 60% தொகை அல்லது அதிகபட்சத் தொகை ரூ.25,000/— ஆகியவற்றில் குறைவான தொகை நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 25

### சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

மொழி வளர்ச்சியில் நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனவே, தமிழில் நூல்கள் வெளிவருவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆண்டுதோறும் தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களுக்கு 31 வகைப்பாடுகளில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில், ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூலாசிரியர்க்கு ரூ.10,000/- பரிசும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.2,000/- பரிசும் வழங்கப்படுகின்றன.

### அகவை முதிர்ந்த தமிழறிஞர் நிதியுதவி

தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றிய தமிழறிஞர்கள் இன்னலுறக்கூடாது எனும் நன்னோக்கில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மேற்படாமலும், 58 வயது நிறைந்தும் உள்ள தமிழறிஞர்கள் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் திங்கள் தோறும் ரூ.500/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

### மொழிக் காவலர்களுக்கு/தமிழ் மொழி, பண்பாட்டைக் காக்கப் பாடுபட்டவர்களுக்கு நிதியுதவி

தமிழ் மொழி-பண்பாட்டைக் காத்திடத் தொண்டும், தியாகமும் புரிந்தோருக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. மொழிக் காவலர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.3,000/- மற்றும் மருத்துவப்படி ரூ.15/-ம், மொழிக் காவலர்களின் மரபுரிமையர்களுக்குத் திங்கள் தோறும் ரூ.1,500/- மற்றும் மருத்துவப்படி ரூ.15/-ம் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், மொழிக்காவலர்கள் சிலருக்கு ரூ.10,000/-, மரபுரிமையர்களுக்கு ரூ.5,000/- என ஒட்டுமொத்த நல்கையும் வழங்கப்பட்டுள்ளது.

### விருதுகள்

சீரிய பணிகளால்-படைப்புகளால் தமிழுக்கு வளம் சேர்த்த தகைமையாளர்களைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகிய தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விருதும் ஒரு இலட்சம் ரூபாயும் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் கொண்டதாகும்.



2006 ஆகஸ்ட் 25]

### பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை

பிற மாநிலங்களிலுள்ள மக்கள் தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பும் நோக்கிலும் பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

### விழாக்கள்

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளைப் படைத்தளித்த திருவள்ளுவப் பெருந்தகையைப் போற்றி நினைவுகூரும்வகையில் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா கொண்டாடப்படுகிறது. தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்கள் அவ்வப்போது கொண்டாடப்படுகின்றன. டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச் சிலைக்கு அவரின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் நாளன்றும், ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு உலக மகளிர் தினமான மார்ச்சு 8 ஆம் நாளன்றும் ஆண்டுதோறும் மாலையணிவித்துச் சிறப்பு செய்யப்படுகிறது.

### நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் சீரிய படைப்புகள் பொதுமக்களிடம் எளிதில் சென்று சேரவேண்டிய இன்றியமையாமையைக் கருதி அரசு அவ்வப்போது சிறந்த தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி வருகிறது. இவ்வகையில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.20.00 இலட்சமும், புலவர் குழந்தை அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மாபுரிமையர்களுக்கு ரூ.10.00 இலட்சமும் பரிவுத்தொகைகளாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 8-7-2006 அன்று வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியைச் செம்மொழி என்று அறிவிக்க வேண்டுமென நூறாண்டுகளுக்கு முன்பே முதல் குரல் கொடுத்தவரும் சூரிய நாராயண சாஸ்திரி என்ற தமது பெயரைப் 'பரிதிமாற்கலைஞர்' என்று தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவரும், திருப்பரங்குன்றத்தில் பிறந்து இந்தத் திருவிடம் முழுவதும் புகழ் செதுக்கியவருமான பெருமகனாரது நினைவைப் போற்றும் வகையில் அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும் என்றும், திருப்பரங்குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி கிராமத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவில்லமாக ஆக்க

[2006 ஆகஸ்ட் 25

முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், அவரது நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவரது வழித்தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படும் என்றும் 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**நூலாக்கம்**

தமிழ் மொழி வளர்ச்சிக்கும், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்கும் மிகவும் பயன்படும் சிறந்த நூல்களைத் தயாரித்து வெளியிடும் பணியையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. தமிழ் நூல் விவர அட்டவணை, தமிழ் மொழி வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு, ஆட்சித் தமிழ், குறளமுதம் முதலிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள் கலைக் களஞ்சியம், கலைச் சொற்களஞ்சியம், பல்துறைக் கலைக் களஞ்சியம், இலக்கியச் சொல்லடைவு முதலிய நூல்கள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாணவர் போட்டிகள்**

தமிழ்ப் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் வண்ணம் மாவட்டந்தோறும் மேல்நிலைப் பள்ளி (11, 12 ஆம் வகுப்பு) மாணவ, மாணவியரிடையே தமிழில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவிலான போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதேபோன்று, கல்லூரி மாணவ, மாணவியரிடையே மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**நூலகம்**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், வரலாறு முதலானவற்றின் தொடர்பான நூல்களும் தளவாடங்களும் ரூ.1.00 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

**"தமிழகம் ஊரும் சீரும்" - குறுந்தகடுகள் தயாரித்தல்**

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஊர்கள், ஊர்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள், தற்போதைய நிலை முதலிய விவரங்களைத் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 25]

**தமிழில் மென்பொருள் தயாரித்தல்**

இணைய தளங்களில் பயன்படும் மொழியாகத் தமிழ் வளர்ந்து வருகிறது. தமிழில் மென்பொருள்களைப் பலர் தயாரித்து வருகின்றனர். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டிற்கும் உதவும் வகையிலான தமிழ் மென்பொருள்களைத் தெரிந்தெடுத்து அவற்றை அரசு அலுவலகங்களில் பயன்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மின் அகராதி தயாரித்தல்**

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத அலுவலர்களும் அரசு நிருவாகத்தில் தமிழைப் பயன்படுத்தி ஆட்சிமொழித் திட்டத்தைச் செயற்படுத்திட ஏதுவாக, மின் அகராதி தயாரித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கிளவியாக்கம் தயாரித்தல்**

எழுத்துப் பிழைகளைக் களைந்திட ஆங்கில மொழிக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் மென்பொருள் (Spell checker) போன்று தமிழ் மொழிக்கும் கிளவியாக்கம் (Spell Checker) தயாரித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மொழித் திறம்-தயாரித்தல்**

தமிழில் எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, தொடர் அமைப்புப் பிழை போன்ற பிழைகளைத் திருத்திக்கொள்ளும் வகையில், கணினி வாயிலாக வழிகாட்டக்கூடிய மொழித் திறம் (Grammar Checker) தயாரித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நூல்கள் மொழிபெயர்ப்பு**

தமிழ் மொழியின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் சங்க இலக்கிய நூல்களை இந்தியில் மொழிபெயர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிறமொழிகளின் இலக்கியங்களைத் தமிழ் மக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**புதிய திட்டங்கள்**

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் 29 மாவட்ட அலுவலகங்களுக்குத் தொலைபேசி வசதியளித்தல், மண்டல, மாவட்ட அலுவலகங்களுக்கு

15 கணினிகள் வழங்குதல், தமிழ் வளர்ச்சி இயக்கக ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி மையத்திற்குத் தளவாடங்கள் வாங்குதல், ஆட்சிமொழித் திட்டப் பொன்விழா கொண்டாடுதல், வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மற்றும் முதுநிலை ஆய்வு மேற்கொள்ளும் பிற மொழி மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கல், தமிழ் இலக்கணக் களஞ்சியம் தயாரித்தல், தமிழ் இலக்கியக் களஞ்சியம் தயாரித்தல், தமிழ்ப் படைப்பாளிகள் 'யார், எவர்' நூல் தயாரித்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல், தமிழ் எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் பற்றிய ஆவண விளக்கப்படம் தயாரித்தல், கலை-பண்பாட்டு இயக்கக அலுவலகத்திற்குத் தமிழ் வளர்ச்சி வளாகத்தில் இரண்டாம் தளம் கட்டுதல் ஆகிய புதிய திட்டங்கள் ரூ.**49.72** இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டப் பணிகளாக மேற்கொள்ளப்படவுள்ளன.

**மொழிபெயர்ப்புப் பிரிவு**

தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மொழிபெயர்ப்புப் பிரிவு செயற்பட்டு வருகிறது. அரசு அறிவிக்கைகள் போன்றவற்றிற்குத் தமிழாக்கம் அளித்து வருவதுடன், இந்தப் பிரிவு, தலைமைச் செயலகத்திலுள்ள பிற துறைகளின் பணியாளர்கள், குறிப்பு மற்றும் வரைவு ஆகியவற்றைத் தமிழில் எழுதுவதற்கு உதவி புரிந்து வருகிறது. சுற்றோட்டக் குறிப்பு, தொழில்நுட்பத் தன்மை வாய்ந்த அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழு மற்றும் பொதுக் கணக்குக் குழு அறிக்கைகள் ஆகியவற்றையும் இப்பிரிவு மொழியாக்கம் செய்து அளித்து வருகிறது. விழிப்புப் பணி ஆணைய ஆண்டு அறிக்கை, விசாரணை ஆணைய அறிக்கை, காபிபோசா சட்டம் தொடர்பான ஆவணங்கள், அமைச்சரவைக் குறிப்பு, மாண்புமிகு அமைச்சர்கள் உரை போன்ற கடும் கமுக்கத் தன்மை வாய்ந்த மொழியாக்கப் பணிகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்சொன்ன பணிகளுடன் சார்நிலை அலுவலகங்கள் பின்பற்றுவதற்காகத் தலைமைச் செயலக நிருவாகத் துறைகள் பிறப்பிக்கும் கையேடு மற்றும் நெறிமுறைப் புத்தகங்களை மொழியாக்கம் செய்யும் பணியும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மனித உரிமைகள் ஆணைய அறிக்கைகள், சிறுபான்மை நலக் குழுவின் அறிக்கை ஆகியவையும் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. மத்தியப் புலனாய்வுத் துறையின் முத்திரைத்தாள மோசடி வழக்கு விசாரணை



தொடர்பான **7** தொகுதிகள் கொண்ட ஆவணங்களை மொழியாக்கம் செய்வதற்காகத் தலைமைச் செயலகத்திலுள்ள உள் துறையின் ஆலோசனையின்பேரில், இத்துறையைச் சேர்ந்த இரண்டு உதவி இயக்குநர்கள் மத்தியப் புலனாய்வுத் துறைக்கு முகமையில் அனுப்பப்பட்டுப் பணியாற்றியுள்ளனர்.

மைய அரசிடமிருந்து வரும் இந்தி மொழிக் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்வதற்காக இப்பிரிவில் இந்தி மொழி பெயர்ப்பாளர் ஒருவர் உள்ளார்.

ஒவ்வோராண்டும் நிதித் துறை தொடர்பான வரவு-செலவுத் திட்ட வெளியீடுகள், மேதகு ஆளுநர் உரை, மாண்புமிகு நிதியமைச்சர் உரை, துறை மானியக் கோரிக்கைகள் போன்றவற்றைத் தமிழாக்கம் செய்வதற்காக ஓர் உதவி இயக்குநர், ஒரு பிரிவு அலுவலர் மற்றும் மூன்று உதவிப் பிரிவு அலுவலர்கள் அடங்கிய மொழிபெயர்ப்புக் குழு ஒன்று ஐந்து மாத காலத்திற்கு அதாவது ஒவ்வோராண்டும் நவம்பர் முதல் மார்ச்சு வரை நிதித் துறைக்கு முகமையில் அனுப்பப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு நடைபெறும்போது, மாநாட்டில் வைக்கக்கூடிய குறிப்புகளுக்குத் தமிழாக்கம் அளிப்பதற்காக அலுவலர் குழு ஒன்று, பொது (மரபு)த் துறைக்கு முகமையில் அனுப்பப்படுகிறது. சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரின்போது வினாக்கள், வெட்டுத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கு உடனுக்குடன் மொழிபெயர்ப்பு அளிப்பதற்காக, ஓர் உதவிப் பிரிவு அலுவலர், இப்பிரிவிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறார்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிப் பகிர்ந்தளிப்பு முறையை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட மாநில நிதிக் குழு அளிக்கும் அறிக்கைகளைத் தமிழாக்கம் செய்வதற்கென அலுவலர் குழு ஒன்று இத்துறையில் இருந்து மாநில நிதிக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்ச்சியைப் போற்றி வளர்ப்பது; உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன்-பல்வேறு துறைகளுடன் இணைந்த ஆராய்ச்சியைப்

போற்றி வளர்ப்பது; தமிழ், தமிழறிஞர்களின் மேம்பாட்டைப் பேணுவது என்பவற்றை நோக்கமாகக் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1970 ஆம் ஆண்டு தமிழக அரசால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பெற்றது. தமிழ்நாடு அரசின் முழு நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் தற்போது இலக்கியம், சுவடிப் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம் மற்றும் அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய நான்கு புலங்கள் உள்ளன.

சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் முனைவர் பட்ட ஆய்வுக்கு வழிகாட்டல், தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் ஆய்வியல் நிறைஞர் மற்றும் தமிழ் முதுகலைப் பட்ட வகுப்புகள் நடத்துதல், பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளுதல், தமிழியல் தொடர்பான திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல், நூல்கள் வெளியிடுதல், வெளிநாட்டவர் உள்ளிட்ட தமிழரல்லாதார்க்குத் தமிழ் மொழி பயிற்றுவித்தல், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், தமிழியல் ஆய்விதழ், செய்திக்கதிர் வெளியிடுதல் போன்ற பணிகள் இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

(1) தமிழ் இலக்கியக் குறியீட்டு அகராதி (2) தமிழர் பண்பாட்டுக் கலைச்சொற் கோவை (3) கம்பன் களஞ்சியம் (4) தமிழில் சிறுவர் இலக்கியம் (5) பேச்சுத் தமிழுக்கான பல்லூடகப் பயிற்றுப் பேழை போன்ற ஐந்து பெருந்திட்டங்கள் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதியுதவியுடன் முடிவுறும் தருவாயில் உள்ளன.

தமிழியல் தொடர்பான பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் இந்நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு தொடர்பானவை என அமைகின்றன.

இந்நிறுவனம் இதுவரையிலும் 500 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், அரிய நூல் மறுபதிப்புகள், இங்குள்ள கல்விசார் அலுவலர்களின் திட்டப்பணிகள், பிற தமிழறிஞர்களின் படைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையின் அரிய நூல்கள்/சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி பெற்றும் இந்நிறுவனம் பல நூல்களை



வெளியிட்டுள்ளது. 9 நூல்களை இந்நிறுவனம் 2005-2006 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. அகர முதலி இயக்ககத்திற்காக 'ப' மற்றும் 'ந' வரிசையில் ஆறு பகுதிகள் அச்சிட்டு வழங்கும் பணியினைச் செவ்வனே முடித்துள்ளது.

பல கருத்தரங்குகளை இந்நிறுவனம் தனியாகவும், பிற நிறுவனங்களோடு இணைந்தும் நடத்தி வருகின்றது. தமிழ்நாடு அரசு பகுதி-II திட்டத்தின் நிதியுதவியுடன் 'தமிழரின மரபுச் செல்வங்கள் - அறிவியல் தொழில்நுட்பம்' எனும் மூன்று நாள் தேசியக் கருத்தரங்கு 25-10-2005, 26-10-2005 மற்றும் 27-10-2005 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டுள்ளது. டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரியுடன் இணைந்து 'தமிழ் இலக்கிய வகைமையியல்' எனும் இரண்டு நாள் கருத்தரங்கு 5-11-2005 மற்றும் 6-11-2005 ஆகிய நாட்களில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. உலக சமுதாய சேவா சங்கத்துடன் இணைந்து 'வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்' எனும் இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கு 26-11-2005 மற்றும் 27-11-2005 ஆகிய நாட்களில் சென்னையில் சிறப்பாக நடத்தப்பெற்றது. கலைமகள் இலக்கிய மாத இதழுடன் இணைந்து 'தமிழ்ச் சிறுகதைகள் பட்டறை' ஒன்றினை 9-12-2005 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தியது.

'இலக்கிய மேடை' இந்நிறுவனத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது. தமிழ் ஆய்வியல் நிறைஞர், முதுகலைப் பட்ட மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர ஒவ்வொரு புதன்கிழமையும் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது.

தமிழறிஞர்களைப் போற்றும்வகையில் தமிழறிஞர் வரிசைத் திங்கள் தொடர் கருத்தரங்குகளை நடத்தி, அக்கருத்தரங்குகளில் அறிஞர்கள் படிக்கும் கட்டுரைகளை நூலாக்கம் செய்து வெளியிடும் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வரிசையில் முதல் சுற்றில் 16 கருத்தரங்குகள் நிறைவு பெற்றுள்ளன. இதன் இரண்டாம் சுற்று தொடர்ந்து நடைபெற்றது. இவ்வகைப்பாட்டில், 2005-2006 ஆம் ஆண்டில் 9 கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. இக்கருத்தரங்கக் கட்டுரைகள் அந்தந்த அறிஞர் பெயரில் நூலாக்கம் பெறுவதற்கான பணிகள் முடுக்கிவிடப்பெற்று, இதுவரை 14 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

'20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்கள்' என்ற பொதுத் தலைப்பில் 2005-2006 ஆம் ஆண்டில், 31 வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நடத்தப்பெற்றுள்ளன.

[2006 ஆகஸ்ட் 25

ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஊக்கமூட்டும் வகையிலும், ஆய்வை மேம்படுத்தும் வகையிலும், இக்கட்டுரைகள் நூலாக்கம் பெறவுள்ளன.

2005-2006 ஆம் ஆண்டில் ஆறு திங்கள் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன. இவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கெனத் திங்கள்தோறும் ஆய்வுக் கருத்தரங்குகளாக நடத்தப்பெற்று வருகின்றன.

புகழ்மிக்க தமிழறிஞர்கள், அரசியலாளர்கள், புரவலர்கள் பெயரில் இந்நிறுவனத்தில் தற்போது 31 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அறக்கட்டளைப் பொழிவு நிகழும்போதும், பொழிவுகள் நூல்களாக வெளியிடப்படுகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில் மார்ச்சு முதல் 9 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் தமிழ்நாடு அரசின் ரூ.10.00 இலட்சம் நிதியுதவியுடன் அறக்கட்டளையொன்று 2005-2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை வாயிலாகக் கருத்தரங்கமும், அறக்கட்டளைப் பொழிவும், முனைவர் பட்ட மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்க்கு ஆய்வேடு அளிக்க உதவித்தொகை வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் உள்ள நூலகத்தில், தற்போது 83,000 நூல்கள் உள்ளன. 'தமிழியல்' என்னும் இருமொழி ஆய்விதழை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1971 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. இதுவரை 68 இதழ்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தில் 2004 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அனுமதியுடன் கீழ்க்கண்ட வகுப்புகள் தொடங்கப்பெற்றுள்ளன :

(1) தமிழ் ஆய்வியல் நிறைஞர்

(2) தமிழ் முதுகலை (இலக்கியம்)

(3) தமிழ் முதுகலை (பயன்பாட்டுத் தமிழ்)



2006 ஆகஸ்ட் 25]

ஆய்வியல் நிறைஞர் வகுப்பில் 46 மாணவர்களும், முதுகலைப் பட்ட வகுப்புகளில் 36 மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

கொரிய நாட்டவர் மூவரும், இங்கிலாந்து நாட்டவர் இருவரும், நெதர்லாந்து நாட்டவர் ஒருவரும் 2005-2006 ஆம் ஆண்டில தமிழ் கற்றுச் சென்றுள்ளனர்.

தமிழ் இலக்கியச் சொல்லடைவுப் பணிகளுக்கான மாதிரித் தரவுகள் அறுதியிடப்பெற்று மென்பொருள் உருவாக்கப் பணி செயன்மையில் உள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் தமிழ் இலக்கியச் சொல்லடைவுப் பணியை முனைப்புடன் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் இணைய இணைப்பு மையம் நிறுவப் பெற உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 25 அறக்கட்டளைப் பொழிவுகளை நிகழ்த்திடவும் 50 நூல்களை வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழறிஞர் வரிசை மூன்றாம் சுற்றுக் கருத்தரங்கத் தொடர் நடத்தப்பெறவுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தை இலக்கவியல் முறையில் கணினித் தரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், உலகத்தின் மற்ற தொன்மையான மொழிகளோடு ஒப்பிட்டு மதிப்பிடும் வகையில் தமிழ் மொழியில் இலக்கிய ஆய்வினை மேற்கொள்வதற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை உலகத் தமிழ் - செம்மொழி ஆய்வு நிறுவனமாக்கி செம்மொழி ஆராய்ச்சிக்கான மத்திய அரசின் நிதியுதவியினை இந்த நிறுவனத்திற்கு வழங்குமாறு இந்த அரசு மைய அரசை வலியுறுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இப்பொருண்மையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவச் செய்ய வேண்டும் எனும் உயர் நோக்கில் தமிழின் பல கூறுகளையும் உள்ளடக்கித் தனிநிலை ஆய்வு மையமாக 1981 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழா ஆண்டில் பீடுநடை போடுகிறது. 1991 ஆம் ஆண்டு வரை ஆய்வை மட்டுமே முதன்மையாகக் கொண்டிருந்த தமிழ்ப் பல்கலைக்கழகம், மாணவர்கட்கென 1992 ஆம் ஆண்டு முதல் ஆய்வியல் நிறைஞர் பட்டம், முனைவர் பட்டம் ஆகிய ஆய்வுப் படிப்புகளைத் தொடங்கியது. 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல்

முதுகலைப் பட்டப் படிப்பு வகுப்புகளையும், 2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் முது அறிவியல் பட்ட வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் 5 புலங்களையும், 23 துறைகளையும் கொண்டுள்ளது. இதனுடன் அச்சகம், பதிப்புத் துறை, நூலகம், அருங்காட்சியகம், கலைக் களஞ்சியப் பிரிவு, பெருஞ்சொல் அகராதி பிரிவு போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2005-2006 ஆம் ஆண்டில் ஆற்றப்பட்ட பணிகளும் மற்றும் 2006-2007 ஆம் ஆண்டில் ஆற்றப்படவுள்ள பணிகளும் ஈண்டுத் தொகுத்தளிக்கப் பெறுகின்றன.

### கல்விப் பணி

2004-2005 ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டப் படிப்பின் மாணவர் தேர்ச்சி விகிதம் 100 சதவிகிதம் ஆகும். 2005-2006 ஆம் கல்வியாண்டில் 'கணிப்பொறி அறிவியல்' மற்றும் 'சுற்றுச்சூழல் அறிவியல்' ஆகிய இரு முது அறிவியல் பட்டப் படிப்புகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன. இப்படிப்புகளுக்கான வகுப்புகளில் 14 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பெருஞ்சான்றிதழ், சான்றிதழ் வகுப்புகளும் இப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்பெற்று வருகின்றன. ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்கள் சேர்க்கைக்கு நாளிதழ்களில் விளம்பரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் தொலைநிலைக் கல்வி மூலம் வரலாறு, தமிழ், வணிகவியல் போன்ற படிப்புக்களில் இளங்கலை, முதுகலை ஆகிய பட்டப் படிப்புகளும், 17 துறைகளில் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பும் தொடங்கப்படவுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின்கீழ் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் 21 மையங்கள் செயற்படவுள்ளன. இவ்விவரங்கள் தமிழகம் முழுவதும் அறியப்படும் வகையில் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இப்பல்கலைக் கழகத்தில் தொலைநிலைக் கல்வி வழி இளநிலைக் கல்வியியல் பட்டப் படிப்பு வகுப்புகள் தொடங்குவதற்கு, பெங்களூர் தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு (15-9-2005—14-9-2006) கல்வியியல் மற்றும் மேலாண்மை இயல் துறை எனும் ஒரு துறையும்,



சுற்றுச் சூழல் அறிவியல் மற்றும் மூலிகை அறிவியல் துறை எனும் ஒரு துறையும் ஆக இரு புதிய துறைகள் உருவாக்கிட 31-3-2006 அன்று நடைபெற்ற தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் ஒப்புதலளிக்கப்பெற்றுள்ளது.

31-3-2006 அன்று நடைபெற்ற இப்பல்கலைக்கழக நான்காம் பட்டமளிப்பு விழாவில் 761 மாணவர்களுக்கு முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுகலைப் பட்டப் படிப்புப் பட்டங்கள் வழங்கப்பெற்றுள்ளன.

### ஆய்வுப் பணிகள்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை நிறுவுவதற்கென ரூ.2.00 இலட்சம் நன்கொடையை உலகச் சமுதாய சேவா சங்கம் வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் அறக்கட்டளை நிதியினைக் கொண்டு சொற்பொழிவுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பெறுகின்றன. இவை தவிர பிற நிதி வழங்கும் முகமையுடன் இணைந்து கல்விசார் அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

### வளர்ச்சிப் பணிகள்

#### புத்தொளிப் பயிற்சி வகுப்புகள்

பல்கலைக்கழக மானியக் குழுவின் நல்கை உதவியுடன் 2005-2006 ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நான்கு துறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன. இவ்வாண்டில், 15 துறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்திடப் பல்கலைக்கழக மானியக் குழுவிற்குக் கருத்துருக்கள் அனுப்பப்பெற்றுள்ளன. சித்த மருத்துவத் துறை மற்றும் மொழியியல் துறை ஆகிய இரு துறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்திட பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஏனைய துறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதி எதிர்நோக்கப்படுகிறது.

#### வளாக மேம்பாடு

வளாக மேம்பாட்டுப் பணிகளுக்காக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத் தலைப்பின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழு ரூ.71.22 இலட்சம்

ஒதுக்கியுள்ளது. அத்தொகையிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலகக் கட்டடத்திற்கு பால்ம வண்ணம் (பிளாஸ்ட்டிக் எமல்சன்) வண்ணமடித்தல் பணியும், நூலகக் கட்டட வெளிப்புறத்திற்குப் பால்ம வண்ணம் அடித்தல் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்தல் பணி, உயர் மின்நிலையச் சிறப்புச் சீர்காப்புப் பணி, சோழன் பெருவாயில் கிழக்குப்பகுதிச் சுற்றுச்சுவர் கட்டும் பணி முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மகளிர் விடுதி இரண்டாம் தளம் (மேற்குப் பகுதி) கட்டும் பணிக்குப் பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய ரூ.15.00 இலட்சத்தில் கட்டடப் பணிகள் நிறைவுற்றுள்ளன. உலகத் தமிழ் மாநாடு சேமிப்பு நிதித் தலைப்பில் கரிகாற் சோழன் கலையரங்கம், சிறப்புச் சீர்காப்பு மற்றும் வண்ணம் அடித்தல் பணி ரூ.2.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. புதிதாக 650 நெகிழி நாற்காலிகள் வாங்கிய முதலீட்டுச் செலவினத்தால் ஒவ்வொரு முறையும் வாடகை நாற்காலிகள் ஏற்பாடு செய்வதற்கான தொடர் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய பொது மேம்பாட்டு நல்கையாக பல்கலைக்கழக மானியக் குழுவால் அனுமதிக்கப்பெற்ற ரூ.225.00 இலட்சத்தில் ரூ.135.00 இலட்சம் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. தற்போது மூன்றாவது தவணை நல்கையாக ரூ.45.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. நல்கையைக் குறிப்பிட்ட திட்டக் காலத்திற்குள் உரிய வகையில் தொடர்புடைய துறைகளுக்குச் செலவிட்டுப் பயனீட்டுச் சான்று அனுப்பிட ஏதுவாகப் பொருள் வாங்கி வழங்கும் குழுவின் கூட்டங்களை நடத்தும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்குரிய தனித் தனி விடுதிகள் கட்டுவதற்கு, புதுதில்லி மைய அரசின் சமூக நீதி மற்றும் சமஉரிமை வழங்கும் துறைக்கும், தமிழக அரசின் ஆதிதிராவிடர் நலத் துறைக்கும் நல்கை கோரி கருத்துரு அனுப்பப்பெற்றது தொடர்பாக மைய அரசின் சமூக நீதி மற்றும் சம உரிமை வழங்கும் துறை 45 விழுக்காடு பங்குத் தொகையான ரூ.146.70 இலட்சத்தை விடுவிக்க இசைவு அளித்துள்ளது. மாநில அரசின் பங்குத் தொகையினை விடுவிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தத்துவ மையத்தின் முதல் தளம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு கலைச் சொற்களஞ்சியம் திட்டப் பணிக்காக ரூ. 70.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.





இது தொடர்பான பணிகள் கல்வியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**பல்கலைக்கழக மானியக் குழுவிடம் அனுமதி பெறப்பட்ட திட்டங்கள்**

1. பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகள், ஆசிரியைகள் மற்றும் பெண் பணியாளர்களின் தேவைக்கு உள் கட்டமைப்பு வசதி செய்வதற்காகப் பல்கலைக்கழக மானியக்குழு ரூ.10.00 இலட்சம் நல்கை ஒதுக்கீடு செய்துள்ளது. முதல் தவணையாக ரூ.5.00 இலட்சம் விடுவித்துள்ளது.

2. யோகா மையம் அமைக்கப்பெற்று இரண்டு பயிற்றுநர்கள் பணியமர்த்தப்பட்டு வகுப்புகள் நடத்தப்பெற்று வருகினறன. பல்கலைக்கழக மானியக் குழு இரண்டாம் தவணை நல்கை ரூ.1.56 இலட்சத்தை விடுவிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

3. உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு வசதிகள் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் நல்கை வழங்கப் பல்கலைக்கழக மானியக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் உபகரணங்களைப் பராமரிப்பதற்கெனத் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

4. இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களது குழந்தைகளை (மழலையர் உட்பட) பராமரிப்பதற்கெனப் "பகல்நேர மையங்கள்" (Day Care Centres) அமைத்திடப் பல்கலைக்கழக மானியக் குழு அனுமதி அளித்து ரூ.3.00 இலட்சம் விடுவித்துள்ளது.

5. வெள்ளிவிழா ஆண்டு நல்கையின்கீழ் பல்கலைக்கழக மானியக் குழு புலவிருந்தக மேம்பாட்டுப் பணிக்கு ரூ.10.00 இலட்சம் ஒதுக்கி முதல் நல்கையாக ரூ.5.00 இலட்சம் விடுவித்துள்ளது. உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பதிப்புத் துறை**

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 2006 ஏப்ரல் முதல் 2006 ஜூன் வரை ரூ.5,47,381/-க்குத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை வெளியிட்ட நூல்கள் விற்பனையாகியுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் 9-6-2006 முதல் 18-6-2006 வரை நடைபெற்ற நூற்கண்காட்சியில் 60 பதிப்பகத்தார் பங்கேற்றனர். இக்கண்காட்சியில் ரூ.25.00 இலட்சத்திற்கும் அதிகமாக நூல்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227432
சென்னை-600 008

[2006 ஆகஸ்ட் 25

இதில் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் ரூ.32,223/-க்கு விற்பனையாகியுள்ளன. வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற இந்நூற் கண்காட்சியின் தொடக்க விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 25 புதிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளின் எண்ணிக்கை தற்போது 385 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகத்திற்கென நவீன மயமாக்கப்பட்ட போட்டோ பிரிண்டர் எனும் புதிய அச்சுப்பொறி ரூ.6,57,810/- செலவில் பல்கலைக்கழக மானியக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட நல்கையின்கீழ் வாங்கப்பட்டுள்ளது. தற்போது அரண்மனை வளாகத்தில் இயங்கிவரும் பதிப்புத் துறை மற்றும் அச்சகத் துறைகள் புதிய வளாகத்திற்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளன.

நூல்கள் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட நூற்கண்காட்சி தஞ்சை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெற்றுள்ளது. பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆண்டுதோறும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நூற்கண்காட்சி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளுடன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை திங்கள்தோறும் 'செய்தி மலர்' வெளியிட்டு வருகிறது.

**நூலகம்**

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பொது மேம்பாட்டு நல்கையின்கீழ் நூல்கள் வாங்குவதற்காக ரூ.10.00 இலட்சமும், நூலக மேம்பாட்டுப் பணிக்காக ரூ.10.00 இலட்சமும் பல்கலைக்கழக மானியக் குழு நல்கை வழங்கியுள்ளது. 1-1-2006 முதல் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்து வைக்கப்படுகிறது. ரூ.100/- கட்டணம் செலுத்திப் பொதுமக்கள் நூலகத்தைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நூலகத்தை மேம்படுத்தப் புரவலர் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- என்ற வகையில் தொகை செலுத்திப் புரவலர், பெரும்புரவலர், நிறுவனப் புரவலர் எனப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு மக்கள் பல்கலைக்கழகமாக உருப்பெற்றுள்ளது. நூற்கண்காட்சியில், தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர்கள் கடனடிப்படையில் புத்தகம் வாங்கிட



2006 ஆகஸ்ட் 25]

வழிவகை செய்யப்பட்டு ரூ.1.00 இலட்சத்திற்குப் புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

**உலகத் தமிழ்ச் சங்கம்**

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைப்பது தொடர்பாகப் புத்துயிர்ப்பு வரைவுத் திட்டம் ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் தயாரித்து அளிக்கப்பெற்றுள்ளது. நில உரிமை மாற்றம் தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிற வளர்ச்சிப் பணிகள்**

நூற்கண்காட்சியைப் போன்றே சித்த மருத்துவக் கண்காட்சியும், மூலிகைக் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எதிர்காலப் பத்தாண்டுச் செயல் திட்டங்களை வகுக்க பல துறை வல்லுநர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று பேராசிரியர் ஒய்.எஸ். ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு முதல் கூட்டம் 20-1-2006 அன்று நடத்தப்பட்டது. இக்குழு தயாரித்துள்ள வினாப் படிவம் 1,000 படிகள் அச்சிடப்பட்டு உலகளாவிய தமிழறிஞர்கட்கு அவர்தம் கருத்துக்களைப் பெற அனுப்பப்பட்டுள்ளன. இக்குழுவின் அடுத்த கூட்டத்தில் வல்லுநர் குழு முன்பு இவ்விவரங்கள் வைக்கப்படும்.

**பிற செய்திகள்**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள், வளர்ச்சிப் பணிகள், செயலாக்கம், முன்னேற்றம் குறித்து உடனுக்குடன் விளம்பரப்படுத்துவதற்கு ஏதுவாகச் செய்தியாளர்கள் கூட்டம் அவ்வப்போது நடத்தப்படுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் மொழி வளர்ச்சிக்கான வேள்விப் பணிகளைத் தொய்வின்றி நடத்திட முழு முனைப்புடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் (NAAC) அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு இணையதளம் உருவாக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

ஒரு மொழியின் வளமையையும், சால்பினையும் மதிப்பீடு செய்தற்கு, அம்மொழியில் வெளிவந்துள்ள அகரமுதலிகள் உறுதுணையாக

அமைகின்றன. தமிழில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை 12 மடலங்களில் 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிடும் நோக்கில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்னும் இத்துறை, 1974 ஆம் ஆண்டில் அரசால் உருவாக்கப்பட்டது. தமிழில் முழுமையான சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியிடும் நெடுங்கால அவாவினை இத்திட்டம் நிறைவாக்குகிறது.

அனைத்துச் சொற்களையும் பிறமொழியினரும் உச்சரிக்கும்வகையில் எழுத்துப் பெயர்ப்பு, இலக்கணக் குறிப்பு, தமிழ்ப் பொருள், ஆங்கிலப் பொருள், காலந்தோறும் மாறிவந்த பொருள்கள், திராவிட மொழிகளில் சென்றுள்ள ஒலிவடிவங்கள், வேர்ச்சொற்களிலிருந்து வந்த வகை, சொற்களின் வரலாறு, சிறப்புப் பொருள் விளக்கம், வெவ்வேறு மொழிகளில் தமிழ்ச் சொற்கள் சென்ற குறிப்புகள் மற்றும் அங்கு வழங்கும் வடிவங்கள், பழமொழிகள், பல்வேறு சொல் வழக்குகள் மற்றும் தேவையான இடங்களில் பட விளக்கங்கள் முதலிய விளக்கக் கூறுகளை அடக்கியுள்ளது இச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. மொழி ஆராய்ச்சியாளருக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் பயன்படும் வகையில் விரிவாகவும், விளக்கமாகவும் இப்பேரகரமுதலிப் பகுதிகள் அமைந்திருப்பது தனிச் சிறப்புக்குரியதாகும்.

பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில், இதுவரையிலும் 18 பகுதிகள் தொகுத்து முடித்து வெளியிடப்பட்டுள்ளன. நடப்பு 2006-2007 ஆம் நிதியாண்டில் அடுத்த 6 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்பெறவுள்ளன. எஞ்சியுள்ள 7 பகுதிகளில் இந்நிதியாண்டில் ஒரு பகுதி தொகுத்து முடித்து வெளியிடப்பெறும். கடைசி 6 பகுதிகள் அடுத்தடுத்துத் தொகுத்து முடித்து வெளியிடப்பெறும்.

## தொல்லியல் துறை

தொல்லியல் துறையானது தமிழகத்திலுள்ள நினைவுச் சின்னங்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் சீரமைத்துப் பாதுகாப்பதையும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வுப் பணி செய்வதையும் முக்கியக் குறிக்கோள்களாகக் கொண்டு 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இத் துறையில் பின்பு கல்வெட்டுப் பிரிவு, அச்சுப் பிரிவு, மாவட்ட அகழ்வைப்பகங்கள், இரசாயனப் பிரிவு, நிழற்படப் பிரிவு மற்றும் பழம்பொருட்கள் பதிவுப் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது.





### அகழாய்வு மற்றும் அகழ்வைப்பகப் பிரிவு

ஆண்டுதோறும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடைபெறுகின்றன. இதுவரை 29 இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அரிய தொல்கலைப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, அவை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள 14 அகழ்வைப்பகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் அகழாய்வுப் பணி மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ், 2005-2006 ஆம் ஆண்டில் (1) திருவள்ளூர் மாவட்டம், பரிகுளம், (2) விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அகழாய்வுப் பணி நிறைவடைந்த நிலையில் அவை குறித்த அகழாய்வு அறிக்கைகள் தயாரித்து நூல் வடிவில் வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

### பாதுகாப்புப் பிரிவு

சமயம் மற்றும் சமயஞ்சாராத கட்டடங்கள் உட்பட இதுவரை 87 தொன்மையான மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட மரபுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பதினோராவது நிதிக் குழு மானியத்தின்கீழ் மரபுச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் சுவரோவியங்கள் பராமரிப்பிற்கு ரூ.447.31 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

### கல்வெட்டுப் பிரிவு

ஆணையரகத்தில் செயல்பட்டு வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்கு ஒரு வருடகால கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுகலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 176 மாணவர்கள் இப்பயிற்சியை முடித்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகம், தற்போது இத்துறையினை முனைவர் பட்ட ஆய்வு மையமாக அங்கீகரித்துள்ளது. இதில் மூன்று முழு நேர ஆய்வாளர்களும் ஒரு பகுதி நேர ஆய்வாளரும் ஆய்வு செய்து வருகின்றனர்.

தமிழகக் கல்வெட்டுகளை ஊர் வாரியாகப் படியெடுக்கும் திட்டத்தின்கீழ், ஈரோடு, கடலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி 2005-2006 ஆம் ஆண்டில் நிறைவுபெற்றுள்ளது. காஞ்சிபுரம், இராமநாதபுரம், வேலூர், சேலம், திருவண்ணாமலை, சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில்

கிராமங்கள்தோறும் கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வேலையில்லாத மாணவர்களைக் கொண்டு, கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி மூன்றாண்டுகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு 2005-2006 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகக் கல்வெட்டுகளை அச்சிட்டு வெளியிடும் திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I ஆகிய இரு நூல்கள் 2005-2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு, தருமபுரி மாவட்டத் தொல்லியல் கையேடு ஆகியவையும், ஆய்வு நூல் வரிசையில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் நூல்களும் இதே ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. ஆண்டிப்பட்டி மற்றும் மோதூர் அகழாய்வு அறிக்கைகளும், கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களது ஆய்வேடுகளான அழகர் கோயில், திருச்செந்துறை, வேதாரண்யம், திருநாவலூர் ஆகிய நூல்களும் 2005-2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின்போது நாகப்பட்டினம் மாவட்டம், செம்பியன் கண்டியூர் கிராமத்தில் சிறப்புக்குரிய இரண்டு புதிய கற்காலக் கைக்கோடரிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றில் மொஹஞ்சதாரோ-ஹரப்பா பண்பாட்டுக்கால எழுத்துகள் போன்ற நான்கு சின்னங்கள் கண்டறியப்பட்டன.

**வெளியீடுகள்**

இத்துறையின் அச்சுப்பிரிவின்வாயிலாகத் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள், அகழாய்வு அறிக்கைகள், மாவட்டத் தொல்லியல் கையேடுகள், தொல்லியல் சின்னங்கள் குறித்த கையேடுகள் ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன. 'கல்வெட்டு' காலாண்டு இதழ் ஒன்றும் இத்துறை அச்சுப் பிரிவு வாயிலாக வெளியிடப்படுகிறது. இதுவரை 70 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், அகழாய்வு அறிக்கைகள், கல்வெட்டு, தொல்லியல் மற்றும் அகழ்வைப்பக வழிகாட்டி நூல்கள், தமிழ்நாட்டுப் பாறை ஓவியங்கள் தொடர்பான அரிய நூல் என மொத்தம் 26 நூல்கள் வெளியிடப்பட்டன.

**தொல்லியல் துறை இரசாயனக் கூடங்கள்**

தொல்லியல் துறையில் அகழாய்வுப் பிரிவை வலுப்படுத்துவதற்கும், அகழாய்வின்போது கிடைக்கப் பெறும் தொல்பொருட்களை இரசாயன





முறையில் சுத்தம் செய்து பாதுகாப்புப் பணி மேற்கொள்வதற்கும், அதுபோன்று துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 14 அகழ்வைப்பகங்களையும், 87 நினைவுச் சின்னங்களையும் இரசாயன முறையில் பணி மேற்கொள்ளும் பொருட்டும், 1979 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரண்டு இடங்களில் இரசாயனக் கூடங்கள் தொடங்கப்பட்டன.

**நிழற்படப் பிரிவு**

இப்பிரிவு பல்வேறு கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் பிற பழம்பொருட்களை நிழற்படம் எடுக்கிறது. அகழாய்வின் பல்வேறு நிலை அகழாய்வு இடங்கள் மற்றும் மரபுச் சின்னங்கள் ஆகியவை படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு முதல் கல்வெட்டுப் படிகள், ஓலைச் சுவடிகள் மற்றும் தொல்லியல் பணிகள் ஆகியவை டிஜிட்டல் முறையில் படமெடுககப்பட்டுக் கணினிமூலம் குறுந்தகடுகளில் விரைவாக ஆவணப்படுத்தப்படுகின்றன. இதுவரை 4,375 கல்வெட்டுப்படிகள் மற்றும் 3,471 ஓலைச் சுவடிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

**பழம் பொருட்களைப் பதிவு செய்தல்**

பழமையான கலைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து கடத்தப்படுவதைத் தடைசெய்வதற்கு 1972 ஆம் ஆண்டு பழம்பொருள் பாதுகாப்புச் சட்டத்தினை இந்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தினைத் திறம்பட நடைமுறைப்படுத்த இரு பதிவு அலுவலர் அலுவலகங்கள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்கான அனைத்துச் செலவினத்தையும் இந்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. தமிழ்நாட்டில், 1974 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 41,608 பழம் பொருட்கள் பதிவு செய்யப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினைத் திறம்படச் செயற்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

**இணையதளம் அமைத்தல்**

மாநிலத் தொல்லியல் துறையில் புதிய இணையதளம் ரூ.5.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் இத்துறைக்கு ரூ.36.00 இலட்சத்திற்குத் திட்டங்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

[2006 ஆகஸ்ட் 25

## அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையம்

அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் செயற்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில் கணிதம், வானசாத்திரம், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக் கலை, இசை, வரலாறு, கவின் கலைகள் மற்றும் பல்வேறு பொருண்மைகள் தொடர்பான தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் அமைந்த 72,000-க்கும் மேற்பட்ட தாள் மற்றும் ஓலைச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நூலகத்தில் 450-க்கும் மேற்பட்ட நூல்கள் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நூலகத்திற்கு 2005-2006 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின்கீழ் இரு நூல்கள் வெளியிடவும் மற்றும் கணினி ஒன்றை வாங்குவதற்கும் ரூ.1.27 இலட்சத்திற்கான திட்டங்களுக்கு ஒப்புதலும் வழங்கப்பட்டுப் பணிகள் முடிக்கப்பட்டன.

### புதிய திட்டங்கள்

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் ஐந்து மரபுச் சின்னங்களைப் பாதுகாகக ரூ.11.00 இலட்சமும், 'உலகளாவிய சிந்துவெளி நாகரிகமும் தமிழ் மொழியும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றினை நடத்திட ரூ.5.00 இலட்சமும், மதுரை மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊரான மாங்குளம் மற்றும் இரும்புக் காலத்தைச் சேர்ந்த ஊரான கரூர் மாவட்டம், நெடுங்கூர் ஆகிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சமும், குற்றாலம் மற்றும் கரூர் அகழ்வைப்பகங்களை மேம்படுத்திட ரூ.2.00 இலட்சமும் மாணவர்களது ஆய்வு நூல் ஒன்றும், திண்டுக்கல் மாவட்டத் தொல்லியல் கையேடு நூல் ஒன்றும், மற்றும் நாகப்பட்டினம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொடர்பான மூன்று நூல்களும் அச்சிட ரூ.2.10 இலட்சமும், இத்துறையின் அச்சுப்பிரிவினை மேம்படுத்த மினி ஆப்செட் அச்சு இயந்திரம் ஒன்றினை வாங்க ரூ.5.00 இலட்சமும், சென்னை இரசாயனக் கூடத்தினை மேம்படுத்தும் பொருட்டு உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் வாங்க ரூ.0.95 இலட்சமும், ஆகமொத்தம் ரூ.31.05 இலட்சம் செலவில் புதிய திட்டங்களைச் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 25]

## அருங்காட்சியகத் துறை

அரசு அருங்காட்சியகத் துறையின்கீழ் சென்னை அருங்காட்சியகமும், 20 மாவட்ட அருங்காட்சியகங்களும் இயங்கி வருகின்றன. அருங்காட்சியகங்கள் மக்களை மகிழ்விக்கும் அதே நேரத்தில் அறிவைப் புகட்டும் மையங்களாகவும் செயல்படுகின்றன.

1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை, அருங்காட்சியகம் நாட்டிலேயே பெரியதும், மிகப் பழமை வாய்ந்த ஒன்றுமாகும் இவ்வருங்காட்சியகம் மதிப்புமிக்க தென்னிந்தியப் படிமங்கள் மற்றும் வரலாற்றுக்கு முற்பட்ட முதன்மையான தொல்பொருட்களையும் கொண்டது. அவற்றில், குறிப்பாக ராபர்ட் புரூஸ்புட் சேகரிப்புகளையும், ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலச் சேகரிப்புகளையும், புத்த, ஜைன மற்றும் இந்துச் சிற்பங்கள் மற்றும் அமராவதி சிற்பங்களையும் குறிப்பிடலாம். மேலும், மதிப்புமிக்க அரிய விலங்கியல் மற்றும் தாவரவியல் சேகரிப்புகளும் பல உள்ளன. இதன் படிமக் காட்சிக்கூடம் உலகில் மிகவும் அபூர்வமான படிமங்கள் அடங்கிய கூடமாகவும், சென்னை வரும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகவும் உள்ளது.

பொதுமக்களுக்கும், மாணவச் சமுதாயத்திற்கும் பயன்படும் விரிவாக்க கல்வி மையங்களாகச் சென்னை அருங்காட்சியகம் மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்கள் செயற்படுகின்றன.

பொதுவாக, இயற்கை உலகினையும், வரலாறு மற்றும் கலைப் பண்புகளையும், அறிவியல், தொழிற்நுட்பச் சாதனைகளையும் பொதுமக்கள் அறிந்து கொண்டு பாராட்டும்வகையில் அருங்காட்சியகங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அறிவியல், கலைநயம் வாய்ந்த அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் அருங்காட்சியகங்களில் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றைப் பற்றி ஆய்வு செய்து, மக்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும்வகையில் அவை காட்சிப்படுத்தப்படுகின்றன. பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் திறன்களை அறிந்து ஆய்வு செய்ய வாய்ப்பளிக்கும் கல்வி நிறுவனங்களாகவும் இவ்வருங்காட்சியகங்கள் செயற்படுகின்றன. மேலும், அருங்காட்சியகங்கள் உள்ளூர் மக்களின் சமுதாய, பண்பாட்டு வாழ்க்கை நெறியை விளக்குவதற்கும் அவர்கள் பார்வையிடுவதற்கும் ஏற்ற இடங்களாகத் திகழ்கின்றன.

அருங்காட்சியகத் துறையில் கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

- அரும்பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்தல்.
- காட்சிப் பொருட்களை அறிவியல் பூர்வமாகப் பாதுகாத்து, கலைநயம் மிக்க வகையில் பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்துதல்.
- ஆய்வாளர்கள் சேகரிப்புகளை ஆராய்ச்சி செய்வதற்கான உதவிகளைத் தனித்தோ அல்லது மற்ற நிறுவனங்களுடன் இணைந்தோ அளித்தல், ஆராய்ச்சியாளர்களுக்கு வசதி செய்து அளித்தல், மாணவர்களுக்குச் சேகரிப்பு மற்றும் தகவல் பெறுவது குறித்து வழிவகை செய்தல்.
- சேகரிப்புகளின் விவரங்கள் தயாரித்தல், பெயர்ப்பட்டியல் தயாரித்தல், புத்தகங்கள் மற்றும் மலர்கள் வெளியிடுதல்.
- கல்விப் பணிகளின் ஒரு பகுதியாகச் சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல், வல்லுநர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- வேதியல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுக் கூடத்தின் வாயிலாக, அருங்காட்சியகத்தின் சேமிப்பு மற்றும் புத்தாக்கத் திறனை மேம்படுத்துதல்.
- தேசியச் சுவடிகள் சேவையகம் ஆதரவு பெற்ற சுவடிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாகக் கையெழுத்துப்படிகள் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

இனிவருங்காலங்களில் முக்கியமான சுற்றுலா மையங்களில் கருப்பொருள் அடிப்படையில் திறந்தவெளி அருங்காட்சியகங்கள் அமைத்தல், சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் தன்னாட்சி மேலாண்மைப்படுத்தி வருவாய் உயர்த்துதல், பொது மற்றும் தனியாா துறைகளுடன் இணைந்து இத்துறையின் நோக்கங்களைச் சீரமைத்துத் தலைசிறந்த நிறுவனமாக மாறறுதல் ஆகிய பணிகளில் இத்துறை ஈடுபடுத்தப்படும்.

### அரசு அருங்காட்சியகம், சென்னை

மானிடவியல் கூடங்கள் அமைந்துள்ள முன்கட்டடம் சீரமைக்கப்பட வேண்டி உள்ளதால் அக்கூடங்கள்



மூடிவைக்கப்பட்டுள்ளன. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள மானிடவியல் கலைக் கூடத்தை சீரமைக்கவும், புதுப்பிக்கவும் இரண்டாண்டு காலத்திற்குரிய பணிக்கென ரூ.100.00 இலட்சம் நிர்வாக ஒப்பளிப்பாக 2005-2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. அதில் ரூ.40.00 இலட்சம் 2005-2006 ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, எஞ்சிய தொகையான ரூ.60.00 இலட்சம் 2006-2007 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்பணி தற்போது நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

மேலும் சிற்பங்கள், விலங்கியல் மற்றும் தாவரவியல் கூடங்கள் அமைந்துள்ள 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரதானக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டுவருகிறது.

### மாவட்ட அருங்காட்சியகங்கள்

தற்போது புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருட்டிணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் 20 மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் புதுக்கோட்டை அருங்காட்சியகம் அன்றிருந்த மன்னர் காலத்திலிருந்து செயற்படுகிறது. மற்ற அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை.

2005-2006 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் மாவட்ட அருங்காட்சியகங்களை மேம்படுத்த ரூ.10.00 இலட்சத்திற்கான திட்டப் பணி ஒப்பளிக்கப்பட்டு, குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, வேலூர், சேலம் மற்றும் மதுரை அருங்காட்சியகங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன.

### புதிய திட்டங்கள்

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், மாவட்ட அருங்காட்சியகங்களுக்குத் தொலைபேசி இணைப்பு மற்றும் இணையதள வசதி வழங்குதல், பழைய நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் புதுநூல்களைப் பதிப்பித்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.13.10 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

[2006 ஆகஸ்ட் 25

## கலை-பண்பாட்டு இயக்ககம்

கலை-பண்பாட்டு இயக்ககம் எனும் தனி இயக்ககம், கலைக் கல்வி நிறுவனங்களையும், கலை அமைப்புகளையும் ஒருங்கிணைத்துத் தோற்றுவிக்கப்பட்டது. கலை-பண்பாட்டு இயக்ககம், 1996 ஆம் ஆண்டு முதல் விரிவான வளர்ச்சி பெற்று கலை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றது. கலை-பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ், 6 மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள், 4 அரசு இசைக் கல்லூரிகள், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், 2 அரசு கவின்கலைக் கல்லூரிகள், ஒரு அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, 36 தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்கள் மற்றும் மாவட்டங்கள்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 30 மாவட்டக் கலை மன்றங்கள் ஆகியவை செயற்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு ஆகிய நிறுவனங்கள் கலை வளர்ச்சிக்காகச் செயற்பட்டு வருகின்றன.

### மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள்

கலை-பண்பாட்டு இயக்ககத்தின் செயற்பாடுகளை மாவட்ட அளவில் பரவலாக்கிட ஏதுவாக 1997-1998 ஆம் ஆண்டில் நான்கு கலை-பண்பாட்டு மையங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், 1998-1999 ஆம் ஆண்டில் இரண்டு கலை பண்பாட்டு மையங்கள் திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் தோற்றுவிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இந்தக் கலை-பண்பாட்டு மையங்கள் மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் கலைப் பணிகளை ஒருங்கிணைத்து அரசுத் திட்டங்களைச் சிறப்புடன் மாவட்ட அளவில் நிறைவேற்றி வருகின்றன. மண்டலக் கலை-பண்பாட்டு மையங்கள் கலை-பண்பாட்டுத் துறை சார்பாகத் தனித்தும், மாவட்டக் கலை மன்றங்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை நிகழ்ச்சிகளையும், கலைப் பயிற்சிகளையும் அளித்து வருகின்றன.

### மாவட்டக் கலை மன்றங்கள்

நமது மரபுமிக்க கலை வடிவங்களை மேம்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் பரப்புவதற்கும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கவும் மற்றும் திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து ஊக்குவிக்கவும் மாவட்டக் கலை மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. மாவட்டக் கலைமன்றங்கள்மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமைமிக்க கலைஞர்கள் ஐவருக்கு அவர்களது அகவைக்கும் கலைப் புலமைக்கும் ஏற்ப விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 25]

மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் பல்வேறு கலைஞர்களுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கலைஞர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகள் கலைஞர்கள் அரசிடமிருந்து உதவியைப் பெறவும், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர்களைத் தெரிவு செய்யவும் மற்றும் பயணச் சலுகையைத் துய்க்கவும் பயன்பட்டு வருகின்றன.

## கலைக் கல்வி நிறுவனங்கள்

### 1. அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், பரதநாட்டியம், நாதசுரம், தவில், நாட்டுப்புறக்கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், குரலிசையில் (மேல்நிலை இசைக் கலைமணி) முதுநிலையில் ஈராண்டுப் பட்டயப் படிப்பும், நட்டுவாங்கத்தில் ஈராண்டுப் பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

### 2. அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை அரசு இசைக் கல்லூரி 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

### 3. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரி 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், இசை

[2006 ஆகஸ்ட் 25

ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டுப் பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**4. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

திருவையாறு அரசு இசைக் கல்லூரி 1997 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்பும், குரலிசையில் மூன்றாண்டு இளங்கலைப் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**5. மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள்**

சென்னையில் இரண்டு மாலை நேர இசைக் கல்லூரி மையங்களும், மதுரையில் ஒரு மாலை நேர இசைக் கல்லூரி மையமும் செயற்பட்டு வருகின்றன. சென்னை - தியாகராய நகர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகியவற்றிலும், மயிலாப்பூர் மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகியவற்றிலும், மதுரை மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றிலும் ஈராண்டுச் சான்றிதழ்ப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்**

இசை ஆர்வம் மிக்க இளவயதினரை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும், அவர்களைப் புகழ்மிக்க இசைக்கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடனும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 1997 ஆம் ஆண்டில் திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 1998 ஆம் ஆண்டில் விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 1999 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சீர்காழி, கிருட்டிணகிரி, சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும், 2000 ஆம் ஆண்டில் ஈரோடு, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் ஆக மொத்தம் இதுகாறும், 17 இடங்களில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இந்த மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகிய பாடப் பிரிவுகளில் மூன்றாண்டுச் சான்றிதழ்ப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 25]

**அரசு கவின்கலைக் கல்லூரிகள்**

**1. அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை**

சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி 1850 ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**இளங்கலைப் பட்டப் படிப்பு:**

(1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு

(2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

(3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(4) வண்ணக்கலை

(5) சிற்பக்கலை

(6) பதிப்போவியம்

**முதுகலைப் பட்டப் படிப்பு:**

(1) சுடுமண் (ஆலையக) வடிவமைப்பு

(2) துகிலியல் (ஆலையக) வடிவமைப்பு

(3) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(4) வண்ணக்கலை

இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சியாகும். இக்கல்லூரி 155 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பெருமைக்குரியதாகும். இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும்.

**2. அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்**

கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரி 1887 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. இக்கல்லூரியில் பின்வரும் பிரிவுகளில்

நான்காண்டு கால இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு கால முதுகலைப் பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இளங்கலைப் பட்டப் படிப்பு:

(1) வண்ணக்கலை

(2) காட்சி வழித் தொடர்பு வடிவமைப்பு

(3) சிற்பக்கலை

முதுகலைப் பட்டப் படிப்பு:

(1) வண்ணக்கலை

(2) சிற்பக்கலை

இக்கல்லூரியில், பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சக் கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சியாகும். இக்கல்லூரியின் பாடத் திட்டங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இசைவு பெற்றவையாகும்.

**அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

சிற்பக்கலை வரலாற்றில் சீரிய இடம் பெற்றது மாமல்லபுரம். பார்வையாளர்களின் கண் முன்னே வரலாற்றைக் கொண்டு வந்து நிறுத்தும் வகையில் அரும்பெரும் சிற்பங்கள் நிறைந்த இடம் மாமல்லபுரம். இத்தகைய வரலாற்றுப் புகழுடைய மாமல்லபுரத்தில், அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. இக்கல்லூரியில், 2000-2001 ஆம் ஆண்டு முதல் நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப் பெற்றுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. மரபுக் கட்டடக்கலைப் பிரிவில் தொழில் நுட்பவியல் இளங்கலைப் பட்டமும், மரபுச் சிற்பக்கலை, மரபு ஓவியக்கலை-வண்ணம் ஆகிய பிரிவுகளில் கவின்கலை இளங்கலைப் பட்டமும் வழங்கப்படுகின்றன.

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளியில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அரசு நிதியுதவி பெறும் தனியார் கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிருவாகம், 2000-2001 ஆம் கல்வியாண்டு முதல் கலை-பண்பாட்டு



இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான நிதியுதவி கல்லூரிக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்படுகிறது.

இக்கல்லூரியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப் படிப்புகள், மூன்றாண்டுப் பட்டப் படிப்புகள், இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள் ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

(1) பரதநாட்டியம்

(2) குரலிசை

(3) வயலின்

(4) வீணை

(5) மிருதங்கம்

ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தாண்டு இளநுண்கலைப் பட்டப்படிப்பு நடைபெறுகிறது. இப்பிரிவில் சேர்ந்து பயிற்சி பெற குறைந்தபட்சக் கல்வித் தகுதி பத்தாம் வகுப்புத் தேர்ச்சியாகும். அதே பிரிவுகளில் மூன்றாண்டுப் பட்டப் படிப்பும் நடைபெறுகிறது.

இப்பட்டப்படிப்பில் சேர்ந்து பயிற்சி பெற குறைந்தபட்சக் கல்வித் தகுதி பன்னிரண்டாம் வகுப்புத் தேர்ச்சியாகும்.

அதே பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்பும் நடைபெறுகிறது. அதில் சேர்வதற்குப் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இதைத் தவிர, பரதநாட்டியத்திலும் இசையிலும் முழு நேர, பகுதி நேர முனைவர் பட்டப் படிப்பும் உள்ளது.

**இராக ஆராய்ச்சி மையம்**

இராக ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பு தமிழக அரசால் இராக இசையின் விளைவுகள் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இம்மையம் வாயிலாக மருத்துவ ரீதியான பண்களின் சக்திகளை அறிவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இராகங்களை நல்ல இசைப் புலமை பெற்ற இசைக் கலைஞர்கள், மருத்துவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பலரைக் கொண்ட குழுக்கள் மூலம் மக்களுக்குப் பயன்படும் விதமாக ஆய்வரங்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 25

### தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

மேதகு ஆளுநரைத் தலைவராகக்கொண்டு செயற்படும் தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் மூல நிதிக்குத் தமிழ்நாட்டின் பங்காக ரூ.200.00 இலட்சம் நிதியைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. மேலும், தென்னகப் பண்பாட்டு மையக் கட்டடம் கட்டப்பெறுவதற்கு ரூ.2.00 கோடி நிதியுதவியும், மையம் ஏற்படுத்த ரூ.1.54 கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலமும் தமிழக அரசு ஏற்கெனவே அளித்துள்ளது. தென்னகப் பண்பாட்டு மையம் தனித்தும், மாநிலக் கலை-பண்பாட்டுத் துறை வழியாகவும் நிதி உதவி வழங்கி பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டில் நடத்தி வருகிறது.

### தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழகத்தில் கலைகளின் மேம்பாட்டு வளர்ச்சிக்கும், கலைஞர்களின் நல வாழ்விற்கும் பல்வேறு கலைத் திட்டங்களைச் செயற்படுத்தும்பொருட்டுத் தமிழக அரசால் 1955 ஆம் ஆண்டில் தன்னாட்சி நிறுவனமாகத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் தோற்றுவிக்கப்பெற்றது. பின்னர், 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

இம்மன்றம், மாநில அரசு வழங்கும் நல்கையிலிருந்து பின்வரும் அரிய கலைத் திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகிறது:

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்ற கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின்மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங்கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்தரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நூல் வெளியீட்டு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக்



2006 ஆகஸ்ட் 25]

கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும்வண்ணம் பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளைத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

### 1. கலைமாமணி விருது வழங்குதல்

நிகழ்த்துக்கலை வித்தகர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும்முகத்தான், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், "கலைமாமணி" விருது வழங்குகிறது. இதுவரை, 1,382 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 306 மறைந்த புகழ்பெற்ற கலை மேதைகள் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில் வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில், ரூ.1,000/- வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ.10,000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ.15,000/- வீதம் 19 கலைஞர்களுக்கும் ஆகமொத்தம் 196 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டுவரும் நாடகக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இதுவரை 26 கலை நிறுவனங்களுக்கும், 17 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்கள் மற்றும் சுழற்கேடயங்கள் வழங்கப்பெற்றுள்ளன.

### 2. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இத்திட்டத்தின்கீழ், வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்நிதியுதவித் தொகையினை 2006 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.500/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்க

ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை நலிந்த கலைஞர்கள் மொத்தம் 8,063 பேர் நிதியுதவி பெறும் வகையில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**3. மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்**

மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ரூ.2,000/- வீதம் 88 குடும்பங்களும், ரூ.3,000/- வீதம் 77 குடும்பங்களும், ரூ.5,000/- வீதம் 81 குடும்பங்களும், ரூ.6,000/- வீதம் 53 குடும்பங்களும் ஆக மொத்தம் இதுவரை 299 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**4. மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல்**

இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை - பண்பாட்டு மரபுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் இந்திய அரசின் சார்பில் புது தில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தினைச் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்திற்கு 81 வெளி மாநிலக் கலைக் குழுக்கள் வருகை புரிந்துள்ளன. 83 தமிழகக் கலைக் குழுக்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன. மேலும், நடப்பாண்டில் கோவா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுடன் கலைக் குழுப் பரிமாற்றம் நடைபெறவுள்ளது.

**5. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் கற்றுத் தேர்ந்த புத்திளங்கலைஞர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்யும் வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கி வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நிதியுதவி செய்து அதன் வாயிலாக அக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,724 இளம் கலைஞர்கள் பயன் துய்த்துள்ளனர்.



**6. நலிந்த கிராமியக் கலைஞர்களுக்கு/கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்**

நலிந்த கிராமியக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும் இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்கத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கும் ரூ.750/-ம், ஒவ்வொரு கலைக் குழுவிற்கும் ரூ.2,500/-ம் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை, 1,425 நலிந்த கிராமியக் கலைஞர்களும்/கலைக் குழுக்களும் பயன்துய்த்துள்ளனர்.

**7. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழ்ப் பண்பாட்டைச் சித்தரித்துத் தமிழில் புதிய நாடகங்களை தயாரித்திடும் பொருட்டு நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 தமிழ் நாடகங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**8. புதிய நாட்டிய-நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்**

தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய-நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 13 நாட்டிய-நாடகங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**9. அரிய கலை நூல்களை வெளியிட மானியம் வழங்குதல்**

அரிய கலை நூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 103 நூல்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**10. கலை விழாக்கள்**

நம் மரபு வழிக் கிராமியக் கலைகள் அருகி வருவதால், அவற்றைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும் மற்றும் தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு

நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கிராமியக் கலை விழாக்களை நடத்தி வருகின்றது. மேலும், கலை மேதைகளின் நினைவு விழா, நாடக விழா, நாட்டிய விழா ஆகிய பல்வேறு விழாக்களை நடத்தி வருவதுடன், சுற்றுலாத் தலங்கள், திருக்கோவில்கள் மற்றும் குற்றால சாரல் விழா ஆகியவற்றிலும் கலைநிகழ்ச்சிகளையும் வழங்கி வருகின்றது. தொன்மைச் சிறப்பு மிக்க தமிழ்க் கலைகளைப் பிற மாநிலத்தவர் அறிந்துகொள்ளும் வண்ணம் பிற மாநிலங்களில் தமிழகக் கலை விழாக்களையும் மன்றம் நடத்தி வருகின்றது.

இவ்வகையில், 2-7-2006 அன்று சிலப்பதிகார நாட்டிய விழாவினையும், சூலைத் திங்கள் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்களில் முத்தமிழ் விழாவையும் மன்றம் சென்னையில் மிகவும் சிறப்புடன் நடத்தியுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழாவில் 2006 ஆகஸ்டுத் திங்கள் 3, 4, 5 ஆகிய நாட்களில் மன்றத்தின் சார்பாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**தமிழ் நாடு ஓவிய நுண்கலைக் குழு**

தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தமிழக அரசால் 1975 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நுண் கலைகளான ஓவியம், சிற்பம், பதிப்போவியம் ஆகிய கலைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும், பரப்பவும் இக்கலைகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களை ஊக்குவிக்கவும் ஓவிய நுண்கலைக் குழு செயல்படுகிறது. மாநில அரசு வழங்கும் மானியத் தொகைமூலம் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

**“கலைச் செம்மல்” விருது வழங்கும் திட்டம்**

மரபுவழி மற்றும் புதுப்பாணிக் கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ் பெற்ற ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்கள் அவரவர் துறைகளில் புரிந்து வரும் அரிய சாதனைகளைப் பாராட்டும் வகையில் “கலைச் செம்மல்” விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதாளர் ஒவ்வொருவருக்கும் பாராட்டிதழுடன் ரூ.20,000/- விருதுத் தொகை வழங்கப்படுகிறது. மரபு வழிப் பிரிவில் 5 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும், புதுப்பாணிப் பிரிவில் 36 ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.



**மாநில அளவில் மரபு வழிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், மரபு வழிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு மரபுவழி ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான ‘கலைக்காட்சி’ விருதுகளாக, 30 வயதுக்கு மேற்பட்ட, ‘மூத்த கலைஞர்கள்’ பங்கு கொள்ளும் பிரிவில் 5 சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000/- வீதமும், 30 வயது நிறைவடையாத ‘இளங் கலைஞர்கள்’ பங்குகொள்ளும் பிரிவில் 10 சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/-வீதமும் வழங்கப்படுகிறது. 43 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கு மரபு வழிக் கலைக் காட்சி விருதுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

**மாநில அளவில் புதுப்பாணிக் கலைக் காட்சி விருது வழங்கும் திட்டம்**

மாநில அளவில், புதுப்பாணிக் கலைக் காட்சிகள் ஓவிய நுண்கலைக் குழுவால் நடத்தப்பட்டு, புதுப்பாணி ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிறந்த படைப்புகளுக்கான ‘கலைக்காட்சி’ விருதுகளாக 30 வயதுக்கு மேற்பட்ட “மூத்த கலைஞர்கள்” பங்கு கொள்ளும் பிரிவில் 5 சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.15,000/-வீதமும், 30 வயது நிறைவடையாத “இளங் கலைஞர்கள்” பங்குகொள்ளும் பிரிவில் 10 சிறந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/-வீதமும் வழங்கப்படுகிறது. இதுவரை, 249 ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்குப் புதுப்பாணிக் கலைக்காட்சி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**தனி நபர் கலைக்காட்சி அல்லது கூட்டுக் கலைக்காட்சி நடத்த நிதி உதவி வழங்கும் திட்டம்**

தமிழ்நாட்டு ஓவிய, சிற்பக் கலைஞர்கள் அவரவர்களது கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சிகளைத் தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்து நடத்திடக் கலைக்காட்சி ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 143 கலைஞர்கள் தனிநபர் கலைக்காட்சி நடத்துவதற்காகவும், 10 குழுக்கள் கூட்டுக் கலைக்காட்சி நடத்துவதற்காகவும் இதுவரை நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**நுண்கலை பயிலும் மாணவ மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம்**

சென்னை மற்றும் கும்பகோணம் அரசுக் கவின் கலைக் கல்லூரிகளில் நுண்கலை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் முதுகலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ, மாணவியர்களுக்கு ரூ.5,000/- வீதமும், இளங்கலை இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவ, மாணவியர்களுக்கு ரூ.3,000/- வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை இளங்கலைப் பிரிவில் 428 பேருக்கும், முதுகலைப்பிரிவில் 41 பேருக்கும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக் கூடங்கள்**

ஓவிய நுண்கலைக் குழுவின் கலைக் கூடம் உதகமண்டலத்திலும் மற்றும் மதுரை கலை-பண்பாட்டு மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அக்கலைக் கூடங்களில் தமிழ்நாடு ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் படைப்புகள் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**"நுண்கலை" கலையிதழ் வெளியீடு**

"நுண்கலை" எனும் கலையிதழ் கலை ஆர்வலர்கள் பயன் பெறும் வகையிலும், தமிழ்நாட்டின் நுண்கலைச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையிலும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவால் வெளியிடப்பட்டு வருகிறது. தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகளை உள்ளடக்கிய 25 இதழ்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

**மாவட்டங்களில் கலைக்காட்சிகள் நடத்தும் திட்டம்**

மாவட்டங்களில் உள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில், கலை-பண்பாட்டுத் துறையின் 6 மண்டலக் கலை-பண்பாட்டு மையங்களுடன் இணைந்து நுண்கலைக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட, மண்டலத்திற்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் நடத்தப்படும் கலைக் காட்சிகள், கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள்மூலம் ஓவிய மற்றும் சிற்பக் கலைஞர்கள் விருது வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர். மேலும், ஓவியப் போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.



நுண்கலைகளைப் பற்றிப் பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட இந்நிகழ்ச்சிகள் தூண்டுகோலாக அமைகின்றன.

**நுண்கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம்**

நுண்கலை பயில ஆர்வமுள்ளோருக்காக, நுண்கலையில் 6 மாதப் பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைதோறும் சென்னை, அரசுக் கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தொடக்க நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ.600/- கட்டணம் செலுத்தியும், உயர் நிலை பயில விருப்பம் உள்ள ஆர்வலர்கள் ரூ.900/- கட்டணம் செலுத்தியும் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயன் பெறலாம்.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை**

ஐந்து வயதிலிருந்து பதினாறு வயதிற்குட்பட்ட சிறார்களுக்குக் கலைப் பயிற்சியளித்துத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1979 ஆம் ஆண்டில் சவகர் சிறுவர் மன்றம் சென்னையில் தொடங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 36 இடங்களில் பின்வருமாறு சவகர் சிறுவர் மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| மாவட்டச் சவகர் சிறுவர் மன்றங்கள் | - | 24 |
| சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள் | - | 10 |
| சவகர் சிறுவர் மன்ற ஊரக மையங்கள் | - | 2 |

**(1) மாவட்டச் சவகர் சிறுவர் மன்றங்கள்**

சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர், விழுப்புரம் மற்றும் கிருட்டிணகிரி.

**(2) சவகர் சிறுவர் மன்ற விரிவாக்க மையங்கள்**

பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை, மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல்.

**(3) சவகர் சிறுவர் மன்ற ஊரக மையம்**

புதுக்கோட்டை மாவட்டம் பொன். புதுப்பட்டி மற்றும் மதுரை எல்லிஸ் நகர்.

**சவகர் சிறுவர் மன்றங்களில் பகுதி நேரமாகப் பயிற்றுவிக்கப்படும் கலைகள் பின்வருமாறு:**

பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, குரலிசை, நாடகம், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், தபேலா, ஆர்மோனியம்-கீபோர்டு; அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்ஸ்), தையல், ஓவியம், திரைஅச்சு, உடல் திறன் பயிற்சி, யோகா மற்றும் சிலம்பம்.

சென்னையில் 16 கலைகளில் வாரம் ஆறு நாட்களிலும், மாவட்டச் சவகர் சிறுவர் மன்றங்கள், விரிவாக்க மையங்களில் ஏதேனும் நான்கு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும், ஊரக மையங்களில் இரண்டு கலைகளில் வாரத்தில் மூன்று நாட்களிலும் மாலை நேரத்தில் பயிற்சியளிக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் 5,700 சிறுவர் சிறுமியர் பயிற்சி பெற்று வருகின்றனர். இரு ஊரகச் சவகர் சிறுவர் மன்றங்கள் மற்றும் கிருட்டிணகிரி மாவட்டச் சவகர் சிறுவர் மன்றம் நீங்கலாக 33 சவகர் சிறுவர் மன்றங்களில் சிறுவர் நூலகங்கள் செயற்படுகின்றன.

மொரிஷியஸ் மற்றும் கசகஸ்தான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற கலைப் பரிமாற்றம் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இந்தியாவின் சார்பாகச் சென்ற குழந்தைகளில் தமிழ்நாட்டிலிருந்து தலா ஒருவர் வீதம் இருவர் புதுதில்லி, தேசியச் சிறுவர் மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம் திருவனந்தபுரம் நகரில் நடத்திய தென் மண்டலத் தேசிய இளந்திரு விருதுத் தெரிவு முகாமில், தமிழ்நாட்டிலிருந்து 56 குழந்தைகளும், புதுதில்லியில் நடத்திய தேசியக் குழந்தைகள் முகாமில், 42 குழந்தைகளும், பரத்பூர் நகரில் நடத்திய தேசிய சுற்றுச்சூழல் முகாமில், 6 குழந்தைகளும் கலந்து கொண்டுள்ளனர்.

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் தமிழ்நாட்டின் அனைத்து சவகர் சிறுவர் மன்றங்களையும் சேர்ந்த 100 குழந்தைகளுக்கு 10 நாட்கள் கோடைக்கால கலைப் பயிற்சி முகாமும், சிவகங்கை நகரில், மாரிகால கலைப் பயிற்சி முகாமும் சவகர் சிறுவர் மன்றத்தால் செயல்படுத்தப்பட்டது. மேலும், மாவட்டங்கள்தோறும் கலைப் போட்டிகளும் அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கிடையே தஞ்சாவூரில்,



மாநிலக் கலைப் போட்டியும் நடத்தப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டத்திலுள்ள முக்கியச் சுற்றுலாத்தலங்கள், சாத்தனூர் அணை, மதுரை ஆகிய இடங்களுக்குக் குழந்தைகள் கலைச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

100 குழந்தைகளுக்கு மாநில அளவிலான ஜிம்னாஸ்டிக்ஸ போட்டிகள் திண்டுக்கல் நகரிலும், மாநில அளவிலான சிலம்பாட்டப் போட்டிகள் புதுக்கோட்டை நகரிலும், மாநில அளவிலான கராத்தே போட்டிகள் சென்னை மாநகரிலும் நடத்தப்பட்டன. சவகர் சிறுவர் மன்றத்தின் சார்பாக, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வறிய நிலையிலுள்ள மூன்று குழந்தைகளுக்கு நடன அரங்கேற்றமும் நிகழ்த்தப்பட்டுள்ளது.

புதுதில்லி தேசியச் சிறுவர் மன்றமானது, சென்னையைச் சேர்ந்த மாணவன் செல்வன் யதின் அகாவால் என்பவரை மேடைக் கலைக்காகவும், மாணவன் செல்வன் இமானுவேல் லாசரஸ் என்பவரை எழுத்துக் கலைக்காகவும், 2006 ஆம் ஆண்டுக்கான தேசிய இளந்திரு விருதுக்குத் தெரிவு செய்தது. இவ்விரு மாணவர்களும், 15-5-2006 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து இந்த உயரிய விருதினைப் பெற்றுள்ளனர்.

**புதிய திட்டங்கள்**

2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் கூடுதலாக வயலின் மற்றும் மிருதங்கப் பிரிவுகளைத் தொடங்குதல், 4 அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்குப் பரதநாட்டிய அணிகலன்கள் வாங்குதல், சென்னை அரசுக் கவின்கலைக் கல்லூரியில் மாணவர்கள் பயிற்சிபெறும்பொருட்டுச் சுவர் ஓவியங்கள் வரையச் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் சிற்பக்கலைப் பிரிவில் முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்குதல், மாமல்லபுரம் அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் நூலகம் மற்றும் கணினி மையம் அமைக்கக் கட்டடம் கட்டுதல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்மூலம் தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம மற்றும் கட்டபொம்மலாட்டம் ஆகிய கலைக் குழுக்களை உருக்குவித்தல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழாவினைக் கொண்டாடுதல், பழங்குடி இன மக்களின் கலை விழாக்கள் நடத்துதல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள கலைக்கூடத்தில் ஒலிப் பெருக்கி அமைத்தல், இருக்கை வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும

ஒலி-ஒளி நூலகம் அமைத்தல், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் சுற்றுச் சுவர் எழுப்புதல், சென்னை அரசு இசைக் கல்லூரிக்கு ஒளி நகலி வாங்குதல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களுக்கும் பயிற்சிப் பொருட்கள் வாங்குதல், சவகர் சிறுவர் மன்றம்மூலம் மாநில அளவில் கைவினைக் கலைப் பயிற்சி அளித்தல், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுமூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் அமைத்தல், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவிற்கு ஒளி நகலி வாங்குதல் மற்றும் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுமூலம் மரபுவழி இளங்கலைஞர்கள் முகாம் நடத்துதல் போன்ற பல்வேறு புதிய திட்டங்களைச் செயற்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொன்மைமிக்க நமது மரபுக் கலைகளைப் பாதுகாத்துப் பரப்பிடவும், அரிய மற்றும் நலிவடைந்த கலைகளைப் பாதுகாத்து மக்களிடையே கொண்டு செல்லவும், இளந்தலைமுறையினரிடையே நமது கலைகளின் சிறப்பினை உணர்த்தி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கலை–பண்பாட்டுத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.





## இணைப்பு V

*(337 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 18–கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை– கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### பட்டு வளர்ச்சித் துறை

1.1 நமது நாட்டில், பட்டு உற்பத்தி செய்யும் பாரம்பரிய மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது. காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி, ராசிபுரம் முதலான இடங்களில் உற்பத்தி செய்யப்படும் கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்ட கண்கவர் வண்ணக் கைத்தறி பட்டுப் புடவைகள் உலகப் பிரசித்திப் பெற்றவை. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பட்டுத் தொழிலின்மூலம் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வருவாயும் கிராமபபுற மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. குறைந்த முதலீடு, குறுகிய காலத்தில் வருவாய் பெற வாய்ப்பு என்ற அளவில் நல்ல பலன் தரக்கூடிய பட்டுத் தொழில், குறிப்பாக மகளிருக்கு ஏற்ற தொழிலாகவும், கணிசமான வருவாய் ஈட்டித்தருவதாகவும் உள்ளது.

கர்நாடக மாநில எல்லையை ஒட்டிய மாவட்டங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுவந்த பட்டுத் தொழில், படிப்படியாக தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் பரவ ஆரம்பித்தது. இதனை ஊக்குவிக்கும் வகையில் முதற்படியாக, தொழில் வணிகத் துறையில் ஒரு பிரிவாகச் செயல்பட்ட பட்டு வளர்ச்சிப் பிரிவு, 1979 ஆம் ஆண்டு முதல் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் துறையாகச் செயல்படத் துவங்கியது. 2000–2001 ஆம் ஆண்டில் 27,650 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டிருந்த நிலை, இயற்கைச் சீற்றங்களினாலும் பிறவேறு காரணங்களாலும் 2003–2004 ஆம் ஆண்டில் 10,060 ஏக்கர் என்ற நிலைக்குக் குறைந்தது. தற்போது தமிழகத்தில் 16,530 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து 17,350 விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. நடப்பு 2006–2007 ஆம் ஆண்டில் பல்வேறு திட்ட உதவிகள்மூலம் 3,100 ஏக்கரில் கூடுதலாக மல்பரி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 25

*1.2* பட்டு வளர்ச்சித் துறையின் முக்கியச் செயல்பாடுகள் பின்வருமாறு:

(1) உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்;

(2) தேவையான அளவு மல்பரி நாற்றுக்கள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்க உதவி செய்தல்;

(3) மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப் புழு வளர்ப்பில் புதிய உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல்;

(4) தனியாக புழு வளர்ப்பு மனை கட்டவும், நவீன பட்டுப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் உதவிகள் வழங்குதல்;

(5) நோயற்ற, தரமான பட்டு முட்டைகளை உரிய நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துதல்;

(6) பட்டுப் புழு வளர்ப்பில் நோய்த் தாக்குதல் ஏற்படாவண்ணம் பாதுகாத்து, வெற்றிகரமான, கூடுதல் பட்டுக்கூடு அறுவடை செய்யும் வகையில் தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்;

(7) ஆரோக்கியமான இளம் பட்டுப் புழுக்களை வளர்த்து, பட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, தனியார் இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க உதவியளித்தல்;

(8) விவசாயிகளின் மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப் பாசன அமைப்புகள் நிறுவ உதவியளித்தல்; மற்றும்

(9) விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகள் விற்பனைக்கு, அங்காடி வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

**2.1 2005–2006 ஆம் ஆண்டில் இயல்பு சாதனை விபரம்:**

| வ. எண் | செயல்பாடுகள் | அலகு | இலக்கு | சாதனை | சாதனை % |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மல்பரி விரிவாக்கம் (கூடுதல் பரப்பு) | ஏக்கரில் | 1,730 | 2,331.95 | 135% |
| 2 | பட்டு முட்டை பயன்பாடு | இலட்சத்தில் | 65.00 | 85.475 | 131% |
| 3 | பட்டுக்கூடுகள் உற்பத்தி | மெட்ரிக் டன்னில் | 4,000 | 5,224.90 | 130% |
| 4 | கச்சாப் பட்டு உற்பத்தி | மெட்ரிக் டன்னில் | 600 | 738.80 | 123% |
| 5 | வேலைவாய்ப்பு உருவாக்கம் (கூடுதல்) | நபர்கள் | 8,650 | 11,660 | 135% |



2006 ஆகஸ்ட் 25]

2005–2006 ஆம் ஆண்டில் சாதகமான பருவ நிலை நிலவியதால் 123 %–லிருந்து 135 %–ஆக கூடுதல் சாதனை அடையப்பட்டது.

**2.2 2005–2006 ஆம் ஆண்டில் நிதிச் சாதனை விபரம்:**

| வ. எண் | திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திட்டப் பணிகள் | | |
| (அ) | கிரியா ஊக்கித் திட்டங்கள் | 85.65 | 75.00* |
| (ஆ) | பகுதி -2 திட்டம் (மல்பரி நடவு மற்றும் பயிற்சியளித்தல்) | 8.30 | 8.30 |
| 2 | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 11.80 | 11.80 |
| 3 | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2.24 | 2.24 |
| 4 | திட்டம் சாராப் பணிகள் (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம், மற்றும் கூலித்தொகைகள் முதலியன) | 2,073.28 | 2,081.57 |
| | மொத்தம் | 2,181.27 | 2,178.91 |

**நிதி ஆதாரம்:** அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மற்றும் அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் வசூலிக்கப்படும் லெவித் தொகைகள் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியில் சேர்க்கப்படுகிறது. பின்னர் கிரியா ஊக்கித் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவைப்படும் மாநில அரசின் பங்குத் தொகை மற்றும் பட்டு வளர்ச்சி தொடர்புடைய திட்டச் செயல்பாடுகளுக்கு இந்நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

*2005–2006 ஆம் ஆண்டில் 60 பட்டு விவசாயிகள் புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கும், புழுகூடு கட்டும்

அறை கட்டவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.10.65 இலட்சம் தொகை 2006–2007-ல் சேர்க்கப்பட்டுள்ளது.

### 3. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

**3.1** தமிழகத்திலுள்ள பட்டு நூற்பாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் கச்சாப் பட்டினை விற்பனை செய்யப் பயன்படுத்தும் மையமே 'பட்டுப் பரிமாற்றகம்' ஆகும். இவ்விதம் காஞ்சிபுரத்தில் தோற்றுவிக்கப்பட்ட "அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம்" 09-01-1991 முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு விற்பனைக்கு வரும் அனைத்து பட்டு நூல் தொகுதிகளும், காஞ்சிபுரத்தில் மத்தியப் பட்டு வாரியத்தால் நிறுவப்பட்டுள்ள "பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மைய"த்தில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இதன் தரத்தின் அடிப்படையிலும் கர்நாடக மாநிலத்தில் நிலவும் பட்டின் சராசரி விலையின் அடிப்படையிலும் அடிப்படை விலை நிர்ணயிக்கப்படுகிறது. பின்னர் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. டான்சில்க், பட்டு நூற்பாளர் கூட்டுறவு சங்கங்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் இதர பட்டு நுகர்வோர்கள் இந்த ஏலத்தில் கலந்துகொண்டு கச்சாப் பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுப் பரிமாற்றகம், பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக பட்டு நூலுக்குரிய தொகை வழங்குவதை உறுதி செய்கிறது.

**3.2** அண்ணா பட்டுப் பரிமாற்றகம், நிதி வசதி அளிப்பவர், தரகு முகவர் போன்ற இடைத்தரகர்களை நீக்கிவிட்டு, தமிழகத்தில் பட்டு உற்பத்தியாளர் மற்றும் பட்டு நுகர்வோரிடையே நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் பாலமாகச் செயல்படுகிறது.

**3.3** பட்டு விற்பனையாளர் மற்றும் பட்டு கொள்முதல் செய்வோரிடமிருந்து பட்டு கொள்முதல் செய்யப்படும் தொகையில் 0.75 சதவீதம் லெவி கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இவ்விதம் வசூலிக்கப்பட்டத் தொகை "பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி"யில் செலுத்தப்பட்டு, பின்னர், இத்தொகை பட்டு வளர்ச்சித் துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக செலவிடப்படுகிறது.

**3.4** 2005–2006 ஆம் ஆண்டில் 150 மெட்ரிக் டன் பட்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 106.60 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு வர்த்தகம் செய்யப்பட்டதனமூலமாக, லெவி கட்டணமாக ரூ.16.487 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் பலமுனை நூற்பு இயந்திர அலகுகள் இயங்காததினால், நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி வர்த்தக சாதனை அடைய இயலவில்லை.



**3.5** 2006–2007 ஆம் ஆண்டில் பட்டுப் பரிமாற்றகத்தில் 150 மெட்ரிக் டன் பட்டு வர்த்தகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செயல்படா நிலையில் உள்ள பலமுனை பட்டு நூற்பு அலகுகளை மீண்டும் செயல்படுத்த சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4. டான்சில்க், காஞ்சிபுரம்

**4.1** தரமானப் பட்டினை நியாயமான விலைக்கும், தேவையான அளவிற்கும் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் ஆகிய அமைப்புகளுக்கு விநியோகிக்க "தமிழ்நாடு பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்" (TANSILK), ஒரு தலைமைக் கூட்டுறவு இணையமாக 17–04–1978-ல் பதிவு செய்யப்பட்டது. 09–09–1978 முதல் இந்த இணையம் செயல்பட்டு வருகிறது.

**4.2 வியாபார மூலதனம்:**

காஞ்சிபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ.75.00 இலட்சம் காசுக் கடனாகவும், உறுப்பினர் பங்கு மூலதனத் தொகையாக ரூ.137.60 இலட்சமும் பெற்று இந்த இணையம் செயல்படுகிறது. புதுடில்லியில் உள்ள தேசிய பட்டு நூல் வங்கிமூலமாக ரூ.117.49 இலட்சத்தை கச்சாப் பொருள் மூலதனக் கடனாகவும், ரூ.1.70 இலட்சத்தை தமிழக அரசின் பங்கு மூலதனமாகவும் ரூ.55.00 இலட்சத்தை வியாபார மூலதன உதவியாக மத்தியப் பட்டு வாரியத்திடமிருந்தும் பெற்று இந்த இணையம் செயல்பட்டு வருகிறது.

**4.3** காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டுப் பரிமாற்றகத்திலிருந்து, பெரும்பகுதி கச்சாப் பட்டினை இணையம் கொள்முதல் செய்கிறது.

**4.4** காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோவை, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 7 இடங்களில் இணையம் கிளை மையங்களைக் கொண்டுள்ளது.

**4.5** 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.5,369.03 இலட்சம் மதிப்புள்ள 380.60 மெட்ரிக் டன் பட்டினை கொள்முதல் செய்து விநியோகித்துள்ளதன்மூலமாக, இந்த இணையம் ரூ.70.77 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**4.6** 2006–2007 ஆம் ஆண்டில் இணையம் 400 மெட்ரிக் டன் பட்டினை வர்த்தகம் செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 25

**5. தமிழ்நாடு பட்டு வளர்ச்சிப் பயிற்சி நிலையம், ஒசூர்**

***5.1*** பட்டு வளர்ச்சித் துறையின் பணியாளர்களுக்கும், பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கும் சீரிய நோக்கில் 1973-ல் ஒசூரில் "அரசு பட்டுப் பயிற்சிப் பள்ளி" துவக்கப்பட்டது.

***5.2*** 2005-2006 ஆம் ஆண்டில் இப்பயிற்சிப் பள்ளியானது "தமிழ்நாடு பட்டு வளர்ச்சிப் பயிற்சி நிலையம்" எனும் பெயரில், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

***5.3*** பயிற்சிகள், பயிற்சி நிலையத்திலும், தேவைக்கேற்ப, பயிற்சி நிலையத்திற்கு வெளியேயும் பயிற்சி பெறுவோரின் வசதிக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது.

***5.4*** 2005-2006 ஆம் ஆண்டில், இப்பயிற்சி நிலையத்தில் பல்வேறு திட்டங்களின்கீழ் 100 துறைப் பணியாளர்களுக்கும், 718 விவசாயிகளுக்கும் பட்டு வளர்ப்பில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

***5.5*** நடப்பு 2006-2007 ஆம் ஆண்டில் 2,240 விவசாயிகளுக்கும் 182 துறைப் பணியாளர்களுக்கும், இப்பயிற்சி நிலையத்தின்மூலம் பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. 2006-2007 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்:

***6.1.1*** பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, பட்டுப் புழு வளர்ப்புக்குத் தேவையான கீழ்க்காணும் அடிப்படை வசதிளை ஏற்படுத்திக்கொள்ள திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது:

(1) உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்தல்;

(2) பட்டுப் புழு வளர்ப்பில் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல்;

(3) மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப் பாசன முறை அமைத்தல்;

(4) தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல்;

(5) நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல்;

(6) இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையம் நிறுவுதல்; மற்றும்

(7) தரமான கிருமி நாசினிகளை விநியோகித்தல்.



2006 ஆகஸ்ட் 25]

***6.1.2*** நடப்பு 2006-2007 ஆம் ஆண்டில், வளர்ச்சித் திட்டங்களான கிரியா ஊக்கித் திட்டங்கள், பகுதி-2, மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற திட்டங்களை மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு இணையாக மத்திய பட்டு வாரியத்தின் நிதியையும் பெற்று சீரிய முறையில் தொடர்ந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஆண்டு 2005 2006 | | | 2006 2007 • | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட மாநில அரசின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பெறப்பட்ட மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) | மாநில அரசின் நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | **பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதி படுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள்** | | | | | | |
| (1) | **விவசாயிகளுக்கான பயிற்சி** | - | 3.750 | 500 | - | 40.000 | 2,000 |
| (2) | **சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தல்** | 5.520 | 49.680 | 277 | 3.404 | 30.636 | 200 |
| (3) | **புழு வளர்ப்பு மனை கட்டுதல்** | 40.625 | 40.625 | 325 | 40.625 | 40.625 | 325 |
| (4) | **புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல்** | 16.250 | 16.250 | 325 | 24.375 | 24.375 | 325 |
| (5) | **இளம் புழு வளர்ப்பு மையம் அமைத்தல்** | 1.500 | 1.500 | 2 | 3.000 | 3.000 | 4 |
| (6) | **கிருமி நாசினிகள் விநியோகித்தல்** | 8.140 | 8.610 | 1,200 | 4.305 | 4.305 | 600 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஆண்டு 2005 2006 | | | 2006 2007 • | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட மாநில அரசின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பெறப்பட்ட மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) | மாநில அரசின் நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| (7) | ஜெய்கா திட்டத்தின் கீழ் துறை பணியாளர்கள் மற்றும் பட்டு விவசாயி களுக்கு பயிற்சி அளித்தல் | 0.804 | – | S–118 F–140 | 1.265 | – | S–100 F–140 |
| (8) | அரசு அலகுகளில் தளவாடப் பொருட்களை மேம்படுத்துதல் போன்ற பிற மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துதல் | – | – | – | 8.676 | 8.676 | – |
| | **மொத்தம்** | **72.839** | **120.415** | **2,887** | **85.65** | **151.617** | **3,694** |
| 2 | பகுதி-2 | | | | | | |
| (1) | மல்பரி நடவு செய்ய ஊக்குதவித் தொகை | 7.500 | 7.500 | 1,500 | 15.000 | 15.000 | 3,000 |
| (2) | விவசாயிகளுக்கான பயிற்சி | 0.800 | – | 100 | 0.800 | – | 100 |
| (3) | தகவல் மேலாண்மையை மேம்படுத்துதல் | – | – | – | 2.200 | 2.200 | – |
| (4) | பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துதல் | - | – | – | 1.800 | 1.800 | – |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஆண்டு 2005 2006 | | | 2006 2007 • | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட மாநில அரசின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பெறப்பட்ட மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) | மாநில அரசின் நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | மத்திய பட்டு வாரியத்தின் நிதிப் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகள் (எண்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| (5) | சேலம் விவசாயிகள் பயிற்சி மையத்தைப் புனரமைத்தல் | | | | 6.000 | - | |
| | **மொத்தம்** | **8.300** | **7.500** | **1,600** | **25.800** | **19.000** | **3,100** |
| 3 | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 11.800 | 11.800 | 650 | 11.800 | 11.800 | 220 |
| 4 | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2.240 | 2.240 | 110 | | – | – |
| | **ஆக மொத்தம்** | **95.179** | **141.955** | **5,247** | **123.250** | **182.417** | **7,014** |
| | | **237.134** | | | **305.667** | | |

S – துறைப் பணியாளர்கள் F விவசாயிகள்

குறிப்பு: • 2006–2007-க்காக பிரேரிக்கப்பட்ட திட்டம்.

***6.1.3*** கடந்த *2005–2006* ஆம் ஆண்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் *5,247* பயனாளிகளுக்கு ரூ.*237.134* இலட்சம் திட்ட உதவிகளாக வழங்கப்பட்டது.

***6.1.4*** நடப்பு *2006–2007* ஆம் ஆண்டில் *7,014* விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.*305.667* இலட்சம் திட்ட உதவிகளாக வழங்கப்படவுள்ளது.

***6.2*** கிரியா ஊக்கித் திட்டங்கள்-பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியிலிருந்து செயல்படுத்தும் திட்டங்கள்.

***6.2.1*** மாநிலத்தில் பட்டு வளர்ச்சிக்காக மத்திய பட்டு வாரிய நிதி உதவியுடனான கிரியா ஊக்கித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு

வருகின்றன. பட்டு வளர்ப்பில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல், இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைத்தல், தரமான நோய் தடுப்பு மருந்துப் பொருட்கள் மானிய விலையில் விநியோகித்தல் முதலான திட்டங்களுக்கு மத்தியப் பட்டு வாரியமும், மாநில அரசும் திட்ட உதவிகள் வழங்குகின்றன.

***6.2.2*** *2006-2007* ஆம் ஆண்டில் ரூ.*237.267* இலட்சம் திட்ட உதவிகளுடன் கிரியா ஊக்கித் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இதில், ரூ.*85.65* இலட்சம் மாநில அரசின் பங்கு ஆகும். மீதமுள்ள ரூ.*151.617* இலட்சங்களை மத்தியப் பட்டு வாரியம் தனது பங்காக வழங்கும்.

## 6.3. பகுதி–2 திட்டங்கள்

### 6.3.1 உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை நடவு செய்ய ஊக்குதவி அளித்தல்

*(அ)* அதிக இலை மகசூல் தரக்கூடிய 'வி*1*', 'எஸ் வரிசை' மற்றும் 'எம்.ஆர்.*2*' இரக மல்பரி நடவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் ஓர் ஏக்கருக்கு ரூ.*1,000/-* வீதம் ஊக்குதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

*(ஆ)* *2006-2007* ஆம் ஆண்டில் *3,000* ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ.*30.00* இலட்சம் ஊக்குதவித் தொகையாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்ட உதவித் தொகையை மத்திய பட்டு வாரியமும், மாநில அரசும் தலா ரூ.*15.00* இலட்சம் வீதம் சரிசமமாக ஏற்கும்.

### 6.3.2 விவசாயிகள் பயிற்சித் திட்டம்

நடப்பு *2006-2007* ஆம் ஆண்டில், ரூ.*0.80* இலட்சம் மதிப்பீட்டில், *100* விவசாயிகளுக்கு பைவோல்டைன் புழு வளர்ப்பு மேற்கொள்ள பயிற்சி வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு ரூ.*800/-* வீதம் வழங்கப்படும். இதற்கானச் செலவினம் ரூ.*0.80* இலட்சத்தை மாநில அரசே ஏற்கும்.

### 6.3.3 தகவல் மேலாண்மையை மேம்படுத்துதல்

பட்டு வளர்ச்சித் துறையின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக ஏற்கெனவே உள்ள பழைய கணினிகளுக்குப் பதிலாக புதிய, நவீன திறன்கொண்ட *8* கணினிகளைக் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மொத்த நிதித் தேவை ரூ.*4.40* இலட்சத்தை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் தலா ரூ.*2.20* இலட்சம் வீதம் ஏற்று வழங்கும்.





### 6.3.4 விவசாயிகள் சந்திப்பு மற்றும் கருத்தரங்குகள்

பட்டு விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்த, அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்தும், விவசாயிகளிடையே பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பட்டு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து அவ்வப்போது விவசாயிகள் அறியும் வகையில் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் *2006-2007* ஆம் ஆண்டில் இதுபோன்ற *18* கருத்தரங்குகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மொத்த நிதித் தேவை ரூ.*3.60* இலட்சத்தை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் சரிசமமாக தலா ரூ.*1.80* இலட்சம் வீதம் ஏற்று வழங்கும்.

### 6.3.5 சேலத்தில் உள்ள விவசாயிகள் பயிற்சி மற்றும் தகவல் மையத்தை புனரமைத்தல்

தற்போது சேலத்திலுள்ள "விவசாயிகள் பயிற்சி மற்றும் தகவல் மையம்" போதுமான அளவிற்கு அடிப்படை வசதிகளின்றி உள்ளது. இந்த விவசாயிகள் பயிற்சி மையத்தை ரூ.*6.00* இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம்) செலவினம் மேற்கொண்டு புனரமைப்புச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இச்செலவினம், *2006-2007* ஆம் ஆண்டுக்கான பகுதி–*2* திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

## 6.4 மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

***6.4.1*** மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோயமுத்தூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

***6.4.2*** *2006-2007* ஆம் ஆண்டில் *220* விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.*47.20* இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கானத் திட்ட உதவித் தொகை ரூ.*23.60* இலட்சத்தை மத்தியப் பட்டு வாரியமும், மாநில அரசும் சரிசமமாக தலா ரூ.*11.80* இலட்சம் வீதம் ஏற்று வழங்கும்.

***6.4.3*** இத்திட்டத்தின்கீழ் நடப்பு *2006-2007* ஆம் ஆண்டில் *100* விவசாயிகளால *100* ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்படும். தலா *1.00* ஏக்கர் பரப்பில் நாற்றுகள்மூலம் நடவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் மல்பரி நாற்றுக்கான செலவினத்தில் *50* சதவீத மானியமாக ரூ.*2,600/-* வீதம் *100* விவசாயிகளுக்கு திட்ட உதவிகள் வழங்கப்படும். இதற்கான திட்ட உதவித் தொகை ரூ.*2.60* இலட்சத்தை

[2006 ஆகஸ்ட் 25

மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் தலா ரூ.1.30 இலட்சம் வீதம் ஏற்று வழங்கும்.

***6.4.4*** சுகாதாரமான முறையில் புழு வளர்ப்பு செய்வதற்கு தனியாக புழு வளர்ப்பு மனை கட்டத் தேவையான மொத்த முதலீட்டுத் தொகை ரூ.50,000/-ல் 50 சதவீத மானியமாக ரூ.25,000/- வீதம் 60 விவசாயிகளுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் திட்ட உதவிகள் வழங்கப்படும். இதற்கான திட்ட உதவித் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் சரிசமமாக தலா ரூ.7.50 இலட்சம் ஏற்று வழங்கும்.

***6.4.5*** வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்காக தண்டு அறுவடை முறை, புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைக்கவும், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும தேவைப்படும் முதலீட்டுத் தொகை ரூ.20,000/-ல் 50 சதவீத மானியமாக ரூ.10,000/- வீதம் 60 விவசாயிகளுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் திட்ட உதவிகள் வழங்கப்படும். இதற்கான திட்ட உதவித் தொகை ரூ.6.00 இலட்சத்தை மாநில அரசும், மத்திய பட்டு வாரியமும் சரிசமமாக தலா ரூ.3.00 இலட்சம் வீதம் ஏற்று வழங்கும்.

***6.4.6*** மேலே குறிப்பிட்டுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டங்களுக்கான மொத்த திட்ட உதவித் தொகை ரூ.23.60 இலட்சத்தை மத்தியப் பட்டு வாரியமும், மாநில அரசும் தலா ரூ.11.80 இலட்சம் வீதம் சரிசமமாக ஏற்று வழங்கும்.

**2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகள்**



2006 ஆகஸ்ட் 25]

| வ. எண் | திட்ட விபரம் | பயனடைவோர் | வழங்கப்படவுள்ள உதவிகள் (ரூ. இலட்சத்தில்) | | | திட்ட உதவிகள் பங்கீட்டு விவரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மாநில அரசின் பங்கு | மத்திய பட்டு வாரிய பங்கு | மொத்தம் | மாநில அரசு | மத்திய பட்டு வாரியம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| I | பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள் | | | | | | |
| (1) | பட்டு வளர்ப்பில் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் | 2,000 நபர்கள் | – | 40.000 | 40.000 | – | 100 % |
| (2) | சொட்டு நீர்ப் பாசன அமைப்பு நிறுவுதல் | 200 எக்கர் | 3.404 | 30.636 | 34.040 | 10 % | 90 % |
| (3) | தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல் | 325 | 40.625 | 40.625 | 81.250 | 50 % | 50 % |
| (4) | புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் | 325 | 24.375 | 24.375 | 48.750 | 50 % | 50 % |
| (5) | இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைத்தல் | 4 | 3.000 | 3.000 | 6.000 | 50 % | 50 % |
| (6) | தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்களை விநியோகித்தல் | 600 விவசாயிகள் | 4.305 | 4.305 | 8.610 | 50 % | 50 % |
| (7) | துறைப் பணியாளர் மற்றும் பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் | S=100 F=140 | 1.265 | – | 1.265 | 100 % | |
| (8) | அரசு அலகுகளில் தளவாடங்களை மேம்படுத்துதல் போன்ற பிற மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் | – | 8.676 | 8.676 | 17.352 | 50 % | 50 % |
| II | பகுதி 2 திட்டம் | 3,100 | 25.800 | 19.000 | 44.800 | 50 % | 50 % |
| III | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 220 | 11.800 | 11.800 | 23.600 | 50 % | 50 % |
| | மொத்தம் | 7,014 | 123.250 | 182.417 | 305.667 | | |

S – துறைப் பணியாளர்கள் F – விவசாயிகள்

## 7. 2006-2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

பலவேறு செயல்பாடுகளைக் கொண்ட பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக 2006-2007 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டுள்ளவாறு சாதனையடையத் திட்டமிடப்பட்டுள்ளது:

*(1)* கூடுதலாக 3,100 ஏக்கர் பரப்பில் உயர்விளைச்சல் தரும் மல்பரி இரகங்கள் நடவு செய்யப்படும்.

*(2)* 95.00 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் வளர்க்கப்படும்.

*(3)* 5,700 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படும்.

*(4)* 800 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்படும்.

*(5)* கூடுதலாக 15,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

## 8. நிதித் தேவை விவரம்

மேற்காணும் செயல் இலக்கினை அடைய 2006-2007 ஆம் ஆண்டிற்கு புதிய திட்டங்களுக்காகவும், தொடர் திட்டங்களுக்காகவும் கீழ்க்குறிபபிட்டுள்ள விவாப்படி ரூ.2,643.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

| வ. எண் | திட்டங்கள் | | 2006–2007 -க்கான நிதித் தேவை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| I | **திட்டப் பணிகள்** (i) பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் கிரியா ஊக்கித் திட்டங்கள் | ரூ.85.65 இலட்சம் | 155.65 |
| | (ii) பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி கணக்குகள் இடையே மாற்றம் | ரூ.70.00 இலட்சம் | |
| | பகுதி 2 திட்டம (ஆ) (மல்பரி நடவு மற்றும் பிரச்சார கூட்டங்கள் நடத்துதல், பயிற்சி முதலியன) | | 25.80 |
| | (இ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | | 11.80 |





| | | |
|---|---|---|
| II | **திட்டம் சாராப் பணிகள்** (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம், மற்றும் கூலித் தொகைகள் முதலியன) | 2,450.38 |
| | **மொத்தம்** | 2,643.63 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

***1.00*** தமிழகத்தில் கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்காகவும் மற்றும் முன்னேற்றத்திற்காகவும் புதிய இலக்கு நோக்கி சிறப்பான உத்வேகத்துடன் முன்னேற "தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்" எனும் நிறுவனம், நிறுவனங்கள் சட்டம், 1956–ன்கீழ் 26–07–1973 அன்று பதிவு செய்யப்பட்டு, 01–08–1973 முதல் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் மற்றும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வர்த்தகச் சங்கங்களின்கீழ் இயங்கி வந்த அனைத்து கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும், பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின்கீழ் மாற்றப்பட்டன. அரசிடமிருந்து அனைத்து விற்பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் உரிமை மாற்றம் செய்யப்பட்டபின், இந்நிறுவனம் "பூம்புகார்" என்ற பெயரில் இயங்கத் துவங்கியது. தற்போது "பூம்புகார்" தமிழ்நாட்டின் தலைசிறந்த கைவினைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக் களஞ்சியமாக உள்ளது.

## 2.00 முக்கிய நோக்கங்கள்

இந்நிறுவனம் அமைக்கப்பட்டதற்கான முக்கிய குறிக்கோள்கள் வருமாறு:

*(1)* தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப்பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல்;

*(2)* கைவினைஞர்களின் தொழில் திறனை மேம்படுத்த முறையான பயிற்சி அளித்தல்;

*(3)* கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேம்படுத்துவதோடு அத்தொழிலில் உள்ள தொழில் முறை இடர்பாடுகளைக் களைதல்;

*(4)* வடிவமைப்புக்களில் புதிய உத்திகளைப் புகுத்துதல்;

[2006 ஆகஸ்ட் 25

(5) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்; மற்றும்

(6) மேற்கண்ட குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, சிறப்பு கோயில் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

## 3.00 வணிகச் செயல்பாடுகள்

### 3.01 விற்பனை

இந்நிறுவனம், கைவினைஞர்களின் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை தனது 16 விற்பனை நிலையங்கள் வாயிலாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும் கண்காட்சிகள்மூலமாகவும் நிறைவேற்றி வருகிறது.

**3.02** 1973–1974-ல் ரூ.50.00 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் ஆண்டு விற்பனை 2005–2006-ல் ரூ.1,783.00 இலட்சத்தினை எட்டியுள்ளது.

**3.03** விற்பனைக் கோட்பாடுகளைத் தீவிரமாக செயல்படுத்தியதன்மூலமும் மற்றும் சிறப்பு கோயில் திட்டங்களை 2005–2006-ல் திறனுடன் நிறைவேற்றியதனாலும் 2004–2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2005–2006 ஆம் ஆண்டின் விற்பனை ரூ.341.00 இலட்சம் கூடுதலாகச் செய்துள்ளது. முதன் முறையாக இந்நிறுவனம் 2005–2006-ல் ரூ.1,783.00 இலட்சம் விற்பனையை எட்டி சாதனை படைத்துள்ளது. நடப்பு ஆண்டில் (2006–2007) இக்கழகம் விற்பனை அளவு ரூ.2,500.00 இலட்சங்களை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.04 ஏற்றுமதி

கடந்த சில ஆண்டுகளாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் விற்பனை நிலையங்களில் வாங்கும் பொருட்களை சிறந்த முறையிலும், குறிப்பிட்ட காலக்கெடுவிலும் மற்றும் பாதுகாப்பான முறையிலும் அனுப்பி வைப்பதால் ஏற்றுமதியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் ஏற்றுமதி விற்பனை ரூ.132.00 இலட்சமாகும். பஞ்சலோக சிலைகள், பித்தளை அலங்காரப் பொருட்கள், நூக்கமர உபயோகப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை வெளிநாட்டினர் விரும்பி வாங்கிச் செல்லும் முக்கிய கைவினைப் பொருட்களாகும்.



2006 ஆகஸ்ட் 25]

### 3.05 உற்பத்தி

இந்நிறுவனம் நாச்சியார்கோவில், மதுரை, தஞ்சாவூர், வாகைகுளம், சுவாமிமலை, கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது உற்பத்தி நிலையங்களைக் கொண்டு பல்வேறு கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. பிற மாநிலங்களில் உள்ள இதுபோன்ற நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது இந்நிறுவனம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

### 3.06 சிறப்பு கோவில் திட்டங்கள்

உற்பத்தி நடவடிக்கைகள் தவிர, இக்கழகம் தங்க ரதம், வெள்ளி ரதம், மரத் தேர், வாகனம், கொடிமரம், கோவில் மணி போன்ற சிறப்பு கோவில் திட்டப் பணிகளில் ஈடுபட்டு தனக்கென ஒரு தனிச் சிறப்பினை ஏற்படுத்தி உள்ளது. அனைத்து கைவினைப்பொருள் கழகங்களில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே இத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில் இக்கழகம் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டக் கோவில் பணிகளை நிறைவேற்றியுள்ளது:–

| வ. எண் | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோவிலின் கோபுர விமானத்திற்கு செப்புத் தகடு பொருத்தி தங்க ரேக்கு அமைத்துள்ளது | 18.50 |
| 2 | திருக்கோலூர் அருள்மிகு வைத்தியமாநிதிப் பெருமாள் திருக்கோவிலுக்கு 39' உயர மரத் தேர் | 20.00 |

இந்நிறுவனம் நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கோவில் பணிகளை செய்து வருகிறது :–

| வ. எண் | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மைலாப்பூர் அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோவிலுக்கு 8¼' உயர தங்கத் தேர் செய்தல் | 6.50 |
| 2 | திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோவிலுக்கு 12½' உயர தங்கத் தேர் செய்தல் | 10.50 |
| 3 | சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலின் கோபுர விமானத்திற்கு செப்புத் தகடு போர்த்தி தங்க ரேக் அமைக்கும் பணி | 32.00 |
| 4 | பெங்களூரில் உள்ள இஸ்கான் திருக்கோவிலில் செப்புத் தகடு போர்த்தும் பணி | 24.00 |

[2006 ஆகஸ்ட் 25

## 4.00 பகுதி 2 திட்டங்கள் 2005–2006

***4.01*** *2005–2006* ஆம் ஆண்டில் பகுதி *2* திட்டத்தின்கீழ் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டம் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பல்வேறு கைத்திறத் தொழில்களில் பயிற்சி அளித்தல் | 10.40 |
| 2 | வடிவமைப்புகளில் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி | 7.40 |
| 3 | கைத்திறத் தொழில்கள் மேம்பாட்டிற்கு கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினத்தில் இரண்டு தொகுதிகளை அணுகுதல் | 12.00 |
| 4 | செம்மைப்படுத்தப்பட்ட மேம்பாட்டிற்கான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் | 10.00 |
| | மொத்தம் | 39.80 |

## 5.00 பகுதி–2 திட்டங்கள் 2006–2007

### 5.01.1 சென்னைக்கு அருகில் "நகர்ப்புறக் கண்காட்சித் திடல்" அமைத்தல்

நகரப் பகுதிகளில் கைவினைப் பொருட்கள் நிரந்தர கண்காட்சித் திடல் உருவாக்கும் நோக்கம் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கைவினைஞர்களுக்கும் மற்றும் நெசவாளர்களுக்கும் நேரடிச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் ஒரே இடத்தில் அவர்களுடைய பொருட்களைக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைப்பதன் முக்கிய நோக்கமாகும். புதுதில்லியில் அமைக்கப்பட்ட நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் அடிப்படையில் குஜராத், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற இதர மாநிலங்களில் இதைப்போன்ற 'நகர்ப்புறக் கண்காட்சித் திடல்கள்' ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

***5.01.2*** மைய அரசின் துணி நூல் அமைச்சகம், நகர்புற கண்காட்சித் திடல் திட்டத்திற்கான மொத்த நிதி முதலீடு ரூ.*200.00* இலட்சம் என வரையறுத்துள்ளது. மொத்த நிதி முதலீட்டில் மைய அரசின் பங்களிப்பு ரூ.*140.00* இலட்சம் ஆகவும் மீதமுள்ள ரூ.*60.00* இலட்சங்களை சம்பந்தப்பட்ட மாநில அரசின் பங்களிப்பாகவும் நிர்ணயித்துள்ளது. மாநில அரசு முதலீட்டில் தனது பங்கை அளிப்பதுடன் மேற்படி திடல் அமைப்பதற்காக *18,000* சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்ய



2006 ஆகஸ்ட் 25]

வேண்டும். பல முக்கிய மாநிலங்கள் இதைப்போன்ற கண்காட்சித் திடலை அமைத்துள்ளபோதிலும் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் இதைப்போன்ற கண்காட்சித் திடல் அமைக்க இயலவில்லை.

***5.01.3*** தற்பொழுது, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அனுப்பிய செயற்குறிப்பின் அடிப்படையில் சென்னையில் நகர்புறக் கண்காட்சித் திடல் அமைப்பதற்கு மத்திய அரசின் வளர்ச்சி ஆணையர் (கைத்திறன்) அவர்கள் ஒப்பளிப்பு அளிக்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள். இத்திட்டம் தமிழக அரசின் *2006–2007* மற்றும் *2007–2008* ஆம் ஆண்டிற்கான பகுதி–*2* திட்டத்தில் சேர்க்கப்பட்டு, மாநில அரசின் முதலீட்டுப் பங்கான ரூ.*60.00* இலட்சத்தில் ரூ.*10.00* இலட்சத்தை *2006–2007* ஆம் ஆண்டிலும் மீதமுள்ள ரூ.*50.00* இலட்சத்தை *2007–2008* ஆம் ஆண்டிலும் அனுமதிக்க உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமாக மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கடற்கரை விடுதி வளாகத்தில் உள்ள *18,000* சதுர மீட்டர் நிலத்தை இத்திட்டத்திற்காக தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கண்காட்சித் திடல் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து கூட்டு முயற்சியாக நிறைவேற்ற தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஒரே இடத்தில் காட்சிக்கு வைப்பதற்கு இத்தகைய நகர்புறக் காட்சித் திடல் உதவி செய்யும். இக் கண்காட்சித் திடல் அமையவுள்ள மாமல்லபுரம் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இதன்மூலம் கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் தங்கள் பொருட்களை மாமல்லபுரத்திற்கு வருகைபுரியும் வெளிமாநில மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடம் விற்பதன்மூலம் உலக சந்தையில் விற்க ஒரு வாய்ப்பாகவும் அமையும்.

***5.01.4*** மேலும் இக்கழகம் கன்னியாகுமரியில் ஒரு கண்காட்சித் திடலை அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்கும் மத்திய அரசு நிதி உதவி பெறப்படும்.

## 5.02 சென்னையில் கைத்திறன் அருங்காட்சியகம்

***5.02.1*** இந்தியாவிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த தமிழ்நாட்டின் பாரம்பரியம் கோவில் கட்டடக் கலை, நினைவுச் சின்னக் கட்டடங்கள், பஞ்சலோகச் சிலைகள், கற்சிற்பங்கள், மரச்சிற்பங்கள், கலை நயமிக்க பித்தளை விளக்குகள், தஞ்சை கலைத் தட்டுகள் போன்ற பல்வேறு

கைவினைப் பொருட்கள்மூலமாகப் பிரதிபலிக்கிறது. தமிழகத்திற்கு வருகைபுரியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள இத்தகைய கலைப் பொருட்களின்மீது ஆர்வம் கொண்டுள்ளபோதிலும், இத்தகைய கைவினைப் பொருட்கள் குக்கிராமங்களில் உற்பத்திச் செய்யப்படுவதனால் வெளிநாட்டுப் பயணிகள் இக்குக்கிராமங்களுக்குச் சென்று அரிய கலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் முறையைப் பார்வையிட இயலவில்லை. எனவே, மாநிலத்தில் உள்ள அனைத்து கைவினைப் பொருட்களையும் ஓரே இடத்தில் பார்வைக்கு வைப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. மேலும், இதனுடன் சில கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நேரடி செயல்முறை விளக்கத்தையும் ஏற்பாடு செய்ய உள்ளதால் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் முறையினை பார்வையிட்டு அவர்களே உணர இயலும். இக்கைத்திறன் அருங்காட்சியகத்தையொட்டி பல்வேறு கைவினைப் பொருள்கள் மற்றும் பல்வேறு பரிசுப் பொருள்களை அங்கு வருகைபுரியும் பார்வையாளர்களுக்கு விற்பனைச் செய்வதற்காக ஒரு "கைவினைப் பொருள் அங்காடி" அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சென்னைக்கு கூடுதல் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஓர் அம்சமாக இருக்கும்.

***5.02.2*** இத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு சென்னையில் ரூ.50.00 இலட்சம் முதலீட்டில் "கைத்திறன் அருங்காட்சியகம்" அமைக்க 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்கீழ் தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் மொத்த முதலீட்டில் தனது பங்களிப்பாக ரூ.18.45 இலட்சத்தை 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்கீழ் அனுமதிக்கவுள்ளது. மீதமுள்ள தொகையினை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.

### 5.03 கைத்திறத் தொகுதிகளை மேம்படுத்துதல்

பிரபலமடையாத மற்றும் மறைந்து வரும் மரக்கடைசல், பாய்நெசவு, காகிதக்கூழ் பொம்மைகள், சுடுமண் பொருட்கள், தலையாட்டி பொம்மை மற்றும் நெட்டி வேலைகள் போன்ற கைத்திறத் தொழில்களை மேம்படுத்த திருநெல்வேலி, மதுரை, மற்றும் தஞ்சை மாவட்டங்களில் மாநில அரசிற்கென 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.30.00 இலட்சம் நிதி உதவியுடன் மூன்று கைத்திறத் தொழில் தொகுதிகளை அணுக உத்தேசித்துள்ளது.



### 6.00 பூம்புகார் மாநில விருது

***6.01*** கைவினைஞர்களின் மேலோங்கிய படைக்கும் திறனையும், சிறந்த செயல் திறனையும் வெளிக்கொணர இந்நிறுவனம் ஆண்டுதோறும் பூம்புகார் விருதுப் போட்டியினை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கலை மற்றும் கவின் பொருட்கள் களத்தினைச் சார்ந்த மேம்பட்டவர்கள் அடங்கிய நீதிபதிகளின் குழுவினால் ஐந்து மிகச் சிறந்த கலைப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்படும். இதற்கு முன்னர் வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ.5,000/-, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டிலிருந்து மேற்படி விருதில் ரொக்கத் தொகையான ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தியதுடன் 40 கிராம் எடையுள்ள வெள்ளி பதக்கத்திற்குப் பதிலாக 4 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும் வழங்கப்படும்.

பூம்புகார் விருதினைப் பெற்றவர்கள், மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூ.1,000/-த்தினையும், 60 வயதை எட்டியவுடன் பெறத் தகுதி உடையவராகிறார்கள்.

### 6.02 மத்திய அரசின் தேசிய விருது/சில்ப குரு/யுனெஸ்கோ இளம் கைவினைஞர் விருது

இதைப்போன்றே மத்திய அரசு தேசிய அளவில் ஒரு விருதினை ஏற்படுத்தி ஆண்டுதோறும் இருபத்தி ஐந்து கைதேர்ந்த கைவினைஞர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மத்திய அரசின் சார்பில் இந்நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து இந்த விருதிற்கான கைவினைஞர்களை மாநில அளவில் தேர்வு செய்து இறுதித் தேர்விற்காக அனுப்பி வைக்கிறது.

***6.02.1*** இதேபோல் மாநில விருது மற்றும் தேசிய விருது பெற்ற சிறந்த கைவினைஞர்களில் 55 வயதை எட்டிய முதிர்ந்த கைவினைஞர்களுக்கு 'சில்ப குரு' விருது வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, திறமையான கைவினைஞர்களின் பெயர்களைத் தேர்வு செய்து மாநில அரசு இவ்விருதிற்காக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

***6.02.2*** ஒவ்வொரு ஆண்டிலும் உலக அளவில் கைவினைஞர்களின் திறமை வெளிப்படும் விதத்தில் தெற்காசிய அளவில் சிறந்த

கைவினைஞர்களுக்கு யுனெஸ்கோ (UNESCO) விருதும், உலகளவி இளம் கைவினைஞர்களுக்கு 1-வது, 2-வது, 3-வது பரிசுக்குத் தேர் செய்கிறது. தமிழக இளம் கைவினைஞர்கள் இந்தப் போட்டியி கலந்துகொள்ள இக்கழகம் உதவி செய்து வருகிறது. இந்த விருதுக் தகுதியானவர்களை மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்து செய்யும்.

## 7.00 நிதி நிலைச் செயல்பாடுகள்

2003–2004 ஆம் ஆண்டு வரை நட்டத்தில் இயங்கி வந்த இக்கழகம் 2004–2005 ஆம் ஆண்டு முதற்கொண்டு இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் விற்பனையையும் இலாபத்தையும் மேலும் கணிசமான அளவு அதிகரிக்க இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

## 8.00 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்திறத் துறைக்கான அணுகுமுறை

தமிழக அரசு 1973-ல் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தை அமைத்தபோதிலும் இக்கழகம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபார நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கும் தனது நோக்கத்தினை செயல்படுத்தியபோதிலும், கைத்திறத் துறையின் மேம்பாட்டிற்கு மேலும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்திறத் துறையின் வளர்ச்சிக்காக முழுமையான அணுகுமுறையை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இந்த அணுகுமுறையானது தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களைப் பற்றிய கணக்கெடுப்பு, (இத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு இது அடிப்படைத் தேவையாகும்) உற்பத்தியின் சில செயல்பாடுகளை பகுதியளவு இயந்திரமயமாக்குதல், மேம்பட்ட பயிற்சியின்மூலம் கைவினைஞர்களின் திறமையினை உயர்த்துவதற்குப் போதுமான வளர்ச்சிக்கு தொகுதியினை அணுகுதல், வடிவமைப்பு மேம்படுத்துதலை உள்ளடக்கிய உள்கட்டமைப்பினைப் பலப்படுத்துதல், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இணையான நிதி உதவியினை தமிழக அரசிடமிருந்து ஏற்பாடு செய்தல், நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆயுள் காப்பீடு திட்டத்திற்கு



இணையாக கைவினைஞர்களுக்கு ஆயுள் காப்பீடு வசதி, நலப் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறையாகும்.

**9.00** கைத்திறத் துறையின் வளர்ச்சிக்கு மேற்படி முனைப்பான அணுகுமுறையினால், தமிழகத்தில் உள்ள கைவினைஞர்கள் மிகப்பெரிய அளவில் பயனடைவார்கள்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

*1.* கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினைத் துரிதப்படுத்தி, நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் துவக்கப்பட்டது. குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற மக்களுக்காக அவரவர் இருப்பிடங்களிலேயே, தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள கதர் வாரிய அலகுகள்மூலம், வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலையாய நோக்கமாகும். அதுபோன்றே, கிராமத் தொழில்களிலும் அப்பகுதிகளிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, கிராம கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே குறைந்த மூலதனத்தில் கிராமத் தொழில்களை உருவாக்கி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதும் வாரியத்தின் நோக்கமாகும். இந்த நோக்கங்களைக் கருத்தில்கொண்டு, திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் உரிய திட்டங்களை மாநிலம் முழுவதும் செயல்படுத்துதல் ஆகியவை இவ்வாரியத்தின் முக்கியப் பணிகளாகும்.

## 2. விளிம்புத் தொகைத் திட்டம்

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் வழங்கப்படும் மானியத்திலிருந்து "விளிம்புத் தொகை திட்டம்" (Margin Money Scheme) என்னும் ஒரு திட்டத்தினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களுக்கு, திட்ட மதிப்பில் அதிகபட்சமாக 30 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையரால் அடையாளம் கண்டுள்ள 116 கிராமத் தொழில்கள், இத்திட்டத்தின்கீழ நிதியுதவி பெற தகுதி உடையவையாகும். இத்திட்டத்தின்கீழ், 2004-2005 ஆம் ஆண்டு வரை 1,583 பயனாளிகளுக்கு ரூ.940.44 இலட்சம் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம்

ஆண்டில் விளிம்புத் தொகை மானியமாக 553 பயனாளிகளுக்கு ரூ.572.60 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையம், 2006-2007 ஆம் ஆண்டில் விளிம்புத் தொகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ.3.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 3. கதர்

### 3.1 கதர்ப் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது, கிராமக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்களின் உற்பத்தியின்கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கியச் செயல்முறைகளாக விளங்குகின்றன. ஏறத்தாழ 183 கிராமிய நூற்பு நிலையங்கள், 58 உபகிளைகள், 12 நேபாளி தறி நிலையங்கள் இந்தச் செயல்முறைகளை நிறைவேற்றி வருகின்றன. இந்த நிலையங்கள்மூலம் சுமார் 20,000 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் 12,500 பேர் கிராமியப் பெண்கள் ஆவர். பருத்திக் கதரின்மூலம் பல்வேறு மாதிரியான வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் சீருடைத் துணிகள் போன்ற பெரும்பான்மையான கதர் இரகங்கள் உற்பத்திச் செய்யப்பட்டு வருகின்றன. ரூ.4.40 கோடி மதிப்புள்ள கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்களை வாரியம் மூலம் உற்பத்தி செய்ய, 2006–2007 ஆம் ஆண்டிற்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசுத் துறைகளான அரசு மருத்துவமனைகள், கல்வி, இரயில்வே, துறைமுக பொறுப்புக் கழகம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தேவை நமூனாக்களின் அடிப்படையில் மட்டும் கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது.

### 3.2 பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வுத் திட்ட நிதி (Scheme of Fund for Regeneration of Traditional Industries - SFURTI)

உற்பத்திக் குறியீட்டினையடைய ஏதுவாக, இராட்டைகள் கொள்முதல், புதுப்பித்தல் மற்றும் தறிகளை நவீனப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு மும்பை கதராணையரகம்மூலம் பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வுத் திட்ட நிதி (SFURTI) என்னும்



திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.3 நவீனத் தொழில்நுட்பம் புகுத்தி புதிய வடிவமைப்பில் உற்பத்தி பெருக்குதல் (Product Development, Design and Intervention Packaging Scheme - PRODIP)

சீருடைத் துணியின் தரத்தை உயர்த்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருங்குளம் மற்றும் என். பூலான்பட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள நேபாளி தறி அலகுகளிலுள்ள தறிகளை கதராணையரகத்தின் நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தி புதிய வடிவமைப்பில் உற்பத்தி பெருக்குதல் (PRODIP) திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிபபீட்டில் நவீனப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. கதர் துணியின் தரத்தை உயர்த்துவதன் மூலம், வாரியத்திற்குப் பல்வேறு அரசு துறைகளிலிருந்து அதிகமாக தேவை நமூனாக்கள் கிடைக்கும்.

### 3.4 கதர்ப் பட்டு

இவ்வாரியம் பழம்பெருமைகொண்ட பட்டுத் தொழிலில் ஈடுபட்டு, பட்டு உற்பத்தியைச் செய்து வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக் கட்டுப்பாட்டின்கீழ், 27 கதர்ப் பட்டு உபகிளைகள் இயங்கி வருகின்றன. இவ்வாரியத்தினால் சாதாரண விலை முதல் அதிக விலை வரை உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் தனித்தன்மை வாய்ந்ததுடன், சந்தையில் முதன்மை பெறும் அளவிற்கு மதிப்பும் வாய்ந்ததாகும். மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் அச்சிடப்பட்ட பட்டுப் புடவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இத்தகைய சேலைகளின் கணினி வடிவமைப்பு உள்ளடக்கிய அனைத்து வடிவமைப்புகளை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வாடிக்கையாளர்களின் விருப்பத்தினைப் பூர்த்தி செய்யும் வகையிலும், வியாபாரப் போட்டியினை எதிர்கொள்ளும் வகையிலும், புதிய வடிவமைப்புப் பட்டுப் புடவைகள் ரூ.2,500/- மதிப்பில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாரியம் சுமார் 1,500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதற்கும் வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இது தவிர வாரியத்திற்கு சொந்தமாகக் குறிப்பாக பட்டுக்கென சாயமிடும் அலகு ஒன்று சேலம் மாவட்டம காட்டம்பட்டியில் இயங்கி வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.15.00 கோடி மதிப்பிற்கு கதர் பட்டுச் சேலைகளை வாரியத்தால் உற்பத்தி செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னையில் உள்ள நூற்பாளர் சேவை மையம், தேசிய வடிவமைப்பு தொழில்நுட்ப மையம் (N.I.F.T) மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகிய துறைகளுடன் கலந்தாலோசித்து இளைய சமுதாயத்தினர், வேலைக்குச் செல்வோர் மற்றும் பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பல்வேறு வடிவமைப்புகளில் பட்டுப் புடவைகளை வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. கும்பகோணத்தில் பட்டு வடிவமைப்பு முன்னேற்ற மையம் அமைத்திட, மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையர் ரூ.5.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளார். இதுவரை 25 பட்டுப் புடவைகளின் வடிவமைப்புகள் வடிவமைக்கப் பட்டுள்ளதுடன் நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பெங்களூரிலுள்ள மத்தியப் பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு அடையாளமாக வழங்கப்படும் "சில்க் மார்க் லேபிள்"-ஐ, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு பெறுவதற்காக, இவ்வாரியத்திற்கு உறுப்பினர் சான்றிதழ் (Membership Certificate from Silk Mark Organisation of India) வழங்கியுள்ளது.

### 3.5 கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனைக்கான தள்ளுபடி

மாநில அரசு மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் வழங்கப்படும் இத்தள்ளுபடி மானியமே கதர், உல்லன், பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு இரகங்களின் விற்பனையை அதிகரிக்க ஒரு பிரதான நிதி ஆதாரமாகும். மாநில அரசு, மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையர் வழங்கும் தள்ளுபடியுடன் சேர்த்து ஆண்டு முழுவதற்கும் கதர் இரகங்களின் விற்பனை மீது 30 சதவீத தள்ளுபடியும், பட்டு இரகங்களின் விற்பனை மீது 20 சதவீத தள்ளுபடியும், ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது. அரசு வாரியத்திற்கு வழங்கும் தள்ளுபடி மானியம் அதிகபட்சம் ஆண்டுக்கு ரூ.2.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2005-06 ஆம் ஆண்டில் இந்தத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டதினால், வாரியம் ரூ.16.51 கோடி கதர் இரகங்களை விற்பனை செய்துள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையரால் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் விற்பனைக்கும், இத்தள்ளுபடி ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் அரசின் தள்ளுபடி மானியம் அதிகபட்சமாக ரூ.5.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தத் தள்ளுபடியை



சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்தி சுமார் ரூ.35.00 கோடி மதிப்புள்ள கதர் இரகங்களை விற்பனை செய்ய இயலும்.

### 3.6. நூற்போர், நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கான நலத் திட்டம்

கைவினைஞர்களுக்கான நல நிதி ஒன்று இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காட்டை இந்த நல நிதிக்கு வழங்குவதுடன் வாரியமும், அதற்கு ஈடான பங்குத் தொகையை நல நிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நிதி, நூற்போர் மற்றும் நெசவாளர்களது நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கும் கூலியுடன் 10 விழுக்காடு கூலித் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாக, வாரியம் வழங்கி வருகிறது. திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகை காலங்கள் போன்றவற்றிற்கு, நூற்போர் மற்றும் நெய்வோருக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2005-06 ஆம் ஆண்டில் 1,567 கைவினைஞர்களுக்கு ரூ.42.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நூற்பாளர் மற்றும் நெசவாளர் மரணமடைந்தால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதி திட்டத்தின்கீழ் கருணைத் தொகை வழங்கும் ஒரு சமூக பாதுகாப்புத் திட்டம், வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 18-09-1996-க்குப் பின் மரணமடைந்தவருக்கு ரூ.10,000/- குடும்ப நல நிதியாக வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டு செயல்பட்டு வந்தது. பின்னர் இத்திட்டம் 22-09-1999 முதல் ரூ.10,000/-லிருந்து ரூ.20,000/-ஆக கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி ரூ.10,000/- வீதம் 12 நபர்களுக்கும் ரூ.20,000/- வீதம் 4 நபர்களுக்கும் ஆக மொத்தம் ரூ.2.00 இலட்சம் வரை குடும்ப நலத் திட்டத்திற்கு கருணைத் தொகையாக நெசவாளர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.7. குழு காப்பீட்டுத் திட்டம் (Group Insurance Scheme)

நூற்போர்/நெசவாளர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2005-06 ஆம் ஆண்டிலிருந்து வாரியம் காப்பீடுக் கட்டணத் தொகையாக கைவினைஞர்களின் பங்குத் தொகையையும் சேர்த்து ரூ.1.67 இலட்சம், 1,423 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் செலுத்தி உள்ளது. நடப்பு நிதியாண்டில்

மேலும் சுமார் 200 கைவினைஞர்களை இத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4. கிராமத் தொழில்கள்

### 4.1. தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள்

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட முக்கியத் தொழில்களில், தச்சு மற்றும் கருமாரத் தொழில் முதன்மை வாய்ந்ததாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழிலை மிக முக்கியமான தொழிலாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அடையாளம் கண்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 துறை அலகுகள் இயங்கி வருகின்றன. அவை கிண்டி, வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, திருப்பூர், நாஞ்சிக்கோட்டை மற்றும் பேட்டை ஆகும்.

அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அறைகலன்கள், இவ்வலகுகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

### 4.2 தோல் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில், தோல் தொழில் பிரதான தொழிலாகும். தற்போது கதர் வாரியத்தின்கீழ் 19 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இக்காலணி அலகுகளில் தரம் வாய்ந்த காலணிகளும், தோல் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இக்காலணி அலகுகள் மூலம் உற்பத்திச் செய்யப்படும் தோல் பொருட்களில் 80 சதவீதப் பொருட்கள் தமிழ்நாடு காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, உள்ளாட்சி நிறுவனங்கள், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் இதர துறை நிறுவனங்களை உள்ளடக்கிய அரசு நிறுவனங்களுக்கு விற்பனைச் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வாரியமானது பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு, கதரங்காடிகளின்மூலம் காலணிகள் மற்றும்



தோல் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டு பலனடைந்து வரும் சுமார் ஆயிரம் கைவினைஞர்களில் பெரும்பாலான கைவினைஞர்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.

### 4.3. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்

தமிழகத்தில் கிராமப்புறங்களில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்திடும் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் செயற்படுத்தப்படும் "உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்" முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின்கீழ் தற்போது 24 சோப்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் குளியல் சோப்புகளான வேம்பு, சந்தனம், கார்பாலிக் சோப்பு, சலவைக் கட்டி மற்றும் தூள், ரப்–அப், பாத்திரம் துலக்கும் கட்டி, கிளினிங் பவுடர் ஆகியவை பொதுமக்களிடையே நல்ல் வரவேற்பை பெற்றுள்ளன. வாரியத்தின் தயாரிப்புகளான மூலிகா குளியல் சோப்பு, மூலிகை கை கழுவும் திரவம், எழில் ஷாம்பு மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் ஆகியவையும் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. தொடர்ந்து நடைபெறும் ஆராய்ச்சியின் விளைவாக நிலையான தரத்தைப் பெற்றுள்ளதாலும், வெளிச்சந்தையில் உள்ள சோப்பு இரகங்களைவிட வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்கள் உகந்த விலையில் கிடைக்கப்பெறுவதால், பொதுமக்களிடையே வாரியத்தினால் தயாரிக்கப்படும் சோப்பு இரகங்களுக்கு தொடர்ந்து ஆதரவு கிடைத்து வருகிறது.

வாரியமானது பொதுமக்களின் தேவைக்கேற்ற வகையில் கூடுதலான நறுமணத்தோடு, புதியதாக வெள்ளை நிற குளியல் சோப்பினை தயாரித்து சந்தையில் அறிமுகப்படுத்தி உள்ளது.

வாரியத்தின் சோப்பு வகைகளின் விற்பனையை கூட்டுறவுத் துறை நியாய விலைக் கடைகள்மூலம் அரசு அறிமுகப்படுத்தியதிலிருந்து இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. வாரியமானது ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவர்களுக்குத் தேவையான சோப்புகளை விற்பனை செய்து வருகிறது. தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறைவாசிகளுக்கும் தேவையான குளியல் சோப்பு மற்றும் பற்பொடியினை வாரியம் விநியோகம் செய்து வருகிறது.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நவீன தொழில்நுட்பம் புகுத்தி புதிய வடிவமைப்பில் உற்பத்தி பெருக்குதல் (PRODIP) திட்டத்தின்கீழ் சோப்புத் தொழிலில் அட்டைப் பெட்டி வடிவம் மேம்பட செய்வதற்கு ரூ.2.00 இலட்சத்தில் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 4.4. தேனீ வளர்ப்புத் தொழில்

தேனீ வளர்ப்புத் தொழில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். வாரியமானது பச்சைத் தேனை பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மார்த்தாண்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதியிலுள்ள தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. வாரியமானது தற்போது பச்சை தேனை கொள்முதல் செய்யும் இடத்திலேயும் மற்றும் பதப்படுத்தப்பட்ட தேனை விற்பனைக்கு அனுப்பும் முன்பும் பரிசோதனை செய்து வருகிறது. எனவே வாரியத்தினால் வழங்கப்படும் தேனுக்கு 100 சதவிகிதம் தரம் வழங்க இயலுகிறது. பிறகு பச்சைத் தேன் அம்சி மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் நிலையங்களின்மூலம் பதப்படுத்தப்பட்டு, அக்மார்க் முத்திரை பெறப்பட்டு தேன் நிரப்பும் நிலையங்களில், பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள்மூலமாக மலைவாழ் பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களுக்குத் தேனீப் பெட்டிகள் வழங்க மானியமாக அரசு நிதி உதவி வழங்குகிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் விவசாயக் கூலியின்மூலம் பெறும் வருவாயுடன் கூடுதல் வருவாயையும் இதன்மூலம் ஈட்டுகின்றனர்.

வாரியத்தினால் உற்பத்திச் செய்யப்படும் தரமான தேன் நியாயமான விலையில் கிடைப்பதால், மக்களின் மத்தியில் மிகச் சிறந்த ஆதரவைப் பெற்றுள்ளது. வாரியமானது அரசு அண்ணா மருத்துவமனை, டாம்கால் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துக் கோவில்களுக்கும் தேன் விநியோகம் செய்து வருகிறது.

மேலும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின்மூலம் பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வுத் திட்ட நிதி (SFURTI)



திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கென பொது வசதி மையம் அமைப்பதற்கு நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

### 4.5. கைமுறைக் காகிதத் தொழில்

கைமுறைக் காகிதத் தொழில் “கழிவிலிருந்து செல்வம்” எனும் அடிப்படையை ஆதாரமாகக் கொண்டதாகும். தற்போது பிடாகம் (விழுப்புரம் மாவட்டம்), செண்பகபுதூர் (ஈரோடு மாவட்டம்), கோவனூர் அட்டைப் பெட்டி தயாரிக்கும் அலகு (கோவை மாவட்டம்) மற்றும் உதகை காகிதப் பை மற்றும் உறைகள் தயாரிக்கும் அலகு (நீலகிரி மாவட்டம்) ஆகிய நான்கு அலகுகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

இத்தொழிலில் கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், காகித உறைகள், பத்திரத்தாள், உறைத்தாள், படி எடு தாள், கைப்பைகள் ஆகியவையே பிரதான உற்பத்திப் பொருட்களாகும். இந்த அலகுகளில் பணியில் ஈடுபட்டுள்ள அதிக அளவிலான தொழிலாளர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி சட்டத்தின்படி கூலி வழங்கப்படுகிறது. அரசுத் துறைகளுக்குத் தேவையான உறைகள், கோப்பு அட்டைகள், கச்சா அட்டைகள், பத்திரத்தாள் போன்ற காகிதப் பொருட்களை விநியோகம் செய்வதுடன், தனியார் நிறுவனங்களின் தேவைக்கும் விநியோக ஆணைகள் பெறப்பட்டுள்ளன. கிராம விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதற்காக இப்பொருட்கள் தொடர்பான விற்பனையினை விரிவுபடுத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

சோப்பு அலகுகள், காலணி அலகுகள் மற்றும் தேன் நிரப்பும் அலகுகளினால் உற்பத்திச் செய்யப்படும் பொருட்களை கட்டுகளாக கட்டுவதற்குத் தேவையான அட்டைப் பெட்டிகளைக் கோவனூர் அட்டைப் பெட்டி தயாரிக்கும் அலகில் உற்பத்திச் செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உதகை மாவட்டத்தில் உள்ள காகிதப பைகள் மற்றும் உறைகள் தயாரிக்கும் அலகில், உற்பத்திச் செய்யப்பட்ட உறைகள் மற்றும் பைகள் வாரிய உபயோகத்திற்கும், உயர் நீதிமன்றம, அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும விற்பனை செய்யப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 25

### 4.6. மட்பாண்டத் தொழில்

இம்மாநிலத்தின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றான மட்பாண்டத் தொழிலை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அபிவிருத்தி செய்து வருகிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 3 மட்பாண்ட அலகுகள் செயல்படுகின்றன. இவ்வலகுகளில் உற்பத்திச் செய்யப்படும் மெருகு மட்பாண்டங்கள் மற்றும் இதர மட்பாண்டப் பொருட்களுக்கு மக்கள் மத்தியில் நல்லாதரவு உள்ளது. தமிழகத்தில் பரவலாக உள்ள கதர் அங்காடிகளின்மூலம் இவ்வலகுகளில் தயாரிக்கப்படும் அழகு வண்ண அலங்கார மட்பாண்டப் பொருட்கள், பொது மக்களுக்கு விற்பனைச் செய்யப்படுகின்றன.

வாரியமானது மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளுக்குத் தேவையான பூந்தொட்டிகளை விநியோகம் செய்து வருகிறது. மேலும் ஆவின் நிறுவனத்திற்குத் தேவையான ஐஸ்கிரீம் குடுவைகளையும் விநியோகம் செய்கிறது.

ஊரகப் பகுதிகளில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு அத்தொழில் வேலைவாய்ப்பை அளிக்கிறது.

### 5. விற்பனை

வாரிய அலகுகளில் உற்பத்திச் செய்யப்படும் பொருட்களின் விற்பனைக்காக 169 கதர் அங்காடிகளும், 10 கிராமப் பொருள் விற்பனை நிலையங்களும் மற்றும் 7 தோல் விற்பனை நிலையங்களும் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. கண்காட்சிகள் நடத்துவதன்மூலமும், கிராமப்புறங்களில் சிறப்பு விற்பனை செய்வதன்மூலமும், விளம்பரங்களுக்கு மின் ஒளிபரப்புகளை பயன்படுத்தியும், கணிப்பொறி இணையதளம் www.khadicraft.com இயக்கப்படுவதன் மூலமும், கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்திப் பொருட்களை மக்களிடையே விற்பனைச் செய்திட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வாரியத்தின் விற்பனைப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை உற்பத்தித் திறன் குழுவினரால் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள கதர் அங்காடிகள் மற்றும் கிராமப் பொருள் விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனைச்



2006 ஆகஸ்ட் 25]

செய்யப்படுகின்றன. வாரியம் தன் செயல்பாடுகளின்மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துகிறது.

வாரியத்தின் விற்பனை அதிகரிக்கும் பொருட்டு, புதுதில்லியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கென்று தனியே இடம் ஒதுக்கி, காதி கிராமோதய பவன்மூலம் 27–04–2006 முதல் விற்பனை துவக்கப்பட்டுள்ளது. இவ்விற்பனைப் பிரிவில் குறிப்பாக வாரியத்தில் உற்பத்திச் செய்யப்படும் குறிஞ்சி மற்றும் நீம் சோப்பு, ஜவ்வாது பவுடர், சுகப்பிரியா வலி நிவாரணி தைலம் போன்றவை விற்பனைச் செய்யப்பட்டு வருகின்றன. வாரியம் தனது விற்பனையை வெளிமாநிலங்களில் விரிவுப்படுத்தி வாரியத்தின் பொருட்களை விற்பனைச் செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. மேலும் பெங்களூரிலுள்ள நந்தி காதி கிராமோதய சங்கம்மூலம் முதலில் விற்பனையைத் துவக்கியுள்ளது. விமானப் பணிப் பெண்களுக்குச் சீருடை வழங்க "ஏர் இந்தியா" மற்றும் "இந்தியன் ஏர்லைன்ஸ்"-ஐ வாரியம் அணுகியுள்ளது. மாதிரிச் சீருடைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் 2005–2006 ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் விற்பனை மற்றும் 2006–2007ஆம் ஆண்டின் குறியீடு ஆகியவை பின்வருமாறு:

| வ. எண். | தொழில்களின் பெயர் | 2005-2006 (ரூ. இலட்சத்தில்) | | 2006-2007 குறியீடு (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 882.66 | 1650.52 | 1940.00 | 2254.04 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| (அ) | தோல் | 424.87 | 452.80 | 595.00 | 600.00 |
| (ஆ) | தச்சு மற்றும் கருமாரத் தொழில்கள் | 204.86 | 176.69 | 400.00 | 440.00 |
| (இ) | சோப்பு | 446.83 | 412.50 | 500.00 | 450.00 |
| (ஈ) | கைமுறைக் காகிதம் | 52.25 | 38.39 | 75.00 | 60.00 |
| (உ) | தேனீ வளர்ப்பு | 73.36 | 99.01 | 100.00 | 110.00 |

[2006 ஆகஸ்ட் 25

## 6. பகுதி 2 திட்டங்கள்–2006–2007 (புதிய திட்டங்கள்)

6.1. 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தில் தமிழக அரசு நிதி ஒதுக்கீட்டின்படி ரூ.53.00 இலட்சத்திற்கு திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்த உள்ளது.

6.2. பாரம்பரிய தொழில்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் சூலூர் கதர் தொகுப்பு மற்றும் அம்பத்தூர் காலனி தொகுப்பிற்கு மானியம் வழங்குதல்.

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையரகம் பாரம்பரிய தொழில்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சூலூர் கதர் தொகுப்பு மற்றும் அம்பத்தூர் காலனி தொகுப்பு ஆகிய திட்டங்களைத் தெரிவு செய்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கான மதிப்பு ரூ.197.00 இலட்சமாகும். இந்தத் திட்ட மதிப்பீட்டுத் தொகை கீழ்க்காணும் திட்டங்களுக்கு செலவு மேற்கொள்ளப்படவுள்ளது.

| வ. எண் | திட்டம் | (ரூ. இலட்சத்தில்) திட்ட மதிப்பீடு | 75 சதவீதம் கதர் ஆணைக் குழு மானியம் | மாநில அரசின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மானியம் | வாரிய பங்கு தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | சூலூர் கதர் தொகுப்பு | 180.00 | 135.00 | 35.00 | 10.00 |
| 2. | அம்பத்தூர் காலனி தொகுப்பு | 17.00 | 12.75 | 3.00 | 1.25 |
| | மொத்தம் | 197.00 | 147.75 | 38.00 | 11.25 |

மேற்குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்திட, 2006–2007 ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.38.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 6.3. சேலம் மாவட்டம், காட்டம்பட்டியிலுள்ள பட்டுநூல் சாயம் தோய்க்கும் தொழில் பிரிவுக்கு சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிப்புத் தளவாடம் வழங்குதல்

சேலம் மாவட்டம், காட்டம்பட்டியிலுள்ள பட்டுநூல் சாயம் தோய்க்கும் தொழிற் பிரிவில் வெளியாகும் கழிவு நீரினை சவ்வூடு முறையில் சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றிட சுத்திகரிப்புத் தளவாடங்கள் அமைக்க 2006–2007 ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2006–07 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.



2006 ஆகஸ்ட் 25]

### 6.4. குளியல் சோப்பு தயாரிப்பு தொழிற்பிரிவை நவீனப்படுத்துதல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வரும் திருக்கழுக்குன்றம் மற்றும் மாமண்டூர் குளியல் சோப்புகள் தயாரிக்கும் அலகுகளில், நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுவதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதோடு சோப்பு வகைகளின் தரமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதற்கான இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவிட, 2006–07 ஆம் ஆண்டின் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 7. நிர்வாகம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959–ன்படி கதர் வாரியம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மற்றும் அரசினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட ஒரு குழுமூலம் வாரியத்தின் முக்கியக் கொள்கை முடிவுகள் அனைத்தும் எடுக்கப்படுகின்றன.

## 8. வாரியத்தின் நிதிநிலை

வாரியத்தின் நிதி ஆதாரம் இரண்டு முதன்மைத் தலைப்புகளின்கீழ் வரப்பெறுகிறது. அவை அரசிடமிருந்து பெறப்படும் மானியம் மற்றும் துறை வரவினம் ஆகியவையாகும். வாரியத் துறை வரவினமானது கதர் மற்றும் கிராமப் பொருள் விற்பனை, கட்டடங்களிலிருந்து பெறப்படும் வாடகை மற்றும் இதர இனங்களை உள்ளடக்கியதாகும். துறை வரவினங்கள் வாரிய அலகுகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திக்காக தேவைப்படும் மூலப்பொருட்களை கொள்முதல் செய்யவும், அதற்கான கூலி வழங்கி உற்பத்தி சம்பந்தப்பட்ட இதர முக்கியமான செலவுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழக அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் வரவு–செலவுத் திட்டத்தின்மூலம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மானியமானது நிகர ஈட்டு மானியமாகவும், தள்ளுபடி மானியமாகவும்

மற்றும் இதர திட்டங்களுக்காகவும் வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் [illegible]டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு கதர் [illegible]மத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி [illegible]ாரியத்தின் மானியமாக அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

| வ. எண் | விவரம் | | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நிகர ஈட்டு மானியம் | | 2219.00 |
| 2. | தள்ளுபடி | கதர் வாரியம் | 200.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 0.01 |
| 3. | தணிக்கைக் கட்டணம் | | 150.00 |
| 4. | பகுதி 2 திட்டங்கள் | | |
| | 1 தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 53.00 |
| | 2 தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | | 20.00 |
| | மொத்தம் | | 2642.01 |

மும்பை கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் கதர் இரகங்களின் விற்பனையின் மீதான தள்ளுபடி வழங்குவதுடன் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை வழங்கப்படும் திட்டத்தையும் செயல்படுத்த, நிதி உதவி செய்து வருகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் ரூ.5.57 கோடி வாரியத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. 31–3–2005 முடிய வாரியத்தின் தொடர் நட்டம் ரூ.49.74 கோடியாகும். வாரிய பணியாளர்களின் ஊதிய செலவினம் அதிகரிக்கப்பட்டதால், இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது. வாரியத்தின் நட்டத்தைக் குறைக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

1. பொருளாதாரமற்ற கதர் அங்காடிகள், மாவட்ட அலுவலகங்கள், உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் வாரியத்தால் மூடப்பட்டுள்ளன.

2. ரூ.41.00 கோடி மதிப்புள்ள பழைய தேங்கிக் கிடந்த கதர் இரகங்களை விற்பனை செய்ய அனைத்து முயற்சிகளும் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு, ரூ.39.45 கோடி மதிப்புள்ள கதர் இரகங்களை விற்பனை செய்து தேக்கம் குறைக்கப்பட்டுள்ளது.



3. வாரியப் பணியாளர்களின் ஊதிய செலவினங்களை கட்டுப்படுத்த மற்றும் குறைக்க அரசு ஆணைப்படி 862 வாரியப் பணியாளர்களில் வாரியம் முதலில் 97 பணியாளர்களை வாரியத்திலிருந்து பணி நீக்கம் செய்தது. பணி நீக்கம் செய்யப்பட்ட 97 பணியாளர்கள் மற்றும் பணி நீக்கம் செய்யப்படவுள்ள பணியாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உயர் நீதிமன்ற ஆணையின்பேரில் 97 பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 765 பணியாளர்கள் பணியில் தொடரவும் அனுமதிக்கப்பட்டது. வாரியத்தின் நட்டத்தைக் குறைக்க ஏதுவாக 862 வாரியப் பணியாளர்களை மற்ற கழகங்களிலோ அல்லது அரசுத் துறைகளிலோ பணியமர்த்த அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4. பணியாளர்களின் ஊதிய செலவினங்களைக் குறைக்க வாரியம் விருப்ப ஓய்வுத் திட்டத்தை ஊக்குவித்தது. இதுவரை 169 பணியாளர்கள் 30–11–2004 முடிய விருப்ப ஓய்வில் சென்றுள்ளனர்.

5. வாரியத்தின் செயல்பாட்டினை உயர்த்தவும், அதிக இலாபம் ஈட்டவும், வாரியத்தினால் உற்பத்திச் செய்யப்படாத பொருட்களை சுய உதவிக் குழு மற்றும் சில பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்மூலம் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களை கொள்முதல் செய்து, விற்றபின் தொகை வழங்கும் முறையில் அனைத்து விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்து வருகிறது.

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. இந்தியாவிலேயே, பனைத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது. தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைக் கொண்டு, பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அவற்றின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.01 கோடி பனை மரங்களில், தமிழ்நாட்டில் மட்டும் 4.61 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை மரம் தமிழ்நாட்டின் "மாநில மரம்" ஆகும்.

2. மாநிலத்தில் பனைத் தொழில் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக "தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்" என்ற பெயரில் ஒரு தனி வாரியம், தமிழ்நாடு சட்டம் (15) 1994–ன்படி தனியாக அமைக்கப்பட்டு, 6–01–1995 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

3. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் நேரடியான வியாபாரத்தில் ஈடுபடவில்லை. பனைத் தொழில் வளர்ச்சிக்காக 996 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களும், (பனை ஓலை தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாக பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

4. பனை பொருட்கள் சந்தையில் எளிதில் விற்பனையாகும் வகையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை அளித்தல், பனை பொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்து பனைப் பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தி, பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

5. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு எனத் தனியாக வரவு–செலவு திட்டம் ஏதும் இல்லை. இவ்வாரியத்தின் செல்வினம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய வரவு–செலவுத் திட்டத்தில் அடங்குகிறது. இவ்வாரியத்திற்கென்று தனியாக பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலுவலர் மற்றும் பணியாளர்கள் இவ்வாரியத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

6. பனைத் தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனைவகை உண் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனஞ் சீனி, பனங்



கற்கண்டு, பாம் சாக்லெட் வகைகள், பதப்படுத்திய நுங்கு, பனம் பழ ஜாம் வகைகள், காற்றூட்டப்பட்ட குளிர்பான வகைகளான பாம்டா, பாம்கோலா வகைகளும் மற்றும் உண்ணா பொருட்களான பனை ஓலைப் பொருட்கள், பனை நார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

7. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகளின்படி, தமிழ்நாடு அரசு அனுமதியுடன் (மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை) பனை மரம், தென்னை மரம் மற்றும் ஈச்ச மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், வேறிடங்களுக்கு எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் உரிமம் நீட்டித்து வழங்கப்படுகின்றது.

### (அ) உற்பத்தி மற்றும் விற்பனை

2005–2006 ஆம் ஆண்டில் மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.749.37 இலட்சம் மதிப்பிலான பனைப் பொருட்களை உற்பத்தி செய்து ரூ.804.36 இலட்சம் மதிப்பிலான பனைப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

2006–2007 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைப் பொருட்கள் உற்பத்திக் குறியீடாக ரூ.1230.00 இலட்சமும, பனைப பொருட்கள் விற்பனைக் குறியீடாக ரூ.1430.00 இலட்சமும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) வேலைவாய்ப்பு

பனைத் தொழிலுக்கு தொழில்நுட்பத் தகுதி தேவை என்றில்லாமல் பாமரரும் செய்யும் வகையில் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு இத்தொழில்மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலும். இத்தொழிலில் சுமார் ஆறு இலட்சம் ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். பதநீர் இறக்குதல், பனைவெல்லம் தயாரித்தல், பனந்தும்பு அடித்தல், ஈச்சங்கூடைகள் முடைதல் ஆகிய பனைத் தொழில்களில் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த சுமார் 30,000 கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## 8. பனந்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஏற்றுமதி

பனந்தும்பு தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் உள்ள பெண் கைவினைஞர்களால் அழகிய பனை ஓலைப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு முகவர்கள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## 9. பனைத் தொழிலில் பயிற்சிகள்

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையத்தின்மூலம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையம் மற்றும் எட்டு மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. பனைப் பொருட்கள் உற்பத்தி அலகினை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் பனைத் தொழில் அபிவிருத்திக்கென அரசினால் நிதியுதவி அளிக்கப்பட்டும், பனைப் பொருட்களுக்கான வணிக வாய்ப்பிற்கு அதாவது போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஆவின் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பனைப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு அரசின் ஆதரவு தேவைப்படுகிறது

## 10. பகுதி–2 திட்டங்கள் 2006–2007–புதிய திட்டங்கள்

2006–2007 ஆம் ஆண்டில் அரசின் திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் பகுதி–2 திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றிட ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1. மதுரையில் உள்ள மதுரை– விருதுநகர்– திண்டுக்கல் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளன "பதநீர் உற்பத்தி பிரிவினை" நவீனப்படுத்திட ரூ 5.50 இலட்சம் செலவில இயந்திரங்கள் வாங்கப்படும்.
2. சேலம் மாவட்டம் சங்ககிரியில் உள்ள சேலம்– நாமக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளன "பதநீர் உற்பத்தி பிரிவினை" நவீனப்படுத்திட ரூ 5.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும்.
3. சேலம்–நாமக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனத்தின்கீழ் சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் ரூ. 3.00 இலட்சம் செலவில் பனந்தும்பு உற்பத்திப் பிரிவு நிறுவப்படும்.
4. தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள 400 ஏழை பனைத் தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும்வண்ணம் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.6.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

பனை மரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தை பாதுகாக்கின்றன. பனைப் பொருட்கள் தூய்மைக் கேடற்றவை மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உகந்தவை ஆகும். கிராமப்புறங்களில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும், பனைத் தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை மேற்கொள்வதும் தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் குறிக்கோளாகும். சிறிய அளவு மூலதனத்துடன் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களை பயன்படுத்தி சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவாறு நாள்தோறும் மக்கள் வாங்கிப் பயன்படுத்தும் மற்றும் விரைவில் விற்பனையாகும் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தும் அதன்மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் வழிவகை செய்கின்றன. எனவே, தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் பனை மரங்கள் வளர்த்துப் பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அதனடிப்படையில் கிராமப்புறத்திலுள்ள இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் பயன்படுகின்றன.

2006 ஆகஸ்ட் 25]

## இணைப்பு–VI

(393 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை மானியக் கோரிக்கை எண்.18–2006–2007

## அறிவிப்புகள்

**பட்டு வளர்ச்சித் துறை**

1. புதியதாக 3,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி நடவு செய்யப்படும். இதற்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

2. மல்பரி சாகுபடி மற்றும் வெண்பட்டுப்புழு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்க 100 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும். இதற்கு ஒரு விவசாயிக்குத் தலா 800/- ரூபாய் வீதம் செலவிடப்படும்.

3. நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 60 விவசாயிகளுக்குத் தலா 10,000/- ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

4. 2,000 விவசாயிகளுக்கு வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி வழங்கப்படும். இதற்கென ஒரு விவசாயிக்குத் தலா 2,000/- ரூபாய் வீதம் செலவிடப்படும்.

5. 200 ஏக்கர் மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்படும். இதற்கென ஒரு ஏக்கருக்கு 16 ஆயிரத்து நூறு ரூபாய் வீதம் மானியமாக வழங்கப்படும்.

6. தனி புழு வளர்ப்பு மனை கட்டும் 325 விவசாயிகளுக்குத் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

7. நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய 325 விவசாயிகளுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

8. பட்டு விவசாயிகளுக்கு ஆரோக்கியமாக இளம்புழுக்களை வளர்த்து விநியோகிக்கும் வகையில் தனியாக இளம்புழு வளர்ப்பு

மையம் அமைக்கும் 4 தொழில் முனைவோருக்கு தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

9. தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் மானிய விலையில் 600 விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதற்கென ஒரு விவசாயிக்கு ஆயிரத்து 435 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

10. பைவோல்டைன் புழு வளர்ப்பு மேற்கொள்ளும் 140 விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சியும் பட்டுப் புழு கூடு கட்டுவதற்கென சுழல் சந்திரிகைகள் கொள்முதல் செய்ய 60 விவசாயிகளுக்குத் தலா 15 ஆயிரத்து 750 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. சென்னைக்கு அருகில் மாமல்லபுரத்தில் 2 கோடி ரூபாய் முதலீட்டில் 'நகர்ப்புற கண்காட்சித் திடல்' ஒன்று மைய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும்.

2. இதேபோன்று கன்னியாகுமரியில் மத்திய அரசு உதவியுடன் 2 கோடி ரூபாய் முதலீட்டில் 'நகர்ப்புற கண்காட்சித் திடல்' அமைக்கப்பட உள்ளது.

3. சென்னையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் கைத்திற அருங்காட்சியகத்துடன் ஒரு கைவினைப் பொருள் அங்காடி அமைக்கப்படும். தமிழக கலைப்பொருட்களின் மீது ஆர்வம் கொண்ட வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் அனைத்துக் கைவினைப் பொருள்களையும் ஒரே இடத்தில் பார்வையிடவும், அவர்களுக்குத் தேவையானவற்றை நினைவுப் பொருளாக வாங்கிச் செல்லவும் ஏதுவாக இருக்கும்.

4. பிரபலமடையாத மற்றும் நலிந்து வரும் மரக்கடைசல், பாய்நெசவு, காகிதக்கூழ் பொம்மைகள், சுடுமண் பொருட்கள், தலையாட்டி பொம்மை மற்றும் நெட்டி வேலைகள் போன்ற கைத்திறத் தொழில்களை மேம்படுத்த 30 இலட்சம் ரூபாய் முதலீட்டில் 3 கைத்திறத் தொழில் குழுமங்கள் (Clusters) திருநெல்வேலி, மதுரை-திண்டுக்கல் மற்றும் தஞ்சை மாவட்டங்களில் அமைக்கப்படும்

5. கடலோர மாவட்டங்களில், அதிக அளவில் கிடைக்கும் கடல் கிளிஞ்சல்களை உபயோகித்து அழகிய கைவினைப் பொருட்களைத் தயாரிப்பதில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மக்களின் மறுவாழ்விற்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



6. கோவை, திருச்சி, தஞ்சை, மதுரை, சென்னை ஆகிய இடங்களிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களும், புதுதில்லி மற்றும் பெங்களூரில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் வெளி மற்றும் உள் அலங்காரப் பணிகள் மேற்கொள்ள 70 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

1. சேலம் மாவட்டம், காட்டம்பட்டியிலுள்ள பட்டு நூல் சாயம் தோய்க்கும் தொழிற் பிரிவில் வெளியாகும் கழிவு நீரினை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றிட சுத்திகரிப்புத் தளவாடங்கள் அமைக்க நடப்பு ஆண்டு திருத்திய வரவு-செலவுத் திட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வரும் திருக்கழுக்குன்றம் மற்றும் மாமண்டூர் குளியல் சோப்புகள் தயாரிக்கும் அலகுகளில், நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவுதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதோடு, சோப்பு வகைகளின் தரமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதற்கான இயந்திரங்களைக் கொள்முதல் செய்து நிறுவிட நடப்பு ஆண்டு திருத்திய வரவு-செலவுத் திட்டத்தில் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வாரியத்தில் தொடர் வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வு திட்ட நிதியின்கீழ் பழைய இராட்டைகள் மற்றும் தறிகளை மாற்றவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சூலூர் பகுதியில் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் 1 கோடியே 35 இலட்சம் மத்திய அரசின் கதர் ஆணைக்குழு மானியமாக அனுமதித்துள்ளது. மாநில அரசு 35 இலட்சம் ரூபாய் மானியமாக அளித்துள்ளது. மீதமுள்ள 10 இலட்சம் ரூபாய் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும். இதன்மூலம், சூலூர், பல்லடம், திருப்பூர், தாராபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 510 நூற்பு மற்றும் நெசவாளர்களின் குடும்பங்கள் பயனடைவார்கள்.

[2006 ஆகஸ்

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

1. மதுரையில் உள்ள மதுரை-விருதுநகர்-திண்டுக்கல் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன 'பதநீர் உற்பத்திப் பிரிவினை' நவீனப்படுத்திட புதிய இயந்திரங்கள் வாங்கிட 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. சேலம் மாவட்டம், சங்ககிரியில் உள்ள சேலம்-நாமக்கல் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன 'பதநீர் உற்பத்திப் பிரிவினை' நவீனப்படுத்திட 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கப்படும்.

3. சேலம்-நாமக்கல் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின்கீழ் சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரத்தில் 3 இலட்சம் ரூபாய் செலவில் பனந்தும்பு உற்பத்திப் பிரிவு நிறுவப்படும்.

4. தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 400 ஏழை பனைத்தொழில் கைவினைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்கத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க 6 இலட்சம் ரூபாய் வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

D
V24,31'006
1.0 14.2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227432
சென்னை-600 008
நூலகம்